# தமிழர் திருமண நடைமுறைகள்



பதிப்பாசிரியர்கள்

அ. சண்முகதாஸ்

மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
கொக்குவில்.

பதிவு எண் 4317

வகுப்பு எண் 300 398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருமண நடைமுறைகள்

## முதற் பாகம்

பொது நூலகம்,
...மாட்சிமையறும் கொக்குவில்.

பதிப்பாசிரியர்கள் :

பேராசிரியர் அ. சண்முகதாஸ், Ph. D.

மனோன்மணி சண்முகதாஸ், M. A.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்

யாழ்ப்பாணம்.

1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Edition : 2-7-1984

**Marriage Customs of the Tamils**

First Volume

*Edited by :* **Professor A. Sanmugadas**, Ph. D.
**Manonmany Sanmugadas**, M. A.

Publishers :
MUTTAMIL VELIYIIDDU KALAGAM, JAFFNA.

Printers :
ASEERVATHAM PRESS, 50. KANDY ROAD, JAFFNA.

விலை : **25-00** ( சாதாரண பதிப்பு )
**30-00** ( நூலகப் பதிப்பு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE

## *from*

## *PROFESSOR SUSUMU OHNO*

*Gakushuin University, Tokyo.*

Studies on the Japanese-Tamil relationship is progressing and a number of linguistic and cultural affinities have been found. I am working on this field since 1978. Among the cultural affinities, I have learnt that particular attention has to be paid to the similarities existing in the marriage customs, traditions and ceremonies of the Japanese and the Tamils. I felt that a comparative study on this aspect would be useful and interesting.

This book on Tamil marriage customs is an attempt to collect all necessary data regarding customs, traditions and ceremonies related to marriage among the Tamils. The data collected in this book will he used for a comparative study of the marriage customs among the Japanese and the Tamils. Gakushuin University has set up a Research Panel under my chairmanship to study the linguistic and cultural relationship between the Japanese and the Tamils. One of the editors of this book, Mrs. Manonmany Sanmugadas, is a member of this Research Panel. Professor A. Sannmugadas was attached to the Gakushuin University last year as a Japan Foundation Fellow. He was working with me on the Japanese-Tamil relationship.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When Professor Sanmugadas was preparing to go back to his country, I expressed my plans regarding our Research Project and made him to understand the usefulness of a source book in Tamil that would give all details regarding marriage customs among the ancient Tamils and the Sri Lankan Tamils. Professor and Mrs. Sanmugadas understood my point clearly. On his return to Sri Lanka, Professor Sanmugadas, with the help of a Tamil Publishing Society in Jaffna has managed to collect papers on Tamil marriage customs from various scholars. Five of such papers are included in this volume.

I am much pleased to send this Message for the first volume of papers on Tamil marriage customs, traditions and ceremonies. Gakushuin University has provided the necessary funds for this publication from its Research Fund awarded for the Project : "A Comparative Study of the Language and Culture of the Japanese and the Tamils of India and Sri Lanka."

**Professor Susumu Ohno**

Department of Japanese Language and Literature,
Faculty of Letters,
Gakushuin University,
Tokyo.
11-06-84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்.
[stamp, faint]

# அணிந்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

பலநாட்டவர் தம் நாட்டுப் பண்பாட்டுடனும் மொழியுடனும் தமிழர் பண்பாட்டிற்கும் தமிழ் மொழிக்குமுள்ள தொடர்பை ஆராய்ந்து வெளியிட்டிருக்கின்றனர். இப்பொழுதும் ஆராய்ந்து வருகின்றனர். இந்தவகையிலே யப்பானியப் பண்பாட்டிற்கும் எமது பண்பாட்டிற்கும், யப்பானிய மொழிக்கும் எமது மொழிக்குமுள்ள ஒற்றுமைகளை ஆராய்வதில் யப்பானியர் முயன்று வருகின்றார்கள்.

தமிழ் யப்பானிய உறவு பற்றி முதன் முதல் எடுத்துக் கூறியவர் பேராசிரியர் சுசுமு ஓனோவென்பவர். இவர் ஆராய்ச்சிகளுக்குத் துணையாக இருந்து இந்த உறவுமுறைகளை ஆராய்ந்து வருகின்றனர் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களும் அவரது மனைவி மனோன்மணி அவர்களும். இவர்களின் முயற்சியின் பயனாகத் தமிழ் யப்பானிய உறவு தொடர்பான ஆய்விலே யப்பானிய தமிழர் திருமண நடைமுறையிலுள்ள ஒப்பீட்டாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்குத் தரவு நூலாகத் தமிழர் திருமண நடைமுறைகள் என்னும் நூல் வெளிவருகின்றது. இது தொடர்பாகப் பத்து ஆராய்ச்சியாளர் எழுதும் கட்டுரைகளுள் ஐந்து கட்டுரைகளைக் கொண்ட முதற்றொகுதியாக இந்நூல் வெளிவருகின்றது. இத்தொகுதியிற் 'பழந்தமிழர் திருமணமுறைகள் (கி. பி. 300 வரை) என்ற பொருளில் திருமதி மனோன்மணி சண்முகதாசும், 'தமிழர் திருமணமுறைகள் (கி. பி. 300க்குப் பின்னர்)' என்ற பொருள் பற்றிப் பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. சண்முகதாசும் நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். 'யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்துக்களிடையே நிலவும் திருமணமுறைகள்' பற்றிச் 'சொக்கனும்', 'யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட தமிழ் இந்து மக்களிடையே நிலவி வரும் திருமண நடைமுறைகள்' பற்றித் திரு. சி. வன்னியகுலமும் 'யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கிறித்தவரிடையே நிலவும் திருமண நடைமுறைகள்' பற்றித் திரு. கே. டானியலும் முறையே எழுதியுள்ளனர். இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஐந்து கட்டுரைகளையும் தொகுத்து பதிப்பித்து வெளியிடுபவர் பேராசிரியர் சண்முகதாசும், மனோன்மணி சண்முகதாசும் ஆவர்.

யப்பானியத் திருமண முறைகளோடு எம்முடைய திருமண முறைகள் எவ்வாறு ஒத்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்வதற்குக் கருவி நூலாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை வெளியிடுவதற்குரிய பண உதவியை நல்கிய யப்பானிலுள்ள கக்சுயின் பல்கலைக்கழகத்தினரையும் (Gakushuin University) இந்நூலைப் பதிப்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர்கள் முன்னுரை

1856 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய கால்டுவெல் ஐயர் அவர்கள் தமிழ்-யப்பானியச் சொற்கள் சிலவற்றிடையே காணப்படும் ஒற்றுமையினை எடுத்துக் காட்டினர். இந்த நூற்றாண்டின் எழுபதுகளில் யப்பானிய அறிஞர்கள் சிலர் திராவிட மொழிகளுக்கும் யப்பானிய மொழிகளுக்குமுள்ள ஒற்றுமைப் பண்புகள் சிலவற்றை எடுத்துக்காட்டி ஆய்வுகள் மேற்கொண்டனர். 1978 இல் தோக்கியோவிலுள்ள கக்சுயின் பல்கலைக் கழக யப்பானிய மொழியியல் பேராசிரியர் சுசுமு ஒனோ (Susumu Ohno) அவர்கள் தமிழ் மொழிக்கும் யப்பானிய மொழிக்கு மிடையேயுள்ள ஒற்றுமைகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளத் தொடங்கினர். அத்துடன் யப்பானிய-தமிழ்ப் பண்பாட் டொற்றுமைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கினர். 1980 ஆம் ஆண்டு இவ்விடயங்களை உள்ளடக்கிய நூலொன் றினை யப்பானிய மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதினர். பின்னர் 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற 5ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் தன் னுடைய கருத்தினை ஆய்வுக் கட்டுரையாகச் சமர்ப்பித் தார். சென்ற வருடம் இந்நூலின் பதிப்பாசிரியர்கள் அவருடன் இணைந்து இவ்வாராய்ச்சியினைத் தொடர்ந்து மேற்கொள்ள வாய்ப்பேற்பட்டது: இவ்விரு இனத்தவர் களுடைய பண்பாட்டம்சங்களிலே பல ஒற்றுமைகள் காணப் படுவதை இவர்களுடைய ஆய்வுகள் மூலமாக உணர்ந்தனர். எனவே இவ்விடயம்பற்றி ஒழுங்கான விரிவான தெளிவான ஆய்வு மேற்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தில் பேராசிரி யர் ஒனோ தன்னுடைய பல்கலைக்கழகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துத் தன்னுடைய தலைமையில் ஆய்வுக்குழு ஒன் றினை நியமித்ததுடன் அதற்கான மானியத்தினையும் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர்களுள் ஒருவரான திருமதி மனோன்மணி சண்முகதாஸ் இந்த ஆய்வுக்குழுவில் ஓர் அங்கத்தவராகப் பணிபுரிகின்றார்.

தமிழர்–யப்பானியர் திருமண நடைமுறைகள் பற்றிய ஓர் ஒப்பீட்டாய்வு இக்குழுவினருடைய ஆய்வுத் திட்டங்களிலே முக்கியமானதொன்றாகும். இத்தகைய ஒப்பீட்டாய்வுக்குப் பண்டைத் தமிழருடைய திருமண நடைமுறைகள் பற்றியும், தமிழ் நாட்டிலும் ஈழத்திலுமுள்ள தமிழர்களுடைய தற்போதைய திருமண நடைமுறைகள் பற்றியும் விரிவான தகவல்கள் அவசியமாகும். இத்தகவல்கள் தரும் வெளியீடுகளை முதலிலே தமிழிலே வெளியிட்டுப் பின்னர் அவற்றை ஆங்கிலத்திலோ யப்பானிய மொழியிலோ பெயர்த்துவிடலாம் என ஆலோசனை கூறப்பட்டது. அத்துடன் அத்தகைய வெளியீட்டுக்குப் பண உதவியும் செய்யலாமெனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில், யாழ்ப்பாணத்தில் ஆய்வு நூல்களை வெளியிட்டு வரும் முத்தமிழ் வெளியீட்டுக் கழக ஆதரவில் ஈழத் தமிழரின் திருமண நடைமுறைகளைச் சிறப்பாகவும் தமிழர் திருமண நடைமுறைகளைப் பொதுவாகவும் ஆய்வுசெய்து தகவல்கள் தேடும் ஓர் ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டது. பின்வருவோர் அக்குழுவில் அங்கம் வகித்துப் பின்வரும் தலைப்புகளிலே தகவற் கட்டுரைகள் எழுதுவதாக ஒப்புக் கொண்டனர்:

1. பேராசிரியர் அ. சண்முகதாஸ் — தலைவர்
   "கி. பி. 300க்குப் பின்னர் எழுந்த தமிழ் இலக்கியங்களில் தமிழர் திருமண நடைமுறைகள்"

2. திருமதி மனோன்மணி சண்முகதாஸ், M. A.
   "கி. பி. 300 வரையுமான காலப்பகுதித் தமிழ் இலக்கியங்களில் தமிழர் திருமண நடைமுறைகள்"

3. வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்), M. A.
   "யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்துக்களிடையே நிலவும் திருமண நடைமுறைகள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திரு. சி. வன்னியகுலம், M. A.
''யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட தமிழ் இந்துக்களிடையே நிலவும் திருமண நடைமுறைகள்''

5. திரு. கே. டானியல், நாவலாசிரியர்
''யாழ்ப்பாணத்துக் கிறித்தவத் தமிழர்களிடையே நிலவும் திருமண நடைமுறைகள்''

6. ஜனுப். எம். ஏ. நுஃமான், M. A.
ஜனுப் எம். எம். அனஸ், M. A.
''ஈழத்து இஸ்லாமியரிடையே நிலவும் திருமண நடைமுறைகள்''

7. கலாநிதி, எஸ். மௌனகுரு, M. A., Ph. D.
''மட்டக்களப்புத் தமிழரிடையே நிலவும் திருமண நடைமுறைகள்''

8. திரு. நா. சுப்பிரமணியம், M. A.
''வன்னிப் பகுதித் தமிழரிடையே நிலவும் திருமண நடைமுறைகள்''

9. திரு. கே. கமலநாதன், B. A.
''மலைநாட்டுத் தமிழரிடையே நிலவும் திருமண நடைமுறைகள்''

இக்கட்டுரைகளுள் முதல் ஐந்து கட்டுரைகள் மட்டுமே இத்தொகுதியில் இடம் பெறுகின்றன. ஏனைய கட்டுரைகள் இரண்டாவது தொகுதியாக இவ்வருட இறுதிப் பகுதியிலே வெளிவரவுள்ளன.

இத்தொகுதியினை வெளியிடுவதற்குரிய பண உதவியினைக் கக்சுயின் பல்கலைக்கழகம் செய்துள்ளது. இதற்காக அப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த யாவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். இந் நூல் வெளியீட்டுக்கு மூலகாரணகர்த்தாவாக இருந்தவர் பேராசிரியர் சுசுமு ஓனோ. அவருடைய தமிழ்க்காதல் அளப்பரியது. தன்னுடையவாழ்நாளில் எஞ்சிய காலப் பகுதியைத் தமிழாய்விலேயே செலவிடப்போவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் தமிழ்நாடு புலவர்குழு அவருக்குத் ''தமிழ்ச் சான்றோர்'' என்னும் பட்டமளித்துக் கௌரவித்த சந்தர்ப் பத்திலே கூறியிருந்தார். அன்னருக்குத் தமிழுலகம் கடமைப் பட்டுள்ளது.

இத் தொகுதிக்குக் கட்டுரைகள் வழங்கிய வித்துவான் க. சொக்கலிங்கம், திரு. சி. வன்னியகுலம், திரு. கே. டானி யல் ஆகியோருக்கு எங்கள் நன்றி உரித்தாகுக. இத் தொகுதி யைத் தங்கள் வெளியீடாகக் கொணரப் பல்வேறு வழி களிலே உதவிய யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்துக்கு நன்றி கூறுகிறோம்.

ஆசீர்வாதம் அச்சகத்தினர் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்துடன் பிரிக்கமுடியாதவாறு இணைந்துவிட்டனர். அக்கழகத்தின் வெளியீடாகிய இந்நூலையும் அழகுற அச்சி டப் பல வழிகளிலே உதவியுள்ளனர். சிறப்பாக அச்சமைப்பு முகவர் திரு. றேக் யோசவ், அச்சுக்கோப்பாளர்கள் திரு. சூ. கிறிஸ்ரியன், திரு. ஆ. கோவிந்தராஜா ஆகியோருக்கும் ஏனைய அச்சக ஊழியர்களுக்கும் நாம் நன்றியுடையோம்.

இந்நூலுக்கு ஆசிச் செய்தி வழங்கிய பேராசிரியர் சுசுமு ஒனோ அவர்களுக்கும், அணிந்துரை வழங்கி நூலுக்கு மதிப்புக் கொடுத்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். இந்நூலின் முகப்பு ஓவியத்தைக் கவினுற வரைந்து நூலுக்கு அழகூட்டிய 'ரமணி' அவர் களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றி.

அ. சண்முகதாஸ்
மனோன்மணி சண்முகதாஸ்

நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை,
19-6-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Editors' Foreword

It was Bishop Caldwell who in his monumental work **A Comparative Grammar of the Dravidian Languages** (1856) first compared Japanese with Tamil. He had observed a remarkable resemblance in the vocabulary of the two languages. A systematic and serious study on Japanese–Tamil relationship is of recent origin. A few years ago when Professor Susumu Ohno forwarded the theory that Tamil could be considered as one of the roots of Japanese language, scholars could not believe it at that time. But it originated a number of papers and seminars on this subject. However, all scholars who spoke about it, whether they accepted the theory or not, were in opinion that this study must be encouraged and continued. Professor Noburu Karashima (**DLA News** Vol. V : 4, 1981), while criticising Professor Susumu Ohno's theory said, "There is no doubt that comparative studies of Japanese and Tamil or Dravidian languages, is a field which should be cultivated and developed in future." Professor Bh. Krishnamurti participating in a group discussion on "The Roots of Japanese lie in Tamil", organised by Japan Ashahi Weekly said "Dr. Ohno's studies mark the very first step in comparing Japanese with Tamil. It remains to be determined at what stage Japanese separated from the other Dravidian languages. And detailed studies must follow." Professor Susumu Ohno continues to study the Japanese–Tamil relationship.

While studying the linguistic affinities involved in the Japanese–Tamil relationship, Professor Ohno did not forget to investigate the cultural affinities that would help us to view the relationship at a deeper level. In his book **Nihon go to Tamiru go**, he wrote about the striking similarities found between Tamil **Tai Ponkal** and the Japanese **Koshogatsu.** The present editors of this volume had the opportunity to work with him last year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in this field. Gakushuin University in Tokyo where Professor Ohno is the Head of the Department of Japanese Language and Literature has set up a Research panel under his chairmanship to undertake a comparative study of the language and culture of the Japanese and the Tamils of India and Sri Lanka. One of the editors of this volume, Mrs. Manonmany Sanmugadas is a member of that Research Panel. The Research Panel identified the marriage customs, traditions and ceremonies among the Japanese and Tamils as an important area for investigation. Professor Ohno suggested that a source book on Tamil marriage customs would be of much use to this investigation. He also indicated that financial assistance could be provided for such publication.

Muttamil Veliyiiddu Kalagam, a Tamil Publishing Society in Jaffna undertook to bring out a publication on Tamil Marriage customs. A research team was set up to work on various areas on that subject and the members of the team were requested to submit their findings in the form of papers. Five such papers are included in the present volume. We are greatly indebted to Professor Ohno and the Gakushuin University for providing the necessary funds to bring out this volume of papers on Tamil marriage customs.

We thank Professor Ohno for sending a message to be printed in this book. Professor S. Vithiananthan, Vice Chancellor of the University of Jaffna has kindly given a foreword to this publication. We are thankful to him for it. We also thank Muttamil Veliyiiddu Kalagam of Jaffna for undertaking this publication and Aseervatham Printers, especially the manager of the composing Department, Mr. Roch Joseph and the compositors Mr. S. Christian and Mr. A. Govindaraja for printing this book neatly. We thank 'Ramani' for providing a beautiful cover design for this book.

**A. Sanmugadas**
**Manonmany Sanmugadas**

Nellandai Road,
Thumpalai, Point Pedro,
29 June, 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

ஈழத்துத் தமிழறிஞர்களின் ஆய்வு நூல்களை வெளியிடும் குறிக்கோளினை முன்வைத்து 1977ஆம் ஆண்டிலே தொடங்கப் பெற்ற 'முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்' இதுவரை ஆறு நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளது. இந்நூல்கள், ஏதோ ஒருவகையிலே தமிழியல் ஆய்விற்கு உதவியுள்ளதோடு இந்நாட்டில் மட்டுமன்றிக் கடல் கடந்த நாடுகளான இந்தியா, யப்பான் ஆகியவற்றிலும் வரவேற்புப் பெற்று வருகின்றன என்பது குறித்து நாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்வதில் நியாயம் இருக்கின்றது. நாம் வெளியிட்ட நூல்களில் மூன்றுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலம் சிறந்த ஆய்வு நூல்களுக்கான பரிசில் வழங்கியமையும் விதந்து கூறவேண்டுவதே. எமது கழகத் தலைவரான பேராசிரியர் அ. சண்முகதாஸ், யப்பானிலுள்ள கக்சுயின் பல்கலைக் கழகத்தின் அழைப்பினை ஏற்றுத் தமது பாரியாரான திருவாட்டி மனோன்மணி சண்முகதாசுடன் அங்கு சென்று ஓராண்டிற்கு மேலாகத் தமிழ்–யப்பானிய மொழி, கலாசார உறவுகளை ஆய்ந்து பல உண்மைகளை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட்டார். இந்த ஈடுபாட்டின் முன்னோடி நடவடிக்கையாக இன்று கக்சுயின் பல்கலைக்கழக நிதி உதவிகொண்டு **தமிழர் திருமண நடைமுறைகள்** என்ற நூலின் முதலாம் பாகம் முத்தமிழ் வெளியீட்டுக் கழக வெளியீடாக வருகின்றது.

இந்நூல், அப்பல்கலைக்கழகத்தினரால் முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் யப்பானிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு அம்மொழிபெயர்ப்பினூடாக யப்பானிய — தமிழ் கலாசார ஒற்றுமைகள் பற்றிய ஆய்விற்குப் பயன்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சிமாநாட்டிற் கலந்துகொண்டு தமிழ்மொழிக்கும் யப்பானிய மொழிக்குமிடையே காணப்படும் சில ஒற்றுமைகளை எடுத்துக்காட்டித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழியலாய்வாளரை வியப்பில் ஆழ்த்திய பேராசிரியர் சுசுமு ஒனோ (Susumu Ohno) யப்பானிலுள்ள கக்சுயின் பல்கலைக்கழகத்தின் (Gakushuin University) யப்பானியல் துறைத்தலைவராவர். தமிழ்நாட்டறிஞர்கள் இவருக்குத் 'தமிழ்ச் சான்றோர்' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தார்கள். இத்தகைய நல்லோரின் அனுசரணையுடன் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் அவரின் பாரியாரும் நடத்தும் ஆய்வுகளுக்குச் சிறியதொரு வகையிலாவது உதவக் கிடைத்தமைக்காக முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தினரான நாம் அவர்களுக்கு நன்றிசெலுத்தக் கடப்பாடுடையோம். முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தின் இவ்வெளியீட்டிற்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுத்த சுசுமு ஒனோ அவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றி உரியது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழன், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்ட பெருநெறி. சர்வதேசியம் பேசப்படும் இன்றைய உலகிற்கு இந்தப் பெருநெறி புதுமையானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் கீழ்த்திசையின் தனிநாகரிக நாடுகளுள்ளே தலைசிறந்து விளங்கும் யப்பானிய நாட்டிலிருந்து இந்தக்குரல் எதிரொலிக்கப்பட்டு அந்த எதிரொலியிலிருந்து புதிய உண்மைகள் தோற்றுவதற்கான முதல் அறிகுறியாக யப்பானிய — தமிழ்க் கலாசார, மொழியியற்றொடர்புகள் ஆய்வுக்குள்ளாவதையிட்டுத் தமிழ் நெஞ்சங்கள் பெருமிதம் அடைவது இயல்பே. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களினதும் பேராசிரியர் சுசுமு ஒனோ அவர்களினதும் இணைவாராய்ச்சிகள் நற்பயனளித்து இருகலாசாரங்களின் செழுமையையும் வெளிக்கொணரல் வேண்டும் என்று வாழ்த்துவோம்.

இறுதியாக எமது நூல்களைச் சிறப்பாக அச்சிற் பதித்து உதவும் ஆசீர்வாதம் அச்சகத்தினரே இந்நூலையும் நன்முறையில் அச்சேற்றியுள்ளனர். அவர்களுக்கும் கழகத்தினது நன்றி உரியதாகுக.

க. சொக்கலிங்கம்
பொதுச் செயலர்

''வாணி''
நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்,
84–06–15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | Message | iii — iv |
| | அணிந்துரை | v — vi |
| | பதிப்பாசிரியர்கள் முன்னுரை | vii — x |
| | Editors' Foreword | xi — xii |
| | வெளியீட்டுரை | xiii — xiv |
| 1. | பழந்தமிழர் திருமண நடைமுறைகள் ( கி. பி. 300 வரை ) | 1 — 70 |
| 2. | தமிழர் திருமண நடைமுறைகள் ( கி. பி. 300க்குப் பின்னர் ) | 71 — 150 |
| 3. | யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்து மக்களிடையே நிலவுகின்ற திருமண நடைமுறைகள் | 151 — 180 |
| 4. | யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட தமிழ் இந்துக்களிடையே நிலவிவரும் திருமண நடைமுறைகள் | 181 — 220 |
| 5. | யாழ்ப்பாணத்துக் கிறித்தவத் தமிழ் மக்களிடையே நிலவுகின்ற திருமண நடைமுறைகள் | 221 — 238 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contributors to this Volume

1. **A. Sanmugadas,** B. A. (Cey.), Ph. D. (Edin.)
   Associate Professor in Tamil
   University of Jaffna.

2. **Mrs. Manonmany Sanmugadas,** M. A.
   Guest Researcher
   Gakushuin University
   Tokyo

3. **Vidwan K. Sockalingam,** M. A.
   Principal
   Sadana Tamil Mixed School
   Jaffna

4. **Mr. S. Vanniyakulam,** M. A.
   Department of Agrarian Services
   Kilinochchi

5. **Mr. K. Daniel**
   Novelist
   Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் ஒன்று

# பழந்தமிழர் திருமண நடைமுறைகள்

(கி. பி. 300 வரை)

மனோன்மணி சண்முகதாஸ்

பொது நூலகம்.
கிராமோட்டு மன்றம் கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வாழ்வியலில் இலக்கியத்தின் பணி

உலகத்திலே நிலவும் தொன்மை வாய்ந்த பண்பாட்டு நிலைகளில் தமிழர் வாழ்வியலும் ஒன்ருகும். அதற்கு ஆதாரமாகப் பல தமிழிலக்கியங்கள் எம் கையில் உள்ளன. மனிதனின் பரிணும வளர்ச்சி நிலையை, நிலைகளை இன்று மானிடவியலாய்வாளர் பல்வேறு ஆய்வுகளிலே காட்டுகின்றனர். விஞ்ஞான அறிவினது வளர்ச்சியும் தொழில் நுட்பக் கருவிகளின் பெருக்கமும் அவர்களின் ஆய்வுகளுக்குப் பேருதவி புரிகின்றன. அகழ்வாராய்ச்சிகள் மனித வாழ்வியலின் பழம்பெரும் சின்னங்களை வெளிக் கொணர்கின்றன. இந்நவீன ஆய்வுகள் தரும் தகவல்களைச் சில வேளைகளில் வெறும் ஊகங்களாலேயே பழைய மனித வாழ்வியலோடு இணைக்கவும் வேண்டியுள்ளது. ஆனுல் இத்தகைய ஊகங்களை உண்மை நிலைகளாக விளங்கிக் கொள்ளப் பழைய இலக்கியங்கள் உதவும் என்பதைப் பல ஆய்வாளர்கள் மறந்து விடுகிருர்கள்.

மனிதனை ஏனைய ஜீவராசிகளில் வேறுபடுத்துவது அவனது பேச்சாற்றலே என்பதை எல்லாருமே உணர்வர். மனிதனின் பேச்சு, மொழியாகி அவன் கருத்துத் தொடர்புச் சாதனமாக வாழ்வியலோடு இணைந்தபோது அந்த மொழியும் அவன் பண்பாட்டில் ஒரங்கமாக முதன்மை பெற்றது. தான் பேசுகின்ற மொழியிலே தன் வாழ்வின் நடைமுறைகளை அவன் பேணிவைத்தான். அதுவே மொழியால் நிலைத்த பண்பாடாயிற்று. தனிமனித நடைமுறைகள் சமூகத்தின் தோற்றத்தால் சமூக நடைமுறைகளாகப் பேணப்பட்டன. அந்நடைமுறைகளையே மரபுகளாக இன்று காண்கிருேம். அந்த மரபுகள் வாய்மொழி நிலையில் வளர்ந்து வந்து இலக்கியங்களாக உருவெடுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் மனித வாழ்வியல் நடைமுறைகளை எடுத்துக்காட்டுகின்றன. இலக்கியங் காட்டும் மரபு அறிவு நிலை சார்ந்தது. மனித வாழ்வு நிலைகள் அறிவு நிலைகளாக இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளன. இதனால் 'இலக்கிய மரபு' மனித வாழ்வியல் நடைமுறைகளையறிய உதவும் முக்கியமான சான்றாதாரமாகின்றது. 'மரபு' என்று கூறும்போது அச் சொல் குறிக்கும் பொருளைத் தெளிவாக்கவும் வேண்டியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ச. வே. சுப்பிரமணியனின் கருத்துப் பொருத்தமான விளக்கத்தைத் தரும்.

> ''மரபு பலவாறு அணுகத்தக்கது. இலக்கிய மரபு எனப் பரந்த பார்வையுடன் அமையலாம். நாடு இனம் எனச் சுருங்கி, சிறப்பு—தனி மரபுகள் வகுக்க முயலலாம். தமிழ் மொழி இலக்கியங்களை மட்டுமே எடுத்து பொத்தமாகச் சில மரபுகள் கணிக்கவோ, அன்றித் தனி இலக்கியப் பொருண்மை வகை எடுத்து அவற்றுக்கே உரிய மரபு வகுக்கவோ கூடும். ஓராசிரியனுக்குரியனவும் அணுகப்படலாம்.
>
> உலகப் பொதுச் சிந்தனை மரபுகள், மக்கள் ஈடேற்றம், சிறப்பான வாழ்வு, பகையும் பசியுமற்ற உலகம் எனப் பலவாக அமையலாம். இறை நம்பிக்கை, பழைமை போற்றுதல், மூத்தோர் வழிபாடு...... என்பன கீழை நாட்டு மரபுகளாகலாம். கொடைச் சிறப்பு கற்பு வலிமை, புகழெனின் உயிரும் கொடுத்தல், வீரம் போன்றன தமிழின் மரபுகளெனலாம். வாழ்வியல் மரபுகளை இலக்கியம் வாழ்க்கை வாயிலாகக் கணிக்கும்''.[1]

இலக்கிய மரபு பற்றிய மேற்காணும் கருத்து 'மரபு' என்ற சொல்லின் பொருளை நுணுக்கமாக விளக்கியுள்ளது. மனித வாழ்வியல்புகளே மரபுகளாக எம்மிடையே இன்றும் நிலைத்துள்ளன. இலக்கியங்களிலே கூறப்பட்ட நடைமுறைகளை நாம் இன்றுவரை கடைப்பிடித்து வருவதே இதற்குச் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பழந்தமிழ் இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ள நடைமுறைகள் பற்றியறிவது பயனுடையதாகும். இலக்கியம் மொழியின் செம்மையை மட்டுமன்றி மனிதனது வாழ்வின் செம்மையையும் குறிப்பாக உணர்த்த வல்லது. மனித வாழ்க்கையின் தன்மைகளை இலக்கியம் வெளிப்படுத்திக் காட்டுகிறது. சமூகத்தின் தோற்றத்தையும் வளர்ச்சி நிலைகளையும் விளங்கிக்கொள்ள உதவுகின்றது. இதனால் இலக்கியமின்றேல் சமூக உருவாக்கத்தையே நாம் உணர்ந்திருக்க முடியாது. தமிழர் சமூகம் பற்றி விரிவான தகவல்களைத் தமிழிலக்கியங்கள் தான் தருகின்றன. தமிழிலக்கியங்களைக் கற்க வேண்டியதும் இதனால் மிகவும் அவசியமாகிவிடுகின்றது. தமிழர்களது வாழ்வின் நடைமுறைகளால் தமிழர் வரலாறு தனிவரலாறாக அமைகிறது. வரலாற்றை ஆராய்கின்ற எவருமே தமிழிலக்கியங்களை ஒதுக்கிவிட முடியாது. சமூக விஞ்ஞான ஆய்வை நாடுகின்ற ஆய்வாளர்களுக்கும் கூடத் தமிழ்ச் சமூக அமைப்பை விஞ்ஞானக் கண்ணோட்டத்திலே பார்ப்பதற்கும் அடிப்படைத் தரவாக அமைவன தமிழிலக்கியங்களே. தமிழர் வரலாற்றை எழுதும் வரலாற்றாசிரியர்கள் தமிழிலக்கியங்களை நுணுகிக் கற்க வேண்டும். பிறநாட்டு யாத்திரிகர்களும் வரலாற்றாசிரியர்களும் எமது வரலாறு பற்றித் தந்துள்ள குறிப்புக்களை, தமிழிலக்கியங்களின் குறிப்புக்களோடு ஒப்பிட்டு நோக்க வேண்டும். அப்போதுதான் உண்மை வரலாற்றைக் காண முடியும். நம் கண்முன்னே காணப்படுகின்ற வாழ்வியல் நடைமுறைகள் பல ஆயிரம் ஆண்டுகளாக மரபாகி வருவதை நாம் அதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

இங்கு அத்தகைய கருத்து ஒன்றைத் தெளிவு பெறச் செய்வதற்காகவே பழந்தமிழர் திருமண நடைமுறைகள் பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் தகவல்கள் திரட்டித் தரப்படுகின்றன. ஈழத்துத் தமிழர்களின் வாழ்வியல் நடைமுறைகளின் பண்புகள் உலகத்தவரால் உணர்ந்து கொள்ளப்படுவதன் முன்னர் தமிழர்களால் நன்கு விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். உலக இனங்களின் நிலைபெற்ற பண்பாடுகளுடன் தமிழர் பண்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடப்பட வேண்டிய தகுதியுடையதை யாவரும் உணர வேண்டும். இன்று எழுத்திலே நிலவுகின்ற பழந்தமிழ் இலக்கியங்களின் தொன்மையை உலகமறியச் செய்ய இது வழியாகும்.

## 2. தமிழரும் திருமணமும்

சங்க இலக்கியங்கள் என வழங்கப்பட்டுவரும் தமிழிலக்கியங்களிலே தமிழர்களது பழைமையான வாழ்வியல் நடைமுறைகள் கூறப்பட்டுள்ளன. தனிப் பாடல்களிலே சிதறுண்டு கிடைக்கும் நடைமுறைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது தமிழர் பண்பாட்டின் தனிச்சிறப்பைக் காணலாம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனத் தொகுக்கப்பட்ட நூல்கள் எல்லாவற்றிலுமே திருமணம் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன. பழந்தமிழர் வாழ்வியலைப் போர், காதல் என்ற இரு முக்கிய விடயங்களிலே பழம்புலவர்கள் அமைத்துக் காட்டியுள்ளனர். விலங்குகளோடு வாழ்ந்த மனிதனின் குணவேற்றுமையை இவ்விரு விடயங்களிலும் அமைத்துத் தெளிவுபடுத்தினர்.

இயற்கையான உடல்தேவைக்காகக் கூடிவாழ்ந்த மிருகங்களின் கூட்டு வாழ்க்கையை விட மனிதனின் கூட்டு வாழ்க்கை வேறுபாடானது. 'இன்பம் அடைதல்' என்ற ஒரே நோக்கினை மையமாக வைத்து மிருகங்கள் இணைகின்றன. ஆண் பெண் என்ற வேறுபட்ட நிலை, இன்பத்துக்குத் துணைபுரிதலுக்காக அன்றி வேறு உயர்ந்த செயல்களைச் செய்வதற்காகவும் பயன்பட்டது. மிருகங்களின் ஆண் பெண் இணைப்பினால் இனப்பெருக்கம் ஏற்பட்டது. மிருகங்கள் தமது இனப் பெருக்கத்தை ஓர் ஒழுங்கு முறையிலே நடைமுறைப்படுத்த முடியாதவை. ஆனால் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றிருந்த மனிதன் தனது இனப்பெருக்கத்தைப் பற்றியும் சிந்தித்துச் சில நடைமுறைகளை ஏற்படுத்தி வாழ்ந்தான். இனப்பெருக்கம் தனிமனித நிலையினை மட்டுமன்றி கூட்டான சமூக நிலையையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை மனிதன் நன்குணர்ந்த போது 'திருமணம்' என்ற அம்சம் முக்கியமடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழிலக்கியங்கள் இந்நிலையின் தன்மைகளை விரிவாகவே விளக்கியுள்ளன. மனித வாழ்வில் இயற்கையுணர்வால் உந்தப்பட்ட ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து வாழ எண்ணியபோது ஒழுங்கு நிலையொன்றும் உருவாகியது. ஆணும் பெண்ணும் தமது இணைப்பு ஒன்றையே முக்கியமாக எண்ணுது, தம்மைச் சார்ந்தவர்களும் தமது இணைப்பினுல் ஒன்றுபட வேண்டும் என எண்ணியபோது திருமண நடைமுறைகள் தோன்றலாயின. இலக்கியங்கள் மனிதனின் அகவாழ்வியலையும் புறவாழ்வியலையும் எடுத்துப் பதிவு செய்தபோது இக்கருத்தினை விளக்கிக் கூறின.

தமிழர் வாழ்வில் நடந்த சம்பவங்கள் இலக்கியமாக வெளிவந்த போது அவற்றையே வாழ்வின் இலக்கணமாகவும் பின்னவர் கண்டனர். மனிதன் பேசிய மொழிக்கு அவனது பேச்சமைவே இலக்கணமாக அமைந்தது போல இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் நடைமுறைகளே தமிழர் வாழ்வியல் இலக்கணமாகவும் அமைந்தன. சங்க இலக்கியங்கள் தமிழ்மொழியின் பண்புகளை உள்ளடக்கிக் காட்ட, தொல்காப்பியம் தமிழ் மொழியின் எழுத்திலக்கணத்தை அப்பண்புகளிலிருந்து வகுத்துக் கூறியது. மொழிக்கு மட்டுமன்றி வாழ்வின் இலக்கணத்தையும் 'களவியல்' 'கற்பியல்' என வகுத்தமைத்தது; மனிதனின் தொடர்புகளுக்கு இவ்விருநிலைகளுமே காரணமாக அமைந்திருந்ததைத் தெளிவுற விளக்கியது; மனிதனின் முழுவாழ்வையும் அகவாழ்வு, புறவாழ்வு எனப் பிரித்து நோக்கியது. எனவே சங்க இலக்கியங்களிலே கூறப்பட்ட வாழ்வியல் நடைமுறைகள் தமிழர் வாழ்க்கைக்கு இலக்கணமாக அமைவதைத் தொல்காப்பியம் கூறுவதையும் நாம் நோக்கவேண்டியுள்ளது.

தமிழர் திருமண நடைமுறையை உலகத்து ஏனைய நடைமுறைகளோடு ஒப்பிட்டு நோக்கும் மானிடவியலாய்வாளர்கள் தொல்காப்பிய இலக்கணங்களைத் தமது கருத்திற் கொள்வதில்லை. நம்மவர் மேலைநாட்டவரது 'திருமணம்' பற்றிய கோட்பாடுகளையே தமிழர்களது திருமண நடைமுறைகளை விளக்குவதற்கு மூலாதாரங்களாகக் கொள்கின்றனர். இந்நோக்கு மிகவும் தவருனதாகும். எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர் வகுத்த கோட்பாடுகள் யாவும் எமது வாழ்வியலை விளக்க உதவுவன. எமது வாழ்வியலின் நடைமுறைகளைப் பிறிதொரு பண்பாட்டுடன் பொருத்திப் பார்ப்பதை விட எமக்கென உள்ள பொருத்தமுற வகுக்கப் பட்டுள்ள கோட்பாடுகளைப் பிற பண்பாட்டாளர்க்குத் தெளிவுபடுத்த வேண்டியது எமது பணியாகும்.

சங்க இலக்கியங்களிலே 'திருமணம்' என்ற சொல் எங்கும் காணப்படவில்லை. அச் சொல் பிற்கால வழக்காகவே காணப்படுகின்றது. **மணம், வரைவு, வதுவை, மன்றல், மகட்கொடை, உடன்போக்கு** என்னும் சொற்களே ஆணும் பெண்ணும் இணைவதைக் குறித்தன. இச் சொற்களில் **மணம்** என்னும் சொல்லே 'திரு' என்னும் அடைபெற்றுத் 'திருமணம்' என வழங்கப் படலாயிற்று. **மணம்** என்னும் சொல் கூடுகை, பிரமம் தெய்வம், பிரசாபத்தியம், ஆரிடம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், என்ற எண்வகை விவாகம், நறுநாற்றம், வாசனைப்பொருள், மதிப்பு, நன்னிலை எனப் பல பொருளைத்தருவது.[2] **வரைவு** என்னுஞ்சொல் எழுதுகை எல்லை, சித்திரமெழுதுகை, அளவு, நோக்குகை, விவாகம், நீக்கம், பிரிவு எனப் பல பொருள் தருவது.[3] **வதுவை** என்னுஞ் சொல் மணமகள், விவாகம், மணமாலை, வாசனை புணர்ச்சி, வலுவந்தம் எனப் பல பொருள் தருவது.[4] **மன்றல்** என்னும் சொல் விவாகம், அம்பலம், வெளி, நெடுந்தெரு, வாசனை, நிச்சயம் எனப் பல பொருள் தருவது.[5] ஆனால் **உடன்போக்கு** என்னும் சொல் பெற்றோ ரறியாமல் தலைவி தலைவனுடன் செல்கையை மட்டுமே குறித்தது.[6] **மகட் கொடை** என்னும் சொல் தன்மகளை விவாகஞ் செய்து கொடுக்கையைக் குறித்தது.[7]

இச் சொற்கள் ஆண் பெண் இணைந்த வகையினை விளக்கப் பழந்தமிழிலக்கியங்களிலே புலவர்களாற் கையாளப்பட்டுள்ளன. மணம், வரைவு, வதுவை, மன்றல் என்னும் நான்கு சொற்களும் பல்வேறு பொருள்களைத் தருவனவாக இருப்பினும் ஆண் பெண்ணை இணைக்கும் பொதுப் பொருள் தரும் சொற்களாகவும் உள்ளன. ஆனலிச் சொற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவு நிலை, கற்பு நிலை யெனத் தொல்காப்பியரது திருமண நடைமுறைக் கோட்பாடு தோன்றுவதற்குக் காரணமாக உள்ளன. ''உடன் போக்கு'' சொல்லளவினுல் களவுமணம் நடைமுறையிலிருந்ததை உணர்த்தியுள்ளது. ஆனுல் ஏனைய சொற்கள் உணர்வு நிலையில் களவு நிலை இருப்பதைச் சுட்டி அது கற்பு நிலையாவதை நுணுக்கமாக உணர்த்துவதற்குப் புலவர்களால் கையாளப்பட்டுள்ளன. இந்நிலைமையைச் சங்கப் பாடல்களைக் கருத்தூன்றிப் படிக்கும்போதுதான் உணர்ந்து கொள்ளமுடியும்.

ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு இயற்கை நிலையில் இன்பந் துய்ப்பது களவு நிலையாகும். இந் நிலையைப் பிறரும் அறிய வைத்து இருவரும் இணைந்து வாழ்வது கற்புநிலையாகும். களவுநிலை தனியே ஆண் பெண் மட்டுமே என்ற நோக்கில் பிரச்சினையற்றதாக அமையலாம். ஆனுல் சமூகம் என்ற கூட்டு நிலையிலே ஆண் பெண்ணின் இணைப்பு ஒழுங்கான முறையிலே அதற்கென முன்னோரால் கற்பிக்கப்பட்ட நிலையிலே அமைய வேண்டியது அவசியம் எனத் தமிழர் கருதி வாழ்ந்துள்ளனர். குடும்பம் என்ற அமைப்பிலே ஆணும் பெண்ணும் சம உரிமை பெற்றவர்களாக வாழவேண்டும். இருவரது மனநிலைகளும் ஏனைய சமூக உறுப்பினர்களால் மதிக்கப்பட வேண்டும். அதற்காகவே ஆணும் பெண்ணும் பலரறிய இணைய வேண்டும் என்ற நடைமுறை தமிழர் வாழ்வியலில் முக்கியமாக இடம் பெறுவதாயிற்று. பரந்து பட்ட நிலையிலே மரபாக இன்றுவரை நிலவுகிறது.

**தன்னம ராயமொடு நன்மண நுகர்ச்சியி**
**னினிதாங் கொல்லோ தனக்கே பனிவரை**
**யினக்களிறு வழங்குஞ் சோலை**
**வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே.**[8]

மேற்காட்டப்பட்ட பாடலடிகள் நன் மணம் என்பதை விளக்குகின்றன. ஒரு பெண் தன் விருப்பத்துக்குரிய ஆணுடன் இணைந்து தன் குடும்பத்தவரைப் பிரிந்து களவாகச் சென்று விடுகின்றுள். அவளைப் பெற்றெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றாயின் கூற்றாகப் புலவர் இப் பாடலை அமைத்துள்ளார். வெகு நுணுக்கமாக மகளின் செயலை எடுத்துக் கூறுகிறாள் அத்தாய். விலங்குகளுக்கு இருக்கும் இனவொற்றுமை கூட மகளுக்கில்லையே எனக் குறிப்பாலுணர்த்துகின்றாள். களிறு தன்னுடைய இனத்தைப் பாதுகாத்துச் செல்லும். பகையைக் கண்டால் சினந்து கொல்லும் இயல்புடையது. அத்தகைய இனவுணர்வின்றித் தான் விரும்பிய காதலனுடன் சென்றவள் உண்மையான இன்பத்தையே உணராதவள் என்று கூறுகின்றாள். அவள் இப்போது காதலனுடன் இணைந்து செல்கின்ற ஓரின்பத்தை மட்டுமே பெறமுடியும். வழியிலே நேருகின்ற துன்பத்தையும், அதனால் அந்த ஆண் மகனுக்கு ஏற்படும் தொல்லைகளையும், அவற்றையறிந்து நாம் படப்போகும் துன்பங்களையும் பற்றி அவள் எண்ணாது சென்றுள்ளாள். தன்னைப் பெரிதும் விரும்புகின்ற தோழியர் சூழலிலே இங்கே பலரும் அறிய அவனை மணந்துகொண்டு வாழ்வதே உண்மையான இன்ப மல்லவா? என அத்தாய் கூறுவது கற்புநிலைபட்ட ஆண் பெண் இணைப்பின் நன்மையை வற்புறுத்துவதாக உள்ளது. அத்தகைய மணமே 'நன்மணம்' எனக் கருதப்பட்டது.

சமூக அமைப்பிலே ஆணும் பெண்ணும் இணைந்து வாழுதலைப் பலரறியச் செய்வதே வரைவாகும். பலரும் அறியாமல் களவில் இன்பம் துய்த்தல் சமூகத்தின் கட்டுக் கோப்பையும் ஒழுங்கையும் குலைக்க ஏதுவாகும். மனிதன் தனது தொடர்புகளை ஒழுங்கு முறையிலே அமைத்து வாழ்ந்த பண்பட்ட வாழ்வியலையே பழந்தமிழிலக்கியங்களில் காணலாம். இதனால் 'மணம்' மனிதவாழ்வியலின் முக்கிய எல்லையாக எண்ணப்பட்டது. புதியதொரு குடும்பத்தின் உருவாக்கமாகவும் அதே சமயத்தில் பழைய குடும்பங்களோடு விடுபடாத தொடர்புடைய நிலையாகவும் மணம் விளங்கியது. மணம் செய்யும் ஆணும் பெண்ணும் தமது தனிப்பட்ட உணர்வின்பங்களுக்காக மட்டுமன்றிச் சமூக வயப்பட்ட ஒற்றுமையுணர்வுக்காகவும் ஒன்றிணைந்து வாழ்வு நடத்தினர். எனவே சமூகத்தவரிடையே கூட்டுறவை வளர்ப்பதற்கும் மணத்துடன் பல நடைமுறைகள் பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டன. அறியாத ஆணும் பெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரையொருவர் கண்டு பல நாட்களாகக் களவில் புணர்ந்து பின்னர் பிரிந்துவிடுகின்ற சந்தர்ப்பங்களையும் பழந்தமிழ்ப் புலவர் எடுத்துக் கூறியுள்ளனர்.

**ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்**
**பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்**
**நன்னர் நெஞ்ச நெகிழ்த்த பின்றை**
**வரைமுதிர் தேனிற் போகி யோனே**
**ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ**
**வேறுபுல னன்னாட்டுப் பெய்த**
**ஏறுடை மழையிற் கலிழும்என் னெஞ்சே.**[9]

என்னும் **குறுந்தொகைப்** பாடல் இதனை நன்கு விளக்கு கின்றது. ஓர் ஆண், புதியவன்; ஒரு பெண்ணோடு பல நாட்கள் களவின்பம் துய்த்துவிட்டுப் பின்னர் அவளைப் பிரிந்துவிடுகிறான். அவனுக்கும் தனக்குமுள்ள இனிய தொடர்பை விளக்கும்போது அப்பெண் 'ஆசாகு எந்தை, என்று அந்த ஆண்மகனைக் குறிப்பிடுகின்றாள். பலருக்கும் பற்றுக்கோடாக இருக்கும் தன் தந்தையைப் போலவே அந்த ஆண்மகனும் தனக்குப் பற்றுக்கோடாக இருப்பான் என எண்ணியே அவள் அவனோடு பல நாட் பழகுகின்றாள். அவனது நட்பு நிரந்தரமானதாக அமையவேண்டும்; வெறும் பழக்கத்துடன் நின்று விடாது குடும்பத்துடன் தொடர்புபட்டு, சமூக ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும் என எண்ணிய அப்பெண்ணும் சமூக நடை முறையைத் தன்னளவிலே பேண முற்படுகின்றாள். தனது இன்பத்தையே மட்டும் அவள் எண்ணுபவளாக இருந்தால் விலங்கு மனத்தோடு வேறொரு ஆண்மகனை நாடிச் செல்ல லாம். ஆனால் அவள் அவ்வாறு செய்யாமல் பழகியவனையே நினைத்து வாழ்வது சமூக நடைமுறையைப் பேணுவதையே உணர்த்துகிறது.

இத்தகைய நடைமுறை தேவையற்றதென நம்மவரிற் சிலர் கருதுகின்றனர். மேலைத்தேயத் திருமண நடைமுறை களைப் போலக் கட்டுப்பாடற்ற சுதந்தரமான போக்கு நன்மையானதெனக் கூறுகின்றனர். அது மனக் கட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடற்ற பண்படுத்தப்படாத விலங்கு மனப்பான்மை கொண்ட மக்கள் கூட்டத்தவர்க்கே பொருத்தமானது. உண்பதும் இன்பந் துய்ப்பதுமே வாழ்க்கை என்ற விலங்கு வாழ்க்கை வாழ்வார்க்குத் திருமணம் தேவையற்ற தொன்றே. ஆனல் வாழ்க்கை பல்வேறு நோக்கமுடைய தென்ற பண்பாடு கொண்ட தமிழர்களுக்குத் திருமணம் நன்னிலையுடன் வாழ முக்கியமானதொரு தொடர்பு நிலை யாகவே வரையறை செய்யப்பட்டுள்ளது; ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற உரிமைத் தொடர்பினை ஏற்படுத்தும் வாழ்வியலாக விளங்குகின்றது; குடும்ப உறவு நிலைகளையும் சமூகத் தொடர்புகளையும் ஒன்ருக இணைக்கும் அம்சமாகவேஇன்றும் நடைமுறையிலுள்ளது.

**மந்திக் காதலன் முறிமேய் கடுவன்**
**றண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்**
**பொங்க லிளமழை புடைக்கு நாட**
**நயவா யாயினும் வரைந்தனை சென்மோ**
**கன்முகை வேங்கை மலரு**
**நன்மலை நாடன் பெண்டெனப் படுத்தே.**[10]

என்னும் குறுந்தொகைப் பாடல் களவின்பத்தை விடுத்து மணம் செய்து வாழவேண்டுமென்பதை விளக்குகின்றது. ஆண் பெண் களவின்பத்தை விடுத்து வரைவுடன் வாழ வேண்டும் என்பதைத் தோழியின் வாயிலாகப் புலவர் உணர்த்தியுள்ளார். தோழி பெண்ணின் காதலனிடம் ''வாய்மையாக நீ எம் பெருமாட்டியைக் காதலிப்பாயல்லை யாயினும் நின்னையே பெரிதும் நயந்துறைகின்ற எம் பெருமாட்டியைப் பலரறிமணம் புரிந்து உலகத்துள்ளார் இவள் இறுகிய கன்மிசை நின்ற அரும்பினையுடைய வேங்கை மரந்தானும் மலர்கின்ற வளமலை நாட்டையுடைய நின்னுடைய மனைவி என்று கூறும்படியாகச் செய்து நின் னில்லத்திற்கு அழைத்துப் போவாயாக!'' என்று வேண்டிக் கேட்கிருள். ஒரு பெண்ணும் ஆணும் பலரறிய மணம்புரிந்து ஓரிடத்தில் ஒற்றுமையாக வாழ்வது தமிழரின் பண்பட்ட வாழ்வியலாக இருந்தது. இதனையே **வதுவை** என்ற சொல் குறித்ததாக எஸ். சுப்பிரமணிய பிள்ளை கருதுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் மக்களின் திருமணத்தைக் குறிக்கப் பெரும் பாலான காலங்களிலும் குறிப்பிடப்பட்ட ஓர் சொல். வதிதல்—தங்குதல் எனப்படும், மேலும் வதுவை என்னுஞ் சொல் வாசனை எனவும் பொருள்படும். தாமே எதிர்பட்டுக் கூடிய ஒருவனையும், ஒருத்தியையும் ஒன்றாக வதியச் செய்தமை பின்னர் வதுவையாய்திரிந்தது. வதிதல்— வதுவை." 11

இக்கருத்துப் பொருத்தமானதாக அமைவதைப் பல சங்கப் பாடல்களிற் காண முடிகின்றது. ஆணும் பெண்ணும் மனமொத்துப் பலரறிய மணந்து வாழ்வது தமிழர் வாழ் வியலில் கிழவன், மனையோள், தாய், தந்தை என்ற உறவு நிலைகளை ஒழுங்குபட விளங்கப் பெரிதும் உதவ்செய்தது.

## 3. திருமணமும் உறவுநிலைகளும்

தமிழர் திருமணம் மனித உறவுநிலைகளை ஒழுங்குடன் காண உதவும் அரிய நிகழ்வாகும். ஒருவரோடு ஒருவர் அன்பு கொண்ட ஆணையும் பெண்ணையும் இணைக்கின்ற நிகழ்வாக அன்றி இரு குடும்பங்களின் தொடர்பை வலுப் படுத்தும் சாதனமாகவும் விளங்கியது. களவிலே வாழும் காதலர் நிலையை முதலில் உணர்ந்தவளாகத் தோழி அமைகின்றாள். சங்க இலக்கியங்களிலே புலவர்களால் குறிப்பிடப்படும் தோழி என்னும் உறவு களவு மணத்தைக் கற்புமணமாக்கும் சமூக நடைமுறையைப் பாதுகாக்கும் பண்பு கொண்டது. வேறுபட்ட சமூகநிலையிலே வாழ்கின்ற ஆண் பெண் தொடர்பினையும் பாதுகாத்துத் தாய், தந்தை என்னும் முக்கியமான உறவுகளைத் தோழியே நிலைப்படுத்து கின்றாள். ஒரு குடுப்பத்தினின்றும் கிளைத்தெழும் புதிய குடும்பம் ஒழுங்காக இணைய அவளே காரணமாவாள்.

தந்தை, நற்றாய், செவிலித்தாய், தோழியர், ஐயன் மார், தமர் என்னும் உறவுநிலைகளோடு தொடர்புபட்டு வாழுகின்ற பெண் தன்னோடு இன்னொரு ஆணை இணைத்து வாழும் பருவம் வந்தவுடன் தோழியின் மேலதிக கண்காணிப்புக்குள்ளாகின்றாள். இன்னொரு இல்லிற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
4317

தலைவியாக அவள் வாழவேண்டியவளாகையால் பெற்றோர் பாதுகாப்புடனும் வாழுகின்றாள். எனினும் ஆடவன் ஒருவன் மீது எல்லையற்ற விருப்பினால் தன்னைச் சூழவுள்ள உறவு நிலைகளைத் தள்ளிவிட்டு அவள் அவனோடு செல்லவும் முற்படும்போது தோழியே அவளை நெறிப்படுத்துவாள். பெண்ணின் பழைய உறவுகள் நிலைக்கவும் புதிய உறவுடன் சுமுகமாகப் பெண் இணையவும் தோழி உரிய முயற்சிகளை எடுப்பாள். 'அறத்தொடு நிற்றல்' என அவள் பணியைப் புலவர் குறிப்பர். வாழ்வியல் நடைமுறைகள் சரிவரத் தொழிற்படத் தோழி தன் மதி நுட்பத்தினால் பணி செய்வாள். ஆணின் பக்கமும் தோழியைப் போலப் 'பாங்கன்' எனும் உறவு தமிழிலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளது. எனினும் அவ்வுறவு சமூக நடைமுறைகளைப் பேணுகின்ற நிலையில் பணியாற்றாமல் தனிமனிதனின் நட்பு நிலையிலேயே பணி செய்கிறது. திருமணத்தில் தோழியே முக்கியமான நடை முறைகளை விளக்குபவளாக உள்ளாள்.

> "தலைவி தலைவனைத் தனியிடத்தே கண்டு பாலதாணையால் அவனோடு காதற்கேண்மை கொண்டு களவொழுக்கம் மேற்கொண்டிருக்கின்றனள். இச் செய்தியையுணராத நொதுமலர் அவளை விரும்பி அவள் சுற்றத்தார்பால் பெண்வேண்டி வாராநின்றனர். தலைவியின் சுற்றத்தார்க்கும் அவள் கற்புக்கடம் பூண்ட செய்தி தெரியாதாகலின் ஒரோவழி அவர் அவ்வயலார் மகனுக்குத் தன்னை மகட்கொடை நேர்ந்து விடுதல் கூடும் என்று பெரிதும் அஞ்சி வருந்தினள். இனி இச் செய்தியை எப்படியாவது சுற்றத்தார்க் குணர்த்தி அவர் நொதுமலர்க்கு மகட்கொடை நேரா வண்ணம் செய்துவிட வேண்டும் என்று துணிந்தாள். உயர்குடிப் பிறப்புடையள் ஆகலின் இச் செய்தியைத் தோழியின் வாயிலாய் வெளிப்படுத்தல் வேண்டும். தோழிதானும் நேரே தலைவியின் தாய்தந்தையர்க்கு இச் செய்தியை அறிவிக்கும் தகுதியுடையள் அல்லள். அவள் செவிலிக்குணர்த்தி விட்டாற்போதும். எனவே செவிலித்தாய் பக்கத்தே நிற்குமொரு செவ்வி தேர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி தோழிக்குக் கூறுவாள் போன்று அச் செவிலி கேட்கும் பொருட்டே மறைபுலப்படுத்த இவ்வாறு தோற்றுவாய் செய்கின்றாள். தலைவி ஈண்டுச் செவிலிக் குணர்த்த வேண்டிய பொருள்: தாயே! யான் ஒரு நம்பியைக் காதலித்து விட்டேன். ஆதலால், என்னை மணக்கக்கருதிப் பெண் வேண்டி வரும் நொதுமலர்க்கு எந்தை மகட்கொடை நேராமல் நீ தடைசெய்துவிடு; மேலும் என்னை என்னாற் காதலிக்கப்பட்ட அந்தத் தலைவனுக்கே மணம் செய்வித்தற்கு வேண்டுவனவும் இன்னே செய்வாயாக.''[12]

மேற்கண்டவாறு பொ. வே. சோமசுந்தரம் தோழி தலைவி, செவிலித்தாய் உறவு எவ்வாறிருந்ததென்பதை விளக்கு கின்றார். பெண்ணின் உறவுகள் அவள் ஏற்படுத்திக் கொள்ளும் புதிய உறவினால் சீர்குலையக் கூடாதென்பதற் காகத் திருமண நடைமுறையில் பலரும் பங்கு கொள்ளும் நிலையேற்பட்டது. பெண்ணுக்குப் பொருத்தமான துணை வனை நிச்சயம் செய்யும் பொறுப்பில் தந்தையே முக்கிய பங்கினைக் கொண்டிருந்தான்.

**கொற்ற வேந்தர் வரினுந் தற்றக**
**வணங் கார்க்கீகுவ னல்லன் வண்டோட்டுப்**
**பிணங்கு கதிர்க் கழனி நாப்பணேமுற்**
**றுணங்குகல னாழியிற் றோன்றும்**
**ஒரெயின் மன்ன னொருமட மகளே.**[13]

என்னும் **புறநானூற்றுப்** பாடலடிகள் இதனை நன்குணர்த்து கின்றன. திருமணத்திலே ஏற்படும் உறவு ஒத்தியைவதாக அமைய வேண்டுவது முக்கியமாகக் கணிக்கப்பட்டது. தந்தையிடமே பெண்ணை விரும்பியவர்கள் கேட்க வேண்டும். பெண்ணை விரும்பிய ஆண் முறைப்படி தந்தையிடம் சென்று பெண்கேட்டமையைப் பல பாடல்கள் கூறுகின்றன.

பெண் தான் விரும்பிய எண்ணப்படி ஆணுடன் சேர்ந்து சென்று அவன் வீட்டிலேயே மணம் செய்யும் நடை முறையும் இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் ஆணின்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு முக்கியத்துவம் பெறுகின்ருள். அவளே திருமண நடைமுறைகளைச் செய்யும் பொறுப்பினை ஏற்கின்ருள். அகநானூற்றில் இக்குறிப்புக் காணப்படுகிறது.

**அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோள் குறுமகள்**
**திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே**
**புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி**
**மனைமணல் அடுத்து மாலை நாற்றி**
**உவந்து [illegible]னிது அயரும் என்ன .... [14]**

இப்பாடலிலே கடத்தற்கரிய பாலைநிலத்தைக் கடந்து சென்ற என்னுடைய பெரிய மகள் அழகிய வேலேந்திய தன் மகனுடன் வீட்டிற்கு வருகிருள் எனக் கருதி அழகிய புறச்சுவர்களையெல்லாம் செம்மண்பூசி, இல்லத்தின் முன்னே மணல் பரப்பிப் பந்தலிட்டு மலர்மாலைகளைத் தூங்கவிட்டு மகிழ்ச்சியோடு பல ஏற்பாடுகளையும் அத்தாய் செய்வதாக அறிந்தவர்கள் கூறினர் எனப் பெண்ணின் தாய் கூறு கின்ருள். எனவே திருமண உறவுநிலையிலே தாயர் வேறு பட்ட நடைமுறைகளைப் பேணிவந்ததையும் உணரக் கிடக் கின்றது.

திருமணம் கற்புநிலையிலே நடைபெற அயலவரும் உறவினரும் உதவினர். ஆண் பெண்ணின் களவொழுக் கத்தைப் பற்றிப் பலவாறு எடுத்து அலர் தூற்றுவதன் மூலம் திருமண நடைமுறைகளை ஒழுங்காக நடக்கச் செய்தனர். திருமணம் ஆண் பெண்ணின் ஒழுக்கநிலையை வரைவு செய்வதாக அமைய வேண்டுமென ஊரவர் எண்ணினர். மணச்சடங்குகளில் உறவுகள் நிலைப்படுத்தப் பட்டன. தொல்காப்பியம் கற்பியல் முதலாவது சூத்திரம் குறிப்பாகத் திருமண நடைமுறைகளிலே பங்கு கொள்ள வேண்டியவர்களைச் சுட்டிக்காட்டுகின்றது. கற்பு என்பதே உறவுகளையடிப்படையாகக் கொண்டது என்பதை அச் சூத்திரம் அழகாக விளக்குகின்றது.

**கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே. [15]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற் குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது'' என இச்சூத் திரத்திற்கு இளம்பூரணர் உரை எழுதியுள்ளார். திருமணம் கரணத்தோடு கூடிய நடைமுறையாக உறவினரும் அயல வரும் உதவுகின்றனர். அவர்கள் களவுமணத்தைக் கற்பு மணமாக்க மேற்கொண்ட நடைமுறைகள் கரணங்களா யமைந்தன. கரணம் என்பது வதுவைச் சடங்கு என இளம் பூரணர் பொருள் கூறியுள்ளார். ஆனல் பிற்காலத்தில் கரணம் என்பது கையாற் செய்யும் தொழில், இந்திரியம், அந்தக்கரணம், மனம், விவாகச்சடங்கு, கலவி, கூத்து விகற்பம், தலைகீழாய்ப் பாய்கை, கருவி, உபகரணம், எண், பஞ்சாங்க உறுப்புக்களில் ஒன்று, சாஸனம், கணக் கன், கருமாதிச் சடங்குக் குரிய பண்டங்கள் எனப் பல பொருளைத் தருகின்றது.[16] ஆனல் தொல்காப்பியர் திரு மணச் சடங்கு என்னும் பொருளிலேயே தமது சூத்திரத்தில் அச் சொல்லைக் கையாண்டுள்ளார். 'மணச்சடங்குகள்' என்னுந் திருமண நடைமுறைகள் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்கான அங்கீகாரத்தை உறவினரிடமும் அயலவரிடமும் பெற்றதை உணர்த்துவதற்காகவே ஆரம் பத்தில் செய்யப்பட்டுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களிலே நடைபெற்ற சடங்குகள் பற்றிய குறிப்புக்களைவிட நடை முறைகள் பற்றிய குறிப்புக்களே அதிகமாகக் காணப்படு கின்றன.

வேற்று நிலப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆணும் பெண் ணும் உறவு நிலையிலே கணவனும் மனைவியுமாக இணைவ தற்குச் சமூகத்திலே நடைமுறைகள் சிலவற்றை வகுக்க வேண்டியிருந்தது. தொழிலும் வாழ்வு நெறிமுறையும் வேறுபட்ட இரு சமுகத்தவர்கள் திருமணத்தால் புதிய உறவுகளைப் பெற்றனர். அவ்வுறவைப் பலரும் அறியச் செய்யவேண்டிச் சில நடைமுறைகள் இரு சமூகத்தவர்க்கும் பொதுவானவையாக அமைக்கப்பட்டன. இந் நடை முறை களைத் திருமண காலத்தில் அனுசரிப்பதன் மூலம் இரு சமூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தவர்களும் தமது புதிய உறவுநிலையைப் பலப்படுத்திக் கொண்டனர். இன்ன சமூகத்தவர் இன்ன சமூகத்தவ ரைத்தான் மணந்து கொள்ளலாம் என்ற பாகுபாடு ஆரம்ப காலத்தில் தமிழரிடம் காணப்படவில்லை. யாரும் எவ ரோடும் இணைந்து கொள்ளலாம். ஆனால் பொதுவாக உள்ள நடைமுறைகளை அனுசரித்தே இணைந்து கொள்ள லாம் என வகுக்கப்பட்டிருந்தது.

ஆனால் பிற்காலங்களிலே இந்நிலை மாறிவிட்டது. தொழிலடிப்படையிலும் வாழ்வு நிலையடிப்படையிலும் மண உறவுகள் ஏற்பட்டன. எனினும் சங்க இலக்கியங்களிலே கைக்கிளை, பெருந்திணை என இரு பொருந்தாத உறவு முறைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன கைக்கிளையென்பது ஒருவர் பால் ஏற்படும் அன்பு. இதனைத் தொல்காப்பியர்,

**காமஞ் சாலா இளமை யோள்வயின்**
**ஏமஞ் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்எதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே**[17]

என்று குறிப்பிட்டுள்ளார். பருவம் எய்தாத ஒரு பெண் ணிடம் அவள் பருவம் உற்றதாக எண்ணிக் காதல் கொள் ளும் ஆண்மகன் அப் பெண்ணைப் பற்றிப் பலவாறு சொல்லி இன்புற்று உறவு கொள்ள எண்ணுகிறான். **கலித்தொகை** 58ஆம் பாடல் இத்தகைய உறவு நிலையை விளக்கி நிற்கிறது. இது மணவுறவிலே ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பெருந்திணை யென்பது பொருந்தாக்காமத்தைக் குறித் தது. தான் விரும்பிய பெண்ணை அடைவதற்காக ஆண் மடலேறுவான்.

**ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.**[18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொல்காப்பியர் பெருந்திணைக்கு விளக்கம் கூறுகின்றார். ஆணும் பெண்ணும் மணந்து கொள்வதற்கு ஏற்புடையவாகாத நான்கு உறவு நிலைகளைக் காட்டியுள்ளார். ஆணும் பெண்ணும் திருமணம் செய்யும் போது வயது, குடும்பநிலை, பழக்கவழக்கங்கள் என்பன கவனிக்கப் பட்டன. இன்றும் தமிழர் திருமண நடை முறைகளிலே இவை முக்கிய அம்சங்களாக விளங்கிவருகின்றன.

மன்னர்களிடையான திருமண உறவு போர்வலிமை பற்றியதாகவும் காணப்பட்டது. புறநானூறு இதனை விளக்குகிறது.[19] திருமகளும் விரும்பத்தக்க கற்புடையவளான பெண்ணுக்குப் போர்மறமறிந்த கணவன்தான் மாலை சூடமுடியும். இத்தகைய கட்டுப்பாடான நடைமுறையினாலே தனிக்குடும்ப வாழ்வில் திருமணத்தால் ஏற்படும் புதிய உறவுகளினால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் தவிர்க்கப் பட்டன. சமூக அமைப்பைக் கட்டிக் காப்பதற்குத் தமிழர் இந்நடைமுறைகளைச் சற்றுக் கடினமாகவே கையாண்டுள்ளதைப் பல சங்க இலக்கியப் பாடல்கள் கூறுகின்றன. திருமணத்தால் ஏற்படும் புதிய உறவுநிலையால் பண்பாடும் சிதைவுபடவோ மாற்றமடையவோ முடியாதபடி நடைமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் பிற்காலத்திலே ஆரியப் பண்பாட்டின் கலப்பு ஏற்பட்ட போதும் தமிழர்களின் தனித்துவமான நடைமுறைகள் நிலைத்திருந்தன. திருமணம் நடைபெறும் சூழலிலே வேறுபாடுகள் ஏற்பட்டபோதிலும் உறவுநிலைகள் சிதையாமல் இருந்தன.

மண உறவுகளில் குறிப்பிடத்தக்க விசேட உறவாகப் பரத்தையர் உறவு தமிழிலக்கியங்களிலே பேசப்பட்டுள்ளது. ஓர் ஆண் தான் விரும்பிய பெண்ணைக் கற்பு நிலையிலே மணம் முடித்து மனைவியாக உறவு ஏற்படுத்திக் கொண்ட பின்னர் பொதுமகளிராகிய பரத்தையருடனும் உறவு கொள்கிறான். இவ்வுறவினது சமூக அங்கீகாரம் பற்றிய கருத்துக்கள் இதுவரை எவராலும் உண்மை நிலையிலே விளக்கப்படவில்லையென்றே கூறவேண்டும். பரத்தையருறவு பழந் தமிழர் சமூகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாகவே இருந்ததெனப் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனல் அவ்வுறவு எந் நிலையிலே சமூக அங்கீகாரம் பெற்றதென்பதை நாம் நன்குணரவேண்டும்.

பரத்தையுறவுக்கு ஓர் ஆண் தான் மணமுடித்து மனைவியாகப் பலர் முன்னிலையிலும் ஏற்றுக் கொண்ட பெண்ணிடம் அங்கீகாரம் பெற்றதாகப் பாடற்சான்றுகள் இல்லை. உறவினரிடமும் அங்கிகாரம் பெற்று உறவு கொண்டதாகவும் எடுத்துக்காட்டுகள் இல்லை. எனவே சங்க இலக்கியங்களிலே பரத்தையுறவு சமூக அங்கீகாரம் பெற்றவுறவாக எப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்பதை நாம் விளக்க வேண்டியதவசியமாகின்றது. பல பாடல்களிலே பரத்தை மணம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அக் குறிப்புகளால் அக்காலத்தில் ஆண் ஒருவன் பரத்தையுடன் உறவு ஏற்படுத்திக் கொள்வதற்கும் சில நடைமுறைகளை அனுட்டிக்க வேண்டியிருந்ததை உணரமுடிகின்றது.

**வதுவை யீரணிப் பொலிந்த நம்மொடு**
**புதுவது வந்த காவிரிக்**
**கோடுதோய் மலிர்நிறை யாடியோரே.**[20]

என்னும் **அகநானூற்றுப்** பாடலடிகளிலே பரத்தைக்கும் மணமுடித்த ஆணுக்கும் திருமணம் நடந்த செய்தி கூறப்படுகின்றது. இதன் மூலம் பரத்தையுறவுக்கும் மண நடைமுறைகள் இருந்ததை உணரமுடிகின்றது. எனவே பழந்தமிழர் மத்தியில் மண நடைமுறைகள் மூலமே பரத்தையுறவு பலரறிந்த உறவாகச் சமூக அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. கற்பு மணத்திற்குத் தோழி நடைமுறைகளைச் செயற்படுத்துவது போலப் பாணன் பரத்தை மணத்திற்கு நடைமுறைகளைச் செயற்படுத்துகின்முன். எனினும் பரத்தை மணத்தினுல் ஏற்பட்ட உறவு நிலையான உறவாக இருக்கவில்லை. அவ்வுறவு பொருளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. கற்பு நிலை மணத்தினுல் ஏற்படும் உறவு நிலையே நிலையான உறவாகச் சமூகத்தின் நிலைப்பாட்டிற்குரியதாக இருந்தது. ஆணின் ஒழுக்கக் குறைபாட்டை வெளிப்படுத்திக் காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயும் யாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?



நீயும் நானும் எவ்வழி அறிதும்?

கின்றதாகவே பரத்தையுறவு காணப்பட்டது. சமூக அங்கத்தவர்கள் பலரும் இவ்வுறவைக் கண்டித்தமைக்குப் பல சங்கப்பாடல்கள் சான்றாக உள்ளன. பழந்தமிழரிடையே இவ்வுறவு ஏற்றுக்கொள்ளப்பட்ட உறவாக நிலைக்கவில்லை. இதனால் பின்வந்த இலக்கியங்களிலும் ஏற்றுக்கொள்ளப் படாத தமிழர் பண்பாடாகவே இது அமைந்தது.

உறவுநிலை பரத்தை மணவுறவால் சிதைவுபடக்கூடிய சூழ்நிலைகளும் ஏற்பட்டதைச் சங்கப்பாடல்களால் அறிய முடிகின்றது. கணவன், மனைவி, குழந்தை, தமர் என ஒழுங்கமைப்பிலே இயங்கிவந்த குடும்ப உறவு பரத்தையுறவால் சிக்கலுக்குள்ளாவதை மருதத்திணைப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஏனைய பிரதேசங்களிலே இவ்வுறவு இல்லாமலிருந்திருக்க முடியுமா, எனவும் வினவ இடமுண்டு. திருமண உறவுகள் ஏற்படுவதற்கான இயற்கைச் சூழ்நிலையில் வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருதம் வேறுபட்டிருந்திருக்க வேண்டும். அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் நடைமுறைகள் புதிய உறவுகளை இலகுவாக ஏற்கக்கூடியதாக இருந்தது. நிலையாக ஓரிடத்திலிருந்து பயிர் செய்து வாழ்ந்த அப்பிரதேச மக்களிடையே குடும்பங்கள் தனித்து வாழ்வு நடத்தக்கூடிய வாய்ப்பிருந்தது. ஆனால் மலைப்பிரதேசத்திலும், காட்டுப் பிரதேசத்திலும், கடற்பிரதேசத்திலும் வாழ்ந்த மக்கள் சூழ்நிலைக்கேற்பக் கூட்டாக வாழவேண்டியது அவசியமாக இருந்தது. இதனால் தமது வாழ்வியலுக்கென வகுத்துக்கொண்ட நடைமுறைகளை அவர்கள் இறுக்கமாகவே கடைப்பிடித்து வந்துள்ளனர். குடும்பங்களின் ஒற்றுமை அவர்களது சமூக அமைப்பின் நிலைப்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாததாக இருந்தது. உறவு முறைகளும் திருமண நடைமுறைகளும் வகுத்துக்கொண்ட முறைக்கேற்பவே அமைந்திருந்தன. அவற்றில் புதிய நிலைகள் இணைவது கஷ்டமாக இருந்தது. இதனால் தமிழர் திருமண நடைமுறைகள் பிரதேசச் சூழலுக்கேற்ப அமைவதும் சாத்தியமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருமணமும் பிரதேசச்சூழலும்

தமிழர்களது வாழ்வியல் இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அதனல் திருமணத்திலும் இயற்கைச் சூழலுக்கேற்ப நடைமுறைகளை ஆக்கியுள்ளனர். மலைப்பிரதேசத்தைச் சார்ந்து வாழ்ந்த தமிழரிடையே தினைப்புனமும், புனற்கரைகளும் இளம் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு தொடர்பு கொள்ள வாய்ப்பளித்தன. கடற்கரைப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களுக்கு அங்கமைந்த சோலைகள் சந்திக்கும் இடங்களாயின. களவு மணத்திற்கான நடைமுறைகள் இதனுலே தோன்றலாயின. ஆணும் பெண்ணும் தமக்குள்ளே மனம் ஒன்றுபட்டுச் சேர்ந்தபோது ஒருவருக்கொருவர் மண உறுதிமொழி கூறுவது நடைமுறையாக இருந்துள்ளது. ஏனையவர் தமது தொடர்பினை அறியுமுன்பு தாமும் ஒருவருக்கொருவர் உண்மை உறவு பாராட்டுவதை உறுதிமொழிகள் மூலமே வெளிப்படுத்தினர்.

**குவளை நாறுங் குவையிருங் கூந்தல்**
**ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்க்**
**குண்டுநீர்த் தாமரைக் கொங்கின் அன்ன**
**நுண்பல் தித்தி மாஅ யோயே**
**நீயே, அஞ்ச லென்றென் சொல்லஞ்சலையே**
**யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்கும்**
**கடல்சூழ் மண்டிலம் பெறினும்**
**விடல்சூ ழலன்யான் நின்னுடை நட்பே.**[21]

என்னும் குறுந்தொகைப் பாடலில் ஆண் மகன் பெண்ணுக்குக் கூறுகின்ற உறுதிமொழி எத்தகையதென்பது விளக்கப்பட்டுள்ளது. ''கடல் சூழ் மண்டிலம் பெறினும் விடல்சூழலன் யான் நின்னுடை நட்பே'' என்ற ஆணின் உறுதிமொழி பெண்ணின் உறவை அவன் எவ்வளவு தூரம் விரும்புகிருன் என்பதை உணர்த்துவது மட்டுமன்றி அவளுக்கு அவன் ஊட்ட முற்படுகின்ற நம்பிக்கையையும் காட்டுகின்றது. முன்னர்த் தொடர்பில்லாத ஒருவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு கொள்ளும்போது அது அவர்மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையிலேயே உறுதி பெறமுடியும். தமிழர் நடைமுறைகள் யாவுமே நம்பிக்கையின் அடிப்படையிலே ஏற்படுத்தப்பட்டவையே.

இத்தகைய ஆணின் உறுதிமொழியைப் பெண் பூரணமாக ஏற்று அவனை மணந்து குடும்ப உறவு பெறுகிறாள். திருமணத்தின் பின்பு எத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இந் நம்பிக்கை மாறக்கூடாதென்பதும் தமிழர் நடைமுறையாக இருந்தது. தன் மனைவியின் உறவுடன் புதிய பரத்தையுறவை ஆண் ஏற்படுத்திக் கொண்டாலும் பெண்ணானவள் அவனை விட்டுப் பிரியாது வாழ்வது நடைமுறையாயிருந்தது.

**அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப**
**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை**
**யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.**[22]

என்னும் **குறுந்தொகைப்** பாடலில் இப்பண்பாடு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. முன்னர் ஒருபோது உன் மனையாளாக இருப்பேன் என்று கூறிய நான் நீ எத்தகைய புது உறவை மேற்கொண்டபோதும் தொடர்ந்தும் உன்னையே என் கணவனாக நெஞ்சில் வரித்திருப்பேன் என மனைவியாக உறவு பூண்டவள் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். திருமணத்தால் ஒருமுறை ஏற்படுத்தப்பட்ட உறவு சிதைந்து போகாமல் பாதுகாக்கும் பணியிலே தமிழ்ப்பெண்கள் சிறந்திருந்தனர். இதனையே இல்லறம் எனப் பிற்காலத்திலே குறிப்பிட்டுள்ளனர். ஒரு சூழ்நிலையிலே ஏற்படுத்தப்பட்ட உறவு இன்னொரு சூழ்நிலையிலே சிதைவுறாவண்ணம் பாதுகாக்க இந்நடைமுறை பெரிதும் உதவியாயிருந்தது.

பிரதேசத்துச் சூழ்நிலைக்கேற்ற நடைமுறைகள் பெண்களாலேயே பெரிதும் பேணப்பட்டன. ஒரு பிரதேசத்துச் சூழலிலே வாழ்கின்ற ஆண் பிறிதொரு சூழலிலே வாழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற பெண்ணை மணம் செய்து உறவு கொள்வது பழந் தமிழரிடையே வழக்காயிருந்துள்ளது. எனினும் குறிப் பிட்ட பிரதேச நடைமுறைகளைப் பாதுகாப்பதில் பெண்கள் பெரும் பங்கு வகித்ததையும் சங்கப்பாடல்களால் அறியக் கிடக்கின்றது. களவு மணப்போது ஆண் தான் விரும்பிய பெண்ணுக்குக் கையுறை கொடுப்பது நடைமுறையா யுள்ளது. ஆனால் அவ்வாறு கையுறை வழங்கும்போது பிரதேசச் சூழலின் நடைமுறைகளை மீறாமல் நடத்து கொண் டனர். ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்றினால் இக்கருத்துத் தெளிவாகின்றது. தலைவன் தழையாடையைத் தலைவிக்குக் கையுறையாகக் கொணர்ந்து தோழியிடம் அதை ''பெரு மாட்டிக்குக் கொடுப்பாயாக'' எனக் கொடுக்கிறான். ஆனால் தோழியோவெனின் அத்தழையாடையை ஏற்றுக் கொள்ள முடியாதெனக் கூறுகின்றாள். பின்வருமாறு அதற் கான காரணத்தையும் விளக்குகின்றாள்.

> ''ஐய இவற்றை எற்றிற்குக் கொணர்ந்தனை? இவற்றை யாங்கள் புனைந்து கொள்ளின் இவை யாங்களே கொய்து புனைந்து கொண்டன என்று ஏனையோர் மனங்கொள்ள மாட்டார். எம்மை ஒரு தலையாக ஐயுறுவார்கள்காண். நீங்கள் புனையீரா யினும் நும்பாவைக்குப் புனைக எனின் எம்மொடு வந்து கடலாடுகின்ற ஆயமகளிரும் விளையாட்டுப் பாவைக்கு நெய்தற்றழையே புனைவதன்றி அதற்கு மாறாய பல் வேறுவகைப்பட்ட இத்தழைகளைப் புனையமாட்டார் காண். மற்று இவற்றை நீயிரே உடுத்திக் கொண்மின் எனின் யாங்களும் நெய்தற்றழையே உடுப்பேமன்றி அதன் பகைத்தழையுடுத்தலிலேம். ஆகலின் எங்களின் ஒருவரும் மெய்யிலணிந்து கொள்வோரின்மையா லன்றோ எம்மகளிர் தொடுத்தணிதற்குப் பொருந் திய ஒருசில பூக்கள் மட்டும் உடையாராயினர் காண்.'' 23

தோழி கூறும் காரணங்களால் தனது பிரதேச நடை முறையைப் பேணுவதை நன்கறிய முடிகின்றது. தலைவன் அவர்களது பிரதேச நடைமுறைகளை அறியாத புதியவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னென்பதையும் நுண்ணிதின் உணரலாம். பழந்தமிழ்ப் புலவர்கள் மனிதனின் வாழ்வியல் நடைமுறைகளைப் பதிவு செய்து பாடல்களை யாத்தபோது வேறுபட்ட நடைமுறைகளின் தன்மைகளை நுணுக்கமாகச் சேர்த்துள்ளனர். சிறப்பாக மணவுறவின்போது பிரதேச உணர்வுகள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டன என்பதை வெகு அழகாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

களவுமணம் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் பெண்ணிடம் கற்புமணமாக மாறுவது இலகுவாயிருந்தது. மலைநாட்டைச் சேர்ந்த தலைவன் தலைவி உறவு எதுவித பிரச்சினையுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதை **ஐங்குறு நூற்றுப்** பாடலொன்றிலே காணலாம்.

**அம்ம வாழி தோழி நம்மொடு**
**சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்**
**மென்றோள் நெகிழவுந் திருநுதல் பசப்பவும்**
**பொன்போல் விறற்கவின் தொலைத்த**
**குன்ற நாடற் கயர்வர்நன் மணனே** [24]

இப்பாடலில் பல விடயங்கள் கூறப்பட்டன. மணவுறவுக்குரிய தினைப்புனம் மலைநாட்டு மக்களின் முக்கிய இடமாகும். தினைப்புனத்திலே தினைப் பயிரைக் காவல் செய்யும் இள நங்கையரை வேட்டை மேற்கொண்டுவரும் காளையர் கண்டு விரும்புகின்றனர். அடிக்கடி அங்கே வந்து சந்திக்கின்றனர். தினைப்பயிர் அறுவடை முடிந்ததும் சந்திக்க முடியாத நிலையேற்படுகின்றது. ஆனால் விரும்பிய பெண்ணை மகட்பேசி ஆண் அவளுடைய சுற்றத்தாரிடம் செல்வான். சுற்றத்தார் அவனும் தமது மலைப்பிரதேசத்தைச் சேர்ந்தவன் எனத் தெளிந்து கொண்டால் இருவருக்கும் பலரறிய மணஞ் செய்து வைப்பர். இதுவே நன்மணம் எனக் கருதப்பட்டது. இத்தகைய நன்மணம் முன்னே ஒருவருக்கொருவர் உறவில்லாதபோதிலும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்ற பிரதேச உணர்வடிப்படையில் நடைபெற்றுள்ளது. மணப்பேச்சுவார்த்தைகள் மூலம் இருபகுதியினரும் இணைந்து உறவுகொள்ள முடிந்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட பிரதேசமாக இருப்பின் பேச்சுவார்த்தை மூலம் தொடர்பு கொள்ள முடியாது. இதனல் அத்தகைய மாறு பட்ட பிரதேசத்தவரிடையே நிகழும் மணம் உடன்போக்கு எனப்பட்டது. இந்நடைமுறை வேறுபாட்டினைப் பகுத்து நோக்கின் இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்.

## 5. திருமண வகைகள்

தமிழர்களிடையே பல்வேறு நிலைப்பட்ட திருமணங்கள் நடைபெற்றதைச் சங்கப்பாடல்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. அக்காலத்து மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தமையால் இயற்கைச் சூழலுக்கேற்பவும் திருமண நடைமுறைகள் வேறுபடலாயின. களவுமணம், உடன் போக்கு, கற்புமணம் எனமூன்று பெரும்பகுப்பினுள்ளே அவற்றை அடக்கினும் விரிவாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக பாகுபாடுகள் தேவைப்படுகின்றன. எனவே அவற்றை விரித்துப் பாகுபாடு செய்யும்போது வருமாறு அமைக்கலாம்.

1. களவு மணம்
2. உடன்போக்கு மணம்
3. கரணமணம்
4. வீரமணம்
5. பொருள் மணம்
6. பரத்தைமணம்
7. பேச்சு மணம்
8. மகப்பேற்றுமணம்

இம்மணங்கள் மக்களிடையே எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுத்தப்பட்டன என்பதையறியச் சங்கப்பாடல் களிலே விரிவான சான்றுகளுண்டு. இயற்கை நிலையும் வாழ்வியலும் தமிழரிடையே பலவகையான மண நடை முறைகள் தோன்றக் காரணமாயின. அன்பை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாது வீரம், பொருள், இன்பம், மகப்பேறு என்பவற்றையடிப்படையாகக் கொண்டும் மண வுறவுகள் ஏற்பட்டன. இதற்கான நிலைமைகளை விரிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும்போது தற்கால மணவுறவுகளுக்கான அடிப் படைகளை நாம் கண்டு கொள்ளலாம். மேலைத்தேயத்திலே திருமணம் எவ்வாறு சமூக நிலைக்கேற்ற நடைமுறைகளைக் கொண்டு விளங்கியது எனப் பலர் ஆய்வுகள் செய்துள் ளனர். ஆனால் தமிழர் சமூக நிலைக்கேற்பவே திருமண நடைமுறைகளும் அமைந்திருப்பதைப் பலரும் இன்னும் உணரவில்லை. எனவே அந்நிலையைச் சற்று விரிவாக விளக்குவது பயன்தருவதாகும்.

### 5:1 களவுமணம்

இயற்கைச் சூழ்நிலைக்கேற்பத் தினைப்புனத்திலோ, நீர்ச் சுனைக் கரைகளிலோ, கடற்கரைச் சோலையிலோ ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு இணைதலே களவு மணமாகும். தொடர்ந்து பலநாள் அவர்கள் பழகி உறவு கொண்ட போதும் பலரறிய ஓரிடத்தில் தங்கி வாழாமல் இரகசியமாக இணைவதால் களவு மணம் என இதனைக் குறிப்பிடுதல் பொருந்தும். ஆனால் சங்க இலக்கியங்களிலே தோழி என்பவள் இம்மணத்துக்குரிய நடைமுறைகளைச் செயற்படுத்துபவளாகக் காணப்படுகின்றாள். ஆணும் பெண்ணும் களவாக இணைவதற்குரிய வாய்ப்புக்களை ஏற் படுத்திக் கொடுக்கிறாள். எனினும் அவளில்லாமலும் இம்மண உறவு ஏற்பட்டதைப் பாடல்களால் அறியக் கிடக்கின்றது. குறுந்தொகைப் பாடலொன்றில் இந்நிலை எடுத்துக் கூறப்படுகின்றது.

> யாரும் இல்லைத் தானே கள்வன்
> தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
> தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால
> ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
> குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே. [25]

இப்பாடலுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் தன்னோடு தொடர்பு கொண்ட தலைவன் மணந்து கொள்ளாவிடில் களவு மணத்திற்குரிய சாட்சி வேறு யாருமே இல்லை யெனத் தலைவி தோழியிடம் கூறும் நிலை எனக் குறிப் பிட்டுள்ளனர். புனற்கரையிலே நடைபெற்ற களவுமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை "ஒழுகு நீர் ஆரல் பார்க்கும் குருகு" என்னும் அடிகள் உணர்த்துகின்றன. ஆனால் அக்குருகு இம்மணத்தை மற்றவர்க்கு எடுத்துக் கூறக்கூடிய நிலையில் இல்லாதது. அதனால் நம்பிக்கை ஒன்றையே அடிப்படையாக வைத்து நடைபெற்ற அக்களவுமணத் தொடர்பு முறிந்து போகக் கூடிய அச்சம் தலைவிக்கு ஏற்படுகின்றது. தனது களவு மணத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தலைவன் விட்டுச் சென்ற பின்னர்தான் எண்ணிக் கலங்குகின்றாள். களவு மணத்திற்கும் ஒரு சாட்சி இருக்கவேண்டும் என்ற நடை முறை ஏற்பட இத்தகைய சந்தர்ப்பங்கள்தான் வழிசெய் தன. சில சந்தர்ப்பங்களிலே களவுமணத் தொடர்பை ஊரவர் அறிந்து அலர் தூற்றவும் செய்தனர். ஊரலரினால் பெண்ணின் குடும்பத்தவரது மதிப்பு, சமூகத்தவரிடையே குறைகின்றது. சமூக நடைமுறைகளைச் சரிவரப் பேண முடியாதவர்களென்ற குற்றச்சாட்டிற்கும் அவர்கள் ஆளாக நேரிடும். இத்தகைய பிரச்சினைகளால் களவுமணம் கற்பு மணமாக நடைபெறப் பல நடைமுறைகள் வகுக்கப்பட்டன.

எனினும் வெவ்வேறு இயற்கைச் சூழல்களிலே வாழு கின்ற ஆணும் பெண்ணும் களவுமணத்தால் இணையும் போது அதனைக் கற்பு மணத்திற்குரிய நடைமுறைகளினூடே நிறைவேற்றவும் முடியாதிருந்தது. குடும்பநிலையும் சமூக நிலையும் ஒத்துவராத நிலையிலே வேறுபட்ட நடைமுறை யாலே அவர்கள் இணைந்தனர். அதுவே **உடன்போக்கு மணம்** எனப் பெயர் பெற்றது. களவு மணவாழ்க்கை யால் பெண்ணின் பெற்றோரே அல்லலுற்றதாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. எனினும் வெளிப்படையாக அவர்கள் அதனை எதிர்த்தமைக்கும் சான்றுகளில்லை. தம்மை முன்னிலைப்படுத்திச் செய்யப்படாத காரணத்தினாலே அதனை வெறுத்தனர்.

களவு மணத்தில் இணைந்த பெண்ணைப் பிரித்து வேறு ஓர் ஆணுக்குப் பலரறிய மணம் செய்து வைத்ததாகவும் பாடற் குறிப்புக்களைக் காணமுடியவில்லை. பெண்ணின் உடன் பிறந்தோர் பெற்றோர்களைவிட எதிர்த்ததாகக் கலித் தொகையில் குறிப்புண்டு. எனினும் போர்க்களத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் கருவிகளைக் களவு மணத்தைத் தடுக்க அவர்கள் பயன்படுத்தவில்லை. இதனால் மணநிலையில் ''ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன்'' என்ற நடைமுறை பின்பற்றப்பட்டதை உணரமுடிகின்றது. இது விலங்கு வாழ்வியலிலிருந்து பண்பட்ட ஒழுக்கமுறையான வாழ்வியலைத் தமிழர் கொண்டிருந்ததை உணர்த்துகின்றது. களவில் ஏற்பட்ட தொடர்புதானே எனப் பெண்களும் ஆண் பிரிந்தவிடத்தும் அவ்வுறவை ஒதுக்கவில்லை. களவு மணத்திற்கும் நிலைத்த உறவை ஏற்படுத்தி வாழ எண்ணினர். இதனால் தமிழர் பண்பாடு பெண்கள் மனவுரத்தினாலே வளர்ந்துள்ளது என்றுங் கூறலாம்.

**5:2 உடன்போக்கு மணம்**

களவு மணத்தால் ஏற்பட்ட உறவு பெற்றோரால் தடைசெய்யப்படக்கூடிய நிலை ஏற்படும்போது **உடன்போக்கு மணத்திற்கான** நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சங்கப் பாடல்களிலே பெண்ணின் பெற்றோர் அறியாவண்ணமே உடன்போக்கு நடைபெற்றதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. உடன் போக்கு என்பது ஆணும் பெண்ணும் பெண்ணின் பெற்றோரறியாமல் இணைந்து செல்வதையே குறித்ததாகையால் இதனை எவ்வாறு மணவகைகளுள் ஒன்றாக அடக்கலாமெனவும் கேள்வி எழக்கூடும். ஆனால் உடன்போக்கு ஒரு மண நடைமுறையால் பூரண உறவுநிலையாக்கப்பட்டதைப் பல பாடல்கள் உணர்த்துகின்றன.

உடன் போக்கில் ஆணும் பெண்ணும் இணைவதற்குத் தோழியே பெரும்பணியாற்றுகிறாள். தலைவனிடம் தலைவியை அழைத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகின்றாள். குறுந்தொகைப் பாடலொன்று தலைவன் பலநாட்களாக வந்து தலைவியுடன் உறவு கொண்டு சென்றாலும் அவளைப் பலரறிய மணம் செய்யாமலிருக்கும் நிலைமையை விளக்குகிறது. இதனால் தோழியின் தலையீடு களவு மணத்தில் அவசியமாகிறது. தலைவனை நேரிலே சந்தித்துத் தலைவியை உடன் கொண்டு சென்று மணம் புரியும்படி அறிவுறுத்துகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அண்ணுந் தேந்திய வனமுலை தளரினும்
> பொன்னேர் மேனி மணியிற் றழ்ந்த
> நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
> நீத்த லோம்புமதி பூக்கே ழூர[26]

என்னும் நற்றிணைப்பாடலடிகளில் தோழியின் பணி நன்கு விளக்கப்பட்டுள்ளது. தலைவனிடம் தலைவியை இறுதிவரை நீங்காதிருக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றாள். இளமையழகு நீங்கி முதுமையெய்தினாலும் இருவரும் பிரியாத உறவுடையவர்களாக இருக்க வேண்டுமென்ற நடைமுறையைக் குறிப்பாகக் கூறுகின்றாள். தலைவனுடைய உறுதிமொழிகளை நம்பி அவனுடன் களவிலே தலைவி உறவு கொள்கிறாள். அவ்வுறவு இடையீடின்றி நிலைக்கவேண்டும். இந்நடை முறைக்காகத் தலைவன் தலைவியைத் தன்னோடு அழைத்துச் சென்று குடும்பவாழ்வு நடத்துவான். தலைவியும் தன்தோழியரையும் பெற்றோரையும் பிரிந்து புதிய இடத்திற்குச் செல்வாள். தலைவனுடைய வீட்டிலே திருமண நடைமுறைகள் மேற்கொள்ளப்படும். அதன் பின்னர்த் தலைவி தன்னுடைய பெற்றோரைச் சிலகாலஞ் செல்லத் தலைவனுடன் சென்று சந்திப்பாள். இதனால் உடன் போக்கு மணமும் சமூகத்திலே அங்கீகரிக்கப்பட்டிருந்ததை அறியமுடிகின்றது.

தலைவி தம்மைவிட்டுத் தலைவனுடன் சென்றாலும் தலைவியின் தாய் அவளை முற்றாக வெறுத்து ஒதுக்கவில்லை. அவள் தம்மை விட்டுச் சென்றதால் எத்தகைய துன்பங்களையெல்லாம் அடையப் போகின்றாளோ என வருந்துகின்றாள். இளம் பிராயத்தினளாகிய தன் மகள் கடுமையான வெப்பம் நிறைந்த சுரத்தினூடாகச் செல்லும் துன்பமடைவாளே என்று வருத்தினாள். மகள் சென்றவழியிலே வருகின்றவர்களிடமெல்லாம் மகளைப் பற்றி விசாரிப்பாள். இத்தகைய தாயின் துன்பத்தைப் பல சங்கப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன.

உடன் போக்குப் பொருள்வளம் படைத்த சமூகத்தவரிடையேயும் நடைபெற்றதை அறியமுடிகின்றது. சமூக நிலையிலே தகுதி வேறுபாட்டினாலேயும் உடன்போக்கு மணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையாயிருந்தது. சமூகநிலை வேறுபாட்டினாலே தலைவி இற்செறிக்கப்படுதலும் உண்டு. அல்லது தலைவியின் களவொழுக்கத்தைச் சுற்றத்தவரறியாமல் பிறர்வரைவு வேண்ட உடன்படுவதும் உண்டு. அச்சந்தர்ப்பத்தில் தலைவியின் கற்பு ஒழுக்கம் நிலைக்க உடன்போக்கு மணம் நடைமுறையாயிருந்தது. தோழி தலைவியைத் தமரறியாது போக்க இருவரையும் உடம்படுத்துவாள். தலைவனை இன்ன இடத்திலே இன்ன நேரத்தில் வரும்படி கூறுவாள். அவனும் குறிப்பிட்டபடி வந்து தலைவியை அழைத்துச் செல்வான். ஐங்குறுநூறு 200ஆம் பாடல் இத்தகைய நிலைமையை விளக்கி நிற்கின்றது. அப்பாடலில் வருகின்ற "பொலந்தேர்க் கொண்கன் வந்தனன்" என்னும் அடி தலைவனின் சமூக நிலையைக் குறிப்பாக உணர்த்துகின்றது. பொருள் வளம் மிக்க தலைவனுடன் தன் தலைவியை உடன்போகச் செய்யும் தோழியே சமூக நடைமுறையை நிலைப்படுத்துபவளாக இருக்கின்றாள்.

உடன்போகிய தலைவனும் தலைவியும் திரும்பிவருவதைப் பின்வரும் பாடலால் உணரலாம்.

> துறந்ததற் கொண்டு துயரடச் சாஅ
> யறம்புலந்து பழிக்கு மண்க ணாட்டி
> யெவ்வ நெஞ்சிற் கேம மாக
> வந்தன ளோநின் மகளே
> வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே [27]

தலைவியும் தலைவனும் திரும்பி வருவதைத் துயருற்றிருக்கின்ற தாய்க்கு அயலவர் வந்து கூறுவதை இப்பாடல் கூறுகின்றது. இந்நிலை உடன்போக்கு, தமிழர் சமூகத்திலே இழித்துப் பேசப்படாத ஒரு மணவகையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதையே காட்டுகின்றது. ஓர் ஆணும் பெண்ணும் இணைந்தால் பிரியாது உறவுகொண்டு வாழ்வதே சிறந்த பண்பாடாக நிலவியது. பலரறிய மணவுறவு கொள்ள முடியாதவிடத்து ஆணும் பெண்ணும் இணையக்கூடிய சூழலிற் சென்று இணைந்து உறவு கொள்வது இதனால் சமூக நடைமுறையாகி மரபாகி நிலைத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பிற்காலத்திலே தமிழர் சமூகத்திலே ஆரியப் பண்பாட்டுக் கலப்பேற்பட்டபோது சாதி, குலம் போன்ற பாகுபாடுகள் தோன்றின. அவற்றிற்கு உயர்வு தாழ்வும் கற்பிக்கப்பட்டது. அப்போது இருபிரதேசத்தார் பெற்றோர் அனுமதியின்றி உறவு கொண்டால் அவ்வப்பிரதேசச் சூழலி லிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். அதனால் உடன் போக்கு மணம் சமூகத்தின் பொது நடைமுறையல்ல என்ற நிலையும் உருவாகிற்று. ஆண் பெண்ணின் மண உறவுக்கு மனப் பொருத்தம் மட்டுமன்றி வேறு பொருத்தங்களும் இருக்க வேண்டியதாயிற்று. சங்க காலத்தில் மணவுறவு எவ்வகை யாலும் ஏற்படுத்தலாம் என்ற பரந்துபட்ட மனவுணர்வு பிற்காலத்து நிலவவில்லை. இந்நிலைக்குச் சங்ககாலத்திலே நிலவி வந்த கரணமணமும் மறைமுகமான காரணமா யமைந்தது.

### 5:3 கரண மணம்

தொல்காப்பியர் பழந்தமிழர் சமூகத்திலே **கரணமணம்** எவ்வாறு வந்து சேர்ந்ததென்பதை விளக்கவே தம் ஆய்வின் வெளிப்பாடாகப் பின்வரும் சூத்திரத்தை அமைத்துள்ளார்.

> **பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
> **ஐயர் யாத்தனர் கரணம் என்ப** (தொல் : 143)

சமூகத்திலே கரணம் ஏற்படக் காரணமாக அமைந்தது பொய்யாகும். தான் விரும்பிய பெண்ணுடன் உறவு கொண்ட பின்னர் பிரிந்து செல்கின்ற ஆணைக் கரணத்தினல் நல்வழிப்படுத்த வேண்டியிருந்தது. ஆணின் வாய் உறுதி மொழி மட்டும் நிலைத்த குடும்ப உறவுக்குப் பலமான அடிப்படையாக அமையமுடியவில்லை. பெண்கள் சங்க காலத்திலே தாம் உறவுகொண்ட ஆண்களைப் பிரியாமல் வாழவே விரும்பினர். இதனல் பெண்களிடையே பொய்ம்மை நிலவவில்லை. ஆனல் ஆண்களிடத்தே பொய்ம்மை மிக்கிருந்ததைப் பல பாடல்கள் எடுத்துக் கூறியுள்ளன. களவு மணத்தின் பின்னர் உடன்போக்கு மணத்தால் குடும்ப உறவு சமூகத்திலே நிலைப்படுத்தப் பட்டது. ஆனல் உடன்போக்கு மணமும் நடைபெறுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்து அந்த உறவு பலரறியவாய்ப்பில்லாமற் போயிற்று. எனவே இவ்விருவகையான மண நடைமுறைகள் சமூகத்தின் இயல்பான இயக்கத்திற்குத் தடையாகவே கருதப்பட்டன.

சமூகத்திலே பலரும் பின்பற்றக்கூடிய மண நடைமுறையாக, பொது நடைமுறையாகக் கரணமணம் ஏற்படுத்தப்பட்டது. பெண்ணும் ஆணும் விரும்பிய நிலையில் அவ்வுறவைப் பலரறியச் செய்யவும்; சாதாரண வாழ்வியலிலே ஆணும் பெண்ணும் உறவுபெற்றுக் குடும்பத்தை நடத்தவும் கரணமணம் பெரிதும் உதவியது. ''நொதுமலாளர் வரைவு'' என்னும் தொடர் பருவமடைந்த ஆணையும் பெண்ணையும் உறவு கொள்ளச் செய்யும் முயற்சியைக் குறித்தது. சங்க இலக்கியங்கள் காதல் தொடர்புகளை மட்டுமன்றிச் சாதாரண வாழ்க்கையைப் பற்றியும் செய்திகளைத் தருகின்றன. ''கரண மணம்'' சமூகத்தின் இறுக்கமான தன்மையை மேலும் வலுப்படுத்தும் அம்சமாகவும் விளங்கியது. கரண மணம் பல நடைமுறைகளைத் தன்னகத்தே கொண்டது. அழகான பெண்ணைக் கரணமண முறையால் உறவு கொள்ள இருதரப்பாரிடையும் பேச்சு வார்த்தைகள் நடைபெறவேண்டியதும் அவசியமாகும். இது மணம்பேசும் தூது எனப்பட்டது. ஒரு பெண்ணையடையப் பலரும் தூதனுப்புவதும் உண்டு. அயலார் விடுக்கின்ற இந்தத் தூது இருதரப்பாரையும் பொதுநிலையில் வைத்தது. அவர்கள் ஆண் பெண்ணின் பொருத்தப்பாடுகளை நோக்கி அவர்களை இணைத்து வைத்தனர். இதனால் கரண மணமே சமூக நிலையில் முறைப்படி நடக்கும் மணமாகவும் கருதப்பட்டது.

அகநானூற்றுப் பாடல் ஒன்றிலே தன் மகள் விரும்பிய கணவனுடன் உடன்போக்கு மணம் செய்து சென்றபோது தாயானவள் அவள் கரணமணத்தை மேற்கொள்ளவில்லையே என வருந்துகின்றாள்.

> ''மயில் போலும் சாயலையுடைய என் செல்வி தன்னையொத்த தோழியர் குழாமும் என்னையொத்த ஏனைச் செவ்லித்தாயரும் கண்ணால் கண்டு மகிழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி கையால் போர்த்தொழில் செய்யும் வன்மை யுடைய யானையையும் விரைந்தியங்கும் தேரினையு முடைய சோழ மன்னர்களுக்குரிய காவிரியாற்றின் மருங்குள்ள உறையூர் போன்ற செல்வம் மிகுதியாக வுடைய நெடிய தன் தந்தையினது இல்லத்திலேயே இருந்து அறனறிந்து மூத்தோராகிய சான்றோர் வது வைக்குரிய கரணங்களைச் செய்யா நிற்ப அழகிய மாட்சிமை பொருந்திய திருமண விழாவின்கண் அவள் கூந்தலிற் மயிர்ச்சாந்தம் பூசி மங்கல நீராட்டி அவ் விடத்தே செய்தற்கியன்ற பல சடங்குகளையும் மங்கல மகளிர் செய்விப்ப அவள் பலரும் அறியத் தன் காதலனை மணந்து அவனோடு செல்லாளாய்.........நம்மனோரைச் சிறிதும் நினையாமல் அவ்வயலானோடு சென்ற முள் போன்ற கூரிய பற்களையும் பவளம் போன்ற வாயினை யும் உடைய சிறுமியாகிய அக்கண்ணோட்டமில்லாதவள் சிலம்பு கழீஇ என்னும் சடங்கினைத் தானே செய்து கொண்டு யாம் பண்டறிந்திலாத நாட்டின்கண் உறைதல் மிகவும் கொடியதொரு செயலாகும்''. 28

மேற்காட்டிய பகுதியினூடாகத் தாயின் மனவருத்தம் மட்டுமன்றிச் சமூக நடைமுறையும் காட்டப்பட்டுள்ளது. கரண மணத்திலே இணைந்திருந்த சடங்குகள் உறவினர் ஒன்று கூடும் நிலையை உணர்த்துகின்றன. கரண மணத்திலே பல சடங்குகள் இடம்பெற்றுள்ளன. இம்மணத்தினுல் சமூகத்திலே சான்றோருக்கும் முதியவர்க்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையும் காணப்படுகின்றது. தலைமகன் வீட்டார் தலைவியை மணமகளாக 'வரைய' வருவதும், தலைவி வீட்டார் 'மகட்கொடை' நேர்வதும் ஆகிய நிகழ்ச்சிகளிலே பெற்றோருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் புலப்படுத்தப்படுகின்றது. நற்றிணை 393 ஆம் செய்யுளிலே,

> வரைய வந்த வாய்மைக்கு ஏற்ப
> நமர்கொடை நேர்ந்தன ராயின்......

என 'மகட்கொடை' நேரும் கரண மண நிகழ்ச்சியின் முக்கியமான பண்பு குறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் மகிழ்வான மங்கலமான நிகழ்வாக நடைபெறவேண்டுமென்பதற்காகவே சடங்குகள் நடைமுறைகளாக்கப்பட்டன. மகளிரும் சடங்குகளில் பங்குபற்றியுள்ளனர். ஆரியப் பண்பாட்டுக்குரிய சடங்குகளின்றித் தமிழரால் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்ட சடங்குகள் கரணமணத்தில் செய்யப்பட்டன. சு. வித்தியானந்தன் **தமிழர் சால்பு** (தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி, **1954**, பக். 245) என்னும் நூலில் பழந்தமிழர் கரண மண வினை பற்றிப் பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளார் :

(1) நன்னாளையும் நன்னிமித்தத்தையும் குறித்தல். திங்களும் சகடமும் சேர்ந்த காலை நேரமே பெரும்பாலும் கைக்கொள்ளப்பட்டது.

(2) பந்தல் அமைத்து அலங்கரித்தல்

(3) முரசம் முழங்குதல்

(4) சுற்றத்தார்க்கும் மற்றவர்க்கும் உணவளித்தல்

(5) பெண்ணை அலங்கரித்து விதானத்தின் கீழ் இருத்தல்.

(6) முதுபெண்டிர் மணமக்களுக்குக் குடங்களும் கலங்கலங்களும் வழங்குதல்.

(7) முருகனை வணங்குதல்.

(8) புதல்வர்ப் பயந்த பெண்டிர் மணமக்களை வாழ்த்துதல்

(9) இராக்காலத்தில் மணமகளை மணமகனுக்குச் சுற்றத்தார் அளித்தல்.

**அகநானூறு** 86 ஆம், 136 ஆம் செய்யுள்களை அடிப்படையாகக் கொண்டே சு. வித்தியானந்தன் மேற்படி கருத்துக்களை வழங்கியுள்ளார். கரண மணத்திலே பின்பற்றப்பட்ட சடங்குகள் காலகதியில் ஆரியமணச் சடங்குகளுடன் சேர்ந்தபோது தமிழர் கரண முறையிலே புதிய நடைமுறைகளும் தோன்றலாயின. வேத மணமுறைகள் புகுந்தன. அந்தணரே மணச் சடங்குகளை முன்னின்று செய்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையும் சமூகத்திலே தோன்றியது. இதனால் மண நடைமுறைகளிலே ஏற்றத்தாழ்வுகளும் தோன்றலாயின. ஆணும் பெண்ணும் இணைந்து குடும்ப உறவை மேற்கொள்ள பிரதேசச் சூழ்நிலை, பழக்க வழக்கம், பொருளாதார நிலைமை, உற்றார் தொடர்பு என்பனவும் கவனிக்கப்படலாயின. திருமண உறவுக்கு அடித்தளமாக இருந்த அன்பு நிலை மாறிவிட்டது. கரணமணத்திலே வந்து சேர்ந்த புதிய நடைமுறைகள் மணத்துக்கான இயற்கையான நிலைகளையும் மாற்றின. எனவே மண கைகளும் மேலும் பல வகைகளாக மாறின.

## 5:4 வீரமணம்

சமூகத்தின் வளர்ச்சியால் குழுநிலை மக்கள் வாழ்வியலிலே அரசு என்னும் அமைப்புத் தோன்றியது. அரசனே மக்கள் தலைவனாகச் சில குழுக்களைப் பாதுகாப்பவனாக அமைந்தான். வீரமே அரச :பதவியை உரிமைகொள்ளவும் உதவுவதாயிற்று. அந்த வீரம் திருமணத்தையும் இணைத்து இயங்கியதையும் பல சங்கப் பாடல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. வீரம் திருமண உறவுக்கு அடிப்படையானதை பல சங்கப் புலவர்கள் தமது பாடல்களில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளனர். வீரமணமும் இருநிலைகளில் நடைபெற்றுள்ளது. முல்லை நிலத்து ஆயர்களிடையே காளைகளை அடக்கும் வலிமையுள்ள இளைஞனுக்குத் தமது பெண்ணை மணமுடித்துக் கொடுக்க எண்ணினர். அரசமணம் போர் வெற்றியை அடுப்படையாகக் கொண்டமைந்தது. முல்லை நிலத்திலே வாழுகின்ற ஆயர்கள் ஏறுதழுவுதலைப் பெருவிழாவாகவே நடத்தினர். குமரிகளால் வளர்க்கப்பட்ட காளைகள் களத்திலே விடப்படும். அக்காளைகளை முல்லை நில ஆடவர்கள் தமது ஆற்றலினால் அடக்குவர். அடக்கும் வீரனுக்குத் தன் மகள் உரியவள் எனப் பெண்ணின் தந்தை அறிவித்திருப்பான். வெற்றியால் திருமண உறவு உறுதி செய்யப்படும். ஆயர் வாழ்கின்ற சூழலில் வாழ்வுக்கு வீரம் அவசியமானது. பெண்களும் சிறந்த வீரர்களுடன்தான் திருமண உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். வீர உணர்வே குடும்ப உறவின் அடித்தளமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு என்னும் நிலை தமிழர்களிடையே உருவாகிய போது இயற்கைச் சூழலோடு ஒட்டிய வாழ்வியல் முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. குழுக்களுக்குத் தலைவனாக விளங்கிய அரசன் மணமுடிக்கப் போர் நடத்தினான். பெண்ணைப் பெற்ற அரசன் பெண்கேட்ட மன்னனுக்கு ஒப்புதல் கொடாவிடின் பெண் கேட்ட மன்னன் போரிட்டுப் பெண்ணைப் பெற்றான். "மகட்பாற்காஞ்சி" என இந் நிலையைச் சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். புறநானூற்றில் 18 பாடல்கள் இந்நிலையை விளக்கும் பாடல்களாக அமைந்துள்ளன. அரச குடும்பத்திலே மணப்பருவமடைந்த பெண்ணைப் பொருள்வளம் படைத்தவர்க்கு மணமுடித்துக் கொடாமல் வீரத்தால் பிறரை அடக்கியாளும் வலிமையுடையவனுக்கே மணமுடிப்பர்.

> "முழங்குகின்ற கடலாகிய முழவையுடைய முசிறி நகரத்தையொத்த நலஞ்சான்ற உயர்ந்த பொருள்களைக் கொண்டுவந்து உவகையுடன் கொடுத்தாலும் இவள் ஒப்போரும் உயர்ந்தோருமல்லாதோரை மணந்து கொள்ளாள் என்று சொல்லி தந்தையும் கொடான்".[29]

எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகின்றது. இதனால் மன்னரிடையே திருமணம் இருபகுதியினரதும் வலிமையால் தீர்மானிக்கப்பட்டதை உணர முடிகின்றது. ஆண் திருமணவுறவு கொள்ளத் தான் விரும்பிய பெண்ணைச் சாதாரணமாக மணந்து கொள்வது கஷ்டம்; போரிட்டு அப்பெண்ணை வெற்றியால் மணவுறவு கொள்ளவேண்டும். அன்றேல் வேலாற் புண்ணுற்று வடுப்பட்டவுடம்புடனே மேலுலகம் செல்ல வேண்டும். மகள் மறுத்தல் காரணமாக இருவரிடையே போர்நிகழும் திறத்தைப் பரணர் என்னும் புலவர் புறநானூற்றுப் பாடலொன்றிலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்
> சுணங்கணி வனமுலை யவளொடுநாளை
> மணம்புகு வைக லாகுத லொன்றோ
> ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின்
> நீளிலை யெஃக மறுத்த வுடம்பொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரா வுலகம் புகுத லொன்றெனப்
படை தொட்டனனே குருசி லாயிடைக்
களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்
பெருங்கவி னிழப்பது கொல்லோ
மென்புல வைப்பினித் தண்பணை யூரே.[30]

பெண்ணை விரும்பிய மன்னனே அவளை அடைவது அல்லது வீரசுவர்க்கம் போவது என வஞ்சினங்கூறிப் போரிடச் செல்கின்றான். இப்போரிலே ஊரின் நிலை என்னவாகும்? நன் செய் வயல்கள் பொருந்திய இந்த மருதநல்லூர், நீராடும் யானைகள் தம்முட் பொருதலால் கலங்கிச் சேறு கின்ற குளம்போல, இவர்களது போரிலே பொலிவை இழக்கும் போலும் எனப் புலவர் கூறுவது வீரமண நடைமுறையால் ஏற்படும் தீமையை விளக்குகிறது. அங்கு திருமணவுறவு சாதாரண குடும்ப உறவு நிலை என்ற அடிப் படையில் அமையாது இருபெரும் குழுக்களின் உறவு என்ற நிலையிலே பரந்துபடுகின்றது. அவ்வுறவு ஏற்பட முன்னர் இருசார் பகுதியிலும் சமூகத்தவர்கள் கஷ்டங்களுக்குள்ளாக நேரிடுகின்றது. இம்மணவுறவு வீரத்தை மட்டுமே அடிப் படையாகக் கொள்வதாலே இந்நிலை ஏற்படுகிறது.

## 5:5 பொருள் மணம்

பழந்தமிழரிடையே மணவுறவுகள் பொருளையடிப்படை யாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெண்ணின் குடும்பத்தவர் பொருள்வளமுள்ளவராக இருப்பின் அவளை மணந்து கொள்வதற்கு அவர்கள் தகுதிக்கேற்பப் பொருள் கொடுக்கவேண்டியிருந்தது. தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர்கண்டு அன்பு கொண்டாலும் அது மணவுறவாகி நிலைப்படுவதற்குப் பொருள் முக்கியமாயிற்று. இதனல் களவுத் தொடர்பு பலரறி மணவுறவாக மாறத் தலைவன் பொருள் தேடவேண்டும். தலைவியைப் பிரிந்து சென்று பொருள் தேடி வந்த பின்னரே மணம் முடிக்கும் வழக்கம் நடைமுறையாயிருந்தது. பெண்ணின் சுற்றத்தார் கேட் கின்ற பொருளை ஆண் பெண்ணுக்குக் கொடுக்கவேண்டும். ஐங்குறுநூற்றுப் பாடலொன்றில் இந்நடை முறை குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கர் ஞாழன் மலரின் மகளி
ரொண்டழை யயருந் துறைவன்
றண்டழை விலையென நல்கின ளூடே[31]

இப்பாடல் பெண்ணின் சுற்றத்தார் கேட்ட பொருளைத் தலைவன் கொடுத்து வரைவு மாட்சிப்படுத்தியதை யறிந்த தோழி மனமகிழ்வுடன் தலைவிக்கு அச்செய்தியினைக் கூறுவதாக அமைந்துள்ளது; நெய்தல் நிலப்பிரதேசத்திலே வாழ்ந்தவரிடையேயுள்ள பொருள் மணத்தை விளக்குகின்றது. ''தண் தழைவிலை'' என்னும் தொடருக்கு உரையாசிரியர்கள் ''முலை விலை'' எனப் பொருள் கூறியுள்ளனர். தலைவியின் மூலை விலையாக நாட்டையே தலைவன் வழங்குகின்முன். அதன் பின்னரே அவர்கள் மண உறவு நிலைப்படுத்தப்படுகின்றது.

இம்மணநிலை தமிழர் சமூகத்தில் பொருள் முக்கியம் பெற்றிருந்தகாலத்தைச் சுட்டி நிற்கின்றது. ஏனெனில் களவு மணம் நடைபெற்றபோதும் பெண்ணுக்குக் கையுறை வழங்கும் வழக்கம் இருந்துள்ளது. தழைகள்தான் பெரும்பாலும் கையுறைகளாகக் கொடுக்கப்பட்டன.

> ''மலைநாடன் உடுத்திக்கொள்ளும் தழையை கையுறையாகக் கொடுத்தனன். அவற்றை எம் நாட்டினர் உடாராதலின் யாங்கள் மட்டும் உடுத்திக் கொள்ளின் அன்னை கேட்டற்கு யாதுவிடை சொல்ல வல்லேமென்று அஞ்சா நிற்பேம். அத் தழையை மீட்டுந் தலைவன் பாற் கொடுத்துவிடின் அதனுல் அவன்படும் ஆற்ருமைக்கு அஞ்சா நிற்பேம். ஆகிய அவற்றிடையே அவனது மலையிலுள்ள போரைச் செய்தலையுடைய வரையாடும் பாய்ந்து செல்லாத தெய்வம் இருக்கின்ற மலைப்பக்கத்தின் கண்ணே உள்ள கொய்தற்கரிய தழைதாம் வாடுதலுடைய ஆகலாமோ''[32]

என நற்றிணைப் பாடலொன்றின் உரை கையுறையாகத் தழை வழங்கப்பட்டதை மாத்திரமன்றி அது சம்பந்தமான ஏனைய நடைமுறைகளையும் விளக்குகிறது. ஆனுல் இதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று நெய்தல் நிலத்தவரிடையேயும் கையுறை கொடுக்கின்ற வழக்கம் இருந்ததை ஐங்குறுநூறு 193 ஆம் பாடலால் உணர முடிகின்றது.

> வலம்புரி யுழுத வார்மண லடைகரை
> யிலங்கு கதிர் முத்த மிருள்கெட விமைக்குந்
> துறைகெழு கொண்க நீ தந்த
> வறைபுனல் வால்வளை நல்லவோதாமே.

இப்பாடலில் தலைவன் அழகிய சங்குவளைகளைக் கையுறையாகக் கொணர்ந்து கொடுத்தமை குறிப்பிடப்படுகின்றது. ஆனால் கையுறை கொடுப்பதுடன் நின்றுவிடாமல் தலைவியை மணந்து உறவு கொள்வதே சிறந்ததெனத் தோழி கூறுகின்றாள்.

இத்தகைய கையுறை கொடுக்கும் வழக்கமே சமூக வளர்ச்சி நிலைப் போது பொருள் கொடுக்கும் வழக்கமாகியது. பொருளால் உறவு நிலைகள் கட்டிக் காக்கப்படுவதையே பொருள் மணம் உணர்த்துகின்றது. சமூகத்தில் வேறுபட்ட சூழலிலே வாழ்கின்றவர்களிடையே மணவுறவு ஏற்படப் பொருள் உதவியது. வேட்டையாடியும், மீன்பிடித்தும், பயிர்த்தொழில் செய்தும் வேறுபட்ட வாழ்வியல்பு கொண்டவர்களையும் பொருள் இணைத்து உறவு கொள்ளவைத்தது. இதனால் பொருள் வளம் படைத்த ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட மணவுறவுகளைக் கொள்ளவும் இது வழிவகுத்தது. ஒருவனுக்கு மனைவியராகப் பலர் உறவு கொள்ளும் நடைமுறையும் தோன்றியது. அதனால் பரத்தை மணம் என்னும் உறவு நிலையும் தமிழர் சமூகத்திலே தோன்றுவதாயிற்று.

## 5:6 பரத்தை மணம்

பரத்தை என்னும் சொல் அயன்மை, பொதுமகள், துர்த்தனம் எனப் பொருள்படும். சங்க இலக்கியங்களிலே பல பாடல்களில் இச்சொற்பிரயோகம் காணப்படுகிறது. வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருதநிலத்து மக்களிடையே பரத்தமை யொழுக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. கற்புமணம் செய்து வாழும் தலைவன் மனைவியைப் பிரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பரத்தையை மணம் செய்து சிலகாலம் அவளோடு வாழ்வான். பின்னர் அவளை விட்டு மனைவியுடைய வீட்டிற்குத் திரும்பி வந்து குடும்பம் நடத்துவான். இதனுல் பரத்தை மணத்தால் ஏற்படும் உறவு தற்காலிக உறவாக நிலையற்ற உறவாக இருந்ததை அறிய முடிகின்றது. பரத்தையுறவு ஒருத்தியுடன் மட்டும் நடைபெறவில்லை. பலரோடு நடைபெற்றது. பொருள்வளம் படைத்த ஆண்களே பரத்தமையுறவினை மேற்கொண்டிருந்ததையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. இவ்வுறவு எற்படுவதற்குப் பாணன் பெரிதும் உதவுகின்ருன். அவனே தலைவனைப் பரத்தையருடன் தொடர்பு கொள்ளவும் மணம் செய்யவும் காரணமாகின்ருன்.

கலித்தொகை 68ஆம் பாடலில் பாணனின் தன்மை கூறப்பட்டுள்ளது.

சேரியாற் சென்று நீ சேர்ந்தஇல் வினுயினன்
தேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ
ஒலிகொண்ட சும்மையான் மணமனை குறித்தெம்மிற்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்.

இவ்வடிகளில் பாணன் தொழிற்பாடு விளக்கப்படுகின்றது. பரத்தையின் வீடெனக் கருதித் தலைவனின் கற்புமண மனையிலே புகுந்து பாணன் அம்மனையைப் பொலிக என்று வாழ்த்துகின்ருன். அவன் புலைத்தொழில் செய்பவனுகக் கருதப்படுகின்ருன். சேரிப்பகுதிதோறும் சென்று தலைவன் இருக்கும் இல்லத்தைப் பாணன் தேடுகிருன். இதனுல் பரத்தையர் வாழும் பகுதி 'சேரி'யென அழைக்கப்பட்டதையறியலாம். பரத்தையோடு தலைவன் உறவு கொள்வதற்கும் ஒருமண நடைமுறை மேற்கொள்ளப்பட்டதைச் சங்கப் பாடல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. கரணமணத்தால் களவுநிலையுறவு கற்புநிலையாக்கப்பட்டது போன்று பரத்தையுறவும் மணநடைமுறையால் பலரும் அறியும் உறவாக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவுந் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்தனன் மணனே.[33]

என்னும் அடிகளிலே பரத்தையர் மனைகளிலே வதுவை கருதி முழங்கப்படும் முழவோசை பற்றிய குறிப்பைக் காணலாம். தலைவன் தன்னுள்ளத்திலே தனது பழைய சூளுரை தோன்றிச் சுடுதலால் தான் பெரிதும் விரும்பிய பரத்தை மணத்தைத் தவிர்த்து விடுகின்றான். இச்செயல் கற்புமணம் அன்பு வயப்பட்டிருப்பதையும் பரத்தை மணம் பொருள் வயப்பட்டிருப்பதையும் குறிப்பாக உணர வைக்கிறது.

இன்னும் பரத்தையர் உறவு மணமுறை நடைமுறைகளூடாகவே சமூகத்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பரத்தையர் வீட்டிலே பரத்தைக்கு மாலைசூடிப் பலர் அறியத் தலைவன் மணந்து கொள்கிறான். அதன் மூலமே அவளோடு உறவு கொள்ளவும் அவளைப் பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் அவன் உரிமை பெறுகிறான். பரத்தையுறவு களவு நிலையிலே ஏற்றுக் கொள்ளப் படவில்லை. இவ்வுறவுக்குப் பொருள் காரணமாக அமைந்தமையால் உரிமையை நிலைப்படுத்த வேண்டியதும் அவசியமாக இருந்தது.

அக்காலச் சமூக நிலையிலே பரத்தை மணவுறவு கூடா ஒழுக்கமெனக் கருதப்படவில்லையெனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் சமூக நிலையிலே பரத்தைமணவுறவு கொண்ட பரத்தையும் தலைவனும் பல சந்தர்ப்பங்களிலே இழித்துக் கூறப்படுகின்றனர். தலைவனும் தான் மணவுறவு கொண்ட பரத்தையுடன் நிலைபேறான குடும்பவுறவை வளர்க்கவில்லை; அவளைக் கைவிட்டு விடுகிறான். கைவிடப்பட்ட அவளும் இவனைப் பொருட்படுத்தாமல் புதியவன் ஒருவன் உறவை நாடிச் செல்கிறாள். இது விலங்கு மனப்பான்மை கொண்ட பண்பாடற்ற தற்காலிகமான உறவாகவே விளங்கியது. இதனால் இனப்பெருக்கம் என்ற நிலையும் ஏற்பட முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிற்று. சமூக உறவைத் தொடர்புடையதாக்கப் பரத்தை மணம் எந்தவகையிலும் உதவவில்லை. அதற்கு மாறாகக் கற்பு மணத்தால் நிலைப்படுத்தப்பட்ட குடும்ப உறவைக் குலைத்துச் சமூகத்தின் கட்டுக்கோப்பினைச் சிதைக்கவும் முயன்றதால் இம் மணவுறவு சமூகத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத நடைமுறையாகவே அமைந்தது.

தனிக்குழுநிலையான வாழ்வியலிலிருந்து சமூக அமைப்பு வளர்ச்சி நிலைபெற்றபோது அரச அமைப்புத் தோன்றியது. அரசன் பரத்தையரை மண நடைமுறையின்றி உறவு கொள்ள முடிந்தது. வெறும் உடலின்பம் என்ற விலங்கு மனப்பான்மையுடனே அத் தொடர்பு ஏற்பட்டது. இதனால் பிற்காலத்தில் பரத்தையுறவு களவு நிலையிலே பொது மக்களிடம் நிலை பெற்றது. பரத்தையிடம் உறவு கொள்ளும் ஆண்மகன் பொருட் பலத்தினாலே தன் மதிப்பைப் பாது காக்கவேண்டியிருந்தது. ஆணுடன் பலரறிய நீண்ட காலம் குடும்பம் நடத்தும் வாய்ப்பில்லாமையால் பரத்தை யர் பொதுமகளிராகவே சமூகத்தில் நிலைபெறமுடிந்தது. அவர்களை ஒதுக்கிவைக்கின்ற நடைமுறையும் தோன்றியது. இளமையும் அழகும் அவர்களிடம் இருக்கும் வரை கஷ்ட மின்றி வாழமுடிந்தது. எனினும் உடலை விற்று வாழ்பவர் என்ற அவச்சொல்லுடனேயே வாழ்வு நடத்தவேண்டிய இழி நிலையும் அவர்களுக்கேற்பட்டது. அவர்கள் வாழுமிடங்களில் கலைகள் வளர்ந்தபோதும் அதன் திறமைபெரிதும் மதிக்கப்பட வில்லை. ஒருவனோடு நிலையான மணவுறவை ஏற்படுத்தும் உரிமையும் சமூக அங்கீகாரம் பெற்று அமைய வாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை. இரண்டாம் மனைவி என்ற நிலையில் அவர்களோடு உறவு கொண்ட ஆண்களும் எந்தவிதமான உரிமையையும் அவர்களுக்குக் கொடுக்கமுன்வரவும் இல்லை. சமூகத்திலே பொதுமகளிர் என்ற ஒரு சாதியுணர்வு தோன்றி வளரவும் இதனால் இடமுண்டாயிற்று.

## 5:7 பேச்சு மணம்

தமிழர் சமூகத்திலே பெண் பருவமடைந்ததும் அவளுக்கு உரிய ஆடவனைத் தேர்ந்தெடுத்து மணம் முடித்து வைப்பது பெற்றோருடைய கடமையாக இருந்தது. இதனை ''நொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வரைவு'' எனச் சங்கப்புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் இத்தகைய திருமணங்கள் நடைபெற்றதைப் பற்றிய குறிப்புகளைப் பாடல்களிலே காணமுடியவில்லை. ஆனால் நொதுமலர் வரைவு கருதித் தலைவி வீட்டாருடன் தொடர்பு கொண்டதாகக் குறிப்புகள் உண்டு. அதனால் பேச்சு மணமும் நடைமுறையாக இருந்ததையுணரமுடிகிறது. இன்னும் ஓர் ஆண் தான் கண்டு விரும்பிய பெண்ணை மணமுடிப்பதற்காகத் தன் நண்பனை அவளைப் பற்றி விசாரித்து மணவுறவு கொள்ள ஏற்பாடு செய்யும்படி கேட்கும் வழக்கமும் காணப்படுகின்றது. தோழன் பெண்ணின் பெற்றோரை அணுகி ஆவன செய்யவேண்டியவனாகிறான்.

புறநானூறு 201 ஆம் பாடலில் நேரடியான பேச்சு மணத்துக்கான முயற்சி நடைபெற்றமை எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. கொடைவள்ளலாகிய பாரி இறந்த பின்னர் அவனுடைய மகளிரை மணம் செய்து கொடுக்க எண்ணிய புலவர் கபிலர் இருங்கோவேளிடம் நேரடியாகச் சென்று பேசுகின்றார். ''இவர்கள் முல்லைக்குத் தேரீந்து நல்லிசை நிறுவிய பறம்பிற் கோமானாகிய பாரியின் மகளிர்; யான் இவருடைய தந்தையாகிய வேள்பாரிக்குத் தோழன்; அந்தணன் புதல்வன், இம்மகளிரை யான் தர மணந்து கொள்க'' என வேண்டிக் கேட்கிறார். இங்கே முன்னரறிமுகமே இல்லாத ஆண் பெண்ணிடையே மணவுறவு பேச்சினால் ஏற்படுத்தப்படுவதை அறியலாம்.

பேச்சு மணம் எல்லாப் பிரதேசத்திலும் வாழ்ந்த மக்களிடையேயும் பொதுவான நடைமுறையாய் இருந்திருக்க வேண்டும். களவு மணநிலையிலே அக்காலத்தில் வாழ்ந்த அனைவரும் மணவுறவு கொண்டிருக்க முடியாது. நொதுமலர் கூடிப் பேசிப் பருவமடைந்தவர்களது மணவுறவுகளை ஏற்படுத்திவைத்தனர். இம் மண நடைமுறை இன்றும் தமிழரிடையே பொதுவாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5:8 மகப்பேற்று மணம்

ஒருவரையொருவர் அன்பு அடிப்படையாக விரும்பி மணவுறவு கொண்டு குடும்பம் நடத்தும்போது மகப்பேறு கிடையாவிடின் இரண்டாம் முறை ஆண் இன்னொரு பெண்ணுடன் மணவுறவு கொள்ளும் வழக்கமும் தமிழரிடையே இருந்துள்ளது. ஆனால் இம்மண உறவு முதல் மணவுறவு நடைபெற்று எவ்வளவு காலத்தின்பின் நடைபெற்றதெனக் கூறமுடியாதுள்ளது. ஏனெனில் கால வரையறை பற்றிய செய்திகளைச் சங்கப் பாடல்கள் கூறவில்லை. ஆனால் பரத்தை மணவுறவைப் போலன்றி மகப்பேற்று மணவுறவு நிலைபெற்ற உறவாயமைந்தது. முதல் மனைவியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மயில்க ளாலப் பெருந்தே னிமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினும் சிறந்தன ளெமக்கே நீ நயந்து
நன்மனை யருங்கடி யயர
வெந்நலஞ் சிறப்பயா மினிப்பெற் றோளே.[34]

இப்பாடல் மகப்பேறின்மையான் தலைவன் தொன்முறையாக மணந்த தலைவி இருப்பவே தனது தகுதிக்கேற்ற குலப்பிறப்பாட்டி மற்றொருத்தியைத் திருமணம் செய்து தன்னில்லத்திற்கு அழைத்து வந்தனனாக அதுகண்ட நற்குணக் கடலாகிய தொன்முறைக் கிழத்தி தலைவன் செயலைத் தானும் விரும்பி அவளை வரவேற்றற்கு விளக்கு முதலிய மங்கலங்களோடு எதிர் செல்வோள் தன் தங்கையாகப் பின்முறைக் கிழத்தியைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து தலைவனை நோக்கிக் கூறியது என உரையாசிரியர் கூறுவர்.

பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
(தொல் : கற் : 31)

என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் முதன் மனைவி எதிர்க்காது தலைவன் செயல்களை ஏற்றுக் கொண்டதைத் தமிழர் வாழ்வியல் இலக்கணமாகக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடற்குறிப்பின்படி மகப்பேற்று மணம் இரண்டாவது மனைவியின் தந்தையின் இல்லத்திலே நடைபெற்றதாக அறிய முடிகின்றது. இதற்கான காரணம் பழைய நடைமுறையேயெனலாம். ஆணுக்கு அது இரண்டாம் திருமணமாக இருந்தாலும் பெண்ணிற்கு முதல் மணமாகையால் அவளது இல்லத்திலேயே நடைபெற்றது. இம்மணம் சமூக அங்கீகாரம் பெற்றதாகவும் விளங்கியது. இனவிருத்தியே இம்மணவுறவினது அடிப்படையாக இருந்ததால் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனெனில் மகப்பேறு பெரும் செல்வமாகப் பழந்தமிழர்களால் பெரிதும் மதிக்கப்பட்டது. பெரும் பொருள் படைத்தவராக இருந்தாலும் மக்களில்லாதார் வாழ்வின் முழுப்பயனையும் அடையாதவராகவே கருதப்பட்டனர். இன்னும் குடும்ப உறவு இறுக்கமடைவதற்கும் சமூகத்திலே மக்கட் பெருக்கத்திற்கும் குழந்தைகளே முக்கிய காரணமாயினர். சிறுசிறு குழுக்களாக வாழ்ந்த மக்கள் இனவிருத்தியால் பெருங்குழுக்களாக மேலும் வலிமை பெற்றனர். பொருள்வளம் பொருந்தியிருப்பதால் தனிமனித இன்பங்களை மட்டுமே பெறமுடிந்தது. குழந்தைச் செல்வத்தால் கூட்டு வாழ்வின் நன்மைகளை உணரமுடிந்தது. வாழ்வியல் வரையறைகளை நடைமுறைகளாக்கித் தொடரமுடிந்தது. மனிதனின் பண்பாடு தொடர்பாகப் பேணப்பட்டது. தலைமுறை பற்றிய சிந்தனைகள் மக்களிடையே தோன்றின.

எனவே மேற்குறிப்பிட்ட மணமுறைகள் யாவும் தமிழர்களின் வாழ்வியலின் பல்வேறு கோணங்களையும் பின்னவர்கள் அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுவனவாகும். மணவகைகள் இன்றுவரை நிலைத்திருப்பதற்கு முக்கிய காரணம் அவற்றுக்கென அமைந்த நடைமுறைகளே. அந்நடைமுறை சடங்குகளாகி மக்களால் இன்றும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலை நாடுகளிற் கூடத் திருமணச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழர் வாழ்விலே நடைமுறையில் சடங்குகள் சமூக இணைப்பைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. பழந்தமிழர்களது திருமணச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகளை நோக்கும்போது இன்றைய சடங்குகளை நன்கு புரிந்து கொள்ளலாம். மனிதனின் பண்பட்ட வாழ்க்கை முறையினையே அவற்றினூடாகக் காணமுடிகின்றது.

## 6. திருமணமும் நடைமுறைகளும்

ஆணும் பெண்ணும் மனமொத்து மணவுறவு கொண்டு நிலையாக வாழ்வு நடத்துவதற்குத் திருமணம் முக்கிய நடைமுறையாகத் தமிழர்களால் கருதப்பட்டது. மண வுறவு களவு நிலையிலே அமையாது பலரறிந்த சமூக நிலைப் பட்டதாக அமையப் பல நடைமுறைகள் வகுக்கப்பட் டிருந்தன. அவை பலருக்கும் பொருந்துவனவாகவுமிருந்தன. இதனால் அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதும் இலகுவாயிருந்தது. அதுவே தமிழரது தனித்துவமான பண் பாடாகச் சிறப்புற்றது. எனவே அவை பற்றி நம்மவர் அவசியமாக அறிந்திருக்கவேண்டும்.

### 6:1 மகட்பேசல்

சங்க காலத்திலே ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு அன்புடன் பழகுவர். அவர் தொடர்பை நன் குணர்ந்த தோழி ஆணை மகட் பேசும்படி வலியுறுத்துவாள். களவு நிலையைக் கற்பு நிலையாகப் பலரறியச் செய்ய இந் நடைமுறை உதவியது. மணம் பேசுவதற்கு ஆண் வீட்டார் பெண் வீடு செல்வதே சங்க காலத்தில் வழக்கமாயிருந்ததைப் பலபாடல்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. மகட் பேசும் நிலையினைப் பின்வரும் பாடல் நன்கு விளக்குகின்றது.

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னும் ஆங்கண தவையே.[35]

பெண்ணை மணம்பேசிவருவதில் முதியோரே முக்கிய பங்கினை வகித்தனர். ''தண்டுடைக்கையர் வெண்டலைச் சிதவலர்'' என்னும் அடியால் இதனை நன்குணரலாம். வயதாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாலும் மூப்புடைய ஆணின் உறவினர்கள் தலைவியின் பெற்றோருடன் நேரிடையாக வந்து பேசி இருதரப்பினரும் ஒத்துக் கொண்ட பின்னரே மணவுறவு நிச்சயமாகும். பெற்றோர் கலந்து பேசும் போது முடிவு என்னுகுமோவென மனத்திலே பெருந்துயருடன் காத்திருக்கும் தலைவியைப் பல பாடல்களிலே காண முடிகின்றது.

சில சந்தர்ப்பங்களிலே தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி அவள் பெற்றோர்க்கு உணர்த்தவேண்டியும் நேரிடும். தலைவி ஓர் ஆணை விரும்பியிருக்கும்போது உறவினரும் மகட்பேசி வருவர். அப்போது தோழியே அறத்தோடு நிற்கும் தலைவியின் நாட்டத்தை அவளது பெற்றோர்க்கு எடுத்துக்கூறி உறவினரது கோரிக்கையைத் தடுத்துவிடுவாள். தலைவன் மகட்பேசி வரும்போது தனது உறவினர்களுடன் கூட வருகின்ற நடைமுறையும் வழக்கிலிருந்துள்ளது.

ஐங்குறுநூற்றில் காணப்படும் பாடலில் தோழி தலைவன் வந்துள்ள செய்தியைத் தலைவியிடம் கூறுகின்றாள்.

> "அழகும் இனிமையும் அளாவிய மென்மொழி மடந்தையே கேள். குறிஞ்சி நிலத்து நங்கையினது கூந்தற்கு ஒப்பாதலை விரும்பி மயில் தனது அழகிய தோகையை நன்கு விரித்துக் கூத்தாடுதற்கிடனுன பெரிய மலையையுடைய நம் பெருமான் தன் சான்றோர் வாயிலாய் மகட்பேசி நம் இல்லத்திற்கு வந்தனன். அவன் வரவு கண்ட நம் சுற்றத்தார் உவந்து வரவேற்று முகமன் கூறி மகட் கொடையையும் நேர்வாராயினர். நின்னுடைய கற்புடமை அறத்தோடு இணைந்து பொலிவுறுவதாக."[36]

மகட்பேசி வந்த சந்தர்ப்பத்தில் தலைவன் தலைவியைச் சந்திப்பதில்லை. எனினும் அவனுடைய நடவடிக்கை, பேச்சுகள் யாவற்றையும் தோழிமூலமாகத் தலைவி அறிந்து கொள்வாள். தோழியின் பங்கும் மகட் பேச்சில் முக்கியமானது. இப் பண்பாடு தற்காலத்தும் தமிழரிடையே நடைமுறையாக நிலவி வருகின்றது. மணம் பேசிப்போதல் என வழங்கப் படுகின்றது. புதிய மணவுறவினுல் இரு குடும்பங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் சந்தித்து உரையாடுவதன் மூலம் ஒன்றுபட்டனர். தனிமனித நிலை உறவாக மணவுறவு தமிழரிடையே அமையாமல் பரந்துபட்டமைந்ததையே இது உணர்த்துகிறது. மகட் பேச்சின்போது பெண்ணுக்குக் கொடுக்கும் பொருள் பற்றியும் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும். பெண்ணைப் பெற்றவர்க்கே ஆண் பொருள்கொடுக்கும் வழக்கம் சங்க காலத்தில் நடைமுறையாயிருந்தது. இப்பொருளை ''முலை விலை'' எனக் குறிப்பிட்டனர். அகநானூறு 280 ஆம் பாடல் பெண்ணுக்கு அணிகலன்கள் கொடுக்கும் வழக்கமிருந்ததைக் கூறுகிறது. பொருள் வளம் அற்ற தலைவன் பெண்ணின் தந்தையோடு சேர்ந்து தொழில் செய்ய எண்ணுவதையும் அப்பாடல் அறிவித்துள்ளது. இம்முறை தொழிலடிப்படையிலும் மணவுறவு நிறைவேறியதையே குறிப்பாய் உணர்த்துகின்றது.

### 6:2 நன்னாட் குறித்தல்

இருதரப்பினராலும் மணவுறவு ஏற்றுக்கொள்ளப் பட்ட பின்னர் மணத்தைப் பலரறியச் செய்ய நன்னாள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பர். அகநானூற்றுப் பாடலில் திருமணத்திற்குரிய நன்னாள் பற்றிச் செய்தி காணப்படுகின்றது.

> கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
> கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்.[37]

இவ்வடிகளுக்குரை செய்தவர் ''தீயகோள்கள் தன்னைவிட்டு நீங்கப்பெற்ற வளைந்த வெள்ளிய திங்களானது தீமையில்லாத சிறந்த புகழையுடைய உரோகணி நாளிடத்தே வந்தெய்தியதாக அப்பொழுது'' எனக் குறிப்பிட்டுள்ளனர். இதனால் பழந்தமிழர் திருமணத்திற்குத் திங்களும் உரோகணியும் சேர்ந்த நாளைச் சிறப்பாகக் கொண்டதையுணரலாம். அகநானூறு 136 ஆம் பாடலிலும்,

> ................................ தெள்ளொளி
> யங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கள்
> சகட மண்டிய துகளீர் கூட்டத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இதே நாள் மணவுறவுக்கு நன்னாளாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை இக்கருத்தை மேலும் உறுதி செய்வதாயுள்ளது.

குறுந்தொகையிலும் மணவுறவுக்கென்று ஒரு நாள் வகுக்கப்பட்டமை குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது.

அதுவர லன்மையோ அரிதே அவன்மார்
புறுக வென்ற நாளே குறுகி
ஈங்கா கின்றே தோழி.[38]

இங்கு தலைவியிடம் தலைவனை அவள் அடையும் நாள் அண்மித்துவிட்டதெனக் கூறுகின்றாள். ''அவன் மார்புறுக வென்ற நாளே'' என்னுந் தொடர் மணநாளையே குறித்து நிற்கிறது. சான்றோரால் வரையறுக்கப்பட்ட நல்ல நாளிலே திருமணம் செய்யும் நடைமுறை தமிழரிடையே அன்று தொட்டு இன்றுவரை நிலவுகின்றது.

நன்னாளிலும் அதிகாலைப் பொழுதிலே மணம் நடைபெற்றது. வீர மணத்திலும் நன்னாள் தெரிவுசெய்யப்பட்டது. முல்லைநில ஆயரிடையே ஏறுதழுவி வெற்றி பெற்ற பின்னரே திருமணத்திற்கான நன்னாளைக் குறிக்கும் வழக்கமிருந்ததைக் கலித்தொகை 102 ஆம் பாடல் கூறுகின்றது.

### 6:3 திருமணம் நிகழும் இடம்

மணவுறவு பலராலும் அறியப்பட வேண்டி நடத்தப்படும் திருமணம், பெண் வீட்டில் நடைபெறுவதே பொதுவான வழக்கமாக இருந்துள்ளது. பெற்றோரறியாமல் தலைவி உடன்போக்கிலே சென்றபோது தலைவியின் தாயின் மனவருத்தத்தை எடுத்துக்கூறும் சங்கப் பாடல்களிலே இது பற்றிய குறிப்பினைக் காணலாம்.

நிதியுடை நன்னகர்ப் புதுவது புனைந்து
தமர்மணன் அயரவும் ஒல்லாள் கவர்முதல்
ஓமை நீடிய உலவை நீளிடை
மணியணி பலகை மாக்காழ் நெடுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவுடை உள்ளமொடு துதைந்த முன்பின்
அறியாத் தேஎத்து அருஞ்சுரம் மடுத்த
சிறியோற் கொத்தவென் பெருமடத் தகுவி
சிறப்புஞ் சீரும் இன்றிச் சீறூர்
நல் கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
ஓரா யாத்த ஒரு தூண் முன்றில்
ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ
மேயினள் கொல்லென நோவல் யானே[39]

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் பெண்ணின் வீட்டிலே மணம் நடைபெறும் வழக்கம் நடைமுறையாக இருந்ததைத் தெளிவுற எடுத்து காட்டியுள்ளன.

ஐங்குறுநூறு 399ஆம் பாடலில் உடன் போக்கினுல் தனது மகளைப் பிரிந்து வருந்தும் தாய் மணமகனின் தாயிடம் உங்கள் வீட்டிலே 'சிலம்பு கழிதல்' சடங்கு நடை பெற்று முடிந்துவிட்டதால் வதுவைச் சடங்கையாதல் எம் வீட்டிலே நடத்தவேண்டுமென்று கேட்கிருள். எனவே பழந்தமிழர் சமுதாயத்தில் நன் மணம் பெண் வீட்டிலே நடைபெறுவதே பொதுவழக்கமாக இருந்திருக்கவேண்டும் என்பதை உடன் போக்குப் பாடல்களால் உய்த்துணரமுடிகிறது.

இதனை இன்னொரு சான்றினுலும் உறுதி செய்யக் கிடக்கின்றது. திருமணம் நடைபெறும் செய்தியைப் பெண்ணின் பெற்ருேரே எல்லோருக்கும் அறிவிப்பதை அகநானூறு 221ஆம் பாடல்காட்டுகின்றது. தேனுற்சமைத்த கள்ளினது தெளிவைப் பருகி முற்றத்திலே சகடத்திலே கொணர்ந்த புதுமணலைக் குவித்துவைத்து பொலிவுற்ற கூந்தலையுடைய எம்முடைய மகளுக்கு மணம் நிகழும் என்று வினவியவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ஆயத்தங்களைச் செய்வதாக அப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

திருமணம் பெண்வீட்டில் நடத்தப்பட்டமையாலேயே பெண்ணுக்குப் பொருள் கொடுக்கும் நடைமுறையும் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். மணவுறவினைப் பலரும் அறிய வேண்டிப் பெருவிழாவாகவே பெண்ணின் பெற்ருேர் செய்ய வேண்டியிருந்தது. விருந்தினருக்கு உணவளிக்கவேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தது. மணச்சடங்கு பற்றிய நடைமுறைகளை நிறை வேற்றவும் பெண் வீட்டாரும் பெரும் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்ததால் பெண் வீட்டில் திருமணம் நடைபெற வேண்டுமென்று கருதி நடைமுறையாக்கினர்.

## 6:4 திருமணமும் அலங்காரமும்

தமிழர் திருமண நடைமுறைகளிலே அழகுணர்வு மிகுந்து காணப்பட்டது. திருமணம் நடைபெறப் பிரத்தி யேகமான அலங்காரப் பந்தல் அமைக்கப்பட்டது. வெண் மணல் பரவி விளக்குகளை ஏற்றிவைத்து அதனை மேலும் பொலிவு செய்தனர். மணமனை என்பதை ஊரிலுள்ள மற்றோர் உணர்வதற்காக வெண்மணலை வீட்டின் முற்றத் திலே கொணர்ந்து பரவினர். மணமனையின் அழகான தோற்றத்தினைப் பல சங்கப்பாடல்கள் வருணிக்கின்றன. மலைபடுகடாமிலே, மலைச்சாரல் மணம் நடைபெறும் இல்லத் திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

> வெளிக்களம் கடுக்கும் வியலறை தோறும்
> மணஇல் கமழு மாமலைச் சாரல் 40

வெறியாடுகின்ற களத்தை ஒக்கும் அகன்ற பாறைகள் தோறும் மலர்கள் உதிர்ந்துகிடக்கின்ற காட்சி புலவருக்கு மலர்கள் சிதறிக்கிடக்கும் திருமணம் நடந்த இல்லத்தை ஞாபகப்படுத்துகின்றது.

பந்தலின் அகன்ற இடப்பரப்பும் ஆரவாரமும் இன் னொரு புலவருக்கு இயற்கையான மழைக்காட்சியைக் கண் முன்னே நிறுத்த அவர் திருமணப்பந்தலை ''மழைபட்டன்ன மணன் மலி பந்தர்'' என்று வர்ணிக்கின்றார். திருமணத் திற்காக வீட்டைப் புதுப்பித்து அழகு செய்யும் நடை முறையும் காணப்படுகிறது. அகநானூறு 369 ஆம் பாடலில்

> கெடலரு நல்லிசை உறந்தை யன்ன
> நிதியுடை நன்னகர்ப் புதுவது புனைந்து
> தமர் மணம் அயர.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வருமடிகள் இல்லத்தைப் புதிதாக அழகு செய்து சுற்றத்தவர் கூடி விழாவாகத் திருமணம் நடைபெறுவதைக் கூறுகின்றன.

பெண்ணையும் ஆணையும் மணக்கோலத்திற்கெனச் சிறப்பாக அலங்கரிக்கும் நடைமுறையுமிருந்தது. பெண் கூந்தலில் மயிர்ச் சாந்தம் பூசி அழகு செய்தனர். மலர் களாலே மேலும் அழகும் மணமும் பெருக வைத்தனர். பொன்னாலான ஆபரணங்களைப் பூட்டிப் பொலிவேற்படுத் தினர். அழகிய புதிய ஆடைகளை அணிவித்தனர். புதிய திருமணப் புடைவையை அணிதலாலே மணப்பெண்ணுக்கு வியர்வை உண்டாவதை அகநானூறு 136 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. மணக்கோலத்தைக் காண ஆணினதும் பெண்ணினதும் பெற்றோர் விரும்பியதைச் சில பாடல்கள் குறிப்பிடுகின்றன. குறிப்பாகப் பெண் உடன்போக்கு மணத்தை மேற்கொண்டு பெற்றோரைப் பிரிந்து சென்ற போது அப்பெற்றோர்கள் அவளது திருமணக் கோலத்தைத் தாம் கண்ணாரக் காணமுடியவில்லையே எனப் பெரிதும் வருந்தினர். பெண்ணினதும் ஆணினதும் வாழ்க்கையில் திருமணப்போது மட்டுமே சிறப்பான அலங்காரம் செய்யப் பட்டது.

## 6:5 திருமணமும் சடங்குகளும்

''சடங்கு'' என்னும் சொற்பிரயோகத்தைச் சங்க இலக்கியப் பாடல்களிலே காணமுடியவில்லை. திருமண நடைமுறைகளை விளக்குவதற்கு உரையாசிரியர்கள் இச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். தொல்காப்பியர் கற்பு நிலை மணத்தை விளக்கும்போது ''கரணம்'' என்ற சொல்லை எடுத்தாண்டுள்ளார். திருமண நடைமுறைகளில் ஒழுங்கு நிலையிலே செய்யப்படவேண்டியவற்றையே தொல்காப்பியர் ''கரணம்'' என்ற சொல்லாற் குறித்தனர். அதனை உரை யாசிரியர்கள் ''சடங்கு'' என்னும் சொல்லால் குறித் துள்ளனர். எனவே ஒழுங்குபட்ட நடைமுறைகளை முன்னவர் கரணம் எனவும் பின்னவர் சடங்கு எனவும் கொண்டதை யுணர முடிகின்றது. இதனால் ''கரணம்'' என்ற சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிழந்துபோகச் ''சடங்கு'' என்ற சொல் நிலைபெற்றது. பழந்தமிழர் திருமண நடைமுறைகளிலே கற்புநிலைப்பட்ட பலரறிமணம் நடந்தபோது செய்யப்படுகின்ற செயல்கள் ஒழுங்கு நிலையிலே நடைமுறைப்படுத்தப் பட்டதால் அவையே மணச்சடங்குகள் என அழைக்கப்பட்டன. அச் சடங்குகள் பற்றிய தகவல்களைச் சங்கப் பாடல்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

இச்சடங்குகளில் முதலில் செய்யப்படுவது மணமகளின் நீராட்டாகும். **அகநானூற்றுப்** பாடல்களிலே இம் மங்கல நீராட்டுப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ''மண்ணல்'' என்னும் சொல்லால் இந்நீராட்டுக் குறிப்பிடப் படுகின்றது. உரையாசிரியர்கள் இச்சொல்லை அச்சடங்கைக் குறிக்கும் சொல்லென்பர். ''மணப்பருவம் எய்திய மகளிரை மங்கல நீராட்டுவது எனக் கொள்க. இங்ஙனம் மங்கல நீராட்டுதல் இரு முதுகுரவரும் மகட்கொடை நேர்ந்த பின்னர் அதற்கு முன்னர்த் தம் மனையில் தம் மகட்குச் செய்யும் சடங்கு என்றுணர்க'' என மண்ணல் விழா என்பதை அவர்கள் விளக்கியுள்ளனர்.

> **உச்சிக்குடத்தர் புத்தகல் மண்டையர்**
> **பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்**
> **முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்**
> **புதல்வற் பயந்த திதிலையவ் வயிற்று**
> **வாலிழை மகளிர் நால்வர் கூடி.**[41]

என அகநானூற்றுப் பாடலொன்று பெண்கள் திருமண நாளன்று செய்கின்ற சடங்கொன்றினை வர்ணிக்கின்றது. தலையில் குடத்தை உடையவரும் புதிய அகன்ற வாயை யுடைய மட்பாண்டத்தையுடையவரும் ஆகிய பொதுப் பணி செய்வதில் ஆர்வமும் ஆரவாரமுமுடைய முதுமை யுடைய மங்கல நாண் உடைய பேரிளம் பெண்டிர் முன்னே கொடுப்பனவும் பின்னே கொடுப்பனவும் ஆகியவற்றை அறிந்து முறையே கொடுக்குந்தோறும் கொடுக்குந்தோறும் வாங்கி மக்களைப் பெற்ற தேமல் படர்ந்த அழகிய வயிற் றையும் சிறந்த அணிகலன்களையும் உடைய மங்கல மகளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நால்வர் ஒருங்கு குழுமி நின்று செய்யும் சடங்கு ஒன்றைக் கூறுகின்றது. இதுவே மணப் பெண்ணின் நீராட்டும் சடங்காக நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். சடங்குகளைச் செய்ய மக்கட்பேறுள்ள மங்கலமுடைய முது மகளிரே உரிமை பெற்றிருந்தனர் என இப்பாடல் மூலமாக அறிய முடிகின்றது. நீராட்டின் பின் பெண்ணைப் புதிய தூய ஆடைகளாலும் அணிகலன்களாலும் அழகுபடுத்துவர். மணம் மிகுந்த மலர்களை அவள் கூந்தலிலே சூடுவர். இச் சடங்கு திருமணச் சடங்கிற்கு முன்னரே நடக்கும் முக்கிய மான சடங்காகக் காணப்படுகின்றது.

## 6:6 சிலம்பு கழீஇ சடங்கு

பழந்தமிழ்ப் பெண்கள் சிலம்பு அணியும் வழக்க முடையராயிருந்ததைப் பல சங்கப் பாடல்களிலே காணலாம் திரும்மணம் செய்யும்வரை பெண்கள் காலிலே சிலம்பு அணிகின்றனர். திருமணத்திற்கு முன்பு அதனை அகற்றும் சடங்கு ஒன்று இருந்ததையும் பலபாடல்கள் எடுத்துக் காட்டி யுள்ளன. இச்சடங்கு பெண் வீட்டிலேயே செய்யப்படுவதே நடைமுறையாக இருந்தது. ஆனால் உடன் போக்கின்போது இச்சடங்கினை ஆண்வீட்டிலேயே நடத்தினர். இதனால் திருமணம் முடிந்த பெண்ணுகை இருப்பின் சிலம்பு கழிக்கப் பட்டவளாக இருக்கவேண்டுமென்பது மிகவும் முக்கியமான நடைமுறையாக இருந்ததையும் உணரலாம்.

......... ததரல் வாய்ச்
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருணக் கழிந்த என் ஆயிழை அடியே

என்னும் நற்றிணைப் பாடலடிகளிலே மகளின் சிலம்பு கழற்றுதற்காகச் செய்யப்படும் விழாச் சிறப்பைக் காணுது வருந்துகின்ற தாயின் மனவேதனை புலப்படுத்தப்பட்டுள்ளது. சிலம்பு கழிக்கின்ற சடங்கினை நடத்துவதனால் பெண்களின் மணவுறவு பலருக்கு அறிவிக்கப்படுகின்றது. காலிலே சிலம்பணியாத பெண்கள் மணம்முடித்தவர்கள் என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சடங்கு வதுவைச் சடங்கிற்கு முன்னதாகவே செய்யப்பட்டதையும் சங்கப்பாடல்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணம் கழிகென

என ஐங்குறுநூற்றிலே பெண்ணின் தாயாரின் வாய்ச் சொல்லாக வருகின்ற இவ்வடிகளும் இதனை நன்குணர்த்துகின்றன. ஆனால் உடன்போக்குப்பற்றிய பாடல்களில் மட்டுமே இச்சடங்குபற்றிய கருத்து வருவதால் சிலர் இதனை திருமணச் சடங்கினுள் அடக்காது விடுகின்றனர். கருத்து வேறுபாடுகள் இருப்பதைத் தமிழர் திருமணம் பற்றி ஆராய்ந்த எஸ். சுப்பிரமணிய பிள்ளை பின்வருமாறு கூறுவர்.

''குமரிக்கு அடையாளம் சிலம்பு எனக்கொண்டனர். குமரிமை கழிவிற்குச் சிலம்பு அகற்றப்படுகின்றது. இவ்வாறு சிலம்பு அகற்றுவதையே சிலம்பு கழி நோன்பு எனக் குறிப்பிடுகின்றனர். இது திருமணத்தில் ஒரு சடங்காகவும் மாறியது. இது சங்கச் சமுதாய வழக்காகவும் பரிணமித்தது எனலாம். உடன்போக்கின் போதும் உறவினரில்லாதவிடங்களில் மணம் செய்வதாயினும் அங்கே சிலம்பு அகற்றும் தன்மை காணப்படுகிறது. ஆயினும் இதனைச் சோமசுந்தரபாரதியார் இடைச்சுரம் கடக்கும் தன்மை எனச் சுட்டிக்காட்டுகின்றார். எனினும் யான் கொண்ட முடிபு இது ஓர் சடங்கேயாம். இச்சடங்கைப் பார்க்கவேண்டுமென்று பெண்ணைப் பெற்றதாய் பெரிதும் விரும்புகின்றாள் என்பது சங்கப் பாடலால் உணரலாம். சிலம்பு அகற்றுவதன் மூலம் இவள் மணமானவள் என்பது தெளிய இயலும். சிலம்புகழி நோன்பு குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எனினும் சிலம்பு கழி நோன்பு சிலம்பை அகற்றுதல் என்பதேயாம்.''[42]

எனினும் பிற்காலத்தில் சிலம்புகழி நோன்பு ஒரு சடங்காக நிலைபெற்றதற்குச் சான்றுகள் இல்லை. சிலப்பதிகாரத்தில் காற்சிலம்பு குடும்பவாழ்வு நடத்தும்போது அணியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. கண்ணகியின் காற்சிலம்பும் பாண்டிமாதேவி யின் காற்சிலம்பும் மங்கல அணிகளாக இளங்கோவடிகளால் கூறப்பட்டுள்ளன.

## 6:7 காப்பும் மலரும் அணிதல்

பெண்ணுக்கு நீராட்டிச் சிலம்பு கழித்தபின் மணப் பந்தலிலே காப்பு அணிவிக்கப்படுகின்றது.

**மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை**
**பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்**
**தழங்குகுரல் வானின் றலைப்பெயற் கீன்ற**
**மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்**
**தண்ணுறு முகையொடு வெண்ணூல் சூட்டி**[43]

என்னும் அகநானூற்றுப் பாடலடிகளிலே மணச் சடங்கின் போது காப்பு அணியப்பட்டமை பற்றிக் கூறப்படுகின்றது. மெல்லிய மலரையுடைய வாகை மரத்தினது புல்லிய புறத்தையுடைய கவைத்த இலையை ஆண்டு முதிர்ந்த கன்றால் கறிக்கப்பட்ட பள்ள நிலத்திலே படர்ந்த அறுகம் புல்லினது மழை காரணமாகக் கழுவிய நீலமணிபோன்ற நிறமுடைய இதழ்களையுடைய கிழங்கின்கண்ணுள்ள நறிய அரும்புகளோடு விரவித்தொடுத்த வெள்ளிய காப்பு நூலே மணப்பெண்ணுக்கு அணிவிக்கப்படுகின்றது. காப்புச் சுற்றத் தாரால் அணியும் வழக்கமே பழந்தமிழரிடையே இருந் துள்ளது.

ஐங்குறுநூறு 294 ஆம் பாடல் மலர் அணியும் சடங்கு பற்றிக் கூறுகின்றது. தலைவியைத் தலைவன் திருமணம் செய்யும்போது மணச் சடங்கிலே ஒன்றான தலைவியின் கூந்தலிலே மலர் சூடுதலைச் செய்யக் கண்ட தோழி எல்லை யற்ற மகிழ்ச்சியுடன் தலைவனைப் பாராட்டுகிறாள்.

**எரிமருள் வேங்கை யிருந்த தோகை**
**யிழையணி மடந்தையிற் றோன்றுநாட**
**வினிதுசெய் தனையா லுந்தை வாழியர்**
**நன்மனை வதுவை யயரவிவள்**
**பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே களவாகத் தலைவியின் கூந்தலிலே மலர் சூட்டிய தலைவன் அவளைப் பலரறிய மணம் செய்யும்போது எல்லோர் முன்னிலையிலும் மலர் சூடுவான். மலர் தலையிலே அணி கின்ற வழக்கம் சடங்கிலே சேர்ந்தமையையே இப்பாடல் காட்டுகின்றது. பிற்காலங்களிலே இவ்வழக்கமே மணச் சடங்கிலே மணமகனும் மணமகளும் மாலை மாற்றுகின்ற நிகழ்ச்சியாக மாறியிருக்க வேண்டும். மணமகன் மண மகளின் கூந்தலிலே மலர் சூடும்போது அதனைப் பலரும் காணவேண்டி மணமுழவினை ஒலிப்பர். பரத்தை மணம் நடைபெறும்போது முழவின் ஒலியால் தலைவன் பரத்தை யின் கூந்தலில் மலர் சூடுவதை மற்றோர் உணர்ந்தனர். பல மருதப் பாடல்களிலே இச்செய்தி கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

### 6:8 பெண்ணை வாழ்த்துதல்

தலைவன் தலைவியின் கூந்தலிலே மலரைச் சூட்டிய பின்பு இருவரையும் வாழ்த்துவது நடைமுறையாக இருந்துள்ளது. எனினும் மணப்பெண்ணைச் சிறப்பாக வாழ்த்துவதை **அகநானூறு** 86 ஆம் பாடல் காட்டுகின்றது.

> **கற்பினின் வழாஅ நற்பல உதவிப்**
> **பெற்றோற் பெட்கும் பிணையை யாகென**
> **நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி**
> **பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**
> **வதுவை நன்மணம் கழிந்த பின்றை**

பெண்ணை வாழ்த்தும்போது ''கற்பொழுக்கத்தினின்றும் சிறிதும் வழுவாமல் நல்ல பலவாகிய உதவிகளையும் செய்து உன்னை மனைவியாகப் பெற்ற நினது கணவனை நீ பெரிதும் விரும்புகின்றவள் ஆகுக'' என்று கூறியே வாழ்த்தினர். மங்கல நீரோடு விரவிச் சொரியப் பெற்ற நனைந்த இதழ்களை யுடைய மலர்களுடன் கூந்தலின் மேல் நெல்லையும் தூவி வாழ்த்தினர். வாழ்த்து நிகழ்ச்சியில் முதலில் பெற்றோரே இடம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துடன் தமிழர் மணச்சடங்கு முற்றுப்பெற்றது. மணச்சடங்குகளிலே பார்ப்பன முறைகள் ஆரம்பத்தில் சேர்ந்திருக்கவில்லை. பெண்களும் சடங்குகளிலே பங்கு கொண்டிருந்தனர். இதனால் தமிழர்களது ஆரம்பகாலத்து வாழ்வியலிலே பெண்கள் முக்கியத்துவம் பெற்றிருந்ததை உணர முடிகின்றது. களவு மணத்தைக் கற்புநிலையான மணமாக்கி வாழும் நிலையிலே தன்னோடு இணைந்த ஆணின் முன்னேற்றத்திற்காகவும் சமூக நடைமுறைகளைச் செயற் படுத்துவதற்காகவும் பெண் பணி செய்தாள். இதனாலே தான் மணம் செய்து கொண்டவன் தன்னை விட்டுப் பிரிந்த போதும் அவனை வெறுக்காமல் குடும்பக் கடமைகளை நிறை வேற்றினாள். குழந்தைகளை உருவாக்கிச் சமூகத்தை நிலை பெறச் செய்தாள். சமூக நடைமுறைகளைக் கற்பித்த வண்ணம் செயற்படுத்தும் மனவுரம் படைத்தமையால் கற்புநெறி தவறாதவள் எனப் புகழ் பெற்றாள்.

### 6:9 மணமகள் பாற்சோறு சமைத்தல்

தமிழர் திருமண நடைமுறைகளிலே மண உறவினால் ஏற்படுத்தப்பட்ட தொடர்பினை வீட்டு நிலையிலே முதன்முதல் ஆணும் பெண்ணும் நடைமுறைப்படுத்துவதற்காக இந் நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. பலர் முன்னிலையில் மண மக்களாகி வாழ்த்துப் பெற்றபின்னர் மணப்பெண் தன் கணவனுக்கு முதன் முதலாகப் பாற்சோறு சமைத்துப் பரிமாறுவாள். அதை இருவரும் உண்பதினால் வீட்டு நிலையில் பொறுப்பேற்பது உணர்த்தப்பட்டது. ஆண் பொருள் தேடிவர அதைக்கொண்டு உணவளிக்கும் பொறுப் புப் பெண்ணிடம் விடப்பட்டிருந்தது. இதனை அகநானூற்றுப் பாடலடிகள் நுணுக்கமாக விளக்கியுள்ளன.

மழைகா ணீங்கிய மாக விசும்பிற்
குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந்
தறுமீன் சேரு மகலிரு ணடுநாண்
மறுகு விளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறன் மூதூர்ப் பலருடன் றுவன்றிய
விழவுட னயர வருகதில் லம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்
தகர நாறுந் தண்ணறுங் கதுப்பிற்
புதுமண மகடூஉ வயினிய கடிநகர்ப்
பல்கோட் டடுப்பில் பாலுலை யிரீஇக்
கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர் (பாடல் 141)

மங்கல நீராடிப் புகையூட்டி மயிர்ச்சாந்து மணக்கும் தண்ணிய வாசனை வீசுகின்ற கூந்தலையுடைய புதுமணப்பெண் பல் வேறு உணவுகளையும் உடைய திருமண இல்லத்திலே பல கொண்டைகளையுடைய அடுப்பிலே பால் பெய்த உலைப் பானையை ஏற்றுவாள். அவளுக்கு இளமகளிர் உதவி செய்வர். பால் உலையிலே கார் நெல்லரிசியை இட்டுப் பொங்கலாக்குவர். அதனையே மணமகள் மணமகனுக்கு முதலிற் பரிமாறுவாள். மேற்படி பாடலடிகள் விரிவாக அந்நடைமுறையைக் கூறுவிடினும் மணமகள் பாற்சோறு சமைக்கும் வழக்கமிருந்ததை எடுத்துக் கூறியுள்ளன. இவ் வழக்கமே தற்போதுள்ள ''சோறு குடுப்பித்தல்'' என்னும் திருமண நடைமுறையின் ஆரம்ப நிலையாய் இருந்திருக்க வேண்டும். தற்போதும் தமிழர் திருமணத்தில் இந் நடைமுறை உண்டு. இதனைப் ''பூதாக்கலம்'' என்று கூறுவர். ''பூதக்கலம்'' என்ற சொல்லே ''பூதாக்கலம்'' எனத் திரிந்துள்ளது. கலைக்களஞ்சியம் பூதக்கலம் என்றால் மணப் பெண் மணமகனுக்கு முதன் முதல் உணவு பரிமாறுகை எனப் பொருள் கூறுகின்றது. இது வின்சுலோ அகராதி தரும் விளக்கமுமாகும். பூதக்கலம் என்ற சொல்லே பூதாக் கலமானதை நா. கதிரைவேற்பிள்ளை தொகுப்பு அகராதியும் காட்டுகிறது.

யாழ்ப்பாணத்திலேயும் தமிழ் நாட்டிலேயும் இவ் வழக்கம் நடைமுறையில் இருந்தமையாலேயே இருதமிழ்ச் சொல்லகராதியிலும் இச் சொல்லின் பொருள் இடம் பெற் றுள்ளது. தமிழ்ச் சமூகத்திலே கிராமப் புறங்களிலே மிகவும் எளிமையான முறையிலே திருமணம் நடைபெறும்போது மணமகள் சோற்றை மணமகனுக்குப் பரிமாறுகின்ற நடை முறை மட்டுமே மேற்கொள்ளப்படும். அந் நடைமுறை நிறைவேற்றப்பட்ட பின்னர் உறவினர்களுக்கு விருந்தளிக் கும் நடைமுறையுடன் திருமணம் நிறைவுபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்திலும் இந்நடைமுறை மணமக்களைப் பெற்றோரும் உறவினரும் வாழ்த்தியபின் தாய் மனையில் வைத்து நிறைவேற்றப்படுகின்றது. அதன் பின்னரே எல்லோருக்கும் விருந்தளிக்கப்படும். பூதக்கலத்திற்கான சோறும் கறியும் தனியாக விசேடமாகச் சமைக்கப்படும். பாற் சோறு அதில் முக்கியமாக இடம்பெறும். சங்க இலக்கியங்களிலே உழுந்து கலந்த உணவு இதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## 6. விருந்தளித்தல்

மணம் நிறைவேறிய பின்னர் உற்றாரும் உறவினருங் கூடி விருந்துண்ணலும் தமிழர் திருமணத்தில் முக்கியமான தொரு நடைமுறையாக இருந்தது. விருந்தில் ஆரவாரம் பற்றிப் பல குறிப்புகள் சங்கப் பாடல்களிலே உண்டு. எனினும் திருமண விருந்து முக்கியமான விருந்தாகக் கருதப்பட்டது.

> உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
> பெருஞ்சோற் றமலை

எனத் திருமண விருந்தின் ஆரவாரத்தை அகநானூறு குறிப்பிடுகிறது. திருமணந்திற்காகத் தயாரிக்கப்படுகின்ற விருந்திலே சாதாரண நாட்களிலே உண்ணுகின்ற சோற்றுடன் சிறப்பான உணவு வகைகளும் இடம் பெற்றதை அறியலாம். உழுத்தம் பருப்பைச் சேர்த்துச் சமைத்த கொழுவிய களி விசேட உணவானது.

> மைப்பறப் புழுக்கின் நெய்கனி வெண்சோறு
> வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி

எனத் திருமண விருந்து பற்றிப் பிறிதொரு அகநானூற்றுப் பாடல் விளக்கியுள்ளது. குற்றமறச் சமைக்கப்பட்ட ஊனுணவும் நெய்கலந்த வெண்சோறும் வந்த விருந்தினர்க்கு வரையாது வழங்கப்பட்டது. மேற்குறித்த பாடலடிகளில் வரும் ''புழுக்கு'' என்பதற்கு இறைச்சியெனப் பொருள் கொள்வது பொருந்தாது எனச் சில உரையாசிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்கள் கருதுகின்றனர். திருமண நாளாதலால் ஊனுணவு உண்ணும் வழக்கம் இல்லையென அவர்கள் காரணமும் கூறுகின்றனர். இக் காரணம் பொருத்தமற்றதாகும். எனெனில் பழந்தமிழர்கள் தெய்வங்களுக்கே ஊனை நிவேதித்து வழிபாடு செய்யும் வழக்கமுடையவர்களென்பதைப் பல சங்கப் பாடல்களால் உணரக்கிடக்கிறது. மண நாளிலே சிறப்பான சுவைமிக்க உணவுகளை விருந்தினர்க்கு உண்ணக் கொடுத்தனர். அதிலும் சடங்கிலே கலந்து கொண்ட அனைவருக்குமே வரையாது உணவைக் கொடுத்து அவர்களை மனம் மகிழச் செய்வதே தமிழர் நடைமுறையாக இருந்தது. விருந்தோம்பல் தமிழர் தனித்துவமான பண்பாடாக வளர இதுவே உதவியது.

விருந்துண்டு மகிழ்ந்து செல்லும் உறவினர்க்கு அவர் விடைபெற்றுச் செல்லும்போது புதுநீர் தெளித்து அனுப்பும் நடைமுறையிருந்ததைப் புறநானூற்றுப் பாடலொன்றிலே காணலாம்.

> வதுவை விழவிற் புதுவோர்க் கெல்லாம்
> வெவ்வாய்ப் பெய்த புதுநீர் சால்கென
> புலவுக்களம் பொலிய வேட்டோய்.[44]

விருந்தினர் எல்லோருக்கும் கலயத்தின் வெவ்விய வாய் வழியாகப் பெய்த புதுநீர்போல மறக்கள வேள்வியிலே நீர் தெளிக்கப்படுவதாக மாங்குடிகிழார் பாடியுள்ளார். போர்க் கள வேள்வியிலே நீர் தெளிக்கும் காட்சி புலவருக்குத் திருமணத்திலே விருந்தினர்மீது நீர்தெளிப்பதை ஞாபக மூட்டுகிறது. எனவே திருமணத்தில் இந்நடைமுறை முக்கியத்துவம் பெற்றிருப்பதையும் உய்த்துணரலாம்.

பழந்தமிழர்களது திருமண நடைமுறைகளோடு ஆரியப் பண்பாட்டு நடைமுறைகளையும் சங்கப் பாடல்கள் சில வற்றிலே காணமுடிகின்றது. கலித்தொகை 69 ஆம் பாடலில் இக்குறிப்புக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாது சூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்ப்பு
காதல் கொள்வதுவை நாள் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மானோக்கின் மடந்தைதன் துணையாக
ஓதுடை யந்தணன் எரிவலம் செய்வான்.

உத்தரீயத்துள்ளே நாணால் ஒடுங்கி நோக்குகின்ற காதல் கொண்ட மான்போலும் நோக்கினையுடைய மடந்தை யானவள் தனக்கு இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் துணை யாகக் கொள்கின்ற கலியாண நாளிலே மறையை ஒதும் வழக்கமுடைய அந்தணன் அங்கியங்கடவுளை வலஞ் செய்வான். இந்நடைமுறை பிற்காலத்திலே தமிழர் நடை முறைகளோடு கலந்தது.

குறிஞ்சிப் பாட்டிலே சுற்றத்தவர் பெண்ணின் கையைப் பற்றி ஆணின் கையிலே கொடுப்பர் என ஒரு குறிப்புக் காணப்படுகிறது. அது "நேரிறை முன்கை பற்றிநுமர்தர நாடறி நன்மணம் அயர்தல்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றிய விளக்கத்தை உரையாசிரியர் வருமாறு கூறுவர்.

"தமர் நேரிறை முன்கை பற்றித் தருதல் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்த கரணம்" என்றுணர்க. நாடறி நன்மணம் என்றது சுற்றத்தார் சூழ்ந்திருக்கும் அவையின்கண் அவர் கரி யாகத் தலைவியின் இருமுது குரவரும் அவள் கையைப் பற்றித் தலைவன் கையிற் கொடுத்து ஓம்படை செய்தல் என்க. இதனைப் பலரறிமணம் என்றுங் கூறுப. "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டடல்" தீவலம் செய்தல் அம்மி மிதித்தல் முதலிய கரணங்கள் பண்டைநாள் தமிழ் மக்கள் மணவிழாவில் நிகழ்ந்தனவாகத் தோன்ற வில்லை. இவை தமிழகத்தே இடையிலே வந்து புகுந்த ஆரிய வழக்கங்களாகும்."[45]

சங்ககாலப் பெண்களுக்குக் கற்பின் திண்மையையும் பெருமையையும் எடுத்துக்காட்ட வடமீனைக் குறிப்பிடும் வழக்கம் இருந்ததைப் புறநானூறு 122ஆம் பாடல் காட்டு கின்றது. "வடமீன் புரையுங் கற்பின் மடமொழி" எனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுடிக்காரியின் மனைவியை அப்பாடலிலே கபிலர் புகழ்கிருர். எனினும் மணச் சடங்கின்போது வடமீனைக் காட்டும் வழக்கம் பழந்தமிழரிடையே இருக்கவில்லை.

பெண்ணைத் தாரைவார்த்துக் கொடுத்தல் என்னும் வழக்கமும் பிற்காலத்தே ஏற்பட்டதாகும். சங்கப் பாடல்களிலே கூறப்பட்டுள்ள திருமண நடைமுறைகள் இயற்கையான வாழ்வியலோடு இணைந்தனவாகவே காணப்படுகின்றன. செயற்கை நடைமுறைகளால் மணவுறவை அவர்கள் மேற்கொள்ளவில்லை. பாடல்களில் மணவுறவு மன உறவுடன் ஆழமான தொடர்புடையதாயிருந்தமையே புலப்படுத்தப்பட்டுள்ளது. குடும்பம் என்ற நிலையிலும், சமூகம் என்ற நிலையிலும் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தவேண்டிய சில முக்கியமான நடைமுறைகளையே தமிழர் கற்பித்து வாழ்ந்தனர் இதனுல் தமிழர் திருமண நடைமுறைகள் தனிச் சிறப்புடன் இன்றும் செயற்படுத்தப் படுகின்றன.

## 7. திருமண நடைமுறைகளின் தனித்துவம்

பழந்தமிழர் வாழ்வியலில் திருமணம் வெறும் ஆண் பெண் உறவைப் புலப்படுத்தும் அம்சமாக மட்டும் இடம் பெறவில்லை; பல்வேறு நிலைகளிலும் மனித வாழ்வியலைப் பண்படுத்தும் நடைமுறையாகவே விளங்கியது. மேலை நாட்டிலே திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தல் என்பதையே குறிக்கின்றது. தமது இன்பம் என்ற ஒரு இலக்கை வைத்தே அங்கு திருமணங்கள் நிறைவேறுகின்றன. குழந்தையும் இரண்டாம் நிலையாகவே கருதப்படுகின்றது. இயற்கை உணர்வின் உந்துதலைப் பண்படுத்தி வாழ்வைப் பயனுள்ளதாக்கவேண்டுமென்பதே தமிழர் திருமண நடைமுறைகளின் அடிப்படையாகும். இதனுல் ஒழுக்கமும் திருமண நடைமுறைகளுடன் தொடர்பு படுத்தப்பட்டது.

பெண்ணுடன் தொடர்பு கொண்டு பின்னர் அவளைக் கைவிட்டுச் செல்லும் ஆண் சமூகத்தவரால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டமையை அகநானூற்றுப் பாடலொன்று விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பை பெரும் பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய
அறனி லாள னறியே னென்ற
திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசா லவையத் தார்ப்பினும் பெரிதே[46]

பழைய புகழால் நிறைந்த பலவாகிய பூக்களையுடைய கழனிகளையும் கரும்பு செறிந்து வளர்கின்ற தோட்டங்களையும் உடைய பெரிய புகழையுடைய கள்ளூர் என்னும் ஊரிலே இளமகள் ஒருத்தியோடு களவொழுக்கம் பூண்டு அவளுடைய அழகிய பெண்மை நலத்தை நுகர்ந்த அறவொழுக்கம் இல்லாத கயவன் ஒருவன் பின்னர் யான் அவளை ஒரு பொழுதும் பார்த்ததில்லை என்று பண்பில்லாத வெவ்விய சூள் மொழிந்தான். அச் செய்தியை அறிந்துள்ள சான்றோரை அறங்கூறு அவையத்தார் வினவித் தெரிந்து கொண்டு அத்தீவினையைச்செய்த ஆண்மகனைத் தளிர்த்துள்ள பெரிய மரக்கிளையிலே பொருந்தக்கட்டிவைத்துச் சுண்ணாம்பு நீற்றினை அவன் தலையிலே பெய்தபோது மேன்மைபெற்ற அவையோர் களத்திலே பெரிய ஆரவாரம் எழுந்தது.

இச்செய்தி சமூக நிலையிலே ஒழுக்கம் எவ்வாறு பேணப் பட்டதென்பதை நன்கு விளக்குகின்றது. ஆண் ஒழுக்கத்தைப் பேண முடியாத விடத்துத் தண்டனைக்குள்ளாகிறான். ஆணின் கற்புநெறி செம்மை பெற்றிராவிடின் சமூகத்தின் இயக்கம் ஒழுங்காக இருக்காது. ஆனால் பிற் காலங்களிலே பிற பண்பாட்டுக் கலப்பினால் ஆணின் ஒழுக்க மீறல் சமூகநிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் ஆண் மனவுரம் அற்றவன் என்ற அடிப்படையிலேயே அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. உன்னைத் தவிர வேறு பெண்ணை நினைக்கவும்மாட்டேன் என்று உறுதிமொழி பல கூறிய அவன் வேறு பெண்ணிடம் சென்றான். எனவே அவன் நிலையை எல்லோரும் உணர்ந்து அவனை நல்வழிப்படுத்த வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தது. அதற்காகத் திருமணம் பல நடைமுறைகளோடு செய்யப்பட வேண்டியதொன்றுயிற்று. இந்த அடிப்படையிலே பெண்ணும் தன் ஒழுக்கத்தைப் பேண வேண்டியவளானுள்.

தமிழர், திருமண உறவால் சமூகக் கட்டுக்கோப்பைப் பாதுகாக்க எண்ணினர். திருமண உறவால் இணைந்த ஆணும் பெண்ணும் சமூகத்தின் கண்காணிப்புக்குட்படுத்தப் பட்டனர். அதனுல் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அங்கு இடமிருக்கவில்லை. பெண்ணும் ஆணும் மணவுறவால் சமூகத்துக்கு உரிய பங்களிப்பைச் செய்ய முடிந்தது. இருவரின் இணைப்பினுலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூகத்தையும் பாதிப்புக்குள்ளாக்கின. இதனுலேயே ஆணின் விலங்கு மனப்பான்மையால் மனைவியை விடுத்து அவன் பரத்தையரோடு உறவு கொண்டபோதும் அதனை மனைவி ஏற்க வேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. ஆனுல் சிலர், பெண்ணைப் பராமரிப்பதற்கு வேறு ஒருவரும் இல்லாததால் அவள் அதனை ஏற்க வேண்டியிருந்ததெனக் கூறுவர். **அகநானூறு 316 ஆம்** பாடல் பரத்தையுறவை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்த காரணத்தை நன்கு விளக்குகின்றது.

> தேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோள்
> ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
> பரத்தமை தாங்கவோ விலனென வறிதுநீ
> புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
> அதுபுலந் துறைதல் வல்லி யோரே
> செய்யோள் நீங்கச் சில்பதங் கொழித்துத்
> தாமட் டுண்டு தமிய ராகித்
> தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
> வைகுந ராகுதல் அறிந்தும்
> அறியா ரம்மவஃ துடலுமோரே.

தலைவனுடைய விருப்பப்படி அவனது ஏவலாளர்கள், பல பரத்தையரை அவனுடன் உறவுகொள்ள வைக்கின்றனர். இதனுல் தலைவனை முறைப்படி மணந்து கொண்ட தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் ஊடி இருக்கின்றாள். தலைவன் அவளிடம் வந்தபோது அவனைச் சந்திக்கவும் மறுக்கிறாள். இதனைக் கண்ட தோழி சமூக நடைமுறையை எடுத்துக் காட்டித் தலைவியைத் தலைவனை ஏற்கும்படி கூறுகின்றாள். ''தலைவனுடைய பரத்தையுறவுக்கு ஏவலாளர்களும் ஒருவகையிலே காரணமானவர்கள். தலைவன் ஒழுக்கத்தைக் காரணமாக்கி நீ செய்யும் அறத்தைக் கைவிடலாமா? குலமகள் தன் கடமையினின்றும் வழுவின் செல்வநிலை நீங்கித் தனித்து வாழநேரிடும்'' என்று கூறுகின்றாள். கணவனைப் பிரிந்து பெண்கள் தனிவாழ்வு நடத்துவது சங்ககாலத்துச் சமூகத்திலே இழிவாகக் கருதப்பட்டது. அவ்வாறு ஒரு பெண் பிரிந்துபோய் வாழ எண்ணினால் அவளுக்கு ஒருவருமே உதவி செய்யமாட்டார்கள். நொய்யரிசியை முறத்தால் கொழித்துத் தாமே சமைத்துத் தின்று சுற்றத்தார் யாருமின்றித் தனித்தவராய் இனிய மதலை மொழி பேசுகின்ற மக்கள் வற்றிய தமது முலையைச் சுவைத்து அழப் பெரிதும் வருந்தி வாழ்கின்ற வாழ்க்கை நடத்த வேண்டும். இவ்வாழ்வினால் ஒருவருக்கும் பயன் கிடையாது. எனவே கணவனோடு ஒற்றுமையாக வாழ்வு நடத்துவதே பண்பட்ட வாழ்வாகத் தமிழரால் வகுக்கப்பட்டிருந்தது. பலரறிய வாழ்க்கை நடத்துவோம் என ஒரு கோட்பாட்டுடன் திருமண உறவு கொண்டவர் எந்நிலை வந்தபோதும் வாழ்ந்து காட்டவேண்டும். இல்லாவிடில் திருமண நடைமுறைகள் யாவும் அர்த்தமற்றதாகி விடுமெனத் தமிழர் கருதினர்.

தனிநிலையுணர்வுடனன்றிச் சமூகவுணர்வுடன் தமிழர் வாழ்ந்தமையால் ''திருமணம்'' முக்கிய பிணைப்பெனப் பலரும் உணர வாழ்ந்தனர். பண்பாட்டு நிலை வளர்ச்சியிலே பல்வேறம்சங்களால் தாக்கங்களேற்பட்டபோதும் அடிப்படைக் கோட்பாட்டை மாற்றாமலே வாழ்ந்தனர். இதற்குத் தமிழரிடையே நிலவிய திருமண நடைமுறைகளே நல்ல சான்றுகளாகவுள்ளன. ஒழுக்க நெறிமூலம் பண்பாடு நிலைபெறத் திருமணம் சிறந்த நடைமுறையானது. விலங்கு வாழ்வியலாக அன்றி மனிதனுக்கெனச் சிறப்பாக ஒரு வாழ்வியல் இருப்பதை உணர்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் உடலுறவுக்கான ஒரு அனுமதியே என மேலை நாட்டவர் கருதி வாழ்கின்றனர். குழந்தைகளுக்கு உரிமையுள்ள பெற்றோரைத் தீர்மானிக்க அது உதவுமென்பர். தனிமனிதனது விருப்பு வெறுப்புகளை மட்டுமே திருமணம் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பர். இதனால் அங்கு திருமணம் வியாபாரமாகவும் பண்டமாற்றாகவும் அமைந்தது. அதனையே இன்று நம்மவரும் சிறந்ததென எண்ணி வாழ்கின்றனர். இது விலங்கு மனப்பான்மை கொண்டவரது முடிவாகும்; வாழ்க்கையென்பது தனிமனிதன் சம்பந்தமானது என்னும் குறுகிய எண்ணமுடையார்க்கே பொருந்துவது. ஆனால் தமிழர்கள் திருமணம் என்பது தனிமனித நிலையிலிருந்து சமூக நிலைவரை வளர்ந்து நாடு வரை பரந்த ஒரம்சமாக நிலைபெறவேண்டுமென எண்ணினர். அந்த எண்ணத்தின் செயற்பாடான நடைமுறைகள் இன்றுவரை நிலைபெற்றிருப்பதும் அவர் பண்பட்ட வாழ்வியலின் தன்மையை எடுத்துக்காட்டுகிறது. அதுவே மனித வாழ்வியலுக்கு என்றுமே பொருத்தமானதென்பதால் தமிழ் இலக்கியங்களிலே மரபாகியது.

## அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன் ச. வே., தமிழிலக்கியக் கொள்கை : 8, பக். 18, உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு : சென்னை, 1983.
2. கலைக்களஞ்சியம் : தொகுதி V, பகுதி III, பக். 3037, மதராஸ் பல்கலைக்கழகம், மதராஸ். 1935.
3. கலைக்களஞ்சியம் : தொகுதி VI, பகுதி III, பக். 3526.
4. கலைக்களஞ்சியம் : தொகுதி VI, பகுதி I, பக். 3490.
5. வின்சுலோவின் தமிழ் - ஆங்கில அகராதி, பக். 857. டெல்கி, 1862.
6. கலைக்களஞ்சியம் : தொகுதி I, பகுதி II, பக். 398.
7. கலைக்களஞ்சியம் : தொகுதி V, பகுதி I, பக். 2977.
8. ஐங்குறுநூறு : பாடல் 379, பக். 525, கழகப் பதிப்பு, திருநெல்வேலி, 1972.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. குறுந்தொகை : பாடல் 176, பக். 253–54, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1978.

10. ஐங்குறுநூறு : பாடல் 276, பக். 370–71.

11. சுப்பிரமணியபிள்ளை எஸ்., ''தமிழர் திருமணம்'', M. A ஆய்வுக் கட்டுரை, பக். 14, கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, 1970.

12. சோமசுந்தரன் பொ.வே., ஐங்குறுநூறு, அணிந்துரை' பக். 23, கழகப் பதிப்பு, 1972.

13. புறநானூறு : பாடல் 338, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1973.

14. அகநானூறு : பாடல் 195, கழகப்பதிப்பு, திருநெல்வேலி, 1977.

15. தொல்காப்பியம் : கற்பியல் சூத். 53 பக். 64, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1977.

16. கலைக்களஞ்சியம் : தொகுதி II, பகுதி I, பக். 741–42.

17. தொல்காப்பியம் : அகத்திணையியல், சூத். 53, பக். 64.

18. தொல்காப்பியம் : அகத்திணையில் சூத். 54, பக். 65.

19. புறநானூறு : பாடல் 342.

20. அகநானூறு : பாடல் 166.

21, குறுந்தொகை : பாடல் 300, பக். 448.

22. குறுந்தொகை : பாடல் 49, பக். 72.

23. ஐங்குறுநூறு . பாடல் 187, உரைப்பகுதி பக். 242.

24. ஐங்குறுநூறு : பாடல் 230, பக். 303.

25. குறுந்தொகை ; பாடல் 25, பக். 38.

26. நற்றிணை : பாடல் 10, பக். 20, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1976.

27. ஐங்குறுநூறு , பாடல் 392, பக். 548.

28. அகநானூறு : பாடல் 305, உரைப்பகுதி.

29. புறநானூறு : பாடல் 343, உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. புறநானூறு : பாடல் 341.

31. ஐங்குறுநூறு : பாடல் 147, பக். 184.

32. நற்றிணை : பாடல் 359, உரை.

83. அகநானூறு : பாடல் 66.

34. ஐங்குறுநூறு : பாடல் 292.

35. குறுந்தொகை : பாடல் 146.

36. ஐங்குறுநூறு : பாடல் 300, உரை.

37. அகநானூறு : பாடல் 86.

38. குறுந்தொகை : பாடல் 148.

39. அகநானூறு : பாடல் 369.

40. மலைபடுகடாம், அடி 150–151, கழக வெளியீடு, திருநெல்வேலி. 1968

41. அகநானூறு : பாடல் 86.

42. சுப்பிரமணியபிள்ளை எஸ். ''தமிழர் திருமணம்'' பக். 57–68

43. அகநானூறு : பாடல் 136

44. புறநானூறு ; பாடல் 372.

45. குறிஞ்சிப்பாட்டு உரை. பக். 68, கழகவெளியீடு, திருநெல்வேலி 1968.

46. அகநானூறு : பாடல் 256.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் இரண்டு

# தமிழர் திருமண நடைமுறைகள்

(கி. பி. 300 க்குப் பின்னர்)

அ. சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

சங்க இலக்கியங்களிலே பேசப்படுகின்ற பழந்தமிழர் வாழ்விலே மணவினை எவ்வாறு நிகழ்ந்ததென்பதை இந் நூலின் முதலாவது இயல் விவரித்துக்கூறுகின்றது. தமிழ் நாட்டிலே நிகழ்ந்த திருமண நடைமுறைகள் கி. பி. 2ஆம் நூற்றுண்டுக்குப் பின்னர் மாற்றமுறுவதைக் காண்கிறோம். கி. பி. 2 ஆம் நூற்றுண்டுக்குப் பின்னர் எழுந்ததெனக் கருதப்படும் இளங்கோவடிகளுடைய சிலப்பதிகாரத்திலே சித்தரிக்கப்பட்டிருக்கும் தமிழ்த் திருமணமுறை பெருமாற்ற முற்றமைந்துள்ளதைக் காண்கிறோம். சங்க காலத்திற் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிச் சேர்ந்த தலைமகனும் தலைமகளும் பின்னர் ஊரறியத் திருமணம் செய்துகொண்ட போது அத்திருமணச் சடங்கிலே பழந்தமிழர் நடைமுறைகளே கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால், சிலப்பதிகார காலத்திலே மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, அக்கினி சாட்சியாக, தேவர்கள் சாட்சியாக, சபையோர் சாட்சியாக, தீவலஞ் செய்து மணமுடிக்கும் நடைமுறை தோன்றி விட்டது. இத்தகைய மணமுறை தோன்றுவதற்குக் காரணம் யாது?

''யாயும் ஞாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர், நீயும் யானும் எவ்வழி அறிதும்'' என்று முன்னறியாத ஓர் ஆண்மகனும் ஒரு பெண்ணும் ஒன்று சேருகின்றனர். அவ்வாறு சேர்ந்தவர்கள் ஒருவரை யொருவர் பிரியாது வாழ்ந்தனர். இதே நிலை எல்லோருக்கும் எக்காலத்தும் ஏற்பட்டிருந்தால், தமிழ் நாட்டில் வேறு திருமணமுறைகள் வருவதற்கு வாய்ப்பில்லாமற் போயிருக்கும். ஆனல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகு முண்டு தான்மணந்த ஞான்றே.

என்றொரு பெண்குரல் சங்ககாலத்திலேயே கேட்கத் தொடங்கிவிட்டது பற்றி முதல் இயலிலே சுட்டப்பட்டுள்ளது.[1] சாட்சிகள் எவையுமில்லாமற் சந்தித்து இன்பந் துய்த்து விட்டு இடையிலே விட்டுச் சென்ற ஆண்கள் தொகையும் அதனால் அல்லலுற்ற பெண்கள் தொகையும் கூடியிருக்கலாம். தூய காதலொழுக்கத்திலும், அமுதிடைக் கலந்த நஞ்சுபோல, பொய்களும் வழுக்களும் வந்து சேரத் தொடங்கின. இதன் விளைவாகவே தமிழர் சமூகத்திலே திருமணம் தொடர்பாகக் கரணங்கள் வந்து சேர்ந்தன எனத் தொல்காப்பியர் கூறியது பற்றியும் முதலாவது இயலிலே சுட்டப்பட்டுள்ளது.[2] இவ்வாறு கரணங்கள் பல அறிமுகஞ் செய்யப்பட்ட பின்னர் தமிழர் திருமண நடைமுறைகள் எவ்வாறமைந்திருந்தன என்பதைக் கி. பி. 300 தொடக்கம் உருவாகிய தமிழ் இலக்கியங்களிலிருந்தும் சாசனங்களிலிருந்தும் ஆதாரங்கள் காட்டி விபரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நீண்ட தமிழ் இலக்கியப் பரப்பிலே தோற்றம் பெற்ற இலக்கியங்களுள் தமிழர் திருமண நடைமுறைகள் பற்றிக் கூறும் இலக்கியங்களை இனங்கண்டு, அவற்றிலுள்ள தரவுகளையெல்லாம் ஒருவகையில் ஆவணப்படுத்துவதாகவே இக்கட்டுரை பெரும்பாலும் அமையும்.

திருமண நடைமுறைகள் பற்றிய தரவுகள் பெரும்பாலும் இலக்கியங்களிலிருந்தே பெறப்படுகின்றன. எனவே, அவ்விலக்கியங்கள் தோன்றிய கால வரன் முறையினை அனுசரித்து, அவ்வக்கால இலக்கியங்களிலே காணப்படும் திருமண நடைமுறைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறுவது பொருத்தமாயிருக்கும். கட்டுரையிலே சுட்டுதல் வசதிக்காக, இந்நீண்ட இலக்கியப் பரப்பினை நான்காக வகுத்து முறையே (1) சிலப்பதிகார–மணிமேகலை காலம், (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவார காலம், (3) காவிய காலம், (4) பிற்காலம் எனப் பெயரிட்டுள்ளோம். சுட்டுதல் வசதிக்காக இப் பெயர்கள் இங்கு கையாளப்பட்டுள்ளனவேயன்றி வேறெக் காரணத்துக்குமல்ல. கால வரன்முறையும் பெயர்களும் பின்வருமாறு அமைகின்றன:

1. சிலப்பதிகார–மணிமேகலை காலம்:
   கி. பி. 300 — கி. பி. 600
2. தேவார காலம்:
   கி. பி. 600 — கி. பி. 900
3. காவிய காலம்:
   கி. பி. 900 — கி. பி. 1400
4. பிற்காலம்:
   கி. பி. 1400 — கி. பி. 1900

## 1. சிலப்பதிகார-மணிமேகலை காலத் திருமண நடைமுறைகள்

### 1:1 பெற்ரேர் நிச்சயிக்கும் திருமணம்

முன்னெப்பொழுதும் அறியாத ஆணும் பெண்ணும் கண்டு காதல் கொண்டு பின் திருமணம் மேற்கொள்ளும் சங்ககால முறை பின்னர் மாற்றமுற்றுப் பெற்ரேர்கள் நிச்சயிக்கும் திருமண முறையாக அமைந்தது. சிலப்பதிகாரம் என்னும் தமிழ் இலக்கியம் இத்தகைய திருமண முறை யினையே சித்திரிக்கின்றது.

> இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
> மணவணி காண மகிழ்ந்தனர் …………

என்பன சிலப்பதிகார அடிகள் (மங்கலவாழ்த்துப் பாடல்: 41–42). கோவலனின் தந்தையும் கண்ணகியின் தந்தை யும் தம்முடைய மக்களைத் திருமணஞ் செய்து வைப்ப தற்கு விழைகின்றனர். அவ்வாறு அவர்கள் விரும்பிய அத்திருமணம் ஒரு குறிப்பிட்ட நல்ல நாளிலே நடைபெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென விரும்புகின்றனர். திருமணத்துக்கு நன்னாளைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் சங்க இலக்கியங்கள் சுட்டும் திருமண நடைமுறைகளுள் ஒன்றாக ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. கோவலன் – கண்ணகி திருமணமும் ''வானூர் மதியம் சகடணையும்'' நன்னாளிலே நடைபெற்றது. சந்திரன் உரோகிணி நட்சத்திரத்தை அணையும் நாள் திருமணத்துக்கு உகந்த நன்னாளாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்நன்னாளிலே மணம் முடிக்கும் இருவரும் உறவினர்கள். உறவினர்களுக்குள் திருமணம் பேசி முடித்து வைக்கும் பிற்கால வழக்கத்தின் தொடக்கத்தினைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது என்று கூறுவது தவறாகாது.

> யானை எருத்தத் தணியிழையார் மேலிரீஇ
> மாநகர்க் கீந்தார் மணம் . ... ... . ...

என்று சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடல் (43–44) கூறுகின்றது. அதாவது, கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது என்பதை யானை மேலேறிப் பெண்கள் சிலர் நகரிலுள்ளோர்க்குப் பறையறைந்து அறிவித்து வந்தார்கள். ஊரறிய உலகறியத் திருமணஞ் செய்யும் வழக்கம் பெருகியவுடன் பறையறைந்து மணம் கூறும் வழக்கம் அதிகரித்து விட்டது. இக்கால இன்னொரு இலக்கியமாகிய **நாலடியார்** (9:6) இவ்வழக்கத்தினை,

> பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்
> கல்யாணம் செய்து கடிப்புக்க

என்று கூறுகின்றது.

### 1:2 மங்கல வாத்தியங்களும் மங்கலவணியும்

திருமணத்துக்கு மங்கல வாத்தியங்கள் முழங்குவது சங்ககாலத்திலிருந்து வரும் வழக்கமாகும். மணமுரசு பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வழக்கமும் மங்கல அணியினை வெண்கொற்றக் குடை நீழலிலே தெருத் தெருவாகக் கொண்டு செல்லும் வழக்கமும் சிலப்பதிகார காலத்திற் காணப்பட்டனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழி
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன
பணிலம் வெண்குடை
யரசெழுந்ததொர் படியெழுந்தன வகலுண்
மங்கல வணியெழுந்தது

என்று மங்கல வாழ்த்துப்பாடல் (45–47) கூறுகின்றது. வீர முரசு, மண முரசு, பிண முரசு என முரசுகள் மூவகைப் படும். இவற்றுள் மணமுரசுகள் முழங்குகின்றன. மத்தளத்தி னுடைய ஒலி அதிர்கின்றது. சங்குகள் முழங்குகின்றன. அரசனுடைய வெண்கொற்றக் குடை எழுகின்ற அளவு உயரத்திலே வெண்குடைகள் எழுகின்றன. அவற்றின் நிழலிலே மங்கலவணி தெருவூடாக எங்கும் எழுந்தது. மங்கலவணியினை ஊருக்குள் எடுத்துச் செல்லும் வழக்கம் இப்பொழுது தமிழர் திருமண நடைமுறைகளுட் காணப்பட வில்லை. அதற்குப் பதிலாக இன்று திருமணப் பந்தரிலே குழுமியிருப்பவர்களுடைய ஆசியைப் பெறுவதற்காக மங்கல வணி முதலியன வைக்கப்பட்ட தட்டு எடுத்துச் செல்லப் படுவதுண்டு. மங்கல அணி ஊர்வலமாகச் சென்றபடியால், மண மகனும் உடன் ஊர்வலமாகத் திருமணப் பந்தருக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். இதனால்,

கொட்டு மேளம் கொட்டி வரக்
குரவைச் சத்தம் கூட வர
பட்டு வெள்ளைக் குடைபி டித்து
வருவே னுன்னைத் தாலி கட்ட

என அமையும் மட்டக்களப்பு நாட்டார் பாடல் சித்திரிக்கும் திருமண நிகழ்வு சிலப்பதிகார காலத்திலேயே நடைமுறையிலிருந்திருக்க வேண்டும்.

### 1:3 திருமணப் பந்தர்

திருமணத்துக்கெனச் சிறப்பாகப் பந்தரிடும் வழக்கம் இன்றும் காணப்படுவதாகும். கோவலன்–கண்ணகி திரு மணத்துக்கு விசேடமான பந்தர் இடப்பட்டது. பல தூண்கள் வரிசையாக அமைக்கப்பட்டன. அத் தூண்களிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகள் தொங்கவிடப்பட்டன. தூண்களுக்கு மேலாக நீலப்பட்டு மேற்கட்டியாக இட்டுத் திருமண மண்டபம் அமைக்கப்பட்டதை,

> மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
> நீலவி ானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்

என்று இளங்கோவடிகள் இலக்கிய மொழியிலே கூறுகின்றார்.

## 1:4 தீவலம் வருதல்

பொருளாலும் அந்தஸ்தாலும் சாதியாலும் உயர்ந்தவர்களெனக் கருதப்படும் தமிழர்களுடைய திருமண நடைமுறைகளுள்ளே பார்ப்பனரால் ஓமம் வளர்ப்பது தொடக்கம் பல நிகழ்வுகள் இன்றும் இடம்பெறுகின்றன. கோவலன்—கண்ணகியினுடைய திருமணம் உயரிடத்து மணமாகும். ஆகவே அத்தகைய நடைமுறைகள் அத்திருமணத்திலே இடம் பெறுகின்றன. வயதேறிய பார்ப்பனன் ஒருவன் வேத முறைப்படி திருமணச் சடங்குகளைச் செய்கிறான். இச் சடங்குகள் யாவை எனச் சிலப்பதிகாரமோ அக்காலத்தைச் சார்ந்த வேறு இலக்கியங்களோ விரித்துரைக்கவில்லை. எனினும் சிலப்பதிகார ஆசிரியர் அவற்றுள் மிக முக்கியமான சடங்கு ஒன்றினைக் குறிப்பிடுகின்றார். அது கோவலனாகிய மணமகன் கண்ணகியாகிய மணமகளின் கையினைப் பற்றிக் கொண்டு தீ வலம் வருதலாகும். சிலப்பதிகாரக்காலத்திலே திருமண நடைமுறைகளுள் தீ வலம் வருதல் முக்கியமான தொன்றாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். அதனாலேதான், இளங்கோவடிகள் வரந்தருகாதையிலும் (84–85) தேவந்திகையின் திருமணம் பற்றிக் கூறுமிடத்து,

> தேவந்தி கையைத் தீவலம் செய்து
> நாலீ ராண்டு நடந்ததன் பின்னர்

என்று கூறுகின்றார். பண்டைத் தமிழர் திருமண நடைமுறைகளுள் இவ்வழக்கம் காணப்படாததொன்றாகும். இன்றும், ஆரியக் கலப்பில்லாத தமிழ்த் திருமணங்களிலே தீவலம் வரும் வழக்கம் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1:5 மங்கல அணி பூட்டுதல்

திருமணத்தின்போது மங்கல அணி பூட்டும் வழக்கமும் இளங்கோவடிகள் காலத்திலே இருந்திருக்க வேண்டும். ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட மங்கல அணி இறுதியாக மணமகளின் கழுத்திலேயே பூட்டப்பட்டிருக்க வேண்டும். இன்றுமணமுடித்த பெண்கள் மங்கல அணியினைத் தம்முடன் எப்பொழுதும் பூண்டிருப்பது போல, அன்றும் கண்ணகி கழுத்திலே திருமண நாளன்று பூட்டப்பட்ட மங்கல அணி அவளுடனேயே இருந்த செய்தியினைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி எல்லா அணிகலனையும் கழற்றிவிடுகிறாள். ஆனால், மங்கல அணியை மாத்திரம் கழற்றாமல் தன்னுடன் பூண்டிருப்பதை அந்திமாலைச் சிறப்புச் செய்காதையிலே (5);

> மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்

என்று இளங்கோவடிகள் கூறிச் செல்கிறார். மங்கல அணியினைக் கழற்றாமல் இருப்பதே திருமணஞ் செய்த பெண்களுக்குச் சிறப்பு என்னும் நம்பிக்கை இன்றும் தமிழ்ப் பெண்களிடையே நடைமுறையிலுண்டு.

## 1:6 வாழ்த்து

மணமக்களை வாழ்த்தும் நடைமுறை சங்ககாலந் தொடக்கமே தமிழர் திருமணத்தின் ஓர் அங்கமாயுள்ளது. சுற்றத்தார் சூழ்ந்திருக்க நல்ல நாளிலே நடைபெற்ற திருமண வைபவத்தில் பெண்கள் கூடி மணமகளை வாழ்த்தினர். கூறவேண்டிய அறிவுரைகளை மணமகளுக்கு வழங்கி அவளை ஆண்மகனிடம் ஒப்படைத்தனர். இந்நிகழ்ச்சியின் போது வாத்தியங்கள் முழங்கின. இதுதான் சங்ககாலத் திருமண நடைமுறையாயிருந்தது. சிலப்பதிகார காலத்தும் வாழ்த்து இடம்பெறுகின்றது. ஆனால், இவ்வாழ்த்து முறையிலே முக்கியமானதொரு வேறுபாடு காணப்படுகின்றது. கோவலன்–கண்ணகி மணமக்களை வாழ்த்துமிடத்துப் பல்வேறு வகையான வாழ்த்துகள் இடம்பெறுகின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உரையினுலே வாழ்த்துதல்

2. பாட்டினுலே வாழ்த்துதல்

3. நறுமணப் பொருள்களை ஏந்தியோர், மலர்களை ஏந்தியோர், சாந்து வகைகளையும் புகைவகைகளை யும் ஏந்தியோர், இடித்த சுண்ணத்தினை உடைய வர், விளக்குகளை ஏந்தியவர்கள், கலங்களைக் கைகளிலே தாங்கியோர், தானியம் முளைத்த நிறை குடங்களை ஏந்தியோர் தனித்தனியாகவும் கூட்டாகவும் வாழ்த்துதல்

4. மன்னனையும் வாழ்த்துதல்

இந்நான்கு வகை வாழ்த்துக்களுள் முதல் மூன்று வகையும் நேரடியாக மணமக்களை வாழ்த்துவனவாகும். அவ்வாறு வாழ்த்துமிடத்து மங்கலப் பொருட்களை ஏந்தியவராகப் பெண்கள் பலர்,

> **காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்**
> **றீதறுக.......... ...............**

என்று கூறி மணமக்கள்மேல் மலர்சொரிந்து வாழ்த்தினர். திருமணம் புணரும் மக்களை வாழ்த்துமிடத்து அவர்களு டைய மன்னனையும் சேர்த்து வாழ்த்தும் நடைமுறையினை,

> **செருமிகு சினவேற் செம்பிய**
> **னொருதனி யாழி யுருட்டுவோ னெனவே**

என்று மங்கல வாழ்த்துப் பாடலிலே (66-67) இளங்கோ வடிகள் கூறுகின்றார்.

## 1:7 அருந்ததிகாட்டல்

திருமண நடைமுறைகளிலே அருந்ததி காட்டும் சடங்கு இன்று பெரும்பாலான திருமணங்களிலே காணப்படுகின்றது. கண்ணகியினுடைய திருமணத்திலும் இச்சடங்கு நடந் ததோ என்னவோ தெரியவில்லை. எனினும் கண்ணகியை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

……………………… வானத்துச்
சாலியொருமீன் றகையாளை……

என்றும்,

அங்க ணுலகி னருந்ததி யன்னாளை

என்றும் இளங்கோவடிகள் வர்ணிக்கின்றார். அருந்ததிக்கு ஒப்பாகக் கண்ணகியைச் சிலப்பதிகார ஆசிரியர் வர்ணிப்பதாலே அருந்ததி காட்டும் வழக்கமும் திருமண நடைமுறையிலே இடம் பெற்றிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

## 1:8 திருமண விருந்து

திருமணக் காலங்களிலே கூடியிருக்கும் உற்றாருக்கும் உறவினருக்கும் விருந்தளிக்கும் வழக்கமும் இக்காலத்திலே நடைமுறையிலிருந்திருக்கவேண்டும். ஆதாரமாக ஆசாரக் கோவை 48ஆஞ் செய்யுளைக் கொள்ளலாம்.

கல்யாணந் தேவர் பிதிர்விழா வேள்வியென்று
ஐவகை நாளும் இகழா தறஞ்செய்க
பெய்க விருந்திற்குங் கூழ்

என்பது அச்செய்யுள். திருமணம், கடவுளர்க்கு எடுக்கும் விழா, பிதிர்களுக்கு நடைபெறும் விழா, சாதாரண விழாக்கள், வேள்வி ஆகியன நடைபெறுங் காலங்களிலே விருந்திடல் அவசியம் என ஆசாரக்கோவை வற்புறுத்துகின்றது. எனவே கல்யாண காலத்திலே விருந்திடல் ஒரு கட்டாய வழக்கமாக இக்காலத்திலும் கொள்ளப்பட்டிருக்கின்றது.

## 1:9 திருமணத்தின் பின் மணமக்கள் வாழுமிடம்

திருமணமான தம்பதிகளைப் பெண்வீட்டார் தங்கள் வீட்டிலேயே குடியிருக்க வைக்கும் வழக்கமும், இன்னொரு புதுமனையமைத்து அதிலே அவர்கள் தங்கி மனை வாழ்க்கை நடத்தவைக்கும் வழக்கமும், கணவன் வீட்டிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வாழ்கின்ற வழக்கமும் இன்று தமிழர் சமூக நடைமுறைகளிலே காணப்படுவன. சிலப்பதிகார காலத்திலே இரண்டாவது வழக்கமும் மூன்ருவது வழக்கமும் நடைமுறையிலிருந்தன. தங்களுடைய பிள்ளைகளின் திருமணப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் பெற்ருேர் அவர்களுடைய இல்லற வாழ்வு செவ்வனே நடைபெறுதற்கு வேண்டிய ஒழுங்குகளையெல்லாம் செய்யலானுர்கள். கண்ணகியும் கோவலனும் ''குலத்திற் குன்ருக் கொழுங் கொடிச் செல்வர்''. அதனுல் அவர்களுக்கு எவ்வித குறையுமில்லை. திருமணம் முடிந்தவுடன் கோவலனுடைய மனையிலே கண்ணகி போய் வாழ்கின்ருள். அவ்வாறு வாழ்கின்ற காலத்தில் கோவலனுடைய தாய், தன்னுடைய மருமகள் கண்ணகியை அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கெதிர்தல், சுற்றந்தழுவுதல் ஆகிய கடமைகளிலே ஈடுபட்டு இல்லறத்தைத் தனிக்குடித்தனமாக நடத்திச் செவ்வனே வாழ வைக்க வேண்டுமென்று எண்ணிளுள். அதனுல், இல்லறத்துக்குவேண்டிய செல்வம், ஆட்கூட்டம் ஆகியனவற்றையெல்லாம் கொடுத்துத் தங்களூரிலேயே ஒரு மனையிலே அவர்கள் வாழ்வதற்கு ஒழுங்கு செய்கிருள். இதனை,

> வாரொலி கூந்தற் பேரியற் கிழத்தி
> மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
> விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
> வேறுபடு திருவின் வீறுபெறக் காண
> வுரிமைச் சுற்றமோ டொருதனி புணர்க்க
> யாண்டுசில கழிந்தன விற்பெருங் கிழமையிற்
> காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென

என்று சிலப்பதிகாரம் மனையறம்படுத்த காதை (84–90) கூறுகின்றது.

## 1:10 மாலை வாங்கு திருமணம்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட முறையான திருமணம் நடந்த சிலப்பதிகாரகாலத்திலேயே இன்னெரு வகையான திருமணமும் நடந்தது. இது முறைதவறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் என்பதைச் சிலப்பதிகாரமே தன் கதை மூலம் காட்டியுள்ளது. இது ''மாலைவாங்கு திருமணம்''. தலையரங்கேறி நடனமாடிய மாதவிக்கு மன்னன் தலைக்கோல் என்னும் வரிசையினை வழங்குகிறான். அதற்கு அடையாளமாக வழங்கப்பட்ட மாலை தெருவிலே விலை கூறப்படுகின்றது. ''வீறு பெற்றுயர்ந்த பசும்பொன்னை விலையாகப் பெறுவது இம்மாலை; இம்மாலை பெற்ற பொன் தந்து இதனை வாங்கிச் சூடுநர் மாதவிக்கு மணமகனுதலமையும்'' என்று சொல்லப்பட்டு அம்மாலை விலைகூறப்படுகின்றது. இப்பரிச மாலையை வாங்கிய கோவலன் மாதவி வீடு சென்றது பற்றிக் கூறும் இளங்கோவடிகள் (அரங்கேற்று காதை, 172–3),

> மணமனை புக்கு மாதவி தன்னோ
> டணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி

என்று கூறுகின்றார். ''மணமனை'' என்ற தொடர்மூலமாக, பரிசமாலை வாங்கித் திருமணஞ் செய்யும் வழக்கினை ஆசிரியர் புலப்படுத்துகிறார். இத்தகைய திருமண முறை கணிகையர் குலத்துக்குரியதாக இருந்திருக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் பரத்தையரிடையே காணப்பட்ட திருமண முறைபற்றி இந்நூலின் முதலியல் விளக்குகின்றது.[3] அதனுடன் இவ்வழக்கினை ஒப்பிட்டு நோக்குக.

## 1:11 மாமன் மகளை மணம்புரிதல்

துறவறங் கூறும் மணிமேகலைக் காப்பியமும் சமூக நடைமுறையிலே முக்கிய பண்பாகிய திருமணம் பற்றிக் கூறத் தவறவில்லை. மாமன் மகனை வடமொழியாளர் 'மைத்துனன்' என்பர். இச்சொல்லின் பொருள் புணர்வதற்குரியவன் என்பதாகும். மாமன் மகளை மணம்புரியும் வழக்கம் தமிழகத்திலே எப்பொழுது தோன்றியது என்று கூறமுடியவில்லை. எனினும், மணிமேகலை காலத்திலே இத் திருமண வழக்கம் தமிழ்நாட்டிலே இருந்தது என்பதற்கு அந்நூலிலே ஆதாரமுண்டு. மணிமேகலை சிறைசெய் காதையில் (83–88),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும தத்தனும் தன்மா மன்மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணித்
தெய்வங் காட்டும் திப்பிய ஓவியக்
கைவினை கடந்த கண்கவர் வனப்பினர்
மைத்துனன் முறைமையால் யாழோர் மணவினைக்கு
ஒத்தனள் என்றே ஊர்முழு தலரெழ

என்று கூறப்பட்டுள்ளது. தருமதத்தனுக்கு விசாகை மாமன் மகள். விசாகைக்குத் தருமதத்தன் மைத்துனன். அவர்களிருவரும் மணம் புரிவது இயற்கையானதும் சாதாரண வழக்காகவும் அக்காலத்திற் கொள்ளப்பட்டது. ஆனால், 'யாழோர் கூட்டம்' என்பது இன்னொரு வகையான திருமண முறையாகும். முன்னெப்பொழுதும் உறவுமுறையில்லாத தம்முட் புதியரே யாழோர் கூட்டத்திற் சேருவது இயற்கையாக இருந்து வந்தது. எனவே மைத்துனன் முறையான தருமதத்தனுடன் யாழோர் கூட்டத்துக்கு விசாகை உடன்பட்டது முறையான செயலாகக் கருதப்படவில்லை. அது ஊரார் பழிக்கு இலக்காகியது.

மாமன் மகளை உறவு முறையாலே மணம்புரியும் வழக்கம் வணிகர் குடியிலே தோன்றியதொன்றாயிருக்கலாம். தம்முடைய செல்வம் தம் குடியினுள்ளேயே தேங்கிக் கிடக்க வேண்டுமென்ற காரணத்தினாலே இவ்வுறவுமுறைத் திருமணம் தோன்றியிருக்கலாம். இப்பொழுதும் இம் முறைத் திருமணம் தமிழர்களிடையே பரவலாக நடைமுறையில் பெற்று வருகின்றது. ''வைக்கோலுக்குள் விளைந்ததை வைக்கோலுக்குள்ளேயே வைத்துக் கட்ட வேண்டும் (வெக்கலுக்க வெளஞ்சதை வெக்கலுக்குள்ளேயே வெச்சுக் கட்ட ஒணும்)'' என்று ஈழத்தின் கிழக்குப் பிரதேசமாகிய மட்டக்களப்பிலே ஒரு பழமொழி நடைமுறையிலுண்டு. அதாவது ஒரு குலத்திலே பிறந்தவர்களை அக்குலத்துக்குள்ளேயே திருமணஞ் செய்து வைக்க வேண்டும் என்பது இப் பழமொழியின் பொருளாகும். செல்வத்தைப் பேணுவதற்கு மாத்திரமன்றி, வருணப் பாகுபாடு குலப்பாகுபாடு ஆகியன கட்டுக்கோப்புக் குலையாமற் பாதுகாக்கப்படுதற்கும் இவ்வுறவுமுறைத் திருமணம் உதவியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தேவாரகாலத் திருமண நடைமுறைகள்

கி. பி. 6 ஆம் நூற்றுண்டுக்கும் கி. பி. 9 ஆம் நூற்றுண்டுக்கு மிடைப்பட்ட காலப் பகுதியிலே எழுந்த தமிழ் இலக்கியங்களிலே அக்காலத் திருமண நடைமுறைகள் பல தொடர்ந்து கைக்கொள்ளப்படுவதையும் புதிய நடைமுறைகள் சில சேர்ந்துள்ளதையும் காட்டுகின்றன. இவற்றை இப்பகுதியிலே நிரைப்படுத்திக் கூறுவதுடன் சிற்சில இடங்களில் விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன.

### 2:1 திருமண வகைகள்

சங்ககாலத்தில் நடைபெற்ற உடன்போக்குத் திருமணம் அன்று தொட்டு இன்றுவரை நடைபெறுகின்றது. தேவார காலத்து இலக்கியங்களிலும் இத்திருமணம் பற்றிக் கூறப் படுகின்றது. சங்ககாலத்திலும் உடன்போக்குத் திருமணம் பெண்வீட்டாராலே விரும்பப்படாததாகவே அமைந்தது. அதற்குக் காரணம் பெண் தனியாகப் போய்ப் பிறிதோ ரிடத்திலே வாழுதற்குத் தக்க வயதினளோ புத்தியுடை யாளோ என்ற தாயின் மனநிலையேயாகும். மிகப் பாரிய முறையிலே பல சடங்குகளைப் பேணித் திருமணங்கள் நடந்த பிற்காலத்திலே, அத்தகைய முறையிலே திருமணத்தை நடத்த முடியாமற் போனமைக்காக உடன் போக்கு மணத் தினைக் குறைகூறும் போக்கினையும் காண்கிறோம். தேவார காலத்து இலக்கியங்களும் இந்நிலையைச் சுட்டி நிற்கின்றன. பெரியாழ்வாருடைய ஒரு பாடல் (எட்டாம் திருமொழி: 6) இந்நிலையை நன்கு காட்டுகின்றது :

> **வேடர் மறக்குலம் போலே வேண்டிற்றுச் செய்தென் மகளை**
> **கூடிய கூட்டமே யாகக் கொண்டு குடிவாழுங் கொல்லோ**
> **நாடு நகரு மறிய நல்லதோர் கண்ணாலஞ் செய்து**
> **சாடிறப் பாய்ந்த பெருமான் தக்கவா கைப்பற்றுங் கொல்லோ.**

வேடர் மறக்குலத்தாரிடையே ஓர் ஆணும் பெண்ணும் கண்டு காதல் கொண்டு கூடும் கூட்டமே மணமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாழ்வர். இதுதான் சங்ககாலக் களவுமணமாகவும் அமைந்தது. ஆனல், பிற்காலத்தில் நாடும் நகரும் அறியும் படியாகத் திருமணஞ் செய்வதையே பெரும்பாலும் விரும் பினர். அத்துடன் சகல சடங்குகளையும் அனுட்டித்துச் செய்யப்படும் திருமணமே ''நல்லதோர் கண்ணலம்'' எனக் கொள்ளப்பட்டது. அடுப்பாரும் கொடுப்பாரும் மண மகளை மணமகனுக்குக் கொடுக்க, அவன் அவளைக் கைப்பற்றுவதே முறையான மணமாகக் கருதப்பட்டது. எனவே, ''கண்ணனுகிய மணமகன் வேடர் குலத்துக் கூடிய கூட்டத் திருமணம்போல் என்னுடைய மகளையும் கொண்டு போய்க் குடிவாழ்வாஞ அல்லது நாடு நகரிலுள்ளோரெல்லா ரும் அறியும்படியாக முறையாகத் திருமணச் சடங்கிலே அவளுடைய கைத்தலம் பற்றுவாஞ'' என்று ஐயப்படும் தாயைப் போலப் பாவனை செய்து பாடுகிருர் பெரியாழ்வார். இப்பாடல் ஒருவகையில் அக்காலத் திருமண வழக்கத்தினை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் இரண்டு வகையான திருமணங்கள் அக்காலத்தில் நடைமுறையி லிருந்த செய்தியினையும் உணர்த்துகின்றது. ஒன்று வேடர் மறக்குலத்தவரிடையே நிலவிய களவுத் திருமணம். மற்றை யது நாடு நகரறிய நடக்கும் கண்ணலம்.

நாடு நகரறிய நடக்கும் கண்ணலம் பெரும்பாலும் மகட்பேச்சுத் திருமணமாகவே அமைந்தது. மகட்பேச்சுத் திருமணத்தில் நாடு நகரறிய மணமக்கள் தீவலம் வருதலும் கைத்தலம் பற்றுதலும் இடம் பெற்றன. தீவேட்டு நடத்தும் திருமணம் தமிழர் சமூகத்திலே நன்கு வேரூன்றி விடுகின்றது. சிலப்பதிகாரக் காலத்திலேயே காணப்பட்ட இம்மணவகை தேவார காலத்திற் பரக்கப் பேசப்படுகின்றது.

**மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை**
**உலகறியத் தீவேட்டான் என்னுமது காணேடி**
**உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்**
**கலைநவின்ற பொருள்க ளெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ**

என்று திருவாசகத்தில் திருச்சாழற் பதிகத்தில் (13) மாணிக்க வாசகர் உலகறியத் தீவேட்டுச் சிவனும் உமையும் திருமணஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததைக் கூறுகின்றார். இதுவே அன்று தமிழுலகத் திருமணவகையாகவும் இருந்தது.

நாடு நகரறிய நடைபெற்ற மகட்பேச்சுத் திருமணம் **வதுவை மணம்** எனவும் அழைக்கப்பட்டது. ஆண்டாள் இவ்வகை மணத்தினை நாச்சியார் திருமொழியில் (VI : 7),

**நாளை வதுவை மணமென்று நாளிட்டு**

என்று குறுப்பிடுகின்றார்.

## 2:2 மைத்துனனை மணஞ்செய்யும் வழக்கம்

மைத்துனனை மணஞ் செய்யும் வழக்கம் தொடர்ந்து தேவாரகாலத்திலும் கடைப்பிடிக்கப் படுகின்றது. நாச்சியாருடைய பாடல்களிலே இவ்வழக்கம் குறிக்கப்படுகின்றது.

**பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாட**

என்று திருப்பாவையிலும்,

**மைத்துனன் நம்பி மதுசூதன்**

என்று திருமொழியிலும் கூறுகின்றார்.

**மைத்துனன்** என்னுஞ் சொல்லே பிற்காலத்தில் **மச்சான்** என மாறிற்று.

## 2:3 திருமண நடைமுறைகள்

### 2:3.1. மகட்பேசுதல்

திருமணத்துக்கு முன்னர் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டுக்கு வந்து மகட்பேசும் கடப்பாடுடையவராயிருந்தனர். அவ்வாறு மணமகன் வீட்டார் பெண்பேச வரும்பொழுது தம்முடன் பிரபலம் வாய்ந்த சிலரையும் அழைத்து வருதல் வழக்கம். அவ்வாறு வந்து மகட்பேசி வதுவை நிச்சயமென்றவுடன் மணப்பெண்ணுக்குக் கோடியுடுத்தி, கூடவந்தோருள் வயதான சுமங்கலிப் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகளுக்கு மாலை சூட்டும் நடைமுறை பின்பற்றப் பட்டது. தேவார காலத்தில் நிகழ்ந்த இத்திருமண நடைமுறையை நாச்சியார் (IV ; 3)

இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என்று விவரிக்கின்றார். மணமகன் கண்ணன். மணமகள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி. மணமகன் சார்பிலே இந்திரன் முதலாய தேவர் கூட்டமே மகட்பேசுவதற்காக வந்துள்ளது. மகட்பேசி வதுவை நிச்சயம் பண்ணியவுடன் வேதம் வல்ல தேவர்கள் மந்திரங்கள் கூறி மணமகளுக்குக் கோடி கொடுக்கின்றனர். மணமகள் கோடியுடுத்து நிற்க, துர்க்கை அவளுக்கு மணமாலை சூட்டுகிறாள். தமிழகத்தில் அன்று நடந்த திருமண நடைமுறைக்கேற்பத் தனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடந்ததாகக் கனவு காண்கிறாள் கோதை.

மகட்பேசும் வழக்கத்தினையே திருமூலரும் ''வாசந்தி பேசி மணம் புணர்ந்து'' என்று திருமந்திரம் 150 ஆவது பாடலிற் குறிப்பிடுகின்றார்போலும்.

## 2:3.2. திருமண அலங்காரங்கள்

தேவார காலத்தில் நிலவிய திருமண அலங்காரங்கள் சிலவற்றை ஆண்டாள் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. மணமகன் திருமண நாளன்று ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படவிருக்கிறான். ஆகவே அவ்வூரிலுள்ளார் மணமகன் செல்லும் வீதிகளிலே தோரணங்கள் கட்டுகிறார்கள். மணமகனுக்குத் தங்கள் நல்லாசிகளை வழங்குவதற்குப் பூரண பொற்குடங்கள் வைக்கிறார்கள். தோரணம் கட்டுதல் தமிழர் பண்பாட்டிலே ஒரு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. புனிதமான நிகழ்ச்சிகள் எங்கெல்லாம் இடம் பெறுகின்றனவோ அவ்விடங்களிலெல்லாம் தோரண அலங்காரம் இடம்பெறுவது வழக்கமாகும். புனிதமும் பூரணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவமும் வாய்ந்தது பூரணகும்பம். நெல்லினையோ அரிசியினையோ பரப்பி அதன்மேல் நீர் நிறைந்த குடத்தினை வைத்து, அக்குடத்தின்மேல் தேங்காய் ஒன்றினை வைத்து, இருபக்கமும் தீபம் ஏற்றி வைக்கும் வழக்கத்தினை இன்று தமிழர் பிரதேசங்கள் எல்லாவற்றிலுமே காண்கிறோம். இவ்வழக்கத்தினையே ஆண்டாள்,

> வாரண மாயிரம் சூழ வலஞ்செய்து
> நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
> பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
> தோரண நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என்று குறிப்பிடுகின்றார்.

திருமணப் பந்தரின் அலங்காரமும் ஆண்டாளுடைய கனவுப் பாசுரங்களிலே கூறப்பட்டுள்ளது. திருமணப் பந்தர் அலங்காரத்துக்குத் தென்னை மரத்தின் பாளைகளும் கமுக மரங்களும் நன்கு பயன்பட்டன. முத்து முதலியன கோக்கப் பட்டுப் புனையப்பட்ட மாலைகள் அப்பந்தரிலே தொங்கவிடப் பட்டன.

> நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
> பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்

என்றும்,

> முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்

என்றும் ஆண்டாள் அப்பந்தலலங்காரத்தினை வர்ணிக்கின்றார்.

### 2:3.3. காப்பு நாண் கட்டல்

திருமண நாளுக்கு முன்னர் ஒரு நன்னாளிலே, மணமகனையும் மணமகளையும் திருமணஞ் செய்து வைப்பது என்னும் முன்னேற்பாடாக மணமகன் கையிலும் மணமகள் கையிலும் காப்பு நாண் கட்டப்படும். இத்திருமண நடைமுறை அவரவர்இல்லங்களிலே தனித்தனியாக நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாளுடைய பாசுரம் மணமகளுக்குக் காப்பு நாண் கட்டிய செய்தியினைக் கூறுகின்றது. நான்கு திசைகளிலிருந்தும் புனித தீர்த்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அத்தீர்த்தங் களைப் பார்ப்பனச் சிறுவர்கள் கைகளிலே எடுத்தேந்திப் பல் லாண்டு கூற, பூக்களாலே புனையப்பட்ட மாலைகளையணிந்த புனிதனாகிய கண்ணனுடன் திருமணம் என்று மணமகளாகிய ஆண்டாள் கையிலே காப்பு நாண் கட்டப்படுகின்றது. திருமணத்துக்கும் திருமணத்திலே பங்குபெறும் மணமக் களுக்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படாவண்ணம் தெய்வங்கள் காப்பாற்ற வேண்டும் என்பதற்கு அறிகுறியாக இக்காப்பு நாண் புனையப்பட்டிருக்கவேண்டும். இத்திருமண நடை முறை,

நாற்றிசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கிப்
பார்ப்பனச் சிட்டர் பல்லா ரெடுத்தேத்திப்
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என்னும் நாச்சியார் திருமொழிப் பாடலிலே ( IV : 4 ) விவரிக்கப்பட்டுள்ளது.

### 2:3.4. மணகனை வரவேற்றல்

திருமணப் பந்தருக்கு ஊர்வலமாக எழுந்தருளும் மண மகனைப் பந்தரின் வாயிலிலே பெண்கள் நல்லார் சிலர் தீப கலசங்களுடன் எதிர்கொள்ளுதல் இன்னொரு திருமண நடைமுறையாகும். இன்று இச் சடங்கினை ஆரத்தி எடுத்தல் என்று வழங்குவர். ஊர்த் தெருக்களாலே கல்யாண கோலத்துடனே வந்த மணமகனுக்குக் 'கண்ணூறு', 'நாவூறு' என்பவற்றால் தீங்கு எதுவும் ஏற்படாமல், அவற்றை நீக்கு முகமாக ஆரத்திச் சடங்கு நடைபெற்று வருகின்றது. அத்துடன் மணமகனை வரவேற்கும் நடை முறையாகவும் இது அமைந்து விடுகின்றது. மணமகன் மணப்பந்தலை அடைந்தவுடன், வாயிலிலே மஞ்சள் நீர், குங்குமம் ஆகியன கரைத்த கலவையுடன் கூடிய தீப ஆரத்தியினைச் சுமங்கலிப் பெண்கள் காட்டி அவனை வரவேற் பர். இதுபோன்ற நடைமுறையினையே நாச்சியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரொளி தீபம் கலசமுட னேந்திச்
சதிரிள மங்கையர் தாம்வந் தெதிர் கொள்ள
மதுரையார் மன்ன னடிநிலை தொட்டுஎங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்

என்னும் பாடலிலே (VI : 5) குறிப்பிடுகின்றார்.

2:3.5. கைத்தலம் பற்றுதல்

ஆண்டாளுடைய காலத் திருமணத்திலே கைத்தலம் பற்றுதலே முக்கியமான நடைமுறையாக அமைந்திருக்க வேண்டும். தாலி கட்டும் சடங்கு இக்காலத்தில் இல்லைப் போலும். இருந்திருப்பின் நாச்சியார் நிச்சயமாகத் தன்னுடைய பாசுரத்திலே குறிப்பிட்டிருப்பார். பாணிக்கிரகணம் என்னும் வடநாட்டுத் திருமணச் சடங்கே கைத்தலம் பற்றுதல் ஆகும். வடமொழி அதர்வ வேதத்திலும் சாங்கிய கிருகிய சூத்திரங்களிலும் இப் பாணிக்கிரகணம் பற்றிக் கூறப் பட்டுள்ளது. மணமகன் மணமகளின் வலது கரத்தைப் பற்றி, ''நான் இவளை இவ்வாறு கைப்பிடித்தது மகிழ்ச்சிக் காக. இவள் என்னுடன் நீண்ட நாட்கள் வாழ்வதற்காக. சூரியன், சவிதிர். புராந்தி முதலிய கடவுளர் இவளை எனக்குத் தந்துள்ளனர். நான் சாமம், அவள் ரிக்; நான் வானம், அவள் பூமி. நாம் பல பல புதல்வரைப் பெறு வோமாக. அவர்கள் நீண்டகாலம் வாழ்வார்களாக. நாமும் நூறு இலையுதிர் பருவகாலங்கள் வாழ்வோமாக'' எனக் கூறுவான். இச்சடங்கு எல்லாக் கிருகிய சூத்திரங் களிலும் கூறப்பட்டுள்ளது. ஆண்டாள்,

மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்

என்று கூறுவது கிருகிய சூத்திரச் சடங்கைப் பின்பற்றி யதோ, தமிழ் நாட்டிலிருந்து வந்த நடைமுறையோ என்று துணிந்து கூறமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2:3.6. தீ வலஞ் செய்தல்

தீ வலஞ் செய்யும் நடைமுறை சிலப்பதிகார காலத்திலேயே தமிழர் திருமண நடைமுறைகளுள் ஒன்ருகி விட்டது. விவாக அக்கினியை வடக்கு நோக்கித் தம்பதிகள் ஏழு அடியெடுத்து வைத்து வலம் வரும் சடங்கினை **சப்தபதி** என **மனுஸ்மிருதி** முதலாய வடமொழி நூல்கள் கூறுகின்றன. கைத்தலம் பற்றுதலும் தீ வலம் வருதலும் ஒன்ருகவே நடைபெறுகின்றன. தீ வலம் வரும் சந்தர்ப்பத்திலேயே மணமகளினுடைய கையினை மணமகன் முதன் முதலாகப் பற்றுகிருன். அவ்வாறு கைத்தலம் பற்றித் தீயை வலம் வருவதால் கணவன் செல்லுகின்ற வாழ்க்கைப் பாதையிலே மணமகளும் பின்தொடருவாள் என்பதனை உலகோருக்கு முன்னலேயே நடைமுறைப் படுத்துவதாக இச் சடங்கு அமைகின்றது. இவ்வாறு கைத்தலம் பற்றி ஏழு அடியெடுத்து மணமக்கள் தீவலம் வரும்பொழுது திருமணத்தின் அதிபதியாகிய விஷ்ணு அவ்வேழு அடிகளுக்கும் முறையே அன்னம், வலிமை, கருமங்களை நிறைவேற்றும் வாய்ப்பு, சுகம், பசு, செல்வம், ஆறு ருதுக்களிலும் நன்மை ஆகியனவற்றை அளிக்கிருர் என வடமொழி நூல்கள் கூறுகின்றன. வடநாட்டுத் திருமண நடைமுறையாகிய தீ வலம் வரும் சடங்கு தமிழர் திருமண நடைமுறையில் எவ்வாறு அமைந்திருந்தது என்பதனை ஆண்டாள் (IV : 7)

> **வாய்நல் லார்நல்ல மறையோதி மந்திரத்தால்**
> **பாசிலை நாணல் படுத்துப் பரிவைத்துக்**
> **காய்சின மாகளி றன்னனென் கைப்பற்றித்**
> **தீவலஞ் செய்யக் கனக்கண்டேன் தோழீநான்**

என்று குறிப்பிடுகின்ருர்.

## 2:3.7. அம்மி மிதித்தல்

மனைவி மன உறுதியுடையவளாக விளங்க வேண்டுமென்பதை உணர்த்துமுகமாக அவளுடைய வலது காலினை மணமகன் தனது வலது கரத்தால் பற்றி அம்மி மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பான். இதுவும் தீவலம் வரும்பொழுது நடைபெறும் ஒரு சடங்காகும். மும்முறை தீவலம் வரும்போதும் மும் முறையும் மணமகன் மணமகளின் காலைப்பற்றி அம்மியிலே வைப்பான். இது பொதுவாக எல்லாக் கிருகிய சூத்திரங் களிலும் கூறப்பட்டுள்ளது. ஆரியத் திருமணச் சடங்காகிய அம்மி மிதித்தல் பற்றித் தமிழில் ஆண்டாளே முதன் முறை யாகக் குறிப்பிடுகின்றார்.

இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றுவான்
நம்மை யுடையவன் நாரா யணன்நம்பி
செம்மை யுடைய திருக்கையாற் றாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்.

என்னும் பாடலில் மணமகன் தன்னுடைய கையாலே மணமகளின் கால்பற்றி அம்மி மிதிப்பிக்கும் நடைமுறை குறிப்பிடப்படுகின்றது. அம்மி மிதித்தல் தனியே பெண்ணி னுடைய மன உறுதியும் கற்பும் கல்போன்றிருக்கவேண்டு மென்று உணர்த்துவதல்ல. அது ஆணினுடைய கற்பினையும் மன உறுதியையும் உணர்த்துகின்றது என்று கூறினும் தவறாகாது. அத்துடன் ''என்ன நிலை ஏற்பட்டாலும் உன்னை நான் காப்பாற்றுவேன்'' என்று தலையிற் கை வைத்து உறுதியளிப்பதைவிட அடிதொட்டு உறுதியளிக்கும் போது அதிலே பணிவும் கனிவும் அன்பும் அமைந்துள்ளதைக் காணலாம். அம்மி மிதித்தல் இத்தகைய ஓர் உறுதியளிப் பினையும் பிரதிபலித்திருக்கலாம்.[4]

## 2:3.8. பொரிமுகந் தட்டல்

மணமக்களை அக்கினி முன்னாலே நிறுத்தி, மணமகளின் தாய் முதலியோர் மணமகனின் கைமேல் மணமகளின் கையை வைத்து நெற்பொரி முதலியவற்றைத் தட்டுவது ஒரு வழக்கமாக ஆண்டாளாலே கூறப்படுகின்றது.

வரிசிலை வாள்முகத் தென்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னைமுன் னேநிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மேலென் கைவைத்துப்
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என்பது ஆண்டாளுடைய பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2:3.9. குங்குமம் அப்புதல்

இது மணமகளைச் சுற்றத்தவரும் பிறரும் வாழ்த்துகின்ற ஒரு திருமண நடைமுறையாகும். சிந்தூரதானம் என வடநூலிலே கூறப்பட்டுள்ளது இந்நடைமுறையேயாகும். மணமகளுடைய தலை நடுவகிட்டில் நெற்றிக்கு மேலே குங்குமம் அப்பியும் குளிர்ந்த சந்தனத்தைத் தலையிலே பெய்தும் வாழ்த்துவதாக ஆண்டாளுடைய கனவுக் கலியாணத்திலிருந்து அறிகிறோம். ''குங்குமமப்பிக் குளிர் சாந்த மட்டித்தது'' என்று நாச்சியார் பாடுகின்றார். மணமகளின் தலையில் நிலைத்திருக்கவேண்டிய மங்கலச் சின்னமாக இக் குங்குமம் விளங்கும்.

### 2:3.10. ஊர்வலம்

மணப்பந்தருக்குத் தனியாக வீதிவழியே ஊர்வலம் வந்த மணமகன் திருமணச் சடங்குகளெல்லாம் மணப்பந்தரிலே முடிவடைந்த பின்னர், மணமகளுடன் தம்பதிகளாய் ஊரிலுள்ளார் காணும்படியாகவும், தம் மணம் பற்றி அறியும்படியாகவும் வீதி வலம் வரும் திருமண நடைமுறை நடைபெற்று வந்துள்ளது. பொருளாதார வசதியுடையோரிடையே நடைபெறும் திருமணங்களிலே இன்றும் இவ்வூர்வலம் நடைபெறுவதுண்டு. ஆண்டாளும், ''மங்கல வீதி வலஞ்செய்து'' என்று கூறுவதன்மூலம் அந்நடைமுறையைக் குறிப்பிடுகின்றார்.

### 2:3.11. மஞ்சனமாடல்

மணமக்களிருவரும் திருமணத்துக்கு வரும்போது தனித் தனியாகத் தம் இல்லங்களிலே புனித நீராடி வருவர். திருமணம் முடிந்து கணவன் மனைவி ஆனவுடன் திருமணப் பந்தரினின்று வீதிவழியாக வலஞ்செய்து மணநீர் ஆடும் வழக்கம் தேவார காலத்துத் தமிழ்த் திருமண நடைமுறைகளுள் ஒன்றாக அமைந்திருந்தது. சங்க இலக்கியங்களிலோ சிலப்பதிகாரக் கால இலக்கியங்களிலோ இந் நடைமுறை குறிப்பிடப்படவில்லை. இதனை ஆண்டாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... ............................. .......... மணநீர்
அங்கவ னோடு முடன்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனக்கண்டேன் தோழிநான்

என்று குறிப்பிடுகின்றார்.

## 2:4 திருமணத்தின் பின் மணமக்கள் வாழுமிடம்

திருமணம் முடிந்தவுடன் மணமக்கள் தம்முடைய இல்லில் இருத்தலையே தாய் விரும்புகிறாள். தன்னுடைய மகள் திருமணஞ் செய்து புதிதாக வந்துள்ள ஆடவனைச் சரியாகப் பேணிப் போற்ற வல்லளோ எனவும் குடும்பத் தேரை முறையாகச் செலுத்தவல்லளோ எனவும் தாய்க்கு எப்பொழுதுமே ஐயம் உண்டு. உடன் போக்குப் போன மகள் பின்னே செவிலித்தாய் சென்ற செய்தி சங்க இலக்கியங்களிலே இடம் பெற்றதற்கு இதுவே காரணமாகலாம். இவ்வாறு சென்ற ஒரு செவிலித்தாய் தலைவி தலைவனோடு கூடி நடத்தும் இல்லறத்தைக் கண்டு பெருமகிழ்வுற்றுத் தான் கண்ட ஒரு காட்சியை நற்றாயிடம் கூறுவதாக, ''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் .. ...'' என்னும் குறுந்தொகை 167 ஆம் பாடல் அமைகின்றது. உடன் போக்கு மணமல்லாத காலத்து மணமகள் வீட்டில் அல்லது அப்பிரதேசத்தில் மணமக்கள் வாழ்வது சங்ககால வழக்கமாயிருந்தது. இவ்வழக்கம் பின்னர் மாற்றமடைந்ததைச் சிலப்பதிகாரத் திருமணம் பற்றிய பகுதியிலே குறிப்பிட்டுள்ளோம். தேவார காலத்திலே மணமக்கள் மணமகள் வீட்டிலே வாழும் வழக்கமும், மணமகன் வீட்டுக்குச் சென்று வாழும் வழக்கமும் காணப்பட்டன. பெரியாழ்வார் (III : 8 : 3),

பெருப்பெ ருத்தகண் ணாலங்கள் செய்து
பேணிநம் மில்லத்துள்ளே
இருத்துவா னெண்ணி நாமி ருக்க
இவளுமொன் றெண்ணுகின்றாள்.

என்று திருமணஞ் செய்து மணமக்களைத் தம் இல்லத்திலே இருத்துவது பற்றித் தாய் கூறுவதாகக் கூறுமிடத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலே பெரும்பான்மையாக இருந்துவந்த வழக்கம் குறிப்பிடப்படுகின்றது,

கணவனுடைய வீட்டிலே போய் மனைவியிருக்கும் வழக்கத்தினை ஆண்டாள் தன் திருப்பாவையிலே குறிப்பிடுகின்றார். கண்ணனை மணம் முடித்த நப்பின்னைப் பிராட்டி அவன் தந்தையாகிய நந்தகோபன் வீட்டிலேயே போய் இருப்பதாக ஆண்டாள் குறிப்பிடுகின்றார்.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர் அவளை யெழுப்பீரோ ...............

என்றும்,

உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நம்பின்னாய்

என்றும் நந்தகோபன் மனையிலே கண்ணனுடன் துயில் கொள்ளும் நப்பின்னை பற்றிக் கூறப்படுகின்றது.

## 2:5 திருமணச் செலவு

திருமணமென்றால் மிகவும் பணச்செலவான விடயம் என்பது இன்று நாம் எல்லோரும் அறிவோம்; உணர்ந்துள்ளோம்; அனுபவித்துள்ளோம். சங்ககாலத் திருமணங்களிலே இச்செலவு பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன. சங்ககாலத் தலைமகன் தலைவியைப் பொன்னணிந்து வரைந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. அகநானூறு 90 ஆம் பாடலிலே (9–14),

அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடிகள் இவ்வழக்கத்தினைக் கூறுகின்றன. ''அரிய வலிகொண்ட தெய்வங்களையுடைய செல்லூரின் கீழ்ப்பா லினதாய், பெரிய கடல்போலும் ஆரவாரத்தினையுடைய தாகிய, படைக்கலம் இடம்படச் செய்திட்ட வடுக்களை யுடைய முகத்தினராய, அஞ்சாமையையுடைய கோசர்கள் (வாழும்) புதுவருவாயையுடைய நியமம் என்னும் ஊரினைக் கொடுப்பினும், (இவள் தந்தைமார்) நறிய நுதலினை யுடைய அரிவையாய இவளது பசிய அணிகட்கு விலையாக அமையும் எனக் கொள்வார் அல்லர்'' என்பது இப்பாட லடிகளின் பொருளாகும். இப்பாடலடிகளிற் குறிப்பிடப் பட்டுள்ள செய்தி வேறு சங்கச் செய்யுட்களிலும் (உ-ம் : **அகநானூறு,** 280) குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, திரு மணம் என்றால் ஏதோ வகையிலே செலவு உண்டு என்னும் கருத்துச் சங்க காலத்திலேயே தொடங்கி விட்டது. வணிகப் பெருமக்களாகிய மாநாய்கனும் மாசாத்துவனும் கண்ணகி–கோவலன் திருமணத்துக்கு எவ்வளவு செலவழித் திருப்பார்களென ஊகிக்க முடிகின்றது. இவ்வழக்கம் தேவார காலத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. கையிலுள்ள பொருள் எல்லாம் அழியும்படியாகக் கண் ணலம் செய்யும் வழக்கத்தினைப் பெரியாழ்வார் (III:7:9),

> **கைத்தலத் துள்ள மாடழியக் கண்ணாலங்கள் செய்து இவளை**
> **வைத்துவைத் துக்கொண் டென்ன வாணிபம்**
> **நம்மை வடுப்படுத்தும்**
> **செய்த்தலையெழு நாற்றுப் போலவன் செய்வன**
> **செய்து கொள்ள**
> **மைத்த டமுகில் வண்ணன் பக்கல் வளர விடுமின்களே**

என்று குறிப்பிடுகின்றார்.

## 2:6 திருமண உறவுப் பெயர்கள்

திருமணத்தைக் குறிப்பதற்கு **மணம், கண்ணாலம், வதுவை, கல்யாணம், மணவணி, மணவினை, வேட்டருளல்** போன்ற சொற்கள் இக்கால கட்டத்திலே பயின்று வந் துள்ளன. **நாலடியாரில்** (9 : 6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் செய்து கடிப்புக்க

என்றும் ஆசாரக்கோவையில் (48),

கல்யாணந் தேவர் பிதிர்விழா .........

என்றும் கல்யாணம் என்னுஞ் சொல் ஆளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் மணவணி என்னுஞ் சொல்லையும் மணிமேகலை மணவினை என்னுஞ் சொல்லையும் பெரியாழ்வார் நாச்சியார் திருமொழிகள் ஏனைய சொற்களையும் ஆளுகின்றன. சுந்தரர் தேவாரத்தில் (பதி. 16:1),

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடு சென்றவர்தங் குணத்தினை நன்குணர்ந்து
விரும்புவரம் கொடுத்தருளி வேட்டருளிச் செய்த
.........................................

என்னும் பாடலடிகளில் வேட்டருளல் ஆளப்பட்டுள்ளது.

திருமணஞ் செய்துகொண்ட ஆண் மைத்துனன், மணவாளன், மணாளன் போன்ற பெயர்களாலே அழைக்கப்பட்டான்; பந்தார் விரலி உன்மைத்துனன் பேர்பாட...... என்றும், மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை... என்றும் ஆண்டாள் திருப்பாவையிலே மைத்துனன், மணாளன் என்னுஞ் சொற்களைக் கையாளுகின்றார். மையார் தடங்கண் மடந்தை மணவாளா (திருவெம்பாவை : 11) என்றும் நித்தமணாளர் நிரம்ப அழகியர் (அன்னைப்பத்து : 3) என்றும் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் மணாளர் என்னுஞ் சொல்லைப் பயன்படுத்துகிறார். கணவன் என்னுஞ் சொல்லும் பெருவழக்காகவுள்ளது. கண்+அவன் என்பதுதான் கணவன் என்னுஞ் சொல்லாயிருக்க வேண்டும். மனைவிக்குக் கண் போன்றவன் என்பது பொருள். தேவார கால இலக்கியங்களிற் பலவிடங்களில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. சுந்தரர் மலைமகள் கணவனை என்று குறிப்பிடுவதை உதாரணமாகக் காட்டலாம். திருமணஞ் செய்து வரும் ஆடவன் மணமகளின் பெற்றோருக்கு மருமகன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணஞ் செய்துகொண்ட பெண் மணாட்டி, மைத்துனி, நாயகி என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள். மணமகனின் பெற்றோருக்கு மணமகள் மருமகள் ஆகின்றாள்.

பெருமக ளாய்க்குடி வாய்ந்து பெரும்பிள்ளை
பெற்ற வசோதை
மருமக ளைக்கண் டுகந்து மணாட்டுப்
புறஞ்செய்யுங் கொல்லோ

என்று பெரியாழ்வார் பாடலிலும்,

உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நம்பின்னாய்

என்று ஆண்டாள் பாடலிலும் மருமகள் என்னும் உறவுப் பெயர் குறிப்பிடப்படுகின்றது,

## 2:7 திருமண வயது

தேவார காலத்தைச் சேர்ந்தது எனக்கருதப்படும் இறையனார் அகப்பொருள் களவு மணத்துக்குரியவர்களின் வயதினைக் கூறுகின்றது. ''இவனும் பதினாறாட்டைப் பிராயத்தனாய், இவளும் பன்னீராட்டைப் பிராயத்தளாய்...'' என்று உரைகாரர் கூறிச் செல்கிறார். திருமந்திரம் 163ஆம் பாடல்,

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலே ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே.

என்று திருமண வயது பன்னிரண்டாவது ஆண்டு எனக் குறிப்பிடுகின்றது. ''பன்னிரண்டாண்டு'' மணமகளுக்கா அல்லது மணமகனுக்கா என்னும் ஐயமேற்படுகின்றது. களவியலுரைகாரர் கூற்றுடன் ஒப்புநோக்கின் இவ்வயதெல்லை மணமகளுக்குரியதென்றே கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. காவியகாலத் திருமண நடைமுறைகள்

கி. பி. 9 ஆம் நூற்றுண்டுக்கும் கி. பி. 14 ஆம் நூற்றுண்டுக்கு மிடைப்பட்ட காலம், சுட்டுதல் வசதிக்காகக் 'காவிய காலம்' என அழைக்கப்படுகின்றது. இக்காலப் பகுதியில் எழுந்த **சிந்தாமணி, சூளாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம்,** என்னும் காவியங்களிலும் **நளவெண்பா** போன்ற சிற்றிலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள திருமணம் பற்றிய செய்திகள் இப்பகுதியிலே தொகுத்தும் வகுத்தும் கூறப்படுகின்றன.

### 3:1 திருமண வகைகள்

இக்கால இலக்கியங்கள் பல்வேறு வகையான திருமணங்களைச் சித்திரிக்கின்றன. இவற்றை **மகட்பேச்சு மணம், மகட்கொடை மணம், வீரமணம், காந்தருவமணம், சுயம்வர மணம்** எனப் பாகுபாடு செய்யலாம். இவற்றுள் முதல் மூன்று வகைகளும் பண்டைக்காலந் தொடக்கம் தமிழகத்திலே நிலவிவந்துள்ளன. காந்தருவ மணமும் சுயம்வர மணமும் வடநாட்டுக்கே சிறப்பானவைகளாகும்.

### 3:1.1. மகட்பேச்சுத் திருமணம்

**பெரியபுராணம்** ஒன்றே இவ்வகைத் திருமணம் பற்றி விவரமான விளக்கங்களை வழங்கியுள்ளது. தடுத்தாட்கொண்ட புராணம், திருநாவுக்கரசு நாயனர் புராணம், காரைக்காலம்மையார் புராணம், மானக்கஞ்சாறநாயனர் புராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் ஆகிய பகுதிகளிலே இத்திருமணம் பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. மகட்பேச்சுத் திருமணத்தின் முதன்மை நிகழ்ச்சி பெரியவர்கள் திருமணம் நடத்துவதற்கு முடிவு செய்தலாகும். திருஞானசம்பந்தருக்கு "திருமணஞ் செய்தருளுதற்குப் பருவமிது" எனச் சுற்றத்தவர்கள் எண்ணுகிறார்கள். நாட்டிலேயுள்ள வேதமுறைப்படி ஞானபோனகராகிய சம்பந்தருக்குத் திருமணங் கூட்டுவதும், அதன்படி "கோதில்மறை நெறிச்சடங்கு காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை வேட்டருள வேண்டும்" என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதும் அவர்களுடைய முடிவாயமைந்தது. அம்முடிவினை மணமகனுகிய சம்பந்தருக்கு உணர்த்தி அவருடைய முடிவு பெறப்படுகின்றது. மணமகனின் முடிவினைப் பெற்ற சுற்றத்தவர் ''ஏதமில்சீர் மறையவரில் ஏற்றகுலத்தோ டிசைவால் நாதர்திருப் பெருமணத்து நம்பி பெறுங் காதலியை'' மகட்பேச எண்ணுகின்றனர். மகட்பேச்சுத் திருமணத்திலே மணமக்களைத் தேர்ந்தெடுக்கும்போது குலம், கோத்திரம் ஆகியனவற்றைப் பார்க்கும் வழக்கம் தமிழ் நாட்டிலே நன்கு வலுப்பெற்றுவிட்டது. அந்தணர்குல மணமகனுகிய சம்பந்தருக்கு மறைக்குலத்திலேயே மகட்பேசுவது போல, வணிகர்குல மகனுகிய பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் நடந்த திருமணத்திலே மகட்பேச்சுத் தொடங்குவதற்கு முன்,

> இல்லிகவாப் பருவத்தில் இவர்கள்மர பினுக்கேற்கும்
> தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்

என்று குலமரபாராயும் போக்கினைக் காரைக்காலம்மையார் புராணத்திலே சேக்கிழார் குறிப்பிடுகின்ருர்.

இவ்வாறு குலம் கோத்திரங்களை ஆராய்ந்த பின்னர், மணமகன் வீட்டார் மகட்பேசி மணமகள் வீட்டுக்கு ஆட்களை அனுப்புவது வழக்கம். இதுவே இன்றுவரை நிலவிவரும் வழக்கமாகவும் உள்ளது. புனிதவதியாரை மகட்பேசி வந்த நிகழ்ச்சியினைச் சேக்கிழார்,

> நீடியசீர்க் கடல்நாகை நிதிபதிஎன் றுலகின்கண்
> பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்கு
> தேடவருந் திருமரபில் சேயிழையை மகட்பேச
> மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார்

வந்தவர்கள் புனிதவதியார் வீட்டுக்குச் சென்று அவர் தந்தை தனதத்தனிடம் ''நீபயந்த பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு முந்தை மரபினுக்கேற்கும் முறைமை மணம்புரி'' என்று கேட்கிருர்கள். மணமகளின் தந்தை அதற்கு இணங்க அச்செய்தி மணமகனின் தந்தைக்குக் கூறப்படுகின்றது. சம்பந்தருக்குத் திருமணப் பெண் பேசுதற்குச் சென்றவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானபோ னகருக்கு நற்றவத்தின் ஒழுக்கத்தால்
ஊனமில்சீ லத்து உம்பால் மகட்பேச வந்தது

எனக் கூறுகின்றனர். அதற்கு மணமகளின் தந்தை நம் பாண்டார் நம்பி,

உம்முடைய பெருந்தவத்தால் உலகனைத்தும் ஈன்றளித்த
அம்மைதிரு முலைப்பாலிற் குழைத்தஆ ரமுதுண்டார்க்கு
எம்முடைய குலக்கொழுந்தை யாம் உய்யத் தருகின்றோம்.

என்று தன்னுடைய இசைவினைத் தெரிவிக்கின்றார்.

குலம், கோத்திரம் முதலியவற்றை ஆராய்ந்த பின்னரே மகட் பேச அனுப்பும் வழக்கத்தினைச் சம்பந்தர் திருமணமும் புனிதவதியார் திருமணமும் கூறுகின்றன. ஆனால், அப்பருடைய சகோதரி திலகவதியாருடைய திருமணத்திலோ கலிப்பகையார் பொருட்டு மகட்பேசுவதற்கு மேலோரைச் செலவிடுகின்றனர். அவர்கள் மணமகள் வீட்டுக்குச் சென்ற பின்னரே குலம் கோத்திரம் ஆராயப்படுவதாகச் சேக்கிழார் கூறுகின்றார்.

அணங்கனைய திலகவதி யார்தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்
குணம் பேசிக் குலம் பேசிக் கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொ ளரவல்குல் பைத்தொடியை மணம் நேர்ந்தார்

என்பது சேக்கிழாருடைய பாடல்.

மகட்பேசி வந்தவர் மணமகளின் தந்தையின் இசைவினைக் கேட்டுச் சென்ற பின்னர், மணமகளின் தந்தையும் சுற்றத்தவருமே திருமண நாட்பார்த்து மணமகன் வீட்டாருக்கு ஓலை அனுப்புதல் வேண்டும். இவ்வோலை திருமண நாளோலை எனப்பட்டது. புனிதவதியாரின் தந்தை ''மணமிசைந்த நாளோலை செலவிட்டு'' திருமணக் காரியங்களிலே ஈடுபடத் தொடங்கினர். ஆனால், சம்பந்தருடைய திருமணத்தில் மணமகன் வீட்டாரே திருமண நாளோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவதாகக் கூறப்பட்டுள்ளது. அவர்களே முகூர்த்த நாளை நிச்சயித்துத் திருமணநாளோலை மணமகள் வீட்டாருக்கு அனுப்பியதை,

திருமணஞ்செய் கலியாணத் திருநாளும் திகழ்சிறப்பின்
மருவிய ஓரையும்கணித மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன் போக்கி
அருள்புரிந்த நன்னாளில் அணிமுளைப்பா லிகைவிதைத்தார்

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

திருமண நாளோலை அனுப்பப்படும் அந்த நன்னாளிலேயே சுபகருமங்களுக்காக முளையிடும் பாத்திரமாகிய பாலிகையிலே தானியங்களை விதைத்துவிடுவர். இதனை முளைப்பாலிகை விதைத்தல் என அழைப்பர். இதுபற்றித் தடுத்தாட் கொண்ட புராணத்தில்,

மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்துகொண்டார்

என்றும்,

மகிழ்ச்சியால் மணமீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலராகி
இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தினார்கள்

என்றும் குறிப்பிடப்படுகின்றது. திருஞானசம்பந்தர் புராணத்தில், ''அருள் புரிந்த நன்னாளில் அணிமுளைப்பா லிகை விதைத்தார்'' என்று கூறப்பட்டதை மேலே குறிப்பிட்டுள்ளோம். இந்த நடைமுறையுடன் மகட்பேச்சுத் திருமணத்தின் ஆரம்பக்கட்டம் முடிவுபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3:1.2. மகட்கொடை மணம்

மகட்பேச்சுத் திருமணத்துக்கும் மகட்கொடைத் திருமணத்துக்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உண்டு. ஒரேயொரு வேற்றுமைதான் காணப்பட்டது. மகட்பேச்சுத் திருமணத்திலே பெற்றோர்கள் அல்லது பெரியவர்கள் திருமணம் நடத்துவதுபற்றி முதலிலே தீர்மானிப்பர். அதன் பின்னரே மணமகன் வீட்டார் மணமகள் வீட்டுக்குச் சென்று மகட் பேசுவர். ஆனால் மகட்கொடைத் திருமணத்திலோ மண மகள் சார்பாக மணமகன் வீட்டுக்குத் திருமணம் பேசிச் செல்வர். மகட்கொடைத் திருமணத்துக்கு நல்ல உதா ரணம் சீவகனுக்கும் குணமாலையாருக்கும் நடைபெற்ற திருமணமாகும். சீவகசிந்தாமணி குணமாலையார் இலம் பகம் இம் மணம்பற்றிய செய்திகளைத் தருகின்றது.

குணமாலையாரை ஒரு யானை தாக்க வந்தபோது, சீவகன் அந்த யானையை எதிர்த்துப் போராடி அவளைக் காப்பாற்றுகிறான். அவ்வாறு தன்னைக் காப்பாற்றிய சீவகன்மேல் குணமாலையாருக்குக் காதல் உண்டாகின்றது. அக்காதலை அவள் செவிலிக்கு உணர்த்த, செவிலி நற் றாய்க்குக் கூற, நற்றாய் தந்தையிடம் சொல்கிறாள். பெற் றோர்கள் அத் திருமணத்துக்கு இசைகின்றார்கள். மணமகள் வீட்டார் மகட்கொடையளிப்பதற்காக மணமகன் வீட் டுக்குச் செல்கின்றனர். குணமாலையாரின் தந்தை குபேர மித்திரன் அனுப்பிய சான்றோர் சீவகனுடைய தந்தையிடம்,

> யாமகளீது நீர்மகட் கொண்மி னெனயாருந்
> தாமகணோரா ராயினுந் தண்ணென் வரைமார்பிற்
> பூமகள்வைகும் புண்ணியப் பொற்குன் றனையானுக்கு
> யாமகணேர்ந்தே மின்று...... ...............

என்று கூறுகின்றார்கள். ''யாம் எம் மகளைத் தருகிறோம்; நீர் அவளைக் கொண்மின் என எவரும் தம் மகளைக் கொடுக்க இசையார் என்றாலும், (புதுமுறையாக) குளிர்ந்த மலையனைய மார்பிலே திருமகள் தங்கும் நலம் நிறைந்த பொன்மலை போன்ற சீவகனுக்கு, இன்று யாம் மகட் கொடை விரும்பினேம்'' என்று பாடலுக்குப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மகட்கொடை நேர்ந்து சென்றவர்களுக்குச் சீவகனுடைய தந்தையும் தாயும் தம்முடைய சம்மதத்தைத் தெரிவிக்கின்றனர். அன்றே நாளுங் குறித்துத் திருமணமும் நிச்சயம் ஆகிவிடுகின்றது. தன்னுயிரைக் காப்பாற்றியவனுக்கே தான் வாழ்க்கைப்பட வேண்டுமென்ற கோட்பாடு பழந்தமிழரிடையேயும் இருந்தது. இதனை ''உற்ருர்க்குரியர் பொற்ருெடி மகளிர்'' என்று அவர்கள் பேணி வந்தனர்.

குணமாலையாரைப் போன்றே பதுமையாரும் சீவகனலே காப்பாற்றப்படுகிருள். அவ்வாறு காப்பாற்றப்பட்ட அவள்,

பொன்றிய வுயிரை மீட்டான்
பூஞ்சிகை போது வேய்ந்தா
னன்றியு மாமெய் தீண்டி
யளித்தன னழகின் மிக்கா[1]
ஞென்றிய மகளிர் தாமே
யுற்றவர்க் குரிய ரென்ஞு
வென்றிகொள் வேலி ஞற்கே
பான்மையும் விளைந்த தன்றே

என்று தன் காதன்மையைப் பெற்ருேர்க்குக் கூறிவிடுகின்ருள். அதன்படி கோப்பெருந்தேவியும் கோமகனும் அவள் கூறியவற்றை ஆராய்ந்து உணர்ந்து, ''யாப்புடைத்து ஐயற்கின்றே நங்கையை அமைக்க'' என்று முடிவுசெய்கின்றனர்.

### 3:1.3. வீரமணம்

பண்டைத் தமிழரிடையே காணப்பட்ட இம்மணமுறை தொடர்ந்து இக்காலத்தும் வழக்கிலுள்ளதாகச் சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், கந்தபுராணம் ஆகிய காவியங்கள் கூறுகின்றன. சீவகசிந்தாமணி கோவிந்தையார் இலம்பகத்திலே வீரமணம் சித்திரிக்கப்படுகின்றது. ஆயர் தலைவனுகிய நந்தகோன், மன்னனுடைய ஆநிரைகளை மீட்டுவருபவர்க்குத் தன் மகள் கோவிந்தையைத் தருவதாகப் பறைசாற்றுகிருன். மன்னனுடைய படைகளே ஆநிரை கவர்ந்த வேடர்களிடம் தோற்றுவிட்டன. இந்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருமே இவ் வீரச் செயலுக்கு உடன்படாராயினர். இதையறிந்த சீவகன் தன் தோழன் பதுமுகனுடன் சென்று வேடரை எதிர்த்துப் போரிட்டு ஆநிரையை மீட்டான். அவ்வாறு ஆநிரையை மீட்டுவந்த சீவகனின் வீரத்துக்குப் பரிசாகத் தன் மகள் கோவிந்தையை அளிக்க முன்வருகிறான் நந்தகோன். அவன்

பாடகஞ் சுமந்த செம்பொற் சிறடிப் பரவை யல்குற்
சூடக மணிந்த முன்கைச் சுடர்மணிப் பூணி னாளை
யாடகச் செம்பொற் பாவை யேழுடன் தருவ லைய
வாடலில் வதுவை கூடி மணமக னாகை என்றான்

''பாடகம் அணிந்த செம்பொன் போன்ற சிற்றடியையும், பரவிய அல்குலையும், வளையல் அணிந்த முன்கையினையும்; ஒளிவிடும் மணியையுடைய கோவிந்தையை, ஆடகப் பொன்னாலாய பதுமைகள் ஏழுடன் தருவேன்; குறைவற்ற திருமணம் புரிந்துகொண்டு மணமகன் ஆவாயாக'' என்று சீவகனை வேண்டினான்.

வில்லினை முறித்துச் சீதையை இராமன் வீரமணம் வேட்ட கதை வால்மீகத்திற் கூறப்பட்டுள்ளது. கம்பன் அம் மணமுறையையே கூறினும் அதற்கு முதல் மணமக்களைச் சந்திக்க வைத்துவிடுகிறான். எனினும், வில் முறித்து வீரத்தை நிலைநாட்டிய பின்னரே இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடைபெறுகின்றது.

இந்திரன் தம் பகைவனாகிய சூரபன்மனை வென்று வெற்றிவாகை சூடிய முருகக் கடவுளுக்குத் தெய்வயானையைத் திருமணமாகக் கொடுத்தது பற்றிக் கந்தபுராணம் கூறுகின்றது. முருகக் கடவுளுக்கும் தேவகுஞ்சரிக்கும் நடைபெற்ற மணத்தினை வீரமணமெனக் கொள்ளலாம். முருகப் பெருமானிடம் சென்ற இந்திரன் ''எம்பெருமானே, தேவரீர் அசுரர்களாகிய களைகளைக் களைந்து இந்தத் தேவர்களுடைய சிறையை மீட்டுத் தமியேனுக்குப் பழைய சுவர்க்கவுலக பாக்கியத்தைத் தந்தருளினீர். இவைகளெல்லாவற்றையும் சிந்தித்துத் தேவரீருக்குச் செய்நன்றியாகச் சிறியேன் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் தக்கது யாதாயினுமொன்றுண்டோ! ஆயினும் தமியேனுடைய மகளாகிய தெய்வயானை இத்திருப்பரங் குன்றத்தில் வந்திருக்கிறாள். அவளைத் தேவரீர் யாங்கள் உய்ந்து இப்பிறவியினாலடையும் பயனைப் பெற்றுச் சிறந்தோங்கத் திருமணஞ் செய்தருளல் வேண்டும்'' என்று விண்ணப்பிக்க ஆறுமுகக் கடவுளும் அதற்கு உடன்படுகிறார். அதன் பின்னரே ஏனைய திருமண நடைமுறைகள் நடைபெறுகின்றன.

### 3:1.4. காந்தருவ மணம்

**சீவகசிந்தாமணி** காந்தருவதத்தையார் இலம்பகமும், **சூளாமணி** கல்யாணச் சருக்கமும் காந்தருவ மணம் பற்றிக் கூறுகின்றன. காந்தருவம் என்பது இருவர் ஒத்தார் தாமே கூடுங் கூட்டம்; இதனை யாழோர் கூட்டம் என்றுங் கூறுவர். காந்தருவதத்தைக்கும் சீவகனுக்கும் நடந்த மணம் யாழோர் கூட்டமாகும். காந்தருவதத்தைக்கு இணையாக யாழ் வாசிப்பவர் அவளைப் பெறுவர் என்று அறிவிக்கப்பட்டது. ''அரசர் முதலாக மூவகைக் குலத்தில் உள்ளவர் யாவரினும்; இனிய இசையை எழுப்பும் நரம்புகளையுடைய மகர யாழிலே தெளிந்த இசையை எழுப்பித் தெளிவித்தலில் பூவளையல் அணிந்த தத்தையினும் அறிவிற் சிறந்துள்ள ஒரு நம்பிக்கு அரசர்களை வருத்தும் இரத்தம் தோய்ந்த வேலனைய கண்ணும் விளக்கமான அணியுடையாளும் ஆகிய தத்தையின் தந்தை அளிப்பான்'' என்று முரசறையப்பட்டது. யாழ்ப்போரிலே சீவகன் வென்றான். தோற்ற பிற மன்னர்கள் அவனுடன் வாட்போர் புரிகின்றனர். வாட்போரிலே அவர்களை வென்று ''வார்முக முலையினாளை மனைவயிற் கொண்டு புக்கான்.'' இதன் பின்னர் தத்தைக்கும் சீவகனுக்கும் திருமணம் நடைபெறுகின்றது.

### 3:1.5. சுயம்வர மணம்

**நளவெண்பா** ஒன்றே இம்மண வகையினைக் கூறுகின்றது. தமயந்தி தான் விரும்பிய ஒருவனுக்கு மாலையிடுவாளெனவும், அதற்காகப் பல தேச மன்னர்களும் சுயம்வர மண்டபத்துக்கு எழுந்தருளலாம் என்றும் அறிவிக்கப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. மன்னர் விழிகளாகிய தாமரைகள் பூத்த அந்தச் சுயம்வர மண்டபத்திலே பொன்னின் மடப்பாவையாகிய தமயந்தி போய்ப் பல தேச மன்னர்களுடைய விருதுக ளெல்லாவற்றையும் கேட்டறிந்தபோதும், அவள் மனத்துக் குகந்தவனாகிய நளனுக்கே மாலையிடுகிறாள். இத்தகைய மணம் பண்டைத் தமிழகத்தில் இருந்ததில்லை. இது ஆரிய மணமுறைகளுள் ஒன்றாகும்.

### 3:1.6. முறை மணம்

முறை மாமன் மக்கள் தம்மிடையே திருமணம் புரிந்து கொள்ளும் வழக்கமும் இக்காலத்திலே காணப்பட்டது. சிவகசிந்தாமணி குணமாலையார் இலம்பகத்திலே இவ்வழக்கம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. குணமாலையினுடைய காதல் பற்றி அறிதற்கு அவளுடைய செவிலி,

... ............................................ நின்
னவ்வைக்கு மூத்த மாம னொருமகற் கின்றுன் றாதை
நவ்வியம் பிணைகொ ளோக்கி நகைமுக விருந்து செய்தான்

என்றும்

மைத்துனன் வனப்பின் மிக்கான்
வளர்நிதிக் கிழவன் காளை

என்றும் ஒரு கதை கூறுகிறாள். அதாவது "நின் அன்னைக்கு முன் பிறந்தவனும் நினக்கு மாமனும் ஆவானுடைய ஒப்பிலாத மகனுக்கு இன்று உன் தந்தை நகைமுகமாகிய விருந்தை இடுவதன்மூலம் நின்னைக் கொடுப்பதாக உடன் பட்டான்" என்று கூறுகின்றாள். இதைக் கேட்ட குண மாலை தான் சீவகன்மேல் கொண்ட காதலை வெளியிடுகிறாள். இப்பகுதி முறை மாமன் மகனை மணம்புரியும் வழக்கம் இருந்ததற்கு ஆதாரமாக அமைகின்றது. அத்துடன் முறை மாமன் தன் மருமகனை அழைத்து விருந்து கொடுத்தால், அது தன்னுடைய மகளை அவனுக்குக் கொடுக்க உடன் பாடாகக் கொள்ளப்படும் என்னுஞ் செய்தியினையும் இதன் மூலம் அறிகிறோம். இவ்வழக்கம் இன்றும் சிற்சில இடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே பின்பற்றப்படுவதைக் காணலாம். இம் மணமுறையிலே மகட்பேசுதலுக்குப் பதிலாக விருந்துகொடுத்தல் மூலமாகத் திருமணம் நிச்சயப்படுத்தப்படுகின்றது.

## 3:2 பொதுவான திருமண நடைமுறைகள்

காவிய கால இலக்கியங்களிலே பல பொதுவான திருமண நடைமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை, அவை நடைபெறும் ஒழுங்கில் இப்பகுதியிலே விவரிக்கின்றோம். சில குடிகள் குலங்கள் ஆகியவற்றினுட் சிறப்பான நடைமுறைகள் இடம்பெற்று வந்துள்ளமையையும் இக்கால இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அச்சிறப்பான திருமண நடைமுறைகள் அடுத்து விவரிக்கப்படும்.

### 3:2.1. அலங்காரம்

மகட்பேச்சு முடிந்து, மங்கலநாள் குறித்துத் திருமண நாளோலை போக்கிய அன்று முளைப்பாலிகை விதைத்தல் பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். இவ்வாறு புனிதமுளை விதைத்தவுடனே மணவினைக்குரிய பந்தர் அலங்காரமும் தொடங்கிவிடுகின்றது. நிறைகுடம், விளக்கு, மகரதோரணம் ஆகிய மூன்றும் தமிழ் நாட்டின் மங்கல நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையன. திருமண அலங்காரங்களில் இவை உபயோகிக்கப்பட்டமை பற்றிச் சிலப்பதிகார, தேவார கால இலக்கியங்கள் கூறுகின்றன. சம்பந்தருடைய திருமணந் தொடர்பாக, வீதி அலங்காரம் பற்றிச் சேக்கிழார் கூறுமிடத்து,

> செல்வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகளெல்லாம்
> மல்குநிறை குடம்விளக்கு மகரதோ ரணம்நிரைத்தே
> எல்லையிலா ஒளிமுத்து மாலைகள்எங் கணுநாற்றி
> அல்குபெருந் திருஓங்க அணிசிறக்க அலங்கரித்தார்

என்று கூறுவர். மணமகளின் வீட்டிலேயே மணப்பந்தர் அமைப்பது வழக்கம். அதன்படி சம்பந்தருக்குத் தன் மகளைக் கொடுக்க இசைந்த திருநல்லூர் நம்பாண்டார் நம்பி திருமணத்துக்கு வேண்டிய அலங்காரங்களைச் செய்யலானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளெல்லாம் தோரணங்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டன. மன்றல் வினைத் திருமுளை விதைத்த நாள் தொடக்கம் வீதிகளிலும் வீட்டு வாயில்களிலும் முற்றங்களிலும் நாள்தோறும் நிறைகுடங்கள் வைக்கப்பட்டன; மணிவிளக்குகள் ஏற்றப்பட்டன; தூபங்கள் பல இடப்பட்டன.

திருமண அலங்காரம் நடைபெற்றுக் கொண்டிக்கும் போதே, மணமகள் வீட்டுக்கும் மணமகன் வீட்டுக்கும் உறவினர் சென்று வருவதும் வழக்கம். திருப்புகலியில் மணமகனாகிய சம்பந்தர் வீட்டுக்குத் திருமண நாளைக் கேட்டுப் பலரும் நாள்தோறும் வருவதைச் சேக்கிழார்,

எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்கள் ஏனையோர்
மங்கலநீள் மணவினைநாள் கேட்டுமிக மகிழ்வெய்தி
பொங்குதிருப் புகலிதனில் நாடோறும் புகுந்திண்ட
அங்கண்அணைந் தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிக
அளித்தார்.

என்று கூறுகின்றார்.

மணவினை நடைபெறும் இடத்தினை மணவறை, வேள்வி மன்று, வேள்வி நகர், திருமண மண்டபம், மணப்பந்தர் போன்ற சொற்களால் அழைத்தனர். சீவகசிந்தாமணியில் சீவகனுக்கும் தத்தைக்கும் நடைபெற்ற திருமணத்துக்கு அமைக்கப்பட்ட மணவறை பற்றித் திருத்தக்கதேவர் பின்வருமாறு வர்ணிக்கிறார்: ''சுற்றுச்சுவர் பவளப் பலகையால் நிறைத்து, அரிய பொன்னால் கையலகு சேர்த்து, முடியிலே மணியை அழுத்தி நாட்டிய பெரிய தூண்களின் நெற்றி மறையுமாறு கம்பலமாகிய மேற்கட்டியைக் கட்டி, மணமிகும் மலர்மாலைகளைத் தூக்கி, இடுகின்ற அகிற்புகை முகிலெனச் சூழுமாறு திருமண அறையை அமைத்திருந்தனர்.'' சூளாமணி கலியாணச் சருக்கத்தில் வேள்வி மன்றின் விவரங்கள் தரப்படுகின்றன. வேள்வி மன்றிலே மிக்க புரிநூல் பூண்ட தீயோம்பாளர்கள் தாமரை மலர் வடிவிற்றாக இயற்றிப் பொருந்திய மணமங்கல வினைக்கியன்ற உழைக்கலம் பிறவும் நிரலாக வைக்கப்பட்ட மண மன்றாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்கட் சென்று, அவ்விடத்தே வேள்வித் தீயை வளர்ப்ப தற்கு அமைத்தனர். நான்கு மறைகளிலும் வல்லவனாகிய வேள்வி ஆசான் நறுமணச் சாந்தால் நன்குமெழுகப்பட்டு மணிகள் பதிக்கப்பட்ட தரையிலே பொன்னாலான கோலினது கூர் நுனியாலே கோடுகள் வரைந்து அவ்விடத்தை மீண்டும் மணப்பொருள் கூட்டிய சாந்தாலே மெழுகுவித்தான். பின்னர் மணலைப் பரப்பி, அம்மணற்பரப்பைச் சதுர வடிவிற்றாகச் செய்தமைத்து, அம்மணல்திடரிலே தருப்பைப் புல்லின் நுனிப்பகுதிகள் வடதிசைக் கண்ணும் கீழ்த்திசைக் கண்ணும் கிடப்பப் பரப்பினான். இவ்வாறு வேள்வி மன்று அமைக்கப்படும்போது மங்கலச் சங்கு அவ்வப் போது முழங்கப்பட்டது.

இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடைபெற்ற மண்டபத்தின் அலங்காரத்தைக் கம்பன் புனைந்துரைக்கிறான். பொன், மணி முதலியவற்றினால் ''நிரைவளை மணவினை நிரப்பு மண்டபம்'' அமைக்கப்பட்டது. அம்மணமண்டபம் ''பொன்மலை ஒத்தது'' எனவும், ''அயன் முதல் திருத்திய அண்டம் ஒத்தது'' எனவும், ''வையமும் வானும் வாய் மடுத்து உண்டவன் மணி அணி உதரம் ஒத்ததே'' எனவும் கம்பர் கூறுகின்றார்.

### 3:2.2. காப்பு நாண் அணிதல்

வேதியர் மண முறைகளிலே காப்பு நாண் அணிதல் ஒரு முக்கிய வழக்கமாகும். சம்பந்தருடைய திருமணத்தின் போது அவருக்குக் காப்பு நாண் அணிந்த வரலாற்றினைச் சேக்கிழார் விவரமாகக் கூறுகின்றார். திருமணத்துக்கு முதல் நாளன்று காப்பு நாண் அணியும் சடங்கு நடைபெறுகின்றது. வேதியர் கூட்டமும் நீறுசேர் திருத்தொண்டரும் மணமகனாகிய சம்பந்தருக்கு அணியவிருந்த இறையருள்சேர் காப்பு நாணினை நகர்வலஞ் செய்தனர். நகர் வலம் கொண்டு சென்ற காப்பினை, நாதமங்கலம் முழங்க. நற்றவ முனிவர் வேத கீதம் விம்மிட சம்பந்தருடைய கையிலே சாத்துகின்றனர். அவ்வாறு காப்புநாண் அணிவிக்கும்போது மணமகன் முன்னர், செம்பொன்னாலான பரிகலத்திலே செந்நெல் பரப்பி மாலைகளாலே பக்கங்கள் அலங்கரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட வாசநீர்ப் பொற்குடம், அரசிலை, தருப்பை, நீள் சுடர் மணிவிளக்கு ஆகியன பரப்பப்பட்டிருக்கும். சம்பந்தரைத் திருமணஞ் செய்யவிருக்கும் மணமகளும் காப்புநாண் அணிவிக்கப்படுகிருள். இதனைச் சேக்கிழார்,

முற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார் செங்கை பற்ற
நற்பெருந் தவத்தின் நீர்மை நலம்படைத் தெழுந்த தெய்வக்
கற்பகப் பூங்கொம் பன்னுர் தன்மையுங் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னர்ப் புரிவுடன் செய்த வேலை

என்று விவரிக்கின்ருர்.

சுந்தரர்க்குக் காப்பு நாண் கட்டிய விவரத்தினைத் தடுத்தாட்கொண்ட புராணத்திலே சேக்கிழார் விவரிக்கின்ருர். இவருக்கும் திருமணத்துக்கு முதல் நாளன்று சொல்லப்பட்ட விதிகளுக்கமைய பணைமுரசு இயம்பவும் வாழ்த்து ஒலிப்பவும் ''பைம் பொன் நாண் காப்புச் சேர்த்தார்.''

**சிவகசிந்தாமணி**யிலும் பதுமையார் திருமணத்துக்கு முன்னர் காப்புக் கட்டியது பற்றித் திருத்தக்கதேவர் கூறுகின்ருர். சோதிடர்கள் ஆராய்ந்து கூறிய நல்ல நாளிலே, நன்றென்று கருதிய கோயிலிலே மணிபுனைந்த மகளிராகிய நல்லார் மங்கல வாழ்த்துக் கூறி, பதுமையாருடைய அழகிய முன்கையிலே, இருவர்க்கும் உறுதியுறும் காப்பினை அணிந்து சுற்றிநின்று அவளைக் காத்தார்களாம்.

காப்புநாண் அணிந்த பின்னர் மணமகனே மணமகளோ வெளியே செல்லுதல் அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வழக்கத்தினை உணர்த்தவே திருத்தக்கதேவர் ''துணிவுடைக் காப்புக் கட்டிச் சுற்றுபு தொழுது காத்தார்'' என்று கூறுகின்ருர். ''சுற்றுபு தொழுது காத்தார்'' என்னுந் தொடருக்கு உரை கூறியவர்கள் ''சுற்றித் தொழுது புறப்படாமற் காத்தார்'' என்று இவ்வழக்கத்தினை உணர்த்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3:2.3. மணநீராடல்

மணநீராட்டும் வழக்கம் தொன்றுதொட்டு வந்த தமிழர் திருமண நடைமுறையாகும். சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகார காலத்தும், தேவார காலத்தும் இந்நடைமுறை பின்பற்றப்பட்டு வந்ததுபற்றி முன்னர்க் குறிப்பிடப்பட்டது. இக்கால இலக்கியங்கள் இந்நடைமுறைபற்றிக் கூறியவற்றை இங்கு தொகுத்துத் தருகின்றோம். திருமண நாளன்றே மணநீர் ஆடும் சடங்கு நடைபெறுகின்றது. மணக்கோலம் கொள்வதன் முன்னர் மணமகளும் மணமகனும் தத்தம் இருப்பிடங்களிலே மணநீர் ஆடுவர். பதுமையாரை மணம் புரியவிருந்த சீவகன் மணநீர் ஆடியது பற்றித் திருத்தக்க தேவர், ''தூய மாணிக்கப் பாவை போன்றவர் மழகளிற்றின் பிடரிலே கொணர்ந்த மணிக்குடத்திலிருக்கும் குளிக்கும் நீரினால் சீவகனைக் குளிப்பாட்டி அவ்விடத்தே திருமணத்திற்குப் பொருந்திய ஒப்பனையை நன்கு மதிக்கும்படி விளங்க ஒப்பித்தனர்'' என்று வர்ணிக்கின்றார். மங்கல நீராடற்குரிய கடவுள் நீராகையால் ''மண்ணுநீர்'' என்று கூறினார்.

திவிட்ட நம்பியின் மங்கல நீராடல் பற்றிச் சூளாமணி ஆசிரியர் கூறும்பொழுது, ''அழகிய கண்களையுடைய யானைகளிரண்டு ஒரு சேர எடுத்த, மணிகள் பதிக்கப்பட்ட குடங்களின் நிறைந்த கடவுட்டன்மையுடைய நீரைப் பொழியா நிற்ப மங்கல நீராடுதலைச் செய்து'' என்று கூறிச் செல்கிறார். திவிட்ட நம்பி மணம்புரியவிருக்கும் சுயம்பிரபை மங்கல நீராடியது பற்றிக் கூறும் ஆசிரியர் கங்கை முதலிய கடவுட் புனல்களை முகந்துகொண்டு அழகிய விஞ்சையர்களே சுயம்பிரபையின் மணமங்கல நீராட்டுக்காக வந்திறங்கினராம். கங்கை முதலிய புனித ஆறுகளிலும், இமயம் முதலிய புனித மலைகளிலே வீழும் அருவிகளிலும் பெற்ற நீராலும், இளஞ் சோலைகளிலே பெற்ற பூக்களாலும், சாந்துகளாலும் அவள் மங்கல நீராட்டப் பெற்றாள் என்று ஆசிரியர் கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
4307

இராமனுடைய மங்கல நீராடலைக் கம்பன்,

சங்குஇனம் தவழ்கடல் ஏழில் தந்தவும்
சிங்கல்இல் அருமறை தெரிந்த தீர்த்தமும்
கங்கையே முதலிய கலந்த நீரினல்
மங்கல மஞ்சனம் மரபின் ஆடியே

என்று வர்ணிக்கின்ருர். தடுத்தாட்கொண்ட புராணத்திலே சேக்கிழார், சுந்தரர் ''மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை'' புகுந்ததைக் கூறி,

வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கினர்கள்.

என்று அவர் திருமண மஞ்சன நீராடல் பற்றிக் கூறிப் போந்தார். சம்பந்தரோ மணக்கோலம் பூணுவதற்காக ''பூதநாயகர்தங் கோயில் புறத்தொரு மடத்திற்'' புகுந்து ''பொற்குடம் நிறைந்த வாசப் புனித மஞ்சன'' நீராடல் புரிகின்ருர்.

மங்கல நீராடும் நடைமுறையிலே, குறிப்பிட்ட மக்கட் குழுவுக்கேற்பச் சில புதுமையான செயல்களும் இடம் பெற்றன. கோவிந்தை ஆயர்குழுவினைச் சேர்ந்தவள். அவளுக்கு நடைபெற்ற மங்கல நீராட்டு இடையர் குலத்துக் கேற்ற வகையிலே அமைந்தது. இதனைத் திருத்தக்கதேவர், ''குழுமிய இடைச்சியர் நாழியில் உள்ள நெய்யிழுதை, இளமையான பசுவின் கன்று தின்று கழித்த புல்லிலே தோய்த்து, நீண்ட கரிய கூந்தலையுடைய கோவிந்தையை ஊழிகளெல்லாம் பசுவையும் தொழுவையும் போன்று ஒன்று பட்டு நீயும் நின் கணவனும் ஒருங்கே மூப்புற்று வாழ்வீராக என்று அவள் தலையிலே அந்த நெய்யை வார்த்து வாழ்த்தி அகப்பையாலே நீரைச் சொரிந்து ஆட்டினர்'' என்று விவரிக்கின்ருர். ஏனைய மங்கல நீராட்டு வர்ணனைகளிலே இடம்பெருத சில அம்சங்கள் இங்கே இடம்பெறுவதைக் காணக் கூடியதாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3:2.4. நகர்வலம் வரல்

மணமகன் நகர்வலம் வந்து திருமணப்பந்தலுக்கு செல்லுவது வழக்கம். ஊரறிய உலகறியத் திருமணஞ் செய்து கொள்வதற்கு இதுவும் ஒரு சான்ருக அமைந்து விடுகின்றது. உள்ளறிந்ததன்றி மற்றிவ்வூரறிந்ததில்லையே என அமைந்த பண்டைத் தமிழ்க் காதல் மணமும் பின்னர் ஊரறிய உலகறியச் செய்தலே சிறப்பானது எனக்கொள்ளப் பட்டது. மணமகன் நகர்வலம் வரும் நடைமுறை பற்றிய செய்தி முதலில் தேவாரகாலத்திலேயே கிடைக்கின்றது, ''வாரண மாயிரம் ...'' என்னும் ஆண்டாள் பாடல் இது பற்றிக் கூறுகின்றது. மணமகனும் மணமகளும் இருவேறு ஊர்களைச் சேர்ந்தவர்களென்ருல், மண நாளன்று மணமகன் தன் உற்ருர் உறவினர் ஊரவர் சூழ மணமகளின் ஊருக்கு எழுந்தருள வேண்டும். அப்பொழுது ஊர் எல்லையிலே யிருந்து மணமகனையும் சுற்றத்தினரையும் மணமகளின் சுற்றத்தார் சிலர் நின்று வரவேற்று அழைத்து வருவது வழக்கமாக இருந்திருக்க வேண்டும். தங்கள் ஊருக்குப் பெண்கொள்ள வரும் மண மகனுக்குச் சிறப்புச் செய்வதற் காக மணமகளின் ஊரார் வீதிகளை அலங்கரித்து வாயில் தோறும் பூரண கும்பமிட்டு வரவேற்றனர், இதனுலேயே திருமண நடைமுறைகளில் நகர்வலமும் ஒரு முக்கிய நடை முறையாக ஆகியிருக்கலாம்,

மணக்கோலம் பூண்ட இராமன் தேரேறி நகர்வலம் வருகின்ருன். அவ்வாறு நகர் வலம் தொடங்குவதற்கு முன்பு பசு, பொன், நிலம், மணி ஆகியனவற்றை நல்ல வர்க்குத் தானமாக வழங்கினுன் எனக் கம்பர் கூறுகிருர். தேரேறித் திருமண மண்டபத்தை நோக்கிச் செல்லும் இராமனுக்கு,

**சொரிந்தனர் மலர்மழை சுண்ணம் தூவினர்**
**விரிந்தொளிர் காசுபொன் தூசு வீசினர்**
**பரிந்தனர்......................**

எனக் கம்பராமாயணம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணக்கோலம் பூண்ட சுந்தரர் புத்தூரில் அமைந்துள்ள திருமணப் பந்தருக்குத் திருநாவலூரிலிருந்து சென்றமையைத் தடுத்தாட்கொண்ட புராணம் கூறுகின்றது. நகரமே விழாக்கோலம் கொண்டமைய அவர் சென்ற தன்மையை,

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு
போந்தார்

என்று சேக்கிழார் கவிநயத்துடன் கூறுகின்றார். வாத்தியங்கள் முழங்க, மாதர் பல்லாண்டு போற்ற, நான்மறை ஒலிகள் ஓங்க அவர் நகர்வலம் வருகின்றார். பல்வகைப் பட்ட ஆரவாரங்களுடன் புத்தூருக்கு வந்து சேருகின்றார்.

காரைக்காலம்மையாராகிய புனிதவதியாரை மணம் முடிக்கவந்த மணமகன் பரமதத்தனும் தன் சுற்றஞ் சூழப் பல்வகை ஆரவாரங்களுடன் கடல் நாகையிலிருந்து காரைக் கால் வருகின்றான். அவ்வாறு வந்ததை ''பணைமுரசம் எழுந்தார்ப்பக் காரைக்கால் பதி புகுந்தார்'' என்று சேக் கிழார் கூறுகின்றார். இதே போன்று மானக்கஞ்சாறருடைய மகளைக் கைப்பிடிக்க வருகின்ற ஏயர் குலப் பெருமானும் ''தஞ்சால்பு நிறைசுற்றம் தலைநிறைய முரசியம்ப'' வரு கின்றார். சம்பந்தர் சென்ற செலவினை,

சீரணி தெருவினூடு திருமணஞ் செல்லமுத்தின்
ஏரணி கானம் சின்னம் இலங்கொளித் தாரை எல்லாம்
பேரொலி பெருக முன்னே பிடித்தன ''மறைகளோடு
தாரணி உய்ய ஞான சம்பந்தன் வந்தான்'' என்று.

எனச் சேக்கிழார் வர்ணிக்கின்றார்.

### 3:2.5. மணமகனே முதலில் மணப்பந்தருக்கு வருதல்

நகர் வலம் வந்த மேற் குறிப்பிட்ட மணமகன்மார் யாவரும் மணப்பந்தரை வந்தடைகின்றார்கள். மணப் பந்தருக்கு மணமகனே முதற்சென்றடையும் வழக்கம் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத் தமிழர் திருமண நடைமுறையிலே காணப்படுகின்றது. இவ்வாறு மணப்பந்தருக்கு வரும் மணமகனைப் பல சீர் வரிசைகளுடன் அழைத்து வருதல் வழக்கம். ''புண்ணிய விளைவு போல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார்'' என்று சம்பந்தப்பெருமான் வந்ததைச் சேக்கிழார் கூறுகின்றார். சிவிகையிலே வந்த மணமகன் அதனை விட்டு இறங்கியவுடன் ''நிலபாவாடை'' விரிக்க அதன்மேல் நடக்கும் இன்னொரு வழக்கத்தினையும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். சம்பந்தருடைய திருமணந் தொடர்பாகவே இதனையுங் கூறுகிறார்.

பன்மலர் நறும்பொற் சுண்ணம் பரந்த பாவாடைமீது
முன்னிழிந் தருளிவந்தார் மூவுல குய்ய வந்தார்

என்பது அவருடைய வாக்கு.

### 3:2.6. மணமகனை எதிர்கொள்ளல்

திருமணப்பந்தர் நோக்கி வருகின்ற மணமகனைப் பந்தரின் முன்னர் மணமகள் வீட்டார் எதிர்கொண்டு வரவேற்கும் வழக்கம்பற்றிக் காவியங்களிலே குறிப்புகள் காணப்படுகின்றன. மணமகனை எதிர்கொள்ள வரும்போது என்னென்ன பொருட்கள் கொண்டுவர வேண்டும், எப்படி அவனை வரவேற்கவேண்டும் என்பதைத் தடுத்தாட்கொண்ட புராணத்திலே,

நிறைகுடம் தூபம் தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நிறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம்எதிர் கொள்ள வந்தார்

என்று சேக்கிழார் கூறுகிறார்.

திருமணப் பந்தரைச் சார்ந்த சம்பந்தப்பெருமானுக்கு மலர்கள், சுண்ணம், ''அரசிலை தருப்பை தோய்ந்த காமர் பொற் கலச நன்னீர்'' ஆகியன வீசி வரவேற்பு வழங்கப்படுகின்றது. அவர் மணப் பந்தருக்குள் நுழையும்போது ''மறைக்குல மனையின் வாழ்க்கை மங்கல மகளிர்'' நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த பொற்குடங்கள், நிரையாக மணி விளக்குகள், தூபம், மலர்மாலே, தீபம் சுற்றிய ''முளைப்பொற் பாண்டில்'', ''உறைப்பொலி கலவை'' ஆகியனவற்றை ஏந்திச் சென்று மணமகனே எதிரேற்ருர்கள்.

சிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றிலே மணமகனே எதிரேற்கும் வழக்கம் குறிப்பிடப்படவில்லே. தமிழ் நாட்டு நாயன்மார்களுடைய வரலாற்றினே எடுத்துக் கூறும் பெரிய புராணமே இந்நடைமுறையினைக் குறிப்பிடுவதால், இது தமிழ்த் திருமண நடைமுறைகளுள் தொன்று தொட்டு வழங்கிவரும் ஒரு முறையாக அமைந்திருக்க வேண்டும்.

### 3:2.7. மணமகனின் பாதம் விளக்குதல்

மங்கலப் பந்தரின் வாசலிலே வரும் மணமகனே எதிரேற்றல் முடிந்தபின்னர் மணமகளேப் பெற்றவர்கள் மணமகனின் பாதம் விளக்குதல் மற்ருெரு நடைமுறையாகும். இவ்வாறு பாதம் விளக்கும்போது மணமகளின் தந்தை தன் கோத்திரத்தையும் குலத்தையும் கூறித் தன் மகளே அம் மணமகனுக்கு அளிப்பதாகக் கூறுவார். இதன் பின்னரே மணமகன் மணத்தவிசில் அமர, நல் நேரம் நெருங்க, மணமகளேச் சுற்றத்தவர் சூழ்ந்து, மணப் பந்தருக்குள் அழைத்து வருவர். இவ் வழக்கம்பற்றிச் சம்பந்தப்பெருமானுடைய திருமணத்துடன் தொடர்புறுத்திச் சேக்கிழார் சில செய்திகளேத் தருகின்ருர். ''செம்பொன் மாடத்து ஆதி பூமியினுட் புகுந்த'' சம்பந்தரை ''அணிகிளர் மணியால் வேய்ந்த துகில்புனே விதான நீழல் தூமலர்த் தவிசின்மீது'' இருத்தி அவரது பாதத்தை விளக்குவதற்கு மணமகளின் தந்தையும் தாயும் பால், நீர் ஆகியன கொண்டு அவரெதிரே வந்தனர். மணமகளின் தாய் ''கரகநீர் எடுத்து வார்ப்ப'', தந்தை மணமகனின் பாதத்தை விளக்கி, அந்நீரினே மணமண்டபத்தினுள்ளேயும் வெளியேயும் தெளித்தனர். பின்னர் சம்பந்தருடைய கைகளிலே நீரை ஊற்றி மணமகளின் தந்தை தம் குலம் கோத்திரம் கூறி, ''என்றன் அருநிதிப் பாவையாரைப் பிள்ளேயார்க்களித்தேன்'' என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் திருமண மண்டபத்தை அடைந்த போது, இந்திராணி ''மிகுந்த நாணத்தோடு கரத்திலுள்ள திருமஞ்சனத்தை விடுப்ப, அவருடைய மெல்லிய திருவடிகளைப் பற்றி விளக்கி அபிஷேகஞ் செய்து, கலவைச் சாந்தையணிந்து, புட்பங்களைச் சூட்டி, தீபதூபங்களைப் பணிமாறிப் பூசனை செய்தாள். அயிராணி அவருடைய திருவடிகளுக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை சிரத்தையோடு ஏந்தி ஓரிடத்திற் சேமித்து வைத்தாள். அதன் பின் இந்திரன் ஆறுமுகக் கடவுளுடைய திருக்கரத்திலே தெய்வயானையம்மையாருடைய திருக்கரத்தை வைத்து, ''தேவரீருடைய அடியேனாகிய தமியேன் இவளை உமக்குத் திருமணம் செய்து தந்தேன்'' என்று வேதமந்திரத்தோடு நீரைவிடுத்துத் தத்தஞ் செய்தான்'' என்று கந்தபுராணம் பாதம் விளக்கும் நடைமுறையினை விவரிக்கின்றது. இந் நடைமுறை பற்றிச் சேக்கிழாரும் கச்சியப்பருமே குறிப்பிட்டுள்ளனர். ஏனைய காவியங்களில் இவ்வழக்கம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

### 3:2.8. மணமகளை மணப்பந்தருக்குக் கொண்டுவருதல்

தமிழ்நாட்டுக் கதைகூறும் காப்பியமாகிய பெரிய புராணம், நல்ல முகூர்த்த நேரம் நெருங்க மணமகளை மணப்பந்தருக்கு அழைத்து வந்தனர் எனக் கூறுகின்றது. இதனைச் சேக்கிழார்,

> நற்றவக் கன்னி யார்கை ஞானசம் பந்தர் செங்கை
> பற்றுதற் குரிய பண்பிற் பழுதில்நற் பொழுது நண்ணப்
> பெற்றவ ருடன்பி றந்தார் பெருமணப் பிணையன் னாரைச்
> சுற்றமுன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் துன்னினார்கள்

என்று கூறுகின்றார். ஆனால் சூளாமணியில் மணமகளை வேள்வி மன்றினுள் அழைத்து வந்த பின்னரே, அழலோம்பாளர் அம்மன்றினுள் வருவதையும், தீ வளர்ப்பதையும், முகூர்த்தம் உணர்த்தும் கணிவன் ''மணவேள்வி நிகழ்த்தற்குரிய முழுத்தம் இஃதென்று வேள்வியாசானுக்கு'' உணர்த்துவதையும் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3:2.9. மணத்தவிசில் வலப்பக்கத்தே மணமகள் இருத்தல்

மணத்தவிசிலே முதலில் மணமகன் வந்து அமர அதன் பின்னர் மணமகள் அவன் வலப் பக்கத்தே அமரும் செய்தி யினைச் சூளாமணி கூறுகின்றது. அந்நூலின் 1100 ஆவது செய்யுள்,

மன்னியழல் வேள்வியி லவற்குவல மாகப்
பின்னிய தருப்பைகள் பிடித்து......

என்று இச்செய்தியினைக் கூறுகின்றது. ஆனால் கம்பராமா யணத்திலோ மணமண்டபம் வந்த இராமன் மணத்தவிசிலே முதலிற்போய் அமராமல் ஒரு பக்கத்தே அமர்ந்தான் எனக் கம்பர் கூறுகின்றார். ''தாதை பாதம் வணங்கி, மாடு இருந்த வேலை'', சீதை திருமண மண்டபத்துள் வருகிறாள். அதன் பின்னர் இருவருமாகச் சென்றே மணத் தவிசில் அமருவதாகக் கம்பராமாயணம் கூறுகின்றது.

மன்றலின் வந்து மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்

என்று கம்பர் அந்நிகழ்ச்சியினைக் கூறுகின்றார்.

பெரியபுராணத்திலும் சூளாமணியிற் கண்ட செய்தியே காணப்படுகின்றது. சம்பந்தர் மணத்தவிசிலே விற்றிருக்க மணமகளைக் கொண்டுவந்து அவர் வலப்பக்கமாக அமர வைத்தனர் என்னும் செய்தியினை,

ஏகமாஞ் சிவமெய்ஞ் ஞானம் இசைந்தவர் வலப்பால் எய்தி
நாகமார் பணப்பே ரல்குல் நற்றவக் கொழுந்தன் னுரை
மாகமார் சோதி மல்க மன்னிவீற் றிருந்த வெள்ளை
மேகமோ டிசையும் மின்னுக் கொடியென விளங்க
வைத்தார்.

என்று சேக்கிழார் கவிநயத்துடன் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3:2.10 தாரைவார்த்துக் கொடுத்தல்

மணமகளின் தந்தை மணமகனுக்கு அவளைக் கொடுப்பதையே **தாரை வார்த்துக் கொடுத்தல்** அல்லது **தத்தஞ் செய்து கொடுத்தல்** அல்லது **கன்னிகாதானம்** எனக் கூறுவர். மணமகன் மணப்பந்தருக்கு வந்தவுடனேயே தாரைவார்த்துக் கொடுப்பதாவும் அதன் பின்னரே மணமகள் மணத்தவிசுக்கு வருவதாகவும் பெரியபுராணம்கூறுகின்றது. (பார்க்க: 3:2.7). ஆனால் சிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றிலே மணமகளும் மணத்தவிசில் வந்திருந்த பின்னரே தாரை வார்த்துக் கொடுத்தல் அல்லது கன்னிகாதானம் இடம்பெறுகின்றது. மணமகளின் தந்தையே நீரை ஊற்றித் தாரைவார்த்துக் கொடுப்பது வழக்கம். கோவிந்தையை அவள் தந்தை நந்தகோன் தாரைவார்த்துக் கொடுக்கப் பதுமுகனுக்காகச் சீவகன் ஏற்றுக்கொள்வதைச் சிந்தாமணியிலே (செ: 489) திருத்தக்கதேவர்,

> ஏறங்கோள் முழங்க வாய
>     ரெடுத்துக் கொண்டேகி மூதூர்ச்
> சாறங்கு மயரப் புக்கு
>     நந்தகோன் தன்கை யேந்தி
> வீறுயர் கலச நன்னீர்
>     சொரிந்தனன் வீர னேற்றான்
> பாறுகொள் பருதி வைவேற்
>     பதுமுக குமரர்க் கென்றே

என்று கூறுகின்றார். எரியோம்பல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே ''மின்னியல் கலச நன்னீர்'' குணமாலையாரின் தந்தை சொரிய சீவகனேற்றான் எனக் குணமாலையார் இலம்பகத்தில் தேவர் கூறுகின்றார். சூளாமணியிலே சுயம்பிரபையைத் திவிட்ட நம்பிக்கு அவள் தந்தை கன்னிகாதானஞ் செய்ததை (செ: 1099), ''அத்திருமண வேள்வி மன்றத்தே முன்னர் ஆசானால் வளர்க்கப்பட்ட தீயே இறைவனாக, திருமணங் காண்பாராகிய அக்கூட்டத்தின் முன்னிலையிலே மங்கையைச் சடியரசன் மணங்கமழும் மாலையணிந்த திவிட்டநம்பிக்கு நீரோடு கொடுத்தான்'' என்று தோலா மொழித் தேவர் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனகன் தன் மகள் சீதையை இராமனுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பது பற்றிக் கம்பர்,

கோமகன் முன்சனகன் குளிர்நல் நீர்
பூமக ளும்பொரு ளுமென நீஎன்
மாமகள் தன்னெடும் மன்னுதி என்று
தாமரை அன்ன தடக்கையின் ஈந்தான்

என்று கூறுகின்றார்.

தத்தம் செய்துகொடுத்தல் நடைமுறை தொடர்பாகக் கந்தபுராணம் கூறுவதை 3:2.7. இல் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இவ்வழக்கம் தொடர்பாகக் கந்தபுராணமும் பெரியபுராணமும் ஒரே செய்தியினையே தெரிவிக்கின்றன. ஏனைய காவியங்கள் இவையிரண்டினின்றும் வேறுபடுகின்றன.

## 3.2:11. வாழ்த்து

தாரை வார்த்துக் கொடுத்த பின்னர், மணமக்களை வாழ்த்தும் நடைமுறை இடம்பெறுவதைக் கம்பராமாயணம் கூறுகின்றது. அந்தணர் ஆசி கூறவும், அருங்கல மின்னார் பல்லாண்டு இசைப்பவும், மாதவர் வாழ்த்து ஒலிக்கவும், சங்கம் முழங்கவும் வாழ்த்து இடம்பெறுவதாகக் கம்பர் கூறுகிறார். பெரியபுராணத்திலோ தாரைவார்த்துக் கொடுத்தல் மணமகள் வருவதற்கு முன்னரேயே இடம்பெறுவதால் மணமகள் மணப்பந்தருக்கு வந்து அமர்ந்தவுடனேயே மணமக்களை வாழ்த்தும் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது.

புனிதமெய்க் கோல நீடு புகலியார் வேந்தர் தம்மைக்
குனிசிலைப் புருவ மென்பூங் கொம்பனு ருடனே கூட
நனிமிகக் கண்டபோதின் நல்லமங் கலங்கள் கூறி
மனிதருந் தேவ ரானுர் கண்ணிமையாது வாழ்த்தி

என்று சேக்கிழார் திருஞானசம்பந்த நாயனுர் புராணத்திற் கூறுகிறார். கந்தபுராணத்தில் திருமாங்கலியம் தரித்த பின்னரே வாழ்த்து இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3:2.12. எரிவலம் வருதல்

திருமணத்திலே தீவலம் வரும் நடைமுறை பற்றி இக் காலக் காவியங்கள் எல்லாமே கூறுகின்றன. சீவகசிந்தா மணியில் ''நேர்வளை முன்கை பற்றிக் கட்டழல் வலங் கொண்டு'' வருகின்றனர் சீவகனும் குணமாலையாரும். திவிட்டநம்பியும் சுயம்பிரபையும் தீவலம் வந்ததை,

> பொங்கழல்செய் வேள்விமுறை போற்றலு மெழுந்தா
> னங்கையின ணங்கினணி மெல்விரல்பி டித்து
> மங்கையொடு காளைவல ஞகவரு கின்முன்

என்று சூளாமணி கூறுகின்றது. சம்பந்தரும் மணமகளும் எரிவலம் வந்ததை,

> மந்திர முறையால் உய்த்த எரிவல மாக மாதர்
> தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்

என்று பெரியபுராணம் கூறுகின்றது.

மணத்தவிசில் இருக்கும்போது மணமகனின் வலப்பக் பக்கத்தே அமர்ந்த மணமகள் (3:2.9), தீவலம் வரும் போது இடப்பக்கமாக வரும் வழக்கத்தினைக் கம்பராமா யணம் கூறுகின்றது.

> இடம்படு தோளவனோடு இமை வேள்வி
> தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்

என்னும் பாடலே (கடிமணப் படலம் 90) இச்செய்தியினைக் கூறுகின்றது.

முருகப்பெருமானும் தெய்வயானையம்மையாரும் தீவலம் வந்த செய்தியினைக் கந்தபுராணம் கூறுகின்றது.

### 3:2.13. அம்மி மிதித்து அருந்ததி காணல்

தீவலஞ் செய்யும்போதே அம்மி மிதித்தலும் அருந்ததி காட்டலும் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம்பொரி செய்வன செய்பொருள் முற்றி
இலங்கொளி அம்மி மிதித்து எதிர்நின்ற
கலங்கல்இல் கற்பின் அருந்ததிகண்டார்

என்று கம்பராமாயணம் இவ்விரு வழக்கங்களையும் குறிப்பிடுகின்றது. சூளாமணியில் அருந்ததி காட்டல் மாத்திரம் கூறப்பட்டுள்ளது. இந்நடைமுறையுடன் பெரும்பாலும் மணப்பந்தரிலே நடைபெறும் சடங்குகள் யாவும் முடிவடைந்து விடுகின்றன.

## 3:3 சிறப்பான திருமண நடைமுறைகள்

இக்காலக் காவியங்களுள் சூளாமணியும் கந்தபுராணமும் சில சிறப்பான திருமண நடைமுறைகள் பற்றிக் கூறுகின்றன. அவை இப்பகுதியிலே தொகுத்துத் தரப்படுகின்றன.

### 3.3:1. அந்தணர்க்கு வழங்கல்

சூளாமணியில் திவிட்ட நம்பியும் சுயம்பிரபையும் தீ வலஞ் செய்த பின்னர், அருந்ததி காட்டுதற்கு முன்னர் அந்தணர்க்கு வழங்கும் நடைமுறை இடம்பெறுகின்றது. ''தீயோம்பும் தொழிலுடைய அந்தணர்க்கு மணமகளைச் சார்ந்தவர் மணமகனைச் சார்ந்தவர் என்னும் இவ்விரு பகுதியினரும் ஒருங்கு கூடி, பொன்குவியலும் மணிக்குவியலும் ஆகிய உயரியபொருள்களை முன்வந்து வழங்குவாராயினர்.'' இவ்வாறு அந்நிகழ்ச்சி கூறப்படுகின்றது.

### 3.3.2. திருமாங்கலியம் பூணுதல்

திருமாங்கலியம் அல்லது மங்கல நூல் தாலி பற்றிய செய்தி கந்தபுராணத்திலும் பெரியபுராணத்திலுமே கூறப்பட்டுள்ளது. ''பிரமதேவர் ஒரு திருமங்கலிய சூத்திரத்தை மனத்திறைற் படைத்துத் தர, அதனைத் தமது திருக்கரத்தால் வாங்கித் தெய்வயானையம்மையாருடைய திருக்கழுத்திற்றரித்து'' என்று மணமகனுகிய முருகப் பெருமான் மணமகளாகிய தெய்வயானையார் கழுத்திலே 'தாலிகட்டிய'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி கூறப்படுகின்றது. கந்தபுராணம் மட்டுமே இந் நிகழ்ச்சியிலைக் கூறுகின்றது. ஆனால், பெரியபுராணம் குங் கிலியக் கலய நாயனார் புராணத்திலே 'தாலி' பற்றிய குறிப்பு வருகின்றது.

> யாதொன்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்
> பேதுறும் மைந்த ரோடும் பெருகு சுற்றத்தை நோக்கிக்
> காதல்செய் மனைவி யார்தங் கணவனார் கலயனார்கைக்
> கோதில்மங் கலநூல் தாலிகொடுத்து நெற்கொள்ளும் என்றார்

என்னும் பாடலிலேயே மங்கல நூல் தாலி பற்றிய குறிப்பு வருகின்றது.

'தாலி' என்னுஞ் சொல் சங்க இலக்கியங்களிலும் சிலப் பதிகாரக்கால இலக்கியங்களிலும் சிறுவர் கழுத்தில் அணியும் ஆபரணத்தையே குறித்தது. 'ஐம்படைத் தாலி' என அது அழைக்கப்பட்டது. ஆனால், சிலப்பதிகாரம், திருமணத்துடன் தொடர்பான மங்கல வணி பற்றிக் கூறுகின்றது. இது 'தாலி' எனவும் அழைக்கப்பட்டதோ தெரியவில்லை. வடமொழி நூலார் 'கங்கண பந்தனம்' என இச்சடங்கினைக் குறிப்பிடு வர். புனித நூல் கட்டுதலாகிய இக்கிரியை திருமணச் சடங்கின் உச்சநிலையைக் குறிப்பதாக அவர்கள் கூறுவர்.

### 3:2.3. மதுபருக்கமளித்தல்

மணமகன் திருமாங்கலியத்தை மணமகள் கழுத்திலே பூட்டிய பின்னர், மணமகளின் தந்தை மதுபருக்கம் வழங் கும் நடைமுறை பற்றிக் கந்தபுராணம் கூறுகின்றது. முருகப் பெருமான் தெய்வயானையம்மையார் கழுத்திலே திருமாங் கலியத்தைத் தரித்து அவருடைய முடியிலே நறுமணம் பொருந்திய மாலையையுஞ் சூட்டிய பின்னர், தேவகுஞ்சரி யின் தந்தை இந்திரன் முக்கனி, கரும்பு, தேன், காம தேனுவின் பால் ஆகிய மதுபருக்கங்களை முருகப்பெருமா னுக்கு நிவேதித்தான் எனக் கச்சியப்பர் கூறுகிறார்.

கிருகிய சூத்திரங்களிலே 'மதுபர்க்கம்' என்னும் வழக் கம் குறிக்கப்பட்டுள்ளது. இது மணமகனை வரவேற்கும் மணப்பெண்ணின் தந்தை செலுத்தும் மரியாதை எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. தருப்பைப் புல்லாலான ஆசனத்தில் மணமகனை வரவேற்று அமர்த்தி, பாதங்களை வைப்பதற்கும் ஓர் ஆசனம் அளித்து, பாதங்களை நீரால் கழுவிய பின் அருந்த நீரும் தேன் கலந்த உணவும் ஒரு சம்புடத்தில் மாமனால் அளிக்கப்பட்டது. இவை யாவும் அளிக்கப்பட்டதாக மூன்று தடவை அறிவிக்கப்படும். இந்நடைமுறையில் ஒரு பகுதி கந்தபுராணத்தில் திருமாங்கலியம் தரித்த பின்னர் நடைபெறுவதாகவே கூறப்பட்டுள்ளது. மறு பகுதியாகிய பாதம் விளக்குதல் 3:2.7 ல் விளக்கப்பட்டுள்ளது.

### 3:4 பரிசம் வழங்கல்

**பரிசம்** என்பது சங்க இலக்கியங்களிலே மணமகன் மணமகளைப் பெறுவதற்காக அவள் பெற்றோருக்குக் கொடுத்த மணப் பரிசினையே குறித்தது. ஆனால், காவிய காலத்திலே இச் சொல் மணமகளின் பெற்றோர் மணமகனுக்குக் கொடுக்கும் மணப்பரிசைக் குறிக்கின்றது. மானக்கஞ்சாறர் ஏயர் கோனுக்குத் தன் மகளைப் பேச வந்தவர்க்கு "எந்தமது மரபினுக்குத் தரும் பரிசால் ஏயும்" எனவும், காரைக்கால் புனிதவதிக்கும் பரமதத்தனுக்கும் மணம் முடிந்த பின்னர் அவள் தந்தை "மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில் தனம் கொடுத்ததற்பின்" எனவும் பெரியபுராணம் இப் **பரிசம் வழங்கும்** செய்தியினைக் கூறுகின்றது. பரிசம் வழங்கல் இக்காலத்தில் **மகட்கொடை** எனவும் பட்டது.

**சீவசிந்தாமணி**யிலும் மணப்பெண்ணின் தந்தை மணமகனுக்குப் பொருள் வழங்கும் நடைமுறை குறிக்கப்படுகின்றது. கோவிந்தையின் தந்தை நந்தகோன் "இளம் பசுக்கள் இரண்டாயிரமும்; நல்ல பொன்னாலாகிய தூய இலக்கணம் நிரம்பிய பாவைகள் ஏழும்" மணமகனாகிய பதுமுக குமரனுக்குக் கொடுத்தான் எனவும், குணமாலையாரின் தந்தை குபேரமித்திரன் தன்மகளை நீர்வார்த்துக் கொடுக்கும் போது இளம் பெண்கள், அணிகலன் அணிந்த எழுநூறு மகளிர், கோடிபொன், இனிய தேனையுடைய முற்றிய கரும்பங் கழிகளையுடைய கழனி சூழ்ந்த ஐந்து பழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகள் ஆகியனவற்றை மணமகனுகிய சீவகனுக்கு ஈந்தான் எனவும் சீவகசிந்தாமணி கூறுகின்றது. இதே காவியத்தில் மணமகன் பரிசம் கொடுக்கும் சங்ககால வழக்கமும் குறிக்கப் பட்டுள்ளது. குணமாலையார் சீவகன்மேற் கொண்ட காதலை அவள் வாயாலேயே அறிவதற்கு, அவள் தந்தை அவளை அவளுடைய மூத்தமாமனின் மகனுக்குக் கொடுக்க உடன் பட்டதாகச் செவிலி கூறுகின்ற சந்தர்ப்பத்திலே, அவ ளுடைய மாமன் மகன்,

பண்டியாற் பண்டி செம்பொன்
பல்வளை பரிய மாகக்
கொண்டுவந் தடிமை செய்வான்

என்று சொல்கின்ருள். பண்டைத் தமிழர் திருமண வழக் கத்தினைத் திருத்தக்கதேவர் இவ்விடத்தில் குறிப்பிட் டுள்ளமையால் அவ்வழக்கம் தமிழ் நாட்டிற் சில இடங்களி லாவது நடைமுறையிலிருந்திருக்கலாம் என ஊகிக்க இட முண்டு.

## 3:5 மணமக்கள் திருமணத்தின்பின் வாழும் இடம்

திருமணம் முடிந்த பின்னர் மணமகன் தன் வீட்டுக்கு மணமகளைக் கொண்டு செல்லுதலே பெருவழக்கெனக் காவியங்கள் மூலம் அறிகிருேம். ஏயர்கோன் கலிக்காமனுர் திருமணஞ் செய்து கொண்டு உடனடியாகத் ''தம்முடைய எயின்மூதூர் சென்றிணைந்தார்'' எனப் பெரியபுராணம் கூறு கின்றது. தம்பதிகள் திருமணம் முடிந்தவுடன் மணமகள் வீட்டிலே சிலகாலம் தங்கிவிட்டுப் பின்னர் மணமகன் வீட்டுக்குச் செல்லுதலும் வழக்கமாகும். சீதையை மணம் புரிந்த இராமன் மிதிலையிலே சிலகாலம் தங்கிவிட்டுத் தம் சுற்றம், தம்பிமார், சீதையுடன் அயோத்திக்குத் திரும்பிச் செல்வது பற்றிக் கம்பராமாயணம் கூறுகின்றது.

திருமணத் தம்பதிகளை மணமகள் ஊரிலேயே தங்கி வாழவைக்கும் வழக்கமும் இக்காலத்திலே நடைமுறையி லிருந்ததைப் பெரியபுராணம் காரைக்காலம்மையார் புரா ணம் கூறுகின்றது. புனிதவதியாருக்கும் பரமதத்தனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடிந்த பின்னர், மணமகளின் தந்தை தம்பதிகள் மணமகனின் ஊராகிய நாகபட்டினத்துக்குப் போகாமல், காரைக்காலிலேயே வாழ்வதற்காக அங்கு அவர்க்கென மாடம் அமைத்துக் கொடுத்த செய்தியை,

**மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்**
**தங்கள்குடிக் கரும்புதல்வி ஆதலினல் தனதத்தன்**
**பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்**
**அங்கண்அமர்ந் தினிதிருக்க அணிமாடம் மருங்கமைத்தான்**

என்னும் பாடல் கூறுகின்றது.

## 4. பிற்காலத் திருமண நடைமுறைகள்

கி. பி. 14ஆம் நூற்றுண்டுக்கும் கி. பி. 19ஆம் நூற்றுண்டுக்குமிடைப்பட்ட காலமே 'பிற்காலம்' என இங்கு குறிக்கப்படுகின்றது. காவியகாலத் திருமண முறைகளே பெரும்பாலும் இக்காலத்தும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தன. உதாரணமாக, **திருப்பேரூர்ப் புராணம்** (17ஆம் நூற்றுண்டின் இறுதியில் மாதவச் சிவஞானமுனிவரின் மாணவர் கச்சியப்பமுனிவரால் இயற்றப்பட்டது) கூறும் தெய்வயானையம்மை திருமணப் படலத்தையும் **கந்தபுராணம்** கூறும் தெய்வயானையம்மை திருமணப் படலத்தையும் ஒப்பிட்டு நோக்கலாம். இவ்விரு படலங்களிலும் கூறப்பட்டுள்ள திருமண நடைமுறைகள் ஒரேமாதிரியாகவே அமைகின்றன. மணமகன் நீராடல், மணமகன் மணக்கோலம் பூணல், மணமகள் நீராடல், மணக்கோலம் கொள்ளல், மணமகன் மாநகர் வலம் வரல், மணமண்டபமடைதல், மணமகள் மணமண்டபம் புகுதல், மணமகனின் பாதம் விளக்குதல், தாரை வார்த்தல், மதுபருக்கமளித்தல், அழல் வலம் வருதல், அம்மி மிதித்தல், பொரியட்டல், திருமங்கலியம் தரித்தல் என்னும் ஒழுங்கிலே **திருப்பேரூர்ப் புராணத்** திருமண நடைமுறையொழுங்கு அமைந்துள்ளது. நடைமுறை ஒழுங்கிலே **கந்தபுராணத்** திருமணத்துக்கும் **திருப்பேரூர்ப் புராணத்** திருமணத்துக்கும் ஒரு சிறிய வேறுபாடு காணப்படுகின்றது. **கந்தபுராணத்தில்** தாரைவார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொடுத்தவுடன் தேவகுஞ்சரியை ஏற்றுக் கொண்டு முருகப்பெருமான் அவள் கழுத்திலே திருமாங்கலியத்தைச் சூட்டியபின்னரே எரிவலம் வருதல் முதலிய நடைமுறைகள் இடம்பெற்றன. ஆனால் திருப்பேரூர்ப் புராணத்திலோ திரு மாங்கலியந் தரித்தலே இறுதிச் சடங்காகக் கூறப்படு கின்றது. இம்மாற்றம் திருமாங்கலியந் தரித்தல் அல்லது தாலி கட்டுதல் வழக்கத்துக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட முக்கியத்துவத்தினைச் சுட்டுகின்றது எனக் கொள்ளலாம்.

### 4:1 'தாலி கட்டுதல்' சடங்கின் முக்கியத்துவம்

பிற்கால இலக்கியங்களிற் கூறப்பட்டுள்ள திருமணங் களிலெல்லாம் 'தாலி அணிதல்' என்னும் நடைமுறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இன்று நடைபெறும் திருமணங்களிலெல்லாம் 'தாலி கட்டுதல்' நிகழ்ச்சியே திரு மணத்தின் உச்சகட்டமாகும். அந்நிகழ்ச்சி நடைபெறும் நேரத்தில் வாத்தியங்கள் உச்சஸ்தாயியில் வாசிக்கப்படும். திருப்பேரூர்ப் புராணமும் திருக்கோணசலபுராணமும் கூறும் திருமணச் சடங்குகளில் தாலி பூட்டுதல் ஒரு முக்கிய சடங்காகவும், அந் நேரத்தில் வாழ்த்தொலியும் வாத்திய ஒலியும் முழங்குவதாகவும் விவரிக்கப்படுகின்றன. சிவன் கௌரியை மணம் முடித்த வரலாற்றினைக் கூறும் கச்சியப்ப முனிவர் அத்திருமண நிகழ்ச்சியொழுங்கிலே உச்சகட்டமாக (கௌரி திருமணப் படலம், செ: 110) 'தாலி அணிதல்' நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார் :

**விண்ணவர் மலர்கள் சிந்த விடையவ னங்கை யேற்றுத்**
**தண்ணிய மலர்மே லண்ண றழன்முறை வளர்ப்பத் தாலி**
**புண்ணிய மலர்ந்தா லன்ன பூங்கொடி மிடற்றிற் சேர்த்து**
**மண்ணவ ருய்யச் செய்யு மரபெலா மியற்றி னானே.**

இதே போன்று தெய்வயானை திருமணப் படலத்தில் (செ : 127, 128) முருகப் பெருமான் ''சுடர்த்த மங்கலிய நன்னாண் பூட்டியபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் வளர்பூ மாரி சொரிந்தனர் மகவா னேடுந்
தேனலார் கொன்றை யார்தந் திருவருள் வழங்கப்பெற்றங்
கூனமி லளகைக் கோமா னெண்ணிதி மணிப்பூணுடை
போனகம் பிறவும் நல்க யாவரும் மகிழ்ச்சி பூத்தார்

என்று கச்சியப்பமுனிவர் கூறுகிறூர். இவ்விரு ஆதாரங்களும் திருமண நடைமுறை ஒழுங்கிலே மங்கல நாண் பூட்டும் வழக்கமே முக்கியமானதாக அமைந்ததெனக் கொள்ளுதற்கு உதவுகின்றன.

கந்தபுராணம் கூறிய திருமண நிகழ்ச்சிகளில் மங்கல நாண் பூட்டுதலும் மாலை சூட்டுதலும் அடுத்தடுத்து ஒருங்கு சேர நிகழ்வனவாகக் கூறப்பட்டுள்ளன. அங்கும் திருமாங்கலியம் பூட்டிய பின்னர் "மத்தளி தக்கை சங்கம் பேரிகை முதலிய வாத்தியங்கள் ஒலித்தன'' என்று கூறப்பட்டுள்ளது. இது போலவே பிற்கால நூலாகிய திரிகோணசல புராணம் திருமணப்படலம் (செ: 118, 119) மங்கல நாண் பூட்டல், மாலை அணிதல், வாத்தியங்கள் ஒலித்தல் ஆகிய நிகழ்ச்சிகளை அப்படியே கூறுகின்றது:

அங்கெரி கரிய தாயா வியன்ன பொற்
றுங்கமாங் கோசிக மீந்து தூமணி
மங்கல நாண்களத் தார்த்து மங்கைதன்
கொங்குலாங் குழற்கொரு கோதை சூடினுன்.

ஆர்த்தன பேரிகை யார்த்த சல்லரி
யார்த்தன தக்கைகொம் பார்த்த காள
மார்த்தன மணிமுர சார்த்த வங்கிய
மார்த்தன தண்ணுமை யார்த்த சங்கமே.

பிற்காலத்தில் மணவினையிலே தாலிக்குப் பரந்த அளவிலே முக்கியத்துவம் ஏற்படலாயிற்று.

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்கும் காம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு**
**மணம்பேசி விரும்பித் தாலி**
**கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே**
**கிடத்துமட்டுங் கவலை தானே.**

எனத் தனிப்பாடல் திரட்டுச் செய்யுள் (436) ஒன்று அமைகின்றது. திருமணத்தின் முதற்பகுதி மணம் பேசுதல். அதன் உச்சக்கட்டமும் இறுதிப்பகுதியும் 'தாலிகட்டல்' ஆகும். இவ்வாறு 'தாலிகட்டல்' சடங்குக்கு ஏற்பட்ட முக்கியத்துவத்தினை இச்செய்யுள் கூறுகின்றது. மனைவிக்கும் கணவனுக்குமுள்ள நெருக்கமான உறவினைத் 'தாலி' பிரதிபலிப்பதாகக் கொள்ளப்பட்டது. இதனால், மனைவிக்கு முன்னர் கணவன் இறந்தால், அவன் அவளுக்குக் கட்டிய தாலியினையும் அவன் கட்டையிலே கழற்றிப் போடும் வழக்கமும் உண்டாயிற்று. பெண்ணினுடைய கற்பினைக் காக்கவும், அவள் திருமணஞ் செய்துகொண்டவளென்பதைப் பிறர்க்கு உணர்த்தவும் இத்தாலி உதவலாயிற்று. ''தாலி பெண்ணுக்கு வேலி'' போன்ற பழமொழிகளும் உண்டாயின.

தாலியினுடைய முக்கியத்துவம் திருமண நடைமுறைகளிலே இன்னொரு நடைமுறையினையும் ஏற்படுத்திற்று. 'தாலிக்குப் பொன்னுருக்குதல்' என்னுஞ் சடங்கு இப்பொழுது பெரும்பாலான திருமணங்களிலே ஒரு முக்கிய நடைமுறையாக ஆகிவிட்டது. முன்னர், விவாகம் நிச்சயம் ஆனவுடன் பெண்ணின் ஆபரணங்கள் செய்ய முகூர்த்தம் பார்த்துப் பொன்னுருக்கும் வழக்கமிருந்தது. கண்ணகி வழக்குரை (14 அல்லது 15 ஆம் நூற்றுண்டிற் சகவீரன் என்பவராற் பாடப்பட்டது எனக் கொள்ளப்படுகின்றது) இவ்வழக்கம் பற்றிக் கூறுகின்றது ('மீகாமன் கதை', செ. 18, 19). கண்ணகியின் தந்தை மாநாகர் ஆபரணஞ் செய்வதற்குப் பொற்கொல்லரை அழைத்த சந்தர்ப்பத்திலே,

.......................................................

**தரவுருக்குப் பொன்னிடவே தக்ககணி தரையழைத்து**
**வரைவிலிப்போ முகூர்த்தமிட மிக்கபசும் பொன்வாங்கிக்**
**கரமதனாற் ருன்நிறுத்துக் கடுகவவர் கைக்கொடுத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த பசும் பொன்வாங்கிக் குடைபிடித்தே தானுருக்கி
எடுத்தங்கே பாளமாக இயல்பாக வேநீட்டி
அடுத்தங்கே தகடுகொட்டி ஆவதான பணிகள் செய்து
................................................................

என்று கூறப்படுகின்றது.

4:2 குலம் பார்த்து மணம் பேசுதல்

குலம்பார்த்து மணம்பேசும் வழக்கம் சங்ககாலத்துக்குப் பின்னரேயே ஏற்பட்டது. திலகவதியாரை மணம்பேசி வந்தவர்கள் குலம் பேசிக் குணம் பேசியது பற்றிப் பெரிய புராணம் வாயிலாக அறிகிறோம். பிற்காலத்தில் இவ்வழக்கம் பெரும்பாலும் எல்லோராலுமே பின்பற்றப்படலாயிற்று.

ஒத்த குலம்பற்றிக் கண்ணகி வழக்குரை கூறுகின்றது. மாநாகர் மகளாங் கண்ணகியை மணம்பேச விரும்பிய மாசாத்துவர் பற்றிக் கூறுமிடத்து,

புரக்கு மந்தப் புகார் நகரிற் புரவலனுக் கொப்பாக
இருக்கு மந்த வசியர் தம்மில் இயல்புடைய வணிகேசன்
திருக்குலவு மாநாகர் திருமகளாங் கண்ண கையைப்
பரக்கு புகழ் மாசாத்தார் பால கற்குப் பேசி வைத்தார்

என 'மீகாமன் கதை' (செ : 7) யிலே கூறப்படுகின்றது.

ஒத்த குலமின்றித் தாழ்ந்த குலத்திலே மணஞ்செய்வதை விரும்பாத தன்மை அதிகரித்துவரத் தொடங்கியது. குறிப்பாக உயர் குலத்தைச் சேர்ந்த ஆணோ பெண்ணோ தாழ்ந்த குலத்திலே திருமணஞ் செய்வது விரும்பப்படவில்லை என்பதைக் காளமேகப் புலவரின் தனிப்பாடல் (தனிப்பாடல் திரட்டு : 387) நகைச்சுவையுடன் வெளிப்படுத்துகின்றது:

மருகிருக்கும் வேளூரின் வயித்தி மகன்
குறமகளை மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டான் உமையவளும்
தவம் புரிந்தாள் உயர்மால் மேனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருகிமிக மண்தின்றுன் கமலமுக
நாலாஞன் கடவு ளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவுபகல்
உறங்காமல் இருக்கின்ருரே

முருகன் தாழ்ந்த குலக் குறத்தியை மணந்தானென அவன் தந்தை, தாய், சுற்றத்தவர் மனம் வருந்தினர் எனக் கூறும் இப்பாடல் அக்கால நிலையை எமக்குக் காட்டுகின்றது.

ஒரு சாதியிலே பல குலங்களிருந்தால், ஒரு குலத்துக்குள்ளே திருமண உறவு வைத்துக்கொள்ளும் முறை பெரும் பாலும் தவிர்க்கப்படுவதுண்டு. கொங்கு வெள்ளாளக் கவுண்டர் பகுதியிலே ஆதிகுலம், அந்துவன்குலம், ஆந்தை குலம் எனப் பெயர்களுடைய பல குலங்கள் உண்டு. ஒரு குலத்து அங்கத்தினரிடையே திருமண உறவு நடை பெறுவதில்லை என அறிகிறோம்.[5] திருக்குற்ருலக் குறவஞ்சி யில் குறத்தி தன்னைப் பற்றிக் கூறுமிடத்து (செ. 54:6) ''ஒரு குலத்திற் பெண்கள் கொடோம் ஒரு குலத்திற் கொள்ளோம்'' என்று கூறுகிருள். இப்பாடலடிக்கு உரை கூறுபவர்கள் ''எங்கள் குலந்தவிர வேருெரு சாதியில் நாங்கள் பெண்கள் கொடுக்க மாட்டோம்; வேருெரு குலத்தில் பெண்களை மணஞ்செய்யவும் மாட்டோம்'' என்று கூறப்படுவது பொருத்தமோ என ஆராயற்பாலது. குறவர் சாதியினுள்ளே பல குலங்கள் உண்டு; அக்குலங்களுள் ஒரு குலத்துள்ளே பெண் கொள்ளுதலும் கொடுத்தலும் இல்லை; மற்றக் குலத்துடன் பெண் கொண்டு அல்லது கொடுத்து ''உறவு பிடித்தாலும் விடோம்'' என்று அவள் கூறுவதாகவும் கொள்ளலாம்.

### 4:3 மகட்பேசி நிச்சயித்தல்

மணமகன் வீட்டார் மகட்பேசி மணமகள் வீட்டுக்குச் சென்று திருமணம் நிச்சயமானுல் உறவுகொண்டு அம் மணமகள் வீட்டிலே உணவு கொள்ளுதல் வழக்கமாகி விட்டது. கண்ணகி வழக்குரை (மீகாமன் கதை செ. 8) ''பேசி வந்தார் மாசாத்தார் பெண்கொள்ளக் கோவலற்கு'' என்று கூறி மாசாத்துவரும் மாஞகரும் பெண்பேசி நிச்சய மாக்கிவிட்டு உணவுண்ட செய்திபற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்துடனே இருபேரும் உறவுசெய்தங் கடிசிலுண்டு
பொருத்தமுடன் வெள்ளிலையும் போதுமடை காயளித்து
வருத்தமில்லை மைத்துனனே மனைபோ மென்றனுப்பி
.. ...... ......... ..................................

என்னுஞ் செய்யுள் கூறுகின்றது.

4:4 சீதனம் கொடுத்தல்

மகட்கொடைப் பொருட்கள் பிற்காலத்திலே சீதனம் என்னும் சொல்லாலே வழங்கலாயிற்று. இன்றும் இச் சொல்லே பெருமளவில் வழக்கிலுள்ளது. கண்ணகி வழக்குரை கலியாணக் காதை முடிவிலே (செ. 63),

ஆங்குநின்ற கோவலற்கும் அழகுதிகழ் கண்ணகிக்கும்
தாங்குபுகழ் சீதனமுந் தானெழுதி – ஓங்கவென
வள்ளலெனும் மாஞகர் மருகனெனுங் கோவலற்கு
உள்ளபடி உவந்தார் தான்.

எனக் கூறப்படுகின்றது. மணப்பெண் கண்ணகைக்காகச் சீதனம் எழுதி மருமகனும் மணமகனுமாகிய கோவலற்கு மாமனும் மணமகளின் தந்தையுமாகிய மாஞகர் கொடுத்தார். இந்த வழக்கமே இன்றும் நிலவுகின்றது. திருக்குற்ருலக் குறவஞ்சியில் ''அருள் இலஞ்சிவேலர் தமக்கொரு பெண்ணைக் கொடுத்தோம், ஆதீனத்து மலைகளெல்லாம் சீதனமாக் கொடுத்தோம்'' என்று குறத்தி கூறுவதாகத் (செ. 54:6) திரிகூடராசப்பக் கவிராயர் பாடுகிருர்.

ஆஞல், இதே வேளையிற் படைவீட்டுப் பிராமணர்களிடையே திருமணஞ் செய்துகொடுக்கும் பெண்களுக்காகப் பணம் பெறும் வழக்கம் இருந்ததை விரிஞ்சிபுரத்துச் சாசனமொன்று கூறுகின்றது.[6] அப்பிராமணர்கள் தங்கள் பெண்களைக் கன்னியாதானம் செய்து கொடுக்க வேண்டுமேயன்றிப் பெண்களுக்காகப் பணம் பெறக்கூடாது என்றும், அப்படிப் பணம் கொடுக்கும் மாப்பிள்ளைகளும் பணத்தைப் பெறும் பெண்களின் தகப்பன்மார்களும் ஜாதிப்பிரதிஷ்டம் செய்யப்படுவதுடன் அரசரால் தண்டிக்கவும் படுவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் தமக்குள்ளே முடிவுசெய்து தீர்மானித்துக் கொண்ட செய்தியினையே இச்சாசனம் கூறுகின்றது. இன்று மணமகன் வீட்டார் மணமகளுக்காகச் சீதனம் அல்லது வரதட்சணையை வலிந்துபெறுங் கொடுமைக்கு எதிராக எதிர்ப்புக் காட்டுவது போல் அன்று பரிசத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதை இச்சாசனமூலம் உணர்கிறேம்.

## 4:5 திருமணமும் சாதியும்

தமிழ்ச் சமூகத்திலே சாதியமைப்பு முறை இடைக் காலத்திலே கூர்மைபெற்று வளரத் தொடங்கிவிட்டது. பிராமணர், வெள்ளாளர் போன்ருேர் உயர் சாதிகளாகக் கொள்ளப்பட்டனர். வண்ணுர், பறையர், சேணியர் போன்ற சாதியினர் குறைந்த சாதியினராகவும் இவர்களுக்குத் தொண்டு செய்பவர்களாகவும் கொள்ளப்பட்டனர். திருமண விடயத்திலும் இச்சாதி வேறுபாடு நோக்கப்பட்டது. கலியாண காலங்களிலே பல சாதியினர் பல்வேறு கடமைகள் செய்யவேண்டியவர்களானுர்கள். சேணியர் என்னுஞ் சாதியார் கலியாண காலங்களிலே வந்திருப்போருக்கு வெற்றிலை கொடுக்கும் கடமையுடையவர்கள் என்பதைப் பட்டீச்சரத்துச் சாசனமூலம் அறிகிறேம்.[7]

திருமணமென்ருல் மேள வாத்தியம் முழங்குவதுண்டு. இது விடயமாகவும் சாதி வேறுபாடு காட்டப்பட்டது. ஒல்லாந்தர் இலங்கையை ஆளுகின்ற காலத்திலே (1602—1796) யாழ்ப்பாணத்தில் எவ்வெச் சாதியினருக்குத் திருமண காலங்களிலே எவ்வகையான வாத்தியங்கள் முழங்க உரிமையுடைத்து என வரையறை செய்யப்பட்டிருந்தது. இது பற்றி யோன் போதகருடைய யாழ்ப்பாணச் சரித்திரம் குறிப்பிட்டுள்ள விவரங்களை யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆசிரியர் மேற்கோளாகப் பின்வருமாறு எடுத்தாளுகின்ருர் :

> ''பண்டைக் காலத்தில் பிராமணர் விவாகத்துக்கு மேளவாத்திய வுரிமையுடையவர். வேளார், செட்டிகள் விவாகத்துக்கு மேள வாத்தியமும், சாவுக்குப் பறை மேளமும், இரு சடங்குக்கும் நிலபாவாடையும் சங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரை குடமுழவும் மேற்கட்டியும் உரிமையாகவுடைய வர். கோவியர் சாவுக்கு மாத்திரம் பறைமேளவுரிமை யுடையவர். மறவர், அகம்படியார், இடையர், சிவியார் விவாகத்துக்கு மேள வாத்தியமும் சாவுக்குப் பறைமேளமும் உரிமையுடையவர். ஆண்டிகள் சங்கு வாத்தியமுடையவர். முக்கியர், கரையார் ஒற்றைச் சங்கு வாத்தியவுரிமையுடையவர். கம்மாளர் சேகண்டி யும் குடமுழவுமுடையர். குயவர் குடமுழவுடையர். அம்பட்டர், வண்ணார் தாரையுடையார். மற்றச் சாதி களுக்கு ஒருவகை வாத்தியவுரிமையுமில்லை.''

மேளவாத்தியத்தோடு நடக்கும் கல்யாணச் சடங்குகளுக்குக் **கல்யாணவரி** கட்டவேண்டுமென ஒல்லாந்தர் சட்டஞ் செய்தனர். பின்னர் அது ஒல்லாந்தத் தேசாதிபதியினல் நீக்கப்பட்டது.[8]

## 4:6 கொங்குவெள்ளாளக் கவுண்டர் திருமணம்

கொங்கு நாட்டிலே பண்டைத் தமிழ்க் குடியினராகிய வெள்ளாளக் கவுண்டர் வாழ்ந்து வருகின்றனர். இவர்க ளிடையே நிலவும் திருமண நடைமுறைகள் பண்டைய தன்மை பெற்றனபோல் அமைகின்றன. அவை தமிழர்க ளிடையே பல நெடுங்காலமாக நிலவி வந்திருக்க வேண்டும். அந்நடைமுறைகள் பற்றி டாக்டர் K மீனுட்சிசுந்தரம் ஆராய்ந்து எழுதியுள்ளார்.[9] அக்கட்டுரையிலே குறிப்பிட்ட வற்றின் முக்கியத்துவத்தினையும் பயனையும் கருதி அவற்றின் சிறப்பான பண்புகளை இங்கு சுருக்கமாகத் தமிழாக்கம் செய்து தருகிறோம்.

கவுண்டர்களுடைய திருமணத்திலே முற்காலங்களில் பிராமணருக்கே இடமில்லை. அவர்களுடைய திருமண நடை முறைகளை நடத்திவைப்பவர் **சீர்க்காரர்** அல்லது **அருமைக் காரர்** எனப்பட்டார். திருமண நடைமுறைகளெல்லாம் **முகூர்த்தம்** எனப்பட்டது.

ஆண் வீட்டாரே திருமணம் பேசிப் பெண் வீட்டா ரிடம் செல்லுதல் வழக்கமாகும். அதன் பின்னரே திரு மணக் காலம் நிச்சயப்படுத்தப்படுகின்றது. அதன் பின்னரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயம் நடைபெறும். இச்சடங்குக்கு இருபக்கத்து மிக நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்படுவார்கள். நிச்சயம் முடிந்தவுடன் ஆண் மாப்பிள்ளை எனவும் பெண் பெண்ணுப் பிள்ளை எனவும் அழைக்கப்படுவார்கள்.

நிச்சயம் பண்ணும் நாளன்று மாப்பிள்ளை வீட்டார் புதுச்சீலை, ஆபரணம், வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், தேசிக்காய், மஞ்சள், பன்னீர், சந்தனம், குங்குமம், மலர் முதலியன தட்டுகளிலே கொண்டு பெண்ணுப்பிள்ளை வீட்டுக்குச் செல்வர். அங்கு அவர்கள் வைபவரீதியாக வரவேற்கப்படுவர். விருந்தினர் வீட்டு மண்டபத்தில் அல்லது பந்தரில் அமர்வர். கிழக்குப்பக்கம் நோக்கியவாறு இரண்டு விளக்குகள் எரியும். அவற்றின் அருகில் ஒரு முக்காலி இடப்படும். சலவைத் தொழிலாளியினுல் வழங்கப்பட்ட ஒரு வெள்ளைத் துணி அம்முக்காலிக்கு மேலே இடப்படும். இத்துணி மாத்து எனப்படும். பொருட்கள் கொண்டுவரப் பட்ட தட்டுகள் இம்முக்காலிக்கு முன்னுலே வைக்கப்படும். மைத்துனிமார் கூடவர மணப்பெண் சீர்க்காரிக்குப் பின்னுலே மெதுவாக நடந்துவருவாள். சீர்க்காரி ஒரு சிறிய நீர்க் குடத்தினைக் கையிற் கொண்டு செல்வாள். மணப்பெண் இருந்தவுடன், சீர்க்காரி மஞ்சள் தூளை நீரிலே குழைத்துப் பிள்ளையார் பிடித்து வைப்பாள். அதற்கு நீறு பூசிக் குங்குமப் பொட்டிடப்படும். தேங்காய் உடைத்துக் கற்பூர தீபம் காட்டியவுடன் பூசை முடிவுறும். பின்னர், அவள் புதுச்சீலை வைத்துள்ள தட்டினை எடுத்து மும்முறை விருந்தினர்க்குக் கொடுப்பது போலவும் மும்முறை மணப்பெண்ணுக்குக் கொடுப்பது போலவும் நீட்டுவாள். இது ஓங்கிக் கொடுக்கிறது எனப்படும். பின்னர் பெண்ணிடம் அத்தட்டுக் கொடுபடும். அவள் அப்புதுச்சீலையை அணிந்து கொண்டு வருவாள். ஆபரணம், மலர், குங்குமம் ஆகியன பின்னர் அவளுக்கு வழங்கப்படும். இரு பக்கத்துப் பெற்ருேர்களும் சகோதரர்களும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வர். பெண்ணின் வீட்டார் வெற்றிலை பாக்கினைக் கொடுக்கும்போது கொடுத்தோம் என்று கூற ஆண் வீட்டார் வாங்கும்போது கொண்டோம் என மறுமொழி கூறுவர். திருமண அழைப்பிதழ் எழுதப்பட்டு விருந்தினர்க்கு வாசிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படும். பின்னர் உப்பும் சவுளியும் (திருமண உடைகள்) வாங்கும் சடங்கு இடம்பெறும். கொள்வனவு செய்யப்பட்ட உப்பினை இரு பக்கத்தாரும் தத்தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்வர். மாப்பிள்ளையின் உடுப்புக்களைப் பெண்வீட்டாரும் பெண்ணின் உடுப்புக்களை மாப்பிள்ளை வீட்டாரும் வாங்குவர். பின்னர், பொற்கொல்லனை அழைத்துத் தாலிக்குப் பொன் உருக்குவர். பூசைக்குப் பின்னர் பொற்கொல்லனிடம் தாலிக்கு உருக்குவதற்காகப் பொன் நாணயம் கொடுக்கப்படும். மாப்பிள்ளை வீட்டாரே தாலிக்குரிய செலவினைக் கொடுப்பர். விருந்துபசாரத்துடன் அந்நிகழ்ச்சி முடிவடையும்.

திருமண ஏற்பாடுகள் பந்தல் போடுவதுடன் தொடங்கும் சலவைத் தொழிலாளி வெண்ணிற ஆடைகளால் பந்தலை அலங்கரிப்பான். மாப்பிள்ளையும் பெண்ணும் நடப்பதற்கு நிலபாவாடையாக நிறச் சேலைகளையும் இவனே விரிப்பான். இவனுடைய மனைவி திருமணச் சடங்கின்போது பந்தமொன்றினைப் பிடிப்பாள். அது எல்லாச் சடங்குகளும் முடியும் வரையும் அணையாதிருக்க மட்குடமொன்றினுள் வைத்திருக்கும் எண்ணெயினை இவள் உபயோகிப்பாள்.

பண்டுதொட்டு வழங்கிவரும் இசைக் கருவிகளாகிய குழல், தாளம் முதலியன நாதஸ்வரத்துடன் இசைக்கப் படும். பறையர் இத்தாள மேள வகைகளை ஒலிப்பர். இரு பக்கத்தாருடைய வீடுகளிலும் முகூர்த்தக்கால் நாட்டுவதுடன் திருமண நடைமுறைகள் தொடங்குகின்றன. பாச்சான் எனப்படும் மும்முனையுள்ள தடி பந்தலின் வடகிழக்குத் தூணுடன் கட்டப்படும். இதன் மும் முனைகளிலும் மஞ்சள் பூசப்படும். அத்துடன் நவதானியங்கள் வைத்துக் கட்டப் பட்ட மஞ்சள் தோய்ந்த துணியும் இத்தடியிலே கட்டப் படும், சாணியிலே உருவாக்கப்பட்ட கணபதிமுன்னர் பூசை நடத்தப்படும். சீர்க்காரன் இப்பூசையினை நடத்துவான் வயதுமுதிர்ந்த ஆண்களும் சுமங்கலிப் பெண்களும் பந்தற் காலுடன் கட்டப்பட்ட தடிக்குப் பாலூற்றுவர்.

வெற்றிலை பிடிக்கிறது அடுத்த முக்கிய சடங்காகும். மணமகனை முக்காலியிலே அமரவைப்பர். சீர்க்காரன் அவன் கையிலே பிடிப்பதற்கு வெற்றிலை பாக்குக் கொடுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான். கணபதி பூசை நடத்தப்படும். பின்னர், அவ் வெற்றிலையும் பாக்கும் ஒரு சருகுச்சட்டியிலே தேங்காய், வாழைப்பழம், தேசிக்காய் ஆகியவற்றுடன் இடப்படும். இதன் வாயினைத் துணியாலே மறைத்துக் கட்டுவர். பின்னர், தாயாதிகள் இதனை ஒரு புதிய சேலையுடன் பெண் வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.

பின்னர் மணமகனுக்கு மணநீராட்டு நடத்தப்படும். நாவிதனாலே புளியந் தடிகளாலே செய்யப்பட்ட ஒரு வட்டத்துக்குள்ளேயே இம் மணநீராட்டு நடைபெறும். கரியிடப்பட்ட நெய்ச் சோற்றினாலே மணமகனின் தலைக்கு மேலே ஆரத்தி செய்யப்படும்.

மண நீராடலுக்குப் பின் காப்புக் கட்டுதல் நடைபெறும். பின்னர் தாலிக்குரிய நூல் கையினாலே நூற்கப்படும். தக்களியிலிருந்து வரும் நூலின் ஒருமுனையினை மணமகன் பிடித்திருப்பான். நெல் நிரம்பிய கொத்தினுள்ளேயே தக்களி வைக்கப்பட்டிருக்கும். இக்கொத்தினை நிறை நாழி என்பர். தக்களியிலிருந்து வரும் நூலினை மஞ்சள் தண்ணீரிலே தோய்த்துத் தாலிக்கயிறு ஆக்கப்படும். மணமகனின் காப்புக்கயிறும் இவ்வாறே ஆக்கப்படும். மஞ்சள் துண்டும் வெற்றிலையும் இக்கயிற்றினாலே மணமகனின் வலது கையிற் கட்டப்படும்

சில குடும்பங்களிலே சீரு என்னுஞ் சடங்கும் நடைபெறுகிறது. அதாவது தாய் மாமன் மணமகனுக்குத் தலைப்பாகை கொடுப்பதையே இச்சடங்கு குறிக்கின்றது.

இணைச்சீரு என்பது அடுத்துவரும் முக்கிய திருமணச் சடங்காகும். மணமகனின் சகோதரி மணமகளைப் போல அலங்காரஞ் செய்து கலியாணச்சீலை, தாலி, சிறிய கல் ஆகியன கொண்ட போழைமுடியினைத் தலையிலே கொண்டு மணமேடையினுள் இருக்கும் மணமகனை நோக்கிச்செல்வாள். ணமேடையை வலம் வந்து தண்ணீர்க்குடங் கொண்டு செல்லும் சீர்காரிக்குப் பின்னாலே மணமேடைக்குட் செல்வாள். பின்னர் நாவிதன் மங்கல வாழ்த்துப் பாடுவான். அம்மங்கல வாழ்த்து கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களின் திருமண நடைமுறைகள் பலவற்றைக் கூறுகின்றது. அதனால் அவ் வாழ்த்து முழுவதையும் கீழே தருகிறோம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கணபதியை நான்காலமே தொழுதால்
அல்லல் வினையெல்லாம் அகலுமே சொல்லரிய
தும்பிக் கையானை தொழுதால் வினை தீர்க்கும்
நம்பிக் கைகொண்டு எல்லோர் விநாயகரே
அலைகடல் அமிர்தம் ஆரிலும் பெரியார்
கந்தர் இந்திரர் கருவாய் முகத்திடு
சந்திர சூரியர் தானவர் வானவர்
முந்திய தேவர் மூவர் காத்திட
காய்த்தினைக் கழித்து கல்யாணம் தனக்கென்று
நல்ல கல்யாணம் நடந்திடும் சீரு
தப்பிதம் வராமல் சரஸ்வதி சரணம்
பேழை வயிறனை குறித்திடு நேரம்
வேழ முகவனை விரும்படி முகவனை
அடியான் சோதினை அவனியோர் குறித்து
கடிதாய் வந்து கருத்திலே வந்து
நினைத்தது எல்லாம் நீயே முடித்து
மனத்தயர்வு போக்கி மதியது சரணம்
கிரேதா திரேதா துவாபர கலியுகம்
சேரன் ஒருவன் சோழன் ஒருவன்
பார மாமுடிப் பாண்டியன் ஒருவன்
இவர்கள் மூவரும் இராஜாக்கள் இராஜியம்
ஆண்டு வாழ்த்திடும் திதிபக அதிபக
சிறந்து மானிட வாழ்வது சுற்றம்
வாழ்வது பொருந்தி இந்திரன் தன்னை
இனிதென்ற நாளில் பக்குவமாக பருவம்கண்டு
வேதியன் பக்கம் விரைவுடன் சென்று
ஜோதி கழித்து ஜோதிடம் கேட்டு
இந்த மாப்பிள்ளை பேர்தனைப் பேசி
இந்தப் பெண்ணைப் பேர்தனைக் குறித்து
இருவர் பேரையும் ராசியும் கேட்டு
கைத்தாள் உடைய கயிற்றுப் பொருத்தம்
உண்டு என்றுசொல்லி ஒன்பது பொருத்தம்
உத்திரத் துடனே தட்சிணை கேட்டு
மச்சன் ஊருக்கு செண்டை நடந்து
சிலபேர் உடனே உரியார் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மகளுக்கு என்று சொல்லி
பிடிதனை வெற்றிலை பிடிதனைப் பிடித்து
மடிதனில் கட்டி நாளது குறித்து
நல்ல விருந்துண்டு வாழ்வது மன்னவரை
மகமக மகிழ்ந்து தக்கோர் புகழோர்
கணக்கரை அழைத்து சேர்ந்து அடியோலை
திருந்த எழுதி திசைதிசை எங்கும்
தென்னவரை அழைத்து வாழை கமுகு
மகமே ருடனே சூழ விளைந்து
தோரணம் கட்டி மூத்தோர் வந்து
மெழுக துவளித்து பார்த்த இடமெங்கும்
பாலது தெளித்து பண்டு பாறு
பெரிய கலம்தன்னைக் கொண்டு வந்து
குடம் உடன்விளக்கி நேரிய சம்பா
அரிசியை நிறைத்து பாரிய வெல்லம்
பாக்கு வெற்றிலை சீருடன் நெய்யும்
தேங்காய் பழங்கள் வாரியே வைத்து
வரிசை குறையாமல் முக்காலிமேல் வைத்து
குணம் பொருந்திய குடிமகனை அழைத்து
முளரி மைத்திட முகமது துடைத்து
கிளரி மைத்திட காப்பதும் கட்டி
ஏழு தீர்த்தம் இசைந்திட நீரும்
மேளம் உடனே விளாவியே வார்த்து
சின்னச் சோற்றை சீர்க்காரர் கழித்து
அன்னம் முப்பழம் ஆவின் பாலுடனே
வந்த வருடனே வாசலைக் கிளறி
சாணங்கி கொண்டு தரைதனை மெழுகி
கணபதி தன்னைக் கருத்துடன் வைத்து
அறுகது சூடி குழவிக்குக் கங்கணம்
குணமுடன் தரித்து குப்பாரி கொட்டி
குலத் தேவதை யைத்தான் அழைத்து
செப்பமுடன் மன்னவர்க்குத் திருநீற்றுக் காப்பணிந்து
கொத்தரளி கொடியரளி கோத்தெடுக்க நல்லரளி
முல்லை இருவாட்சி முனைமுறியாச் சண்பகப்பூ
நாறும் கொழுந்து நந்தியா வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறும் கொழுந்து வில்லக்காய் பத்தினி
தண்டமாலை கொண்டைமாலை அழகுடன் பூண்டு
சாந்து சந்தனம் தான்படி நீரளந்து
சேர்ந்திடு குங்குமம் சிறப்புடன் பூசி
திட்ட முடன் போழை தன்னில்
சோறுநிறை நாழிவைத்து செஞ்சோறு அஞ்சடை
தட்டிகள் வைத்து சுற்றி எறிந்து
திட்டி கழித்து சிவசூரியனைக் கைமுனைந்து
அட்டியங்கள் செய்யாமல் அழகுமனைக்கு வந்து
நற்கரும்பு நாட்டி நல்லமுகூர்த்த மிட்டு
பேய்க்கரும்பு நாட்டி பெற மண்ணுப் போட்டு
சாலும் கரகமும் சந்திரன் முன்னுக
ஆயிரம் பெருந்திரி அதுவும் வலமாக
சுத்தமுடன் கலம்விளக்கி சோறரிசி பால்பழம்
பத்தியோர் அத்தனைக்கும் பரித்த மணவறையை
மணவறையை அலங்கரித்து மன்னவரைத் தானிருத்தி
இணையோங்கும் தங்கையரை ஏந்திழையைத்
தானழைத்து
சந்தனம் புனுகு சவ்வாதும் பூசி
மந்தாரை மல்லிகை மரிக்கொழுந்து மாலையிட்டு
கூறை முடித்துவைத்து குணமுள்ள தங்கையர்
போழைமுடி தான்சுமந்து பிறந்தவரைச் சுற்றிவந்து
முன்னை ஒருதரம் விநாயகருக்கு இணைஓங்கி
பின்னை ஒருதரம் பிறந்தவருக்கு இணைஓங்கி
இணைச்சீர்தன்னை ஏர்வையுடன் முடித்து
செல்வ விநாயகர்க்குத் தேங்காய் மூர்த்தமிட்டு
சந்திர சூரியர் சபையோர் தானறிய
இந்திரனார் தங்கச்சி இணையோங்கி நின்றபின்பு
பாங்காகக் கைமுகைந்து பாரிசெய் போகிறேமென்று
போதவே பால்கொடுத்து போஜனங்கள் தானருந்தி
தாயாருடைய பாதம் தலைபணிந்து தண்டனிட்டு
போய்வா மகனேயென்று புத்திரனார் மனம்மகிழ
அடியுமென்றார் பேரிகை அஷ்டதிக்கும் தான்முழங்க
அண்ணன் ஆனவர் ஆனையின் மேல்வர
தகப்பன் ஆனவர் இரதத்தின் மேல்வர
ஆனைகதி வீதி அழகுள்ள மாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனைகதி வீதி சிறந்து முன்னடக்க
ஆகாச வாணம் அதிர முழங்கிவரும்
சூரிய வாணம் துவண்டாடி வீசிவரும்
மாப்பிள்ளைக்கு மைத்துனர் வாவா என்று தானழைத்து
வெகுஜனத் துடனே விடுதியில் போயிறங்கி
நாழியரிசிக் கூடை நன்றாக முன்னனுப்பி
பொட்டிகளும் போழைகளும்பொன்னுகளும் சிப்புகளும்
பட்டுமணி நகையும் பாக்கியமோர் மாங்கல்யம்
திட்டமுடன் மங்கையர்க்குத் திருப்பூட்டப் போகிறோ
மென்று
அன்ன நடையார்கள் அருமைபெற்ற பெரியோர்கள்
பொன்னுவளைக் கையதனாலே போழைமுடி தான்ஏந்தி
இன்னும் சிறுசீர் ஏந்திழையோர் சூழ்ந்துவர
நாட்டில் உள்ளசீர்சிறப்பு நாங்கள் கொண்டுவந்தோ
மென்று
கொண்டுவந்து உள்புகுந்தார் கொம்பனையர் மாளி
கையர்
கொண்டுவந்த பொன்முடிப்பை கொடுத்துச் செலுத்து
மென்றார்
கன்னியர் எல்லவரும் கண்டு மனமகிழ்ந்து
பொன்பூட்ட வந்தவர்க்கு பூதக்கலம் தானனுப்பி
செங்கையினாலே செகப்பிட்ட இருவரும்
சாப்பிட்டுப் பசியாறி சந்தோஷம் ஆகி
ஆம் எங்கள் பெண்ணை அலங்கரித்து குலம்கோதி
மாமன் எடுத்து மணவாளன் பக்கம் வைத்து
ஊட்டுமென்றார் சாதம் உடுத்துமென்றார் பட்டாடை
பூட்டுமென்றார் பொன்னெடுத்து பெண்ணுக்குத்
திருக்கழுத்தில்
ஆரமணிவார்கள் அழகுரத்தின ஜோதி மின்ன
மாணிக்கம்போல் மாங்கல்யம் வைடூரியம்போல்
திருப்பூட்டி
கலம்பெரிய அரிசிதன்னில் கை கோர்த்து முன்னிருத்தி
சிங்காரமான தெய்வச்சபைதனிலே கங்கா குலம்விளக்க
கம்பர்சொன்ன வாக்கியங்கள் மங்களமும் கன்னி
சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியம்எல்லாம் அதிர்ந்து முழங்க மறையோர்கள்
வேதம் சொல்ல

வாத்தியங்கள் தான் அடங்க பந்தல் கிளரி
பாக்கிலைவழங்கி மேகமஞ்சள் மிஞ்சிகள் பூத்தி
பாகமஞ்சள் பந்தங்கள் பிடித்திட ஆடுவான் பாடுவான்
ஆலாத்திக்குட் படுவான் தேடிவந்து கைமுகைந்து
சிவா என்ற பேர்களுக்கு மாமனுர் கொடுக்கும் கேளு
மென்று

கட்டுமாடு கவலைப்பசு கட்டுக்கிடாரி பிரிவைகள் ஆடு
மாப்பிள்ளை ஊர்காணி ஆட்சிக்கு வட்டகலம்
செம்புடனே

குதிரையோர் பல்லாக்கு குறையாத செல்வமும்
எல்லாச்சீரும்

ஏர்வையாய்க் கொடுத்தும் கைக்கு நீர்வார்த்து
அம்மி மிதித்து அருந்ததியைத்தான் பார்த்து
ஆல்போல் கிளைகிளைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க
செல்வம் செழித்திருக்க தீர்க்காயுளாய் வாழ்ந்திருக்க
பார்த்த ஜனம்அத்தனை பாக்கியம் பெற்றிருக்க
இருந்தபெரி யோர்களெல்லாம் இனியதுபோல்
வாழ்ந்திருக்க

இம்மங்கல வாழ்த்திலே கூறப்பட்டுள்ள சில திருமணச் சடங்கு முறைகள் கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களுடைய திருமணங்களிலே இடம்பெறுவதில்லை என்பதையும் இவ் விடத்தில் மனங்கொள்ளுதல் அவசியமாகும். மங்கல வாழ்த்து முடிந்தவுடன் மணமகன் திருமணப் பந்தருக்குச் செல்வதற்கு ஆயத்தமாவான். மணமகன் மணப்பந்தருக்குச் செல்வதற்கு முன், முன்னுளிலே, வீரமரணம் எய்தியவர்களுக்காக நடப்பட்ட நாட்டாண்மைக்கல்லுக்கு அழைத்துச் செல்லப்படுவான். அவர்களுடைய ஆசியினை அவன் அங்கு பெற்றுக்கொண்ட பின்னரே மணப்பந்தருக்குச் செல்வான்.

இணைச்சீரு தவிர ஏனைய சடங்குகள் ஆண் வீட்டில் நடைபெற்றனபோலவே பெண் வீட்டிலும் நடைபெறும். காப்புக் கட்டுதல் முடிந்தபின்னர் பெண் உணவு எதுவுமே உட்கொள்ளமாட்டாள்; விரதமனுட்டிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் மணமகளுடைய இடத்துக்கு வந்தவுடன் அவனுக்கு உரிய மரியாதை செய்து **விடுதிவீடு** என அழைக்கப்படும் ஒரு வீட்டுக்கு இட்டுச்செல்லப்படுவான். இங்கிருந்து மணமகன் வீட்டார் திருமணச் சேலையினையும் அணிகளையும் ஊர்வலமாகக் கொண்டு பெண் வீட்டுக்கு வருவர். இச்சடங்கினைப் **பொன் பூட்டுதல்** என்பர். அதாவது ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்ட அணிகள் பெண்ணுக்கு அணிவித்தலாகும். சேலையையும் அவளுக்கு அளிப்பர். மணமகன் வீட்டுச் சீர்க்காரி மோதிரம் அல்லது ஒரு தங்க நாணயத்தினைக் கையில் எடுத்து இக்குலத்துப் பெண் மணமகனின் குலத்துக்குக் கொடுக்கப்பட்டாளெனப் பொருள்படும்படி பாடுவாள். பின்னர் மாப்பிள்ளை வீட்டார் விடுதி வீட்டுக்குத் திரும்பிச் செல்வர்.

முகூர்த்தத்துக்கு முன்னர் பெண்ணின் வீட்டிலே அவள் தாய்மாமன் அவளுக்கு மாலையணிந்து அவளுடைய நெற்றியிலே ஒரு தங்கத் தகட்டினைக் கட்டுவார். இது **பெண் எடுக்கும்** சடங்காகும். ஏனைய தாய் மாமன்மார் அவளுக்குக் குங்குமம் வழங்குவார்கள். முற்காலத்தில் தாய் மாமன்மார் பெண்ணை **நாட்டாண்மைக் கல்**லுக்கும் பின்னர் மணமேடைக்கும் தூக்கிச் செல்வதே வழக்கமாயிருந்தது. இக்காலத்தில் அவள் நடந்து செல்வாள்.

மணப்பந்தர் வாயிலிலே மணமகன் பெண் வீட்டாராலே வரவேற்கப்படுவான். மணமகளின் கடைசித் தங்கை மணமகனுடைய கால்களைக் கழுவி அவனுக்கு மாலையிடுவாள். பின்னர் அவன் தன்னுடைய சுற்றத்தினர் தொடர்ந்துவர மணமேடைக்கு அழைத்துச் செல்லப்படுவான்; மணமகளையும் அங்கு கூட்டி வருவர். மணமகள் முக்காலியிலே இருக்க மணமகன் பலகையிலே அமர்ந்திருப்பான்,

சீர்க்காரர் பூசையுடன் திருமணத்தை நடத்திவைக்கத் தொடங்குவார். தாலி கட்டுவதற்கு முன்னர் மணமகன் வீட்டார் மணமகளுக்குப் **பரியம்** ($1\frac{1}{4}$ ரூபா) கொடுப்பர். தாலித் தட்டு எல்லோரும் பார்த்து ஆசிவழங்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலே உயர்த்திக் காண்பிக்கப்படும். பின்னர் தாலி கட்டி மணமக்கள் மாலை மாற்றிக்கொள்வர். மணமக்கள் அடுத்துத் தம் பெற்றோர்களை வணங்குவர். மணமகளின் சகோதரன் மாப்பிள்ளையின் கைகளைப் பிடித்து வெற்றிலையும் சர்க்கரையும் வைத்த அரிசிக் குவியலின்மேல் தட்டும்படி செய்வான். அப்பொழுது நாவிதன் திரும்பவும் மங்கல வாழ்த்துப் பாடுவான். சிர்க்காரர் தம்பதிகளை வாழ்த்துதல் அடுத்து இடம்பெறும். அவர் வெற்றிலையினைப் பாலிலும் நீரிலும் தோய்த்து இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு முதலில் கரகத்தையும், பின்னர் மணமகனையும், கடைசியாக மணமகளையும் வாழ்த்துவார். கரகத்துக்கு வாழ்த்துக் கூறும்போது,

திங்கட்குடையுடைய சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் சிவந்து
பங்குக்கு மூன்றுபழம் தரவேண்டும் பாரப்பனம்துண்டமே

என்றும், மணமகனுக்கு வாழ்த்துக் கூறும்போது,

ஆயன்பதியில் அரன்பதிவந்து உற்ற அழக
மாயன் ஊதுங் கருவியானுலுந் தூயமணிக்
குன்றுபோல் விற்றிருக்கும் குவிமுலையாள் தன்னுடனே
இன்றுபோல் என்றும் இரு

என்றும், மணமகளுக்கு வாழ்த்துக் கூறும்போது

கணவனே தெய்வம் கருத்ததனில் வைப்பாய்
குணமலி தார்க்குழலி மாதே குணமுடைய
காந்தன் மகிழக் கலந்துவிளையாடத் திரு
வேந்தர் எடுத்தார் அறுகு

என்றும் பாடுவார். வயது முதிர்ந்த சில ஆண்களும் இவ்வாறே பாடி வாழ்த்துவார்கள். பின்னர் மணமக்களுடைய சின்ன விரல்களை ஒரு சிவந்த துணியாலே கட்டி விடுவர். அப்பொழுது மணமக்கள் மணமேடையை மும்முறை வலம் வருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண நடைமுறைகள் எல்லாவற்றையும் **முகூர்த்தம்** எனக்கூறுவர். அம்முகூர்த்தத்தின் முக்கிய அமிசமாகக் **கரகம்** அமைகின்றது. திருமண நாளன்று தாயாதிகள் சிலர்பூசைக்கு வேண்டிய பொருட்கள், பால் ஆகியனவற்றைக் கொண்டு அருகாமையிலிருக்கும் ஒரு பாம்புப் புற்றுக்குச் செல்வர். அப்புற்றுக்குத் திருநீறு, குங்குமம் முதலியன பூசி, புற்றினுள் பாலை ஊற்றிப் பூசைசெய்வர். பின்னர் அப்புற்று மண்ணை மூன்று சிறிய கூடைகளில் எடுத்து வீட்டுக்குக் கொண்டு வருவர். அதனை நீருடன் குழைத்து நாற்சதுரமுள்ள தொட்டியாகச் செய்து மணமேடைக்கு முன்னர் வைப்பர். மாவிலை கட்டப்பட்ட கரும்பு ஒன்றும் அதனருகே நிறுத்தப்படும். இரண்டு மண் சட்டிகளிலே வைக்கப்பட்ட மட்குடங்கள் இருபக்கங்களிலும் வைக்கப்படும். ஒன்றில் நீரும் மற்றையதில் நெல்லும் நிரப்பப்பட்டிருக்கும். அக்குடங்களின் மேலே வெற்றிலை கொண்ட மண் சட்டிகள் வைக்கப்படும். இவற்றுக்கு முன்னலே **உரல்** நிறுத்தி வைக்கப்படும். அதன் மேலே ஒரு பெரிய தீபத்தினை ஏற்றிவிடுவர். முகூர்த்தக் கிரியைகள் தொடங்குவதற்கு முன்னர் கரகத்துக்கே பூசை செய்யப்படும். முகூர்த்தம் முடிந்த பின்னரும் அதற்குப் பூசை நடைபெறும். கரகத்தில் வைக்கப்பட்ட நெல்லும், மணமகன் வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட நெல்லும் குற்றப்பட்டு, அவ்வரிசியினைச் சமைத்து மூன்றும் நாளன்று கணபதிக்கு நிவேதிப்பர். அவ்வேளையிலே மணமகன் மணப்பெண்ணின் கழுத்தைச் சுற்றி ஒரு மஞ்சட் கயிற்றினைக் கட்டுவான்.

முகூர்த்தம் முடிவடைந்தபின்னர் மணமக்கள் நீராடுவர். பின்னர் மணப்பெண் மாப்பிள்ளைக்கு முதன் முறையாக உணவு பரிமாறுவாள். ஆனால், மணமகன் அவ்வுணவினை உண்ணாது சலவைத் தொழிலாளிக்குக் கொடுப்பதே வழக்கமாயுள்ளது. இச் சடங்கு **சட்டுவச் சோறு** எனப்படும்.

திருமணச் சடங்குகளெல்லாம் முடிந்த அன்று மாலை மணமக்கள் மணமகன் வீட்டுக்குச் செல்வார்கள். அங்கு சென்றவுடன் முதலில் பாலும் வாழைப்பழமும் அவர்களுக்கு வழங்கப்படும். பின்னர் தங்க, வெள்ளி அல்லது செம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயங்கள் இடப்பட்ட நீர்க் குடத்துக்குள் கையை இட்டு அந் நாணயங்களை எடுக்க முயற்சிப்பர். அவ்வாறு எடுக்கப் படும் நாணயங்களைக்கொண்டு அவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைகள் பற்றி ஆருடம் கூறப்படும். அடுத்த நாள் மணமகள் வீட்டார் அங்குவருவர். அவர்களை மாப் பிள்ளை வீட்டார் நன்கு வரவேற்று உபசரிப்பர். இரு குடும்பங்களுக்குமிடையே இறுக்கமான தொடர்பு இதன் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது.

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடும் திருமண முறைகள் தமிழகத்திலே வேரூன்றிய போதிலும் பண்டைத் தமிழரிடையே நிலவி வந்த மணமுறைகளும் பேணப்பட்டு வந்துள்ளன என்பதற்குக் கொங்குவேளாளக் கவுண்டர்க ளிடையே நிலவும் திருமண நடைமுறைகள் சான்று பகரு கின்றன.

## 5. முடிவுரை

மிகப்பரந்துபட்ட இலக்கிய காலத்து (கி. பி. 300 தொடக்கம் கி. பி. 1900 வரை)த் திருமண நடைமுறை களுள் முக்கியமான பண்புகள் இக்கட்டுரையிலே தரப் பட்டுள்ளன. இத்திருமண நடைமுறைகளுடைய சமூக, பொருளாதார, பண்பாட்டு அடிப்படைகள் மேலும் விரி வான ஆய்வுக்குட்படுத்த வேண்டியவை. அத்தகைய ஆய்வினை இக்கட்டுரை மேற்கொள்ளவில்லை. ஏற்கனவே கூறியதுபோல் தமிழர் திருமண நடைமுறைகளை ஓரளவு ஆவணப்படுத்தும் நோக்கத்துடனேயே இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது. இதுவரை கூறப்பட்ட திருமண நடை முறைகளை வரிசைப்படுத்தி நோக்கின், அவற்றுள் எவை பண்டுதொட்டு வந்த தமிழர் மணமுறைகள் என்பதையும், எவை ஆரிய மணமுறைகள் என்பதையும் இனங்கண்டு கொள்ளலாம்.

### அடிக்குறிப்புகள்

1. பார்க்கவும்: இந்நூலின் முதலாம் இயல், ப. 27–28.
2. மேற்படி, ப. 32–33; 64–65.
3. மேற்படி, ப. 40–43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஊடற் காலத்திலே காலையும் பிடிக்கவேண்டியேற் பட்டால், அவ்வாறே மனைவியினுடைய காலைப் பிடிப் பதை அக்கினி முன்னுலே திருமணத்திலேயே பிடித்துக் காட்டுவதை அம்மிமிதித்தல் உணர்த்துவதாகத் திருப்பே ரூர்ப் புராணம் கூறுகின்றது. அப்புராணத்தின் தெய்வ யானை திருமணப் படலத்தில் முருகப் பெருமான் தெய்வயானையின் பாதத்தைப் பற்றி அம்மியிலிட்டதை,

மகளிர்பால் வணக்க மோம்பி மைந்தர்க ளின்பந்துய்க்குந்
தகுதியு மூடன் மாட்டுச் சாருதற் கங்கி சான்று
அகிலமுந் தெரிக்கு நீதி யாதரித் தணங்கு பாத
நகுமுகத் திளையோன் பற்றி நகைமணி யம்மி யிட்டான்.

என்று கச்சியப்ப முனிவர் கூறுகிருர். மகளிரிடத்து வணக்கம் ஓம்புதலையே அம்மி மிதித்தலின் முதலாவது பொருளாக

ஆசிரியர் கூறியுள்ளது மனங்கொள்ளத்தக்கதாகும்.

5. See, Meenakshisundarm, K., "A Brief Study of the Marriage System of the Konku Vellala Gounder Community", **Journal of Tamil Studies,** December 1974, p. 2

6. பார்க்கவும் : Subramaniam, **South Indian Temple Inscriptions**, Vol. III, Part, II, pp. 312-13.

7. Ibid.

8. யாழ்ப்பாண வைபவ கௌமுதி, ப. 139.

9. Meenakshisundaram, K (1974)

**இக்கட்டுரை எழுதுவதற்குப் பின்வரும் உசாத் துணைகள் உதவின :**

சரவண. ஆறுமுகமுதலியார், ''தமிழர் திருமண முறைகள்'' மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர், 1966, பக். 351—57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சிதமலர் நவரத்தினம், இந்துப் பண்பாட்டில் திருமணச் சடங்குகள், இந்து நாகரிக பட்டப்பின் டிப்ளோமாத் தேர்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு (பிரசுரிக்கப்படாதது), யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1978.

வேலுப்பிள்ளை, மெஸ். க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி, யாழ்ப்பாணம், 1918.

Devapoopathy Natarajah, "Courtship and Marriage in the Classical Period", **Journal of Tamil Studies**, Vol. I, No. 2, 1969, pp. 19-42.

Meenakshisundaram, K., "A Brief Study of the Marriage System of the Konku Veḷḷāḷa Gounder Community", **Journal of Tamil Studies**, Vol. 6, Dec. 1974, pp. 1–10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் மூன்று

# யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்து மக்களிடையே நிலவுகின்ற திருமண நடைமுறைகள்

க. சொக்கலிங்கம் (சொக்கன்)

பொது நூலகம்.
மாட்சிமன்றம் கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய உபகண்டத்திற்குத் தென்மேற்கில் அமைந்துள்ள, மாங்கனி வடிவம் உடையதும் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுப் பழைமை வாய்ந்ததுமான இலங்கைத் தீவு 25000 சதுரமைற் பரப்பளவே உடையது. இதன் வடக்கில் குடாநாட்டமைப்பில் விளங்கும் நிலப்பகுதி யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ள ஏழு சிறிய தீவுகளும் யாழ்ப்பாணத்துடன் இணைந்தவையாகவே கொள்ளப்படும்.

இந்துசமயம், கிறிஸ்தவ சமயம், கத்தோலிக்க சமயம், இஸ்லாமிய சமயம் என்ற நால்வகைச் சமயங்களையே பெரும்பாலும் கடைப்பிடிப்போர் இங்குவாழ்ந்தாலும் மொழி, இனம் என்ற இரண்டினது அடிப்படையிலும் நோக்கும் பொழுது இவர்களை ஒரு குழுவினராகவே கொள்ளலாம். எனினும் மொழி இன ரீதியான ஒருமைப்பாட்டை விஞ்சிக் கொண்டு தாந்தாம் கடைப்பிடித்துவரும் சமயரீதியான வாழ்க்கை முறைகளும் திருமண மரணக் கிரியைகளும் சம்பிரதாயங்களும் இவர்களிலே மேலோங்கி நிற்பதையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். எனவே யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்களின் பழக்க, வழக்க, கலாசாரக் கடைப்பிடிகளை நாம் சமயரீதியாகவே பிரித்து நோக்கவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. இவ்வகையில் யாழ்ப்பாணத்துத் தமிழ் இந்துக்களிடையே நிலவுகின்ற திருமண முறைமைகளே இக்கட்டுரையில் (தனித்து) விளக்கத்திற்கென எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு எடுத்துக் கொள்வதிலும் ஒரு சங்கடம் உண்டு. காலாதி காலமாக இந்துக்களிடையே நிலவிவரும் சாதிப் பாகுபாடு காரணமாகவும் திருமண சம்பிரதாயங்களிடையே சிறுச் சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையை, 'யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்துக் களிடையே நிலவுகின்ற திருமணமுறைமைகள்' என வரையறை செய்து கொள்கிறேன்.

## யாழ்ப்பாணத் தமிழர் யார்?

யாழ்ப்பாணத் தமிழரின் ஆதாரபூர்வமான வரலாறு பதிநான்காம் நூற்றுண்டிலிருந்துதான் எமக்குக் கிடைக் கின்றது: இவர்கள் இந்தியாவில் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறியதும் 'ஆரியச் சக்கரவர்த்திகள்' என்ற அரச பரம்பரையினர் இவர்களை ஆட்சி செய்ததும் பின்னர் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகி யோர் ஒருவர் பின் ஒருவர் ஆதிக்கம் கொண்டதும் வரலாறு கூறும் செய்திகள். பிறசமயத் தாக்கங்கள், மொழி, நாகரிகச் செல்வாக்குகள் ஆகியன இங்கு வாழ்ந்த தமிழ் இந்துக்களின் வாழ்க்கையிலே பெரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. இவர்களது சமயத்திலும் மரபு முறை களிலும் இன்றும் பழைமையின் பிடிப்பு முற்றுகத் தளர்ந்து விடவில்லை. ஆக, தமது பூர்வவாசப் பிரதேசத்திலிருந்து தாம் கொணர்ந்த சமய, கலாசார வாழ்க்கை அநுசாரங்களை யாழ்ப்பாண இந்துக்கள் சிறுச்சிறு மாற்றங்களுடன் இன்றும் கடைப்பிடித்தே வருகின்றனர். இத்தகைய கடைப்பிடி களுள் சாதிப்பாகுபாடு முதன்மையானது.

## யாழ்ப்பாணத் தமிழ் இந்துக்களிடையே உயர்சாதியார் என்பவர் யார்?

விவசாயத்தையே முதன்மைத் தொழிலாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில் நில உடைமையாளர் மேனிலையினை அடைவது தவிர்க்க முடியாததே. எனவே வேளாளர் என்னும் நிலப்பண்ணையாளர்களே இங்கு உயர்சாதியார்கள் ஆகின்றனர். இவர்களின் சமயக் கிரியைகளையும் ஆலய வழிபாடுகளையும் நெறிப்படுத்தும் பிராமணர்கள் மதிப் பிற்கும் வணக்கத்திற்கும் உரியவர்களாயினும் இவர்களின் வாழ்க்கையும் வேளாளர்களைச் சார்ந்திருப்பதால் 'சாதி மான்' என்ற வரைவிலக்கணத்திற்கு உரியவன் வேளாளனே:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவியர், பள்ளர், வண்ணார், அம்பட்டர் முதலியோர் அண்மைக் காலம்வரை இவர்களின் அடிமை, குடிமைகள் எனவே கொள்ளப்பட்டனர். 1844ஆம் ஆண்டில் பிரித்தானியரால் அடிமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டதால்[2] இவர்களின் தளைகள் பெயரளவில் உடைந்தாலும் இந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தாழ்த்தப் பட்டோரின் நிலைமை உயர்ந்தது என்று சொல்லல் இயலாது. இன்றும் முற்றாகச் சாதிப்பாகுபாடு ஒழிக்கப்பட்டு விட்டது என்றும் பெருமைப்படல் இயலாது. செட்டிகள், மீனவர், தச்சர். தட்டார், பண்டாரங்கள், சேணியர், செங்குந்தர், சான்றார், கொல்லர், சாயக்காரர் முதலாகத் தத்தம் தொழில்களாலே அழைக்கப்படும் மற்றைச் சாதியார் அடிமை நிலைக்குத் தள்ளப்படாவிட்டாலும் ஒரு காலத்தில் வேளாளரையே சார்ந்து வாழ்ந்த காரணத்தால் இவர் களும் ஓரளவு சமூகத் தாழ்வுக்கு உட்படுத்தப் பட்ட வர்களே. எனினும் சமய, கலாசார அநுட்டானங்களில் வேளாளர்களிலிருந்து இவர்கள் அதிகம் வேறுபட்டவர்க ளல்லர். எனவே உயர்சாதி இந்து மணமுறைமைகளிற் பல வற்றை இவர்களும் கடைப்பிடித்தே வருகின்றனர் என்பதும் மறுக்க இயலாததே.

## திருமண முறைகளின் பகுப்பு

யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்துக்களிடையே நிலவுகின்ற திருமண முறைகளைப் பின்வரும் பகுப்புகளில் வகுத்து நோக்கலாம்:

(அ) திருமணத்தை உறவினரிடையே நடத்தலும் திருமணப் பருவமும்

(ஆ) திருமணப் பேச்சுக்கால்

(இ) மணமக்கள் பொருத்தம்பார்த்தல்

(ஈ) சமயக்கிரியைகள்

(உ) கொண்டாட்டங்கள்

ஊ) சீதனம் வழங்கல்

(எ) திருமணத்தின் பின்பு மணமக்கள் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) திருமணத்தை உறவினரிடையே நடத்தலும் திருமணப் பருவமும்

பெருமளவு கூட்டுக் குடும்பவாழ்க்கையே நீண்டகாலமாக அண்மைக் காலம் வரை இங்கு நிலவியது. திருமணத் தொடர்புகள் இக்காரணத்தால் பெரும்பாலும் உறவுகளுக்கிடையே நடைபெறுதலே வழக்கமாய் இருந்தது. மாமன் மகன், மகள், மாமி மகன், மகள் (இவர்கள் முறையே மச்சான் (மைத்துனன்) மச்சாள் (மைத்துனி) எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்படுவர்) ஆகியோர் ஒருவரை ஒருவர் மணந்து கொள்ளும் வழக்கம் இருந்து வந்தது; இன்றும் ஓரளவுக்கு இருந்து வருகிறது. தமிழ் நாட்டிற் போலச் சகோதரியின் மகளை மணக்கும் முறைமை இங்கில்லை. ஆனால் 'மச்சாள் அல்லது மச்சாளின் மகளை' மணக்கலாம் என்ற மரபுமுறையும் சிறிய அளவில் நிலவுகின்றது.

ஆண்மகன் ஒருவன் பிறந்து சில ஆண்டுகளுக்குப்பின் அவன் மைத்துனி ஒருத்தி பிறந்தாளானல் அவனுக்கு இவள் என்று அப்பொழுதே தீர்மானித்து விடுதலும் யாழ்ப்பாண இந்துக்குடும்பங்களிடையே நிலவிவந்த ஓரளவு இன்றும் நிலவுகிற வழக்கமாகும். இதனைப் பேச்சுவழக்கில் சானைச் சீலை போடுதல் என்பர்.

ஒரே இரத்த உறவில் திருமணம் செய்வது உடல் உள ரீதியிலே பாதிப்பினை உண்டாக்கும் என்ற அறிவியல் ரீதியான விழிப்பு உண்டாகாவிட்டாலும் கொடுத்த சீதனத்தைப் பெறக் கருதியும், உத்தியோக உயர்வினை நோக்கியும், உயர் குடும்பத் தொடர்பினை விரும்பியும் உறவிற்கு வெளியில் திருமணம் செய்யும் வழக்கம் இன்று அதிகரித்து வருவது குறிப்பிடத் தக்கது.

இதனைவிட மாற்றுச் சம்பந்தம் என்ற ஒருவகைத் திருமணமுறையும் காணப்படுகிறது. அண்ணன், தங்கையாகிய இருவர் வேறு குடும்பத்தின் தங்கை, அண்ணன் (சில சமயங்களில் தமக்கை, தம்பியுங் கூட) ஆகிய இருவரை மணத்தலே **மாற்றுச் சம்பந்தம்** எனப்படும். பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதாரச் சிக்கனம், குறைவான சீதனம் என்பன கருத்திற் கொள்ளப்படும்போது இத்தகைய சம்பந்தங்களுக்கு இடம் உண்டாகிறது. எனினும் இத்தகைய திருமணத் தொடர்பு களால் பெரும்பாலும் சண்டை, சச்சரவுகள், மனத் தாபங்கள் என்பன தவிர்க்கமுடியாத அளவு ஏற்படுவதால் இதனை அதிகமான இளைஞர்கள் விரும்புவதில்லை. தனக்கு விருப்பமான முறையில் கணவனையோ, மனைவியையோ தெரிந்து கொள்ளவும் மாற்றுச் சம்பந்தம் தடைக் கல்லாக இருப்பதும் இளைஞர்கள் கருத்திற் கொள்வதாலும் மாற்றுச் சம்பந்தம் அத்துணை ஆதரவைப் பெறவில்லை எனலாம்.

ஒரே சாதி, ஒரே சமூக அந்தஸ்து உடையவர்களிடை யேயும் ஊர் விட்டு வேறு ஊர் சென்று பெண் எடுப்பதோ மாப்பிள்ளை எடுப்பதோ அகௌரவம் என்ற மனப்பான்மை யும் ஒரு காலத்தில் நிலவியது. ஆனால் இன்றைய அறிவு வளர்ச்சியும் கல்வி முன்னேற்றமும் இத்தகைய நோக்கினை ஆதரிப்பதில்லை. மேலும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களுக் கிடையிலும் குலம், கோத்திரம், சமூக அந்தஸ்து, அவர்கள் மணம் செய்துகொண்ட குடும்பம் என்பவற்றின் அடிப் படையில் உயர்வு தாழ்வு கற்பித்து அதன் காரணமாக மண உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தயங்கும் நிலையும் உள்ளது. இதுவும் இன்று தளர்ச்சி அடைந்து வருகிறது.

திருமணத்தைப் பொறுத்தவரையில் பாலிய மணமுறை யாழ்ப்பாணத்தில் நிலவியதற்கு எத்தகைய சான்றுகளும் இல்லை. ஆனால் பருவம் அடைந்த சில ஆண்டுகளுக் கிடையில் (பதினான்கு வயது தொடக்கம்) பெண்ணுக்கும் தன் உடலால் உழைத்துக் குடும்பத்தை நிருவகிக்கும் திறன் பெற்றுவிட்ட ஆணுக்கும் (பதினெட்டு வயது தொடக்கம்) திருமணம் செய்து வைக்கும் முறைமை நிலவியது உண்டு. இன்று சராசரி இருபத்தைந்து வயதடைந்த ஆணுக்கும் பத்தொன்பது இருபது வயதடைந்த பெண்ணுக்குமே திரு மணம் நடக்கிறது. இந்தத் திருமணப் பருவங்கூடச் சாதாரண படிப்பறிவு குறைந்தவர்களிடையேதான் பெரு மளவு கணிப்பிற்கு உள்ளாகிறது. படித்த உயர்வர்க்க மத்திய வகுப்பினரிடையே பெரும்பாலும் முப்பது வயதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிய ஆணையும் இருபத்தைந்து வயதை எட்டிய பெண்ணையுமே திருமண உறவால் பிணைத்து வைக்கின்றனர். பொருளாதார ரீதியான எதிர்கால நோக்கும், குடும்பப் பொறுப்பினை உணர்ந்த தன்மையும் படித்தவர்களிடையே திருமணப் பருவகாலத்தைப் பின்தள்ளுவதற்கு இடம் அளிக்கின்றன.

(ஆ) **திருமணப் பேச்சுக்கால்**

திருமணப் பருவத்தை அடைந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை **மகட் பேசல்** என்பது இலக்கிய வழக்கு. இதனைச் சாதாரண பேச்சு வழக்கில் **கலியாணப் பேச்சுக்கால்** என்பர். பெண்ணுக்கு வீடு, நகை, பணம். பிறபொருட்களை அளித்து—இதனைச் **சீதனம்** என்ற சொல்லால் வழங்குவர் —விவாகம் செய்து வைக்கவேண்டிய பாரிய பொறுப்பு, பெண்ணைப் பெற்றவர்களுக்கே இருப்பதால் அவர்களே தமது பெண்ணிற்குத் திருமணம் பேச முதலில் தொடங்குவர். (சீதன வழக்கின் தன்மைகள் பற்றிப் பின்பு விரிவாகப் பார்ப்போம்)

ஊரிலுள்ள முதியோரான அநுபவசாலிகளே மணமகன், மணமகள் இருபகுதியாரிடையும் இந்தப் பேச்சுக்கால் நடத்துவர். பேச்சுக்கால் ஓரிருநாட்களில் முடியக் கூடியதன்று வருடக்கணக்கில் நீள்வதும் உண்டு. பலவேறுவிஷயங்களையும் ஆழமாக அலசி ஆராய்ந்து இருபகுதியாருக்கும் திருப்தி ஏற்பட்டால் மட்டுமே திருமணத்திற்கான ஆயத்தங்கள் அடுத்து மேற்கொள்ளப்படும். வேறு வகையிற் சொல்வதானால் எத்தனையோ சம்பந்தங்கள் பேசப்பட்டு இறுதியில் ஒன்றுதான் சரிவரும். 'ஆயிரம் செருப்புத் தேய்ந்தால் தான் ஒரு கலியாணம் நடக்கும்' என்ற கருத்துப்பட வழங்கும் பழமொழியும் இதனையே குறிப்பிடுகின்றது.

இக்காலத்தில் திருமணம் பேசுவோர் பெரும்பாலும் அதனை ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர். இந்தத் தொழிலைத் தரகு என்று கூறுவர். தரகருக்கே உரிய முறையில் உள்ளதைப் பெரிதுபடுத்தியோ இல்லாததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதாகச் சொல்லியோ சம்பந்தங்களைச் செய்து வைத்து இருபகுதியாரிடையேயும் கொழுத்த தரகுப் பணத்தை இவர்கள் பெற்றுக் கொள்வார்கள். இவர்களின் இந்தப் போக்கினைப் புலப்படுத்த 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணத்தை முடி' என்ற பழமொழியும் வழங்கி வருகிறது. கலியாணத் தரகர்களை நகைச்சுவைப் பாத்திரங்களாய் ஆக்கி அவர்களையும் அவர்கள் மூலமாகச் சமூகக் குறைபாடுகளையும் நையாண்டி செய்து இலக்கியம், நாடகம் போன்றவற்றைப் படைக்கும் எழுத்தாளர் பலர் எம்மிடையே உள்ளனர். திருமணத் தரகினை நடத்த இன்று சில நிறுவனங்களும் தோன்றியுள்ளன என்பது சுவாரசியம் தரும் ஒரு செய்தி.

(இ) மணமக்கட் பொருத்தம் பார்த்தல்

யாழ்ப்பாணத்தில் சென்ற நூற்றுண்டின் நடுப்பகுதியில் மிஷனரி டாக்டராய் வந்து ஆங்கில வைத்தியத் துறையை இங்கு அறிமுகம் செய்து வைத்த அமெரிக்கரான டாக்டர் சாமுவேல் ஃபிஸ்க் கிறீன் (Samuel Fisk Green) என்பார் 1834ஆம் ஆண்டில் தம் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ''இந்து சமயமானது மக்களின் நாளாந்த சமூக வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது''[3] எனக் குறிப்பிட்டுள்ளார். இஃது உண்மையே. யாழ்ப்பாண உயர் இந்து மக்களிடையே மணமக்களின் மணப் பொருத்தம், வயசுப்பொருத்தம், தோற்றப்பொருத்தம் என்பவற்றிலும் அதிகமாகச் சோதிட நூலில் சொல்லப்பட்ட பதினன்கு வகைப் பொருத்தங்களே முதன்மையானவையாகக் கொள்ளப்படுகின்றன. ஆண்டுதோறும் வெளியாகும் பஞ்சாங்கம் (திதி, வாரம், யோகம், கரணம், நட்சத்திரம் என்ற ஐந்தினையும் கணித்துக் கூறுவது பஞ்சாங்கம்) மணமகளுக்கெனப் பதினன்கு பொருத்தங்களைத் தவருது எடுத்துக்காட்டும்[4]. அவை வருமாறு :

1. கிரகப் பொருத்தம்

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் (குரு), வெள்ளி (சுக்கிரன்), சனி, இராகு, கேது என்ற ஒன்பது கிரகங்களில் ஒருவர் பிறக்கும்போது அவை நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தின் அடிப்படையிலேயே மணமக்களின் கிரகப் பொருத்தம் கணிக்கப்படுகிறது. இதற்கென ஒருவித கணித முறை சோதிடர்களாற் கையாளப்படும். கணிப்பின்போது இருவரது கிரகங்களின் நின்ற இடத்தினது கூட்டுத்தொகை சமமாயின் பொருத்தம் சிறப்பாயிருக்கும். ஒருவருக்கு ஒன்று குறைந்தால் மத்திமம். ஒன்றுக்கு மேற் குறையு மாஞல் பொருத்தமில்லை. ஆஞல் செல்வாய்கிரக எண்ணிக் கையில் ஒன்று குறைந்தாலும் பொருத்தம் என்று கொள்ளப் படுவதில்லை.

ஒருவர் பிறக்கையில் செவ்வாய்க்கிரகம் ஒன்று. இரண்டு ஏழு எட்டு ஆகிய இடங்களில் ஒன்றில் நின்ருல் அவருக்குச் செவ்வாய் தோஷம் எனக் கொள்ளப்படும். அவரால் மணக் கப்படுபவருக்கு அகால மரணம் ஏற்படும் என்பது நம்பிக்கை. இந்தத் தோஷக்காரர் தமது கணவன் அல்லது மனைவியைத் தெரியும்போது தமது செவ்வாயின் இட எண்ணிக்கையே உள்ளவரைத் தெரிந்துகொண்டால் தோஷம் இல்லை. இவ்வாறு சம இடத்தில் செவ்வாய் அமைவது அருமையாய் நிகழும் ஒன்றேயாதலால் செவ்வாய் தோஷக்காரர்களின் திருமணங்கள் நடைபெறக் காலம் மிகுதியும் நீடிப்பது உண்டு.

## 2. நட்சத்திரப் பொருத்தம்

ஒவ்வொருவரும் பிறக்கும் நாள் எந்த நட்சத்திரத்திற்கு உரியதோ அதுவே அவரின் ஜன்ம நட்சத்திரமாகும், அச்சுவினி, ரோகிணி முதலாக இருபத்தெட்டு நட்சத் திரங்கள் கூறப்படுகின்றன. இவற்றில் இன்ன நட்சத் திரத்திலே பிறந்தவருக்கு இன்ன நட்சத்திரத்திற் பிறந்த வரே பொருத்தமானவர் எனக் கொள்ளப்படுவர். இருவரும் பிறந்தது ஒரே நட்சத்திரமாயின் அந்நட்சத்திரம் இரு வரையும் பொறுத்தவரையில் நாளின் முதற்கால பகுதிக் குரியதா அல்லது இரண்டாம் காற்பகுதிக்குரியதா என்று கணித்து நாலுகால்களில் வேறுவேருன காற்பகுதியில் அமையின் அது பொருத்தமாயிருக்கும். ஏனெனில் இந்தக் காற்பகுதிகளுக்கேற்ப இராசிகள் (கற்கடகம், மிதுனம் முதலிய பன்னிரண்டு இராசிகள் இருபத்திரண்டு நட்சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரங்களில் இவை இவைக்கு உரியன என வகுக்கப்பட்டுள்ளன.) வேறுபட்டவையாக இருப்பதேயாகும். நட்சத்திரப் பொருத்தத்தில் இன்னும் நுணுக்கமான பல வேறு கணிப்புகள் உள்ளன.

### 3. கணப்பொருத்தம்

நட்சத்திரங்களில் இவை இவை இன்ன இன்ன கணத்தைச் (கூட்டத்தை) சேர்ந்தவை என்ற வகையீடு உண்டு. தேவகணம், மனுஷகணம், இராட்சத கணம் என்பன கணப்பகுப்புகளாகும். மணமகனும் மணமகளும் ஒரே கணமாயின் பொருத்தம் உண்டு. தேவ கணமும் மனித கணமும் என்ருலும் ஒரளவு பொருத்தம் என்று கொள்ளலாம். தேவகணம்–இராட்சதகணம், மனித கணம்–இராட்சதகணம், பொருந்தமாட்டாதவை.

### 4. மாஹேந்திரப் பொருத்தம்

பெண்ணின் நட்சத்திரம் முதலாக 4–7–10–13–16–19–22–25 நாட்கள் மணமகனின் பிறந்த நாட்களாய் இருப்பின் பொருந்தும்.

### 5. ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

பெண்ணினுடைய நட்சத்திரத்திலிருந்து மணவாளனின் நட்சத்திரம் 13 ஆவதாயின் உத்தமம். 9–13 வரை இருப்பின் மத்திமம். மற்றவை அதமம்.

### 6. யோனிப் பொருத்தம்

நட்சத்திரம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விலங்கு அல்லது ஊரும் பிராணியின் யோனி ஒப்பிடப்பட்டுள்ளது. (யோனி–organ) இன்ன யோனிக்கு இன்னயோனியே பொருத்தம் என்று வகுக்கப்பட்டும் உள்ளது.

| | நட்சத்திரம் | யோனி |
|---|---|---|
| உதாரணம் I | அச்சுவினி | ஆண் குதிரை |
| | பரணி | ஆண் யானை |

இவை பொருத்தமான யோனிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உதாரணம் II | நட்சத்திரம் | யோனி |
|---|---|---|
| | அச்சுவினி | ஆண் குதிரை |
| | அத்தம் | பெண் எருமை |

இவை பொருத்தமற்ற யோனிகள்.

7. இராசிப் பொருத்தம்

பெண்ணுக்குரிய இராசியும் ஆணுக்கு உரிய இராசியும் ஒன்முகவே இருப்பதும் 1–6 வித்தியாசத்திற்கு மேற்பட்டிருப்பது நன்று. வித்தியாசம் 1–6 உக்குக் குறைந்தால் பொருத்தம் இல்லை.

8. இராசியதிபதிப் பொருத்தம்

சூரியன் (ஞாயிறு) முதலாக உள்ள கிரகங்கள் மேலே குறித்த இராசிகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அதிபர்களாவர். இந்த அதிபர்களில் ஒருவருக்கு ஒருவர் நண்பராகவும் இருப்பர். சிலர் சிலருக்குப் பகையாகவும் இருப்பர். நண்பர்கள் அதிபர்களாய் உள்ள இரு இராசிக்காரர்கள் மணம் செய்வது பொருத்தம். பகைவர்களை அதிபர்களாகக் கொண்ட இராசிகாரர் மணப்பது பொருந்தாது.

9. வசியப் பொருத்தம்

ஒரு இராசிக்கு இன்னொரு இராசி இணைவாக இருக்கும். வேறொரு இராசி முரண்படல் கூடும். இணைவாக இருக்கும் இராசிகள் ஒன்றுக்கொன்று வசிய இராசிகளாகும்.

உ–ம் : மேடராசிக்கு வ. இ.—சிங்கம், விருச்சிகம்.

இருவரது இராசிகளும் ஒன்முக இருந்தாலும் வசிய இராசிகளாய் இருந்தாலும் பொருத்தம். இப்படியில்லாவிடில் பொருத்தம் இல்லை.

10. இரச்சுப் பொருத்தம்

முன் கூறிய இருபத்தெட்டு நட்சத்திரங்களையும் தலை, கழுத்து, வயிறு, கால் என்ற நான்கு உறுப்புக்களாகப் பிரிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் ; மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் என்பன தலைப்பகுதிக்குரியவை.

ரோகிணி, திருவாதிரை, அத்தம், சுவாதி, திருவோணம், சதயம் ஆகியன காலின் பகுதிகள்.

இவ்வாறே பிற நட்சத்திரங்களும் மற்றைய உறுப்புப் பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

ஒரே உறுப்புப் பகுதியில் அமைந்த நட்டத்திரத்தை உடைய இருவர் மணம் செய்வது பொருத்தம் இல்லை. தீமைகள் ஏற்படும். எனவே வெவ்வேறு உறுப்புக்களுக்கு உரிய நட்சத்திரங்களை உடையவருக்கிடையேதான் மணம் நடத்தலாம்.

## 11. வேதைப் பொருத்தம்

இன்ன நட்சத்திரத்திற்கு இன்ன நட்சத்திரம் வேறுனது (வேதை) ஆகும் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய வேதை நட்சத்திரம் உடையோர் மணஞ் செய்தலாகாது.

## 12. விருக்ஷப் பொருத்தம்

இன்ன இன்ன நட்சத்திரத்திற்கு இன்ன இன்ன விருட்சங்கள் என்றும் வகுக்கப்பட்டுள்ளன. இன்ன விருட்சத்திற்கு உரிய நட்சத்திரக்காரர் இன்ன விருட்சத்திற் குரிய நட்டசத்திரக்காரரையே மணக்கலாம். இன்ன விருக்ஷத்திற் குரிய நட்சத்திரகாரரை மணத்தல் கூடாது என்ற விதியும் உண்டு. விருக்ஷத்திற் சில வைர மரமாக இருக்கும்; சில பால் மரமாக இருக்கும். பால்மர நட்சத்திரக்காரர்களாய் இருவரும் இருப்பது உத்தமம். பெண்ணின் நட்சத்திரம் பால்மரமாகவும் ஆணின் நட்சத்திரம் வைரமரமாகவும் இருப்பினும் பொருந்தும். பெண் நட்சத்திரம் வைர மரமாகவும் ஆணின் நட்சத்திரம் பால்மரமாகவும் இருப்பினும் தவறில்லை. ஆனல் இரண்டு நட்சத்திரங்களும் வைரமரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு உரியனவானல் பொருந்தமாட்டா. இவற்றின் பொருத்தப்பாடு, பொருத்தப்பாடின்மை கொண்டே பிள்ளைப்பேறு நிருணயிக்கப்படுகிறது.

## 13. ஆயுட்பொருத்தம்

பெண், ஆண் ஆகிய இருவரதும் நட்சத்திரங்கள் வரிசையில் எந்த எண்ணிக்கையில் வருகின்றதோ அந்த இரு எண்ணிக்கைகளையும் தனித்தனி ஏழால் பெருக்கி இருபத்தேழால் பிரித்து வரும் தொகை சமமாய் இருந்தால் மிகுபொருத்தம். ஆணின் எண்ணுத் தொகையிலிருந்து ஏழு எண்கள் வரை குறையினும் பொருத்தமே. ஏழுக்குக் குறைந்தால் பொருத்தம் இல்லை. நிறைந்த ஆயுள் இராது.

## 14. புத்திரப் பொருத்தம்

குறித்த சில கிரகங்கள் குறித்த சில இடங்களில் இருப்பினும் பாவக் கிரகங்களோடு சேர்ந்திருப்பினும் அத்தகைய இருப்பும் சேர்க்கையும் உடைய ஆண், பெண் விவாகம் செய்தால் அவர்களுக்குப் புத்திர தோஷம் உண்டு என்று கொள்ளப்படுகிறது. இத்தகைய இருவர் மணந்து கொண்டால் பிள்ளைப் பேறின்மையோ பிள்ளைகள் பிறந்து இறத்தலோ ஏற்படலாம் என்பது நம்பிக்கை.

ஒருவர் பிறந்தவுடன் அவர் பிறந்த நேரத்தை அடிப்படையாகக் கொண்டு சோதிடர் எழுதும் சாதகக் குறிப்பு (Horoscope) க் கொண்டே இப்பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன. எல்லாப் பொருத்தங்களும் ஒருசேர இருவர் சாதகங்களில் அமையும் என்று சொல்வது இயலாது. பெரும்பாலும் கூடிய பொருத்தப்பாடுகளின் அடிப்படையிலேயே விவாக நிச்சயங்கள் செய்யப்படுகின்றன. சுருங்கச் சொன்னல் யாழ்ப்பாண உயர்சாதித் தமிழ் இந்துக்களின் திருமண வாழ்க்கையில் அவர்களின் சாதகக் குறிப்புக்களும் சோதிடரும் வகிக்கும் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

அறிவியலும், பகுத்தறிவும் பெருமளவு வளர்ந்துவிட்ட இன்றுங்கூடப் பேசிச் செய்யும் திருமணங்களில் சாதகப் பொருத்தங்கள் பேரிடத்தை வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) சமயக் கிரியைகள்

ஆங்கிலர் இங்கு ஆதிக்கம் பெறமுன் இந்துத் திருமணம் சமயாசாரப்படி நடந்திருப்பின் அதனைச் சட்டபூர்வமானது என்று ஏற்றுக்கொள்ளும் மரபு இருந்து வந்தது. டச்சுக் காரர் காலத்தில் தேசவழமைகள்[5] தொகுக்கப்பட்டு அவை சட்ட அந்தஸ்தைப் பெற்றிருந்தன. இந்து சமயாசார முறை மணமும் தேசவழமைக்குள் அடக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்திலும் சில காலத்துக்கு முன்வரையும் சமயாசாரத் திருமணங்கள் அங்கீகாரம் பெற்றே இருந்தன.

இன்று அரசு அங்கீகாரம் பெற்ற திருமணப் பதிவாளர் முன்பு திருமணப் பதிவு செய்துகொள்வது முக்கியத்துவம் பெறுகிறது. எனினும் திருமணப் பதிவினைத் தொடர்ந்து சமயக் கிரியைகள் நடத்திச் சபையோர் முன்பு மணமக்கள் தம்பதியாகின்றனர். அண்மைக் காலம் வரை பதிவுத் திரு மணம் நடந்த பின்னரும் மணமகள் ஒருவரை ஒருவர் சந்திப்பதோ தாம்பத்திய உறவினை ஏற்படுத்திக் கொள் வதோ சமயாசாரக் கிரியைகள் நடந்தபின்னரே அனுமதிக் கப்பட்டது. ஆனால் இன்று திருமண நிச்சயமான நாள் தொட்டே மணமக்கள் கணவன் மனைவிபோல நடந்து கொள்கின்றனர். திருமணப் பதிவின் பின்னரோ அவர்கள் அவ்வாறு வாழ்வதைச் சமூகமே அங்கீகரிக்கும் நிலை உள்ளது. சமயரீதியான சடங்குகளிலும் சட்டரீதியான திருமண ஒப்பந்தமே கூடிய பாதுகாப்பைத் தருவது என்ற கருத்துச் செல்வாக்கினைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணம். எனவே திருமணஞ்சார் சமயக்கிரியைகள் வெறும் ஒப்பாசாரச் செயல்களாகவே இன்றைய இளைஞர் நோக்கில் விளங்கி வருகின்றன. எனினும் முதியோர் பரம்பரை சமயச் சடங் காசாரங்களை இன்னும் பயபக்தியுடன் நிறைவேற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்தியே வருகின்றது. பகுத்தறிவுவாதங் களும் இளைஞர்களின் எதிர்ப்புணர்வுகளும் அதிகம் எடுபடா மலே இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே சமயத்தின் செல்வாக்கு அவ்வளவு தூரம் ஊறிப்போய் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் சார்ந்த சமயக்கிரியைகளை வசதிக்காக மூன்று பிரிவுகளாய் வகுத்து ஆராயலாம். அவையாவன:

(அ) மணமகள் இல்லத்தில் புரோகிதரான பிராமணரால் ஓமம் வளர்த்து நடைபெறும் விரிவான கிரியைகள்

(ஆ) புரோகிதர் பிள்ளையார் பூசை செய்து சுருக்கமான கிரியைகளோடு மணமக்களைத் தம்பதிகளாக்குதல்

(இ) மணமகள் இல்லத்தில் நிகழும் அதேயளவு கிரியைகளைக் கோயில் மண்டபங்களிலே நிகழ்த்துதல்

இவற்றுள் முதலாவது முறைமை ஓரளவு பழைமைப்பற்றும் பொருளாதார வசதியும் ஆள் அணி அடுக்குகளும் கொண்டவரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது முறைமை பொருளாதார வாய்ப்புக் குறைந்தவர்களும் ஆள் அணி அடுக்கு அதிகம் இல்லாதவருமான மக்கள் மேற்கொள்வது. மூன்றுவது முறைமை நவீனத்துவம் புகுத்திய புதுமையாகும். கிறிஸ்தவர் தேவாலயங்களில் நடத்தும் திருமணங்களைப் பின்பற்றியே யாழ்ப்பாணத்தில் இம் முறைமை புகுந்திருத்தல் வேண்டும். பொருளாதாரவசதி ஆள் அணி அடுக்குயாவும் இருந்தபோதும் புதுமை வேட்கையாலும், அடுக்குகளைத் தேடித் தொகுத்து நடத்தவேண்டிய சிரமங்களுக்கு முகங்கொடுக்க விரும்பாமையாலும் கோயில்களில் திருமணங்களை நடத்துதலே மூன்றுவது முறைமை. இதுவே இன்று பெரும்பான்மையரான இந்து மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவை எவ்வாறிருந்தாலும் இம் மூன்று திருமண முறைமைகளும் சமயக்கிரியைகளை இன்றும் மறக்காதும் மறுக்காதும் கைக்கொண்டு வரல் குறிப்பிடத்தக்கதேயாகும். இனி, திருமணத்தின்போது இடம்பெறும் கிரியைகளை[6] முதற்கண் நோக்குவோம்.

இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் இல்வாழ்க்கை என்பது ஒருபடி நிலைதான். பிரமச்சரியம் காத்த ஒருவன் தனக்குக் கன்னிகாதானம் வழங்கப்பெற்ற பெண்ணோடு சேர்ந்து வாழ்வது வெறும் புலனுகர்ச்சிகளை வளர்த்து இன்பம் அநுபவிப்பதற்கன்று. பலவகைத் தருமங்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தும் தனது தருமங்களைத் தொடர்ந்து செய்தற்கான புதல்வரைப் பெற்றும் ஆன்மார்த்தமாகவும் சமூகரீதியாகவும் பணிபுரிதற்கே இல்லறம் வகுக்கப்பட்டது, என்பதே இந்துசமயத்தின் வாழ்க்கைத் தத்துவமாகும். 'வாழ்க்கையைத் தருமத்தின் வழியில் இட்டுச் செல்பவரே பெரியோர்' என இந்துசமயம் கணிக்கின்றது. இந்து சமயத்திற்கே வேறொரு பெயர் 'இந்து தருமம்' என்பதாகும். ஆனால் தத்துவமும் இலட்சியமும் எதார்த்த வாழ்க்கையாக அமைந்து விடுவதில்லை. தாம்பத்திய உறவையும் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்குவதையும் வாழ்க்கையில் பெறக்கூடிய இன்பங்களை அநுபவிப்பதையும் இந்து சமயி தள்ளிவிடுவதில்லை. எனினும் சமய ரீதியான புறக்கிரியைகளை அவன் நம்பிக்கையோடும் பயபக்தியோடும் சிரத்தையோடும் செய்யத்தவறுவதில்லை. இதனாலேயே நவீனமயமாகிவிட்ட இன்றைய காலகட்டத்திலும் யாழ்ப்பாணத் தமிழ் உயர்சாதி இந்துக்களிடையே திருமணத்தின்போது சமயக்கிரியைகள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன.

திருமணக் கிரியைகளை நடத்தும் புரோகிதர் பிராமணக் குருக்கள். சிறுபான்மை வேளாளராய்த் தீக்ஷைகளும் குருப் பட்டமும் பெற்ற சைவக்குருக்களும் இக்கிரியைகளைச் செய்வதுண்டு. வேதங்கள் ஆகமங்களைக் கற்ற அறிவும் கிரியா பத்ததிகளைச் சிறந்த முறையில் செய்யக்கூடிய ஆற்றலும் பெற்றவராய்க் குருத்துவ அபிஷேகம் செய்யப் பட்டவராய் இவையாவிலும் மேலாகத் திருமணம் புரிந்து நடத்துபவராய் உள்ள ஒருவரே திருமணக் கிரியைகளைச் செய்யலாம். திருமணமாகாதவரும் மனைவியை இழந்தவரும் அவர் எவ்வளவுதாம் வேதாகம அறிவும், கிரியைகள் புரியும் திறனும் பெற்றிருந்தாலும் கிரியைகளுக்கு அருகரல்லர்.

மணவினைக் காரணங்களுக்காக அமைக்கப்பட்டு வெள்ளை கட்டி, கடதாசிக் கொடிகள் முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்ட பந்தலிலே மணவறை என்று ஒன்று அமைக்கப் பட்டிருக்கும். கோயிற் கோபுரத்தின் வெட்டுமுகத் தோற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றம் கொண்டதும் இருபக்கங்களிலும் யாளிகள் நிறுத்தப் பட்டதும் கண்ணுடித் துண்டுகள் மணியுருண்டைக் கற்கள் ஆகியன அழுத்தப் பெற்றதுமான மணவறையில் இருவர் அமரக்கூடிய ஆசன வசதியும் செய்யப்பட்டிருக்கும்.

மணமகள் வீட்டார் மணமகன் வீடு சென்று மண மகனையும் அவனது உறவினரையும் அழைத்துவருவர். மணமகன் அறுகும் பசுப்பாலும் தலைக்கு வைத்து நீராடிப் பட்டாடை தரித்து உடலில் நீண்ட 'ஓவர்கோட்' அல்லது யாழ்ப்பாணத் தமிழருக்குரிய தேசியச் சட்டை அணிந்து, தலையில் தலைப்பாகை தரித்துத் தோளிலே உத்தரீயமும் பூண்டு தன்னை அழகாக அலங்கரித்துத் தனக்கென மாலைகள் முதலியவற்ருல் அலங்கரித்துள்ள மோட்டார் வாகனத்தில் தன் உறவினரான பெண்கள் சிலரும் ஆண்கள் சிலரும் பக்கத்தில் அமர்ந்துவர அவர்களுடனும் தனக்கு மாப்பிளைத் தோழனுய் வந்த மணமகளின் சகோதரனேடும் (பெரும் பாலும் இளைய சகோதரன்; இல்லாவிடில் மூத்தசகோதரன்) மணமகள் இல்லத்தை நாடி வருவான். பணவசதிபடைத் தோர் மங்கல வாத்தியங்களான தவில், நாதசுரம் என்ப வற்றினை ஒழுங்கு செய்து அவற்றின் இசையோடு மண மகனின் பவனியை நடத்துவதும் உண்டு. இடை யிடையே சீன வெடிகளும் கொளுத்தப்படும். முற் காலத்தில் ஒரே ஊரில் உறவில் திருமணம் செய்துகொள்வ தால் இத்தகைய பவனி மிகவும் கோலாகலமாக உற்ருர் உறவினர் ஊரார் சூழ்ந்துவர நடப்பது வழக்கம். இன்று தொலையூர்களிலிருந்து மணமகனை மணமகள் இல்லத்திற்கோ மணம் நடைபெறும் கோயிலுக்கோ அழைத்துவரவேண்டி யிருப்பதால் கோலாகலப் பவனிக்கு இடம் இருப்பதில்லை. அலங்கார மோட்டாரில் மணமகன் அழைத்துவரப்பட்டு திருமண முன்வாயிலில் மாலையிட்டும், சுமங்கலிப் பெண்கள் ஆராத்தி எடுத்தும் வரவேற்கப்படுவதே பெருவழக்கு.

திருமண வாயிலில் இன்னெரு சடங்கும் இடம்பெறும். அங்கு இதற்கென்றே பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள தண்ணீரை எடுத்து மாப்பிள்ளைத் தோழன் மாப்பிள்ளையின் கால்களைக் கழுவுவான். அதற்குச் சம்மானமாக மாப்பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தோழனுக்கு மோதிரம் ஒன்றினை அணிந்துவிடுவான். இதன் பின்னர் மாப்பிள்ளைத் தோழன் கையில் தன் கையைக் கோத்தவனாய் மணமகன் மணவறைக்குச்சென்று ஆசனத்தில் அமர்வான்.

மணவறைக்கு முன்னால் ஓமத்தீ வளர்த்து மான்தோல் அல்லது மரப்பலகை ஆசனத்தில் பக்கவாட்டாகக் குருக்கள் அமர்ந்து தமது கிரியைகளைத் தொடங்குவார். முன்னால் உள்ள சபையிலே உற்றார், உறவினர், நண்பர்கள் அமர்ந் திருந்து கிரியைகளை மிகவும் கவனமாக அவதானித்த வண்ணம் இருப்பர். இதில் வேடிக்கை என்னவென்றால் குருக்கள் தமது கிரியைகளை நிகழ்த்துகையில் கூறும் மந்தி ரங்கள் யாவும் இவர்களில் பெரும்பாலாருக்கு விளங்காத சமஸ்கிருத மொழியில் அமைந்திருப்பதே. இருப்பினும் சபையில் அவ்வேளையிலே குடிகொண்டிருக்கும் அமைதியும் அவதானமும் விதந்து கூறவேண்டியதே. இந்துசமயியின் நம்பிக்கையையும் பாராட்டியேயாகவேண்டும். குருக்கள் நடத்தும் கிரியைகள் பின்வருவன :

**(அ) முற்கிரியைகள்[7]**

(i) மணமகன் விவாகம் செய்வதற்கான சங்கற்பத்தைக் குருக்களின் உதவியோடு மேற்கொள்ளல் (சங்கற்பம்— தீர்மானம்)

(ii) பிள்ளையார் பூசை, புண்ணியாகம் என்னும் சுத்தி செய்தற் கிரியை, பஞ்சகவ்வியம் வழங்கல் (பசுவின்சலம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்தும் கொண்டு ஆக்கி அதில் சிறிதை மாப்பிள்ளைக்கு அருந்தக் கொடுத்தல்), அங்குரார்ப்பணம், காப்புக்கட்டல், (திருமண சங்கற்பத் திற்காக மாப்பிளை குருக்கள் வழங்கும் நூலைத் தனது வலக் கரத்து மணிக்கட்டில் சுற்றிக்கொள்ளல்) அதற்கான பூசை, சிவம், சக்தி ஆகியனவாகப் பாவனை செய்து நிறுவிய நிறை குடங்களுக்குப் (பித்தளை அல்லது 'எவர்சில்வர்' குடத்தில் நீர் நிரப்பி குடத்தின் உட்புறக்கழுத்துக்குப் பக்கத்தில் மாவிலை பரப்பி அதன் மேல் முடியோடு கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காயை வைத்துள்ள ஒன்றே நிறைகுடம் எனப்படும்) பூசை செய்தல், நவக்கிரகங்களுக்கான பூசை, ஓமத்துக்கு அக்கினி உண்டாக்கல் (ஓமத்துக்கென அமைக்கப்பட்ட குழியில் உள்ள தீயில் நெய் பெய்து தீவளர்த்தல்), யாகத் தலைவரான இறைவன் இறைவியைக் கும்பத்தில் (நிறை குடங்களில்) பூசை செய்தல், அக்கினி காரியம் செய்தல்.

(i) பிதுர் ஆசிர்வாதம்

மணமகன், மணமகளின் முன்னோருக்குச் சிரார்த்தம் எனப்படும் கிரியை நிகழ்த்தி (சிரார்த்தம் என்பது இறந்தவரின் நினைவாக ஆண்டுதோறும் அவர் இறந்த திதியன்று நடத்தும் நினைவுக்கிரியை) அவர்களின் ஆசீர்வாதம் பெறல் (மானசீகமாக). இச்சிரார்த்த நிகழ்ச்சி அமங்கலமானதாயினும் அந்த அமங்கலத்தன்மை புலப்படாது சில மாற்றங்களோடு குருக்களால் செய்யப்படுவதாகும். எவ்வகையிலும் மணவாழ்வினைத் தொடங்குமுன் மூதாதையரின் (பிதுர்களின்) ஆசீர்வாதம் பெற நினைத்து அதற்கான கிரியை நிகழ்த்தப்படுவது குறிப்பிடத் தக்கதே

(ii) மணமகனுக்கு உபசாரம்

மேற்குறித்தவையாவும் நிகழ்ந்தபின் மணமகள் சுமங்கலப் பெண்களால் மணவறைக்கு அழைத்து வரப்படுவாள். இவளும் மணமகன் போலவே நீராடிப் பட்டாடை தரித்து அணிகலன்கள் பூண்டு முகத்தை மெல்லிய திரையொன்றால் மறைத்தவண்ணம் மெல்ல மெல்ல அடிவைத்து நடந்து வந்து மணமகனுக்கு வலப்புறத்தே அமர்வாள். (மனைவியாய் இந்நிலையில் அவள் கருதப்படுவதில்லை. கன்னியாகவே அவள் மணவறைக்கு வந்திருக்கிறாள். மனைவிக்கு அறிகுறியாக மாங்கல்யம் மாப்பிள்ளையால் தரிக்கப்பட்டபின்னரே அவள் மணமகனுக்கு இடப்பக்கத்தில் அமரலாம்.) இதனை அடுத்து மணமகளின் தந்தையும் தாயும் மணமகனுக்கு இடப்பக்கத்தில் வந்திருப்பர். (தந்தை இறந்துபோயிருப்பின் சிறிய தந்தை, தமையன், தாய்மாமன் எவராவது தம் மனைவியருடன் வந்திருப்பர். கணவனை இழந்த விதவையாகவோ மனைவியை இழந்த தபுதாரனாகவோ உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகளின் தாய் அல்லது தந்தை இந்த மங்கல காரியத்திற் கலந்து கொள்ள இயலாது.) இவர்கள் தம் மகளைக் **கன்னிகாதானம்** செய்யச் சங்கற்பம் செய்து கொண்ட பின்னர் மணமகளின் தந்தை மணமகனின் கால்களைக் கழுவிப் புத்தாடை வாசனைப் பொருள்களை மணமகனுக்கு வழங்குவார்.

### (iii) கன்னிகாதானம்

மணமகளுடைய தந்தை மணமகனுக்குக் கிழக்கு முக மாக அமர்ந்திருக்க, மணமகள் பெயர், அவரின் தந்தை பெயர், பாட்டன் பெயர், ஆகியவற்றையும் அதே போன்று மணமகனின் பெயரும் அவரின் கோத்திரப் பெயர்களும் குருக்கள் எடுத்துக் கூறியதும் மணமகளான தன் மகளின் கையை மங்கலப்பொருள்களோடு மணமகனின் கையிற் பிடித்து அளித்துத் தானத்தின் அறிகுறியாகக் கைகளிலே தண்ணீர் விட்டுக் கழுவுவார்.

### (iv) தாலிகட்டுதல்

தாலி என்பது தங்கத்தால் ஆக்கப்பட்ட கொடியில் (சங்கிலிபோன்றது) கட்டி வடிவில் கோத்திருக்கும் ஓர் அணி. அதில் சிவலிங்கம், விநாயகர், லட்சுமி ஆகியோரில் ஒருவரின் திருவுருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த அணியைப் பூசை செய்து அக்கினியிற் சுத்தி செய்து குருக்கள் அளிக்க அதனை மணமகன் மணமகளின் கழுத்தில் தரித்தால் அந்தக்கணத்திலிருந்து மணமகள் அவரின் மனைவி என்ற உரிமைத் தானத்தை அடைந்து விடுகிறாள்.

தாலிக்கு **மங்கல நாண்** என்றும் பெயர் உண்டு. முற் காலத்தில் தாலி என்பது ஆணும் அணியும் அணியாக விளங்கியதைச் சங்கநூல்களிற் காணலாம்.[8] ஆனால் இன்று தாலி என்றவுடன் மணவிழாவில் மணமகன் மணமகளுக்கு அணியும் அணியையே குறிப்பதாகும். தாலி அணியும் வழக்கம் இன்று கிறிஸ்தவர், இஸ்லாமியரிடையேயும் வழக்கத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிகாதானத்திற்கு முன்பாக மாப்பிள்ளை மணமகளுக்கான கூறை (புதியபட்டாடை), வாசனைத்தைலம், சீப்புக் கண்ணாடி என்பவற்றைத் தேங்காய் பழம் என்பவற்ருேடு தட்டத்தில் வைத்து மணமகளுக்கு வழங்குவதும் இடம் பெறுகிறது. இவை அடங்கிய தட்டத்தை மணமகளின் தாய்மாமனே வேறு நெருங்கிய உறவினரோ அவையில் கொண்டு சென்று பெரியோரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுவருவார். மணமகள், மணமகன் தந்தவற்றைக் கொண்டுசென்று கூறையை மாற்றி அணிந்து வந்த பின்னரே கன்னிகா தானமும், தாலி கட்டுதலும் இடம் பெறுவது மரபு.

### (v) அக்கினிபூசை

மணமகன் ஓமாக்கினிக்கு நிகழ்த்தும் பூசை (குருக்கள் மந்திரம் சொல்ல அவிர்ப்பாகத்தை மாப்பிள்ளை ஓமத்தீயில் இடல்).

### (vi) ஏழடிவைத்தல்

உணவு, பொருள், உடல் உறுதி, பத்தி, மன அமைதி, அறிவு, காலத்துக்குக் காலம் பெறப்படும் சுகம், ஆகிய ஏழு செல்வங்களையும் பெற மணமகன் மணமகளோடு அவள் கையைப்பிடித்தவண்ணம் அக்கினிக்குப் பக்கத்தில் ஏழடி நடப்பான்.

### (vii) பால் பழம் கொடுத்தல் (மதுபர்க்கம் அல்லது பூதாக்கலம்)

தயிர், தேன், சர்க்கரை, பழம் ஆகியவற்றைக் கலந்த உணவை மணமகனும், மணமகளும் திரைமறைவில் உண்ணுதல்.

### (viii) அம்மி மிதித்தல்

ஓமத்தீயின் அருகில் வைக்கப்பட்டிருக்கும் அம்மி (கறி வகைகளுக்கான சரக்குகளை அரைப்பதற்கு உபயோகிக்கப் படும் கல்)யை நோக்கி மணமகன் மணமகளை அழைத்துச் சென்று அவளின் வலக் காற் பாதத்தைக் கல்லின்மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி வைப்பது. இதன் பொருள் மணமகள் தன் கணவனிடம் அன்புறுதியுள்ளவளாய்க் கல்போலக் கற்பிலே திண்மையுடையவளாய் இருத்தல் வேண்டும் என்பதே.

### (x) அருந்ததி காட்டல்

அருந்ததி வசிட்டமுனிவரின் மனைவி. கற்பிற்கு இலட்சியமாக வாழ்ந்து காட்டியவள். தன் கற்பினால் அவள் வானத்தில் நட்சத்திரமாக விளங்குகிறாள் என்பது இந்துக்களின் நம்பிக்கை. எனவே தனது மனைவி அருந்ததி போலக் கற்பு நிலை தவறாதவளாய் விளங்குவதற்கு அறிகுறியாக மணமகன் மணமகளை வெளியில் அழைத்துச் சென்று குருக்களின் உதவியோடு அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவான்.

### (x) கோதரிசனம்

நல்ல சகுனத்திற்காக முற்றத்தில் கட்டப்பட்டிருக்கும் பசுவை மணமக்கள் தரிசித்தல்.

### (xi) ஆசீர்வாதம்

அறுகு, பச்சையரிசி, மஞ்சள் ஆகிய மூன்றும் சேர்ந்த கலவையைக் கொண்டு மூன்று தரம் மணமக்களின் தலைகளில் தனித்தனி இட்டு அவர்களின் உறவினர் (மணமானவர்), நண்பர் ஆசீர்வதித்தல். அறுகுபடர்ந்து வளர்வது போலச் சந்ததி பெருக்கியும், அரிசிபோலச் செல்வம் வளர்த்தும், மஞ்சள்போல மங்கல மனைவாழ்வு நடத்தியும் மணமக்கள் சிறத்தல் வேண்டுமென்பதே இந்த ஆசீர்வாதத்தின் பொருள்.

இதனோடு திருமணம் தொடர்பான கிரியைகள் நிறைவுறுகின்றன. திருமணம் என்பது மற்றைச் சமயத்தவர்கள் போன்று எந்த நாளிலும் குறித்த நேரத்தில் செய்யப்படுவது அன்று என்பதையும் இந்துக்கள் விடயத்தில் நாம் மறந்து விடலாகாது. இதற்கெனக் குறித்த மங்கல ஓரையிலேதான் **மாங்கல்யதாரணம்** நடைபெறல் வேண்டும் என்ற விதியுண்டு. சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசி, கார்த்திகை, தை ஆகிய மாதங்களிலேதான் குறித்த நல்லோரையில் திருமணம் இடம் பெறும். மற்றைய மாதங்கள் அதற்கு விலக்கானவை. மங்கல முகூர்த்தம் ஒருநாளில் எந்த நேரத்திலும் வரலாம். அந்நேரம் பகலாகவோ, நண்பகலாகவோ, பிற்பகலாகவோ, சாமப் பொழுதாகவோ இருந்தாலும் அந்தப் பொழுதிலேதான் திருமணத்தின் முதன்மையான மாங்கல்யதாரணம் (தாலி கட்டுதல்) இடம்பெறும்.

இதில் இன்னும் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் உண்டு. மணமகனை அழைக்கச் சென்று அங்கு மணமகன் வீட்டாராகிய சம்பந்திகளோடு சபையில் அமர்ந்து சாப்பிட்டே வருகின்றவர், மணமகள் இல்லத்திலும் திருமணம் முடிந்த பின்னர் சபையிலிருந்து சாப்பிட்டேயாக வேண்டும். இது ஒரு ஒப்பாசாரச் செயலன்று. மணமக்களின் இருபகுதி உறவினர் நண்பர்களைக் கௌரவித்து உபசரிப்பது தவிர்க்கவியலாத ஒரு விதியாக இருந்து வருகிறது. சாமநேரத்திலாயினும் சபையில் வரிசையாக வாழையிலைகளின் முன்னிருந்து ஆறி அவலாய்ப்போன உணவு வகைகளை நித்திரைக் கலக்கத்துடனும், பசியின்றியும் உண்பது என்பது கௌரவமான விஷயமல்ல; ஒரு நிர்ப்பந்தத் தேவை என்றே சொல்லலாம்.

ஆனால் இன்று இந்த வழக்கம் ஓரளவு குறைந்து வருகிறது. திருமணம் முடிந்த நாலாம் நாளன்று மணமகன் இல்லத்திலோ மணமகள் இல்லத்திலோ நண்பர்களை அழைத்துச் சிற்றுண்டி விருந்துபசாரம் செய்வது இன்றைய வழக்கம். கிறிஸ்தவர்போன்ற பிற மதத்தினரைப் பின்பற்றி இவ்வாறு வரவேற்புபசாரம் நடக்கின்றது போலும்.

திருமண நிகழ்வுகள் முடிவுற்றதும் மணவறையிலேயே மணமக்களை வாழ்த்தி வாழ்த்துப் பத்திரம் அளித்தல், பரிசில்கள் வழங்கும் வழக்கங்களும் நடைமுறையில் இருந்து வருகின்றன. பெரும்பாலும் பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சி வரவேற்புபசாரத்தின்போதே இடம் பெறுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலம் வரை அடிமை குடிமைகள் திருமணத்தின் முன்னும் பின்னும் சில ஊழியங்களைத் தமது 'கமக்கார'ருக்கு இயற்றி வந்தனர். பள்ளர் பந்தல்போடச் சூழலைத் துப்புரவு செய்ய உதவுவர். வண்ணார் பந்தலுக்குச் சேலைகட்டுதல் (விதானம் போலப் பந்தற் கூரையை மறைத்துப் பரவி வெள்ளைத் துணிகளால் கட்டுதல்), மணமகன் வரும்பொழுது நிலபாவாடை விரித்தல், அவன் நீராடும் பொழுது அவன் விட்ட துணியை எடுத்துக் கொண்டு தற்காலிகமாக அணிய வெழுத்த துணி வழங்குதல் என்பவற்றைச் செய்வர். கோவியர் சமையலில் உதவுவர். அம்பட்டர் மாப்பிள்ளைக்கு நீராடமுன் முகச்சவரம் செய்வர். இவற்றிற்குப் பிரதியாக இவர்களுக்கு அரிசி, காய்கறி, தாம்பூலம், பணம். ஆகியவற்றை வழங்குவதுண்டு. இவற்றிலே பல வழக்கங்கள் இன்று தேவையின்மை கருதியும் தாழ்த்தப்பட்டோரின் உணர்வு கருதியும் கைவிடப்பட்டு வருகின்றன. சில வழக்கங்கள், பழமை தழுவுவோரால் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

மணவினை முடிந்த அன்றே விருந்துபசாரத்தைத் தொடர்ந்து மணமகன் வீட்டிற்கு மணமகள் அழைத்துச் செல்லப்படுவாள். இதனைக் **'கால்மாறுதல்'** என்பர். நான்காம் நாள் மணமக்கள் மணமகளின் வீடுதிரும்புவர். இதனை **'நாலாம் சடங்கு'** என்று கூறுவது வழக்கம்.

இதன் பின்னர் உறவினர் நண்பர் என்போர் மணமக்களை அழைத்து நல்லநாள் பார்த்து விருந்தும் பரிசும் அளிப்பர். மணமக்கள் தேன்நிலவு சுகிக்கச் செல்லும் வழக்கம் பெரும்பாலும் இல்லை. கூட்டுக் குடும்ப அமைப்பும், சுற்றத்தின் பிணைப்பும் பழைமை பேணும் இயல்பும் யாழ்ப்பாண உயர்சாதித் தமிழ் இந்துக்களிடையே நிலையாக உள்ளமைக்கு இது சான்றாகும்.

**(எ) சீதனம் வழங்கல்**

முற்காலத்தில் மாப்பிள்ளையே பெண்ணுக்குப் பொருள் கொடுத்து மணக்கும் வழக்கம் இருந்து வந்தது எனத் தெரிகிறது. இவ்வாறு கொடுப்பதைப் **பரிசம் வழங்கல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். ஆனுல் நான் அறிந்தவரை கடந்த இரு நூற்ருண்டுகளாய்ச் சீதனம் பெண்பகுதியார் வழங்கும் முறையே நிலவிவருகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822–79) தமது விஞ்ஞாபனமொன்றில் ''கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது, வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்ருேடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேயமேயாகவும் ...''[9] என்று கூறுவதாலும் இவ்வுண்மை புலனுகும்.

சீதனம் என்ற சொல் 'இலட்சுமீகரம் பொருந்திய செல்வம்' எனப் பொருள்படும். (சீ–இலக்குமி, தனம்–செல்வம்) இதனை ஸ்திரிதனம் என்ற சொல்லின் மருஉ எனவும் கொள்வதுண்டு. பெண்ணுல் வழங்கப்படும் செல்வம் என்பது இதற்குப் பொருள் (ஸ்திரி–பெண்). தென்னிந்தியாவிலே மாப்பிள்ளைக்கு வழங்கும் தட்சிணை என்னும் பொருளில் 'வரதக்ஷிணை' என இவ்வழக்கத்தினைப் பெயரிட்டழைப்பர்.

முற்காலத்தில் பெண்ணுக்கும் ஆணுக்கும் விவாகம் நிச்சயிக்கும்போது வாய் மூலமாக 'இவை இவை சீதனமாகத் தரப்படும்' என்று பெண்ணின் பெற்ருேர் உறுதியளித்துப் பின் ஆற அமரச் சீதனத்தை வழங்கும் வழக்கம் இருந்தது. காணி, நிலம், ஆபரணம் என்பவற்ருேடு அடிமைகளையும் உயர்சாதி வேளாளன் சீதனமாகக் குறித்து உறுதி (Deed) எழுதும் வழக்கம் நிலவிற்று.[10] 1944 ஆம் ஆண்டு அடிமை ஒழிப்புச் சட்டம் ஏற்பட்டபின் அடிமைகளைச் சீதனமாக வழங்குவது ஒழிந்தது.

இக்காலத்தில் திருமணப் பதிவு நடைபெறும் அன்றே, பதிவிற்கு முன்பு சீதனமாகக் குறித்த பணம், நகைகள், காணி, வீடு என்பவற்றைக் கொடுத்து விடவேண்டிய நிலை உள்ளது. வீடு, காணி உறுதிகளைச் சட்டத்தரணி ஒரு பக்கலிலிருந்து தயாரித்து உரியவர்களிடம் கைச்சாத்துப் பெற, மறுபக்கத்தில் விவாகப் பதிவுகாரர் (Registrar of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Marriages) பதிவுக்கான பத்திரங்களைத் தயாரிப்பார். திருமணப் பதிவும் குறித்த சுபதினத்திலே சுபநேரத்திலேயே நடைபெறும்.

சீதனம் வழங்குதல் மாப்பிள்ளையின் உத்தியோக தரத்திற்கு ஏற்பக் கூடியும் குறைந்தும் அமையும். முன்பு ஆயிரக்கணக்கிலே கொடுக்கப்பட்ட சீதனம் இப்பொழுது இலட்சக்கணக்கில் எதிர்பார்க்கப்படுகின்றது. நகைகள் இத்தனை பவுணில் வழங்கப்படும் என்றால் அவற்றைச் சபையார் முன்பு நிறுத்துச் சரியென்றாலே மணமகன் பகுதியார் மணத்திற்கு ஒப்புக்கொள்வர். வெறும் வாய் நாணய வாக்குறுதிகளுக்கு மதிப்பளிப்பதில்லை.

கல்வித்தரமும், உழைக்கும் தகுதியும் உள்ள பெண் கூடத் திருமணத்திற்கு நிற்கையில் அவளின் பகுதியிலிருந்து சீதனம் எதிர்பார்க்கப்படுவதில் விதிவிலக்குக் காட்டப்படுவதில்லை. சில வேளைகளில் படித்த, தொழில் புரியும் பெண்ணே அதிக சீதனம் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

சீதன முறையால் சில சாதகமான விளைவுகளும் ஏற்படுகின்றன. பெண்ணிற்குக் கௌரவம், கணவன் இல்லாத காலத்தும் பொருளாதாரப் பாதுகாப்பு (வீடு, காணிகள், தோட்டந்துரவுகள் சீதனமாக வழங்கப்படுவதால் கணவன் இறந்தாலும் வாழ்வதற்கும் வருவாய்க்கும் வசதி உண்டு. நகைகளும் ஒருவகையில் செல்வச் சேமிப்புத்தான்) என்பன உண்டாகின்றன என்பது உண்மையே.

ஆனால் சீதனம் வழங்கக்கூடிய பொருளாதார வசதியில்லாத பெற்றோர் தம் பெண்களுக்குச் சீதனம் வழங்க முடியுமா ? சீதனம் வழங்க முடியாதவர்களின் பெண் மக்கள் உரிய வயதைக் கடந்தும் விவாகப்பேற்றை அடையாது, வாழ்வில் பெறவேண்டிய இன்பங்களை அநுபவியாது பெருமூச்சு விடவேண்டிய நிலையிருக்கிறதே ! இந்த இருபதாம் நூற்றாண்டில் பெண் சமத்துவம் பேசிக்கொண்டே பெண்களுக்கு இத்தகைய கொடுமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் இழைப்பது நீதியா ? சமூக சீர்திருத்தகாரர்களும், எழுத்தாளர்களும் கலைஞர்களும், நல்லுணர்ச்சி வாய்ந்தோர்களும் இந்தக் கேள்விகளைகேட்டுச் சீதன வழக்கத்தினை ஒழிக்கத் தத்தம் போக்கில் போராடி வருகின்றனர். சாதிப் பாகுபாடு போலவே சீதன வழக்கமும் யாழ்ப்பாணத்தவரின் சாபக்கேடாகத் தொடர்ந்து நிலவியே வருகின்றது.

## (எ) திருமணத்தின் பின் மணமக்களின் நிலை

கூட்டுக்குடும்பமுறை காரணமாகத் திருமணம் செய்த பின்பும் மணமக்கள் பெற்ருேரின் மேற்பார்வையில் பாதுகாப்பில் வாழ்வதே பெரும்பாலும் வழக்கமாய் இருந்து வருகிறது. உத்தியோகம் வியாபாரம் ஆகியவற்ருல் வெளியிடங்களிற் செல்வோரே தனிக்குடும்பம் நடத்த வாய்ப்புப் பெறுகின்றனர். கணவன் வெளிநாடு சென்ருல் மனைவி பெரும்பாலும் தன் பெற்ருேருடன் சென்றிருப்பாள். சில வேளைகளில் கணவனின் பெற்ருேருடன் வாழ்வதுண்டு. எனினும் இன்றைய இளைஞர்கள் இந்த முறையினை ஒரளவு விரும்பாமல் சுதந்திரமாகவே வாழவிரும்புகின்றனர். ஆனுல் பிரசவத்தின்போது பெண் தாய்வீட்டிற்குச்சென்று விடுவது தவிர்க்க முடியாததாகும். வெளியிடங்களிலே இளங் குடும்பமாய் வசிக்கும் காலத்தில் தம் குழந்தைகளைத் தமது பெற்ருேரிடம் விட்டுவைக்கும் வழக்கம் உண்டு. இதனைப் பெற்ருேரும் விரும்பித் தம் பேரர் பேர்த்தியரை அன்புடன் வளர்ப்பர். இதனுல் குழந்தைகள் அதிக செல்லத்தினுல் கெடுகின்றன என்றும் சில இளங்குடும்பத்தினர் கருதி இவ் வழக்கத்தினைத் தவிர்க்க முற்படுகின்றனர். தலைமுறை இடைவெளியின் (Generation gap) இயல்பே இதுதான்.

கூட்டாக வாழ்வதனுல் ஏற்படும் சச்சரவுகள், மன வேற்றுமைகளால் உண்டாகும் சண்டைகள், குறித்த சீதனத்தைக் கொடுக்கவில்லை என்ற அதிருப்தியால் விளையும் போராட்டங்கள், தமது விருப்பத்திற்கும் இலட்சியத்திற்கும் ஏற்ற வாழ்க்கைப் பங்காளியாய் இல்லை என்ற நிலையில் ஏற்படும் அதிருப்திகள் என்பன இளங்கணவன் மனைவியரிடையே ஏற்படுவது இயற்கையே. அவ்வாறு ஏற்படுவது அடிக்கடி நிகழும் ஒன்ருகவும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் பழைமைப் பிடிப்பாலும், மூத்தோரின் வற்புறுத்தல் அறிவுரைகளாலும் மணமுறிவுகள் (Divorces) ஏற்படாமல் வாழ்க்கைச் சகடத்தை இருவரும் இழுத்துச் செல்வதும் ஒருவருக்கு ஒருவர் உண்மையாக நடந்துகொள்வதும் யாழ்ப்பாண உயர்சாதித் தமிழ் இந்துக்களிடையே தொடர்ந்து இருந்து வருகின்றன. இது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

## சான்றுதாரங்கள்

1. **The Singhe Dynasty in Jaffna Pattam from A.D. 1400 to A. D. 1968** (பக். 1), Compiled and Published By Chevalier Dr. St. John Puvirajasinge, K. S. G., Aseervatham Press, Jaffna, 1968.

2. **குமாரசுவாமிப் புலவர் வரலாறு** (பக். 8), கு. முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை இயற்றியது, புலவரகம், மயிலணி, சுன்னுகம், இலங்கை.

3. **Images of Sri Lanka Through American Eyes** (பக்.80), Compiled and Edited by H A. Goonatileka, Embassy of the United States of America, Colombo Sri Lanka, 1978.

4. **இரத்தாக்ஷி வருஷ வாக்கிய பஞ்சாங்கம்,** யாழ்ப்பாணம் கொக்குவில் (பக். 32–14) இ. வெங்கடேச ஐயரால் கணிக்கப்பெற்றது, சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில், 1984.

5. தேசவழமை பற்றிய விவரத்துக்கு இந்நூலின் நான்காவது இயலின் முதலாவது அடிக்குறிப்பினைப் பார்க்கவும்.

6. அமரர் சி. ச. குமாரசாமி அவர்களின் நினைவு மலர் (பக். 1–5), ''சைவக் கிரியை விளக்கம்'' ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள் செய்தது, ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம், 29–01–1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **சைவசமய சிந்தாமணி** (பக். 90–92), சைவப்புலவர், தேசிகமணி கா. அருணாசல ஆசிரியர், ஏ.வி.ஆர்.ஏ. அச்சகம், கொழும்பு, 1960.

8. **நாவலர் பிரபந்தத் திரட்டு**, வித்தியாநுபாலன அச்சி யந்திரசாலை, சென்னை.

9. ''கோப்பாய் வேளாளன் குமாரருடையார் பெண் வள்ளியம்மை பேரில் யாழ்ப்பாணப் பட்டினத்துள்ள அரசாங்க அலுவலகத்தில் 4–4–1812லும் பின்னரும் மூன்று ரூபா முத்திரை பதித்துப் பதிவு செய்து அனுமதிக்கப்பெற்ற அடிமைச் சீட்டுக்களிற் காணப் படும் அடிமையாட்களுள் மூன்றிலொரு பகுதியினர் சிதம்பரவம்மையாருக்குச் சீதனமாகக் கொடுக்கப் பட்டனர்.''
குமாரசாமிப்புலவர் வரலாறு–அடிக்குறிப்பு–பக். 8.

10. ''அரசினர் 1844ஆம் ஆண்டு அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கியபின் இவ்வழக்கம் நீங்கியது.'' ஷை பக். 8.

—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் நான்கு

# யாழ்ப்பாணைத்துத் தாழ்த்தப்பட்ட தமிழ் இந்து மக்களிடையே நிலவிவரும் திருமண நடைமுறைகள்

சி. வன்னியகுலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பு

யாழ்ப்பாண மக்களின் திருமண உறவுகளையும் நடைமுறைகளையும் தீர்மானிப்பதிலே சாதி அமைப்பு முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. எனவே, யாழ்ப்பாண மக்களின் திருமண நடைமுறைகள் பற்றி அறிவதன் முன்னர் அங்கு நிலவும் சாதி அமைப்புமுறைமையை விளங்கிக் கொள்வது இன்றியமையாததாகிறது.

யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பினையும் தொடர்பு முறைகளையும் அங்கு வழக்கிலுள்ள தோம்புகளும், தேச வழமை விதிகளும், ஒருசில இலக்கிய நூல்களும் விளக்குகின்றன. ஐரோப்பியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அதனைத் தமது ஆளுகைக்குட்படுத்தியபோது அங்குள்ள சமூக அமைப்பிலே மூன்று வகையினரை இனங்கண்டுள்ளனர்.

(அ) ஆண்டான்

(ஆ) அடிமை

(இ) குடிமை

என்ற மூன்று வகுப்பினரே இவர்கள்.

ஆண்டான் வகுப்பிலே வேளாளரும் பிராமணரும் அடங்குவர். நிலம் முழுவதற்கும் வேளாளனே உரிமை பூண்டோனுகையால் ஆண்டான் என்ற பதம் சிறப்பாக இச் சாதியினரையே குறிக்கின்றது. கோவியர், சாண்டார், பள்ளர், நளவர் ஆகியோர் அடிமைகள் எனப்பட்டனர். மடப்பள்ளிக்காரர், கரையார், சிவியார், குசவர், வண்ணார், அம்பட்டர், கம்மாளர், தச்சர், கன்னர், தனக்காரர், பறையர், துரும்பர் போன்ருேர் குடிமைகள் எனப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின்போது கைப்பற்றப்பட்டவனை அடிமையென உரோமன் சட்டம் கூறுகின்றது. போரின்போது கைப் பற்றப்பட்டவன் அரசனின் அடிமையாகக் கணிக்கப்படுவான் எனத் தேசவழமை விதிகள் கூறுகின்றன.[1] அடிமைகள் எனப்பட்டோர் சமூகத்தில் எந்தவித உரிமையுமற்றவர்கள். இவர்கள் எசமானர்களின் சொத்துக்களாக விளங்கியமை யால் எந்தவொரு நடவடிக்கையையும் தீர்மானிக்கும் அதிகாரம் எசமானுக்கிருந்தது.

அடிமைகளிலே கோவியர் எனப்படுவோர் கோவில் களிலே சேவகம் செய்யும் அடிமைகள் எனவும், மந்தை மேய்ப்போர் எனவும், வயலிலே வேலைசெய்வோர் எனவும் கருதப்படுகின்றனர். பொதுவாக உயர் சமூகத்தினரின் கோவில்களிலும், வீடுகளிலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் ஒத்தாசைகளைச் செய்வது இவர்களின் கடமை யாக விளங்கிவந்துள்ளது. சாண்டார் என்போர் அரசாங் கத்தின் யானைகளைப் பராமரிப்பதுடன் அரசனின் பல்லக் கினைக் காவுவதற்கு அவ்வப்போது துணைநின்றோருமாவர். பள்ளர், வேளாளரின் வீடுகளிலும், வயல்களிலும் வேலை செய்வோராக விளங்கினர். நளவர், எசமானின் தேவையின் பொருட்டு மரம் ஏறும் தொழில் செய்வோராவர். யாழ்ப் பாண வைபவமாலை யாழ்ப்பாணத்திலுள்ள சாதிகளையும் அவற்றின் வரலாற்றையும் விரிவாகக் கூறுகின்றது.

குடிமைகள் எனப்பட்டோர் சமூகத்தின் உயர்நிலையி லுள்ள வேளாளருக்கு வேண்டிய பொருட்களையும் சேவை களையும் வாடிக்கையாக வழங்குபவராவர். அடிமைகளாகக் கருதப்பட்டோரின் நிலையுடன் ஒப்பிடுகையில் இவர்கள் சிற்சில உரிமைகளையேனும் அநுபவிக்க அங்கீகரிக்கப்பட் டனர். ஓர் இடத்தினின்று இன்னோரிடத்திற்கு இடம் பெயரவும் வேறிடத்திலுள்ளவர்களுடன் தொடர்புகளை வைத்திருக்கவும் இவர்கள் அநுமதிக்கப்பட்டனர்.

மடப்பள்ளிக்காரர் என்போர் இடைக்காலத்தில் யாழ்ப் பாணத்தில் வந்து குடியேறியோராவர். அரசனின் பல்லக் குத் தூக்குபவன் சிவியான் எனவும், மட்பாண்டங்கள் வனைபவன் குசவன் எனவும் சேலை வெளுப்பவன் வண்ணான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், முடி வெட்டுபவன் அம்பட்டன் எனவும், மேள மடிப்பவன் பறையன் எனவும், யானைகளைப் பராபரிப் போன் தனக்காரன் எனவும், மீன்பிடிப்பவன் கரையான் எனவும் அழைக்கப்பட்டனர். இவ்வாறு ஒவ்வொரு சாதி யினருக்கும் ஒவ்வொரு தொழில் இக்காலப் பகுதியிலே குறித்தொதுக்கப்பட்டது. அடிமை குடிமைகள் தத்தமக் கென விதிக்கப்பட்ட கடமைகளைத் தவறாது ஆற்றவேண்டு மென எதிர்பார்க்கப்பட்டனர்.

செட்டிகள், மீனவர், தச்சர், தட்டார், பண்டா ரங்கள், கொல்லர், சேணியர், செங்குந்தர், சான்றார், சாயக்காரர் ஆகியோர் அடிமைநிலைக்குத் தள்ளப்படா விட்டாலும் ஒரு காலத்தில் வேளாளரையே சார்ந்து வாழ்ந்த காரணத்தால் இவர்களும் ஓரளவு சமூகத்தாழ் வுக்கு உட்படுத்தப்பட்டவர்களேயென்பர் க. சொக்கலிங் கம்[2]. இவர்களிலே, கரையார் அல்லது முக்குகர் எனப்பட்ட மீன்பிடியாளர்களின் சமூக அந்தஸ்து தொன்றுதொட்டு மேம்பாடுற்று விளங்கியமையைக் கண்ணகி வழக்குரை விளக்குகிறது.[3] 1844 ஆம் ஆண்டு இலங்கையிலே அடிமை குடிமை முறைகள் சட்டபூர்வமாக முற்றாக ஒழிக்கப் பட்டன. எனினும் நடைமுறையில் 20ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை இம்முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. 'அடிமை', 'குடிமை' என்ற பதங்களினால் சுட்டப்படுவோர் இனி இக் கட்டுரையில் 'தாழ்த்தப்பட்ட சமூக மக்கள்' எனக் குறிப்பிடப்படுவர்.

## 2. ஐரோப்பியர் வருகையின் முன்னர் காணப்பட்ட திருமண நடைமுறைகள்

யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே, வகுக்கப்பட்டிருந்த அதிகார வரன்முறை நெறியிலே, கடைநிலையில் வைக்கப் பட்டுத் தனிமைப்பட்டிருந்த அடிமை குடிமைகளின் திருமண நடைமுறைகள் எத்துணைச் சுருங்கியவையாக அமைந் திருக்குமென்பதனை அனுமானித்தல் அத்துணைச் சிரமமான தன்று. ஐரோப்பியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்களின் திருமண நடைமுறைகள் பற்றி அறிந்துகொள்வதற்கான ஆதாரங்கள் மிக அரிதாகவே கிடைக்கின்றன. இலக்கியங்கள், சாசனங்கள், வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவற்றிலே இம் மக்களின் வாழக்கை முறை நன்கு பிரதிபலிக்கப்படவில்லை. 18 ஆம் நூற்றுண்டினிறுதியிலே தோன்றிய **பள்ளு, குறவஞ்சி** போன்ற இலக்கியங்கள் ஓரளவு அடிநிலைப்பட்ட மக்கள் வாழ்வைச் சித்திரித்தன. எனினும் முழுமையாக இவர்தம் வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கும் இலக்கியங்கள் 20 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதி முதல் தோன்றலாயின. ஆகவே, தேசவழமை விதிகள், கிடைக்கும் இலக்கியச் சான்றுகள் ஆகியனவற்றை ஆதாரமாகக் கொண்டு 16ஆம் நூற்றுண்டில் நிகழ்ந்த ஐரோப்பியர் வருகைக்குமுன் இடம் பெற்ற திருமண நடைமுறைகளை ஆராயலாம்.

## 2:1 தாழ்த்தப்பட்ட மக்களின் திருமணங்களைத் தீர்மானித்தல்

தேச வழமையிலே அடிமைகுடிமைகளின் திருமணங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் எசமானுக்கு உண்டு என்ற ஒரு குறிப்பு காணப்படுகின்றது. இக் குறிப்பினைக் கொண்டு அக்காலத் தாழ்த்தப்பட்ட மக்களின் திருமணங்கள் எவ்வாறு நிச்சயிக்கப்பட்டிருக்கும் என்பதனை நாம் ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம். அடிமையொருவனின் மணப்பெண், திருமண நாள், முகூர்த்தம் யாவற்றையும் எசமானனே தீர்மானிப்பான். எசமானனின் பொருளாதார அனுகூலங்களைக் கருத்திற் கொண்டே அடிமை குடிமைகளின் திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டன. அடிமை குடிமைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதோ, அன்றி அவர்களை இல்லறமென்ற நல்லறத்திலே புகச்செய்வதோ எசமானின் நோக்கமன்று. அந்தத் திருமணத்தினூடாகத் தனக்கான உழைப்பு, சேவை ஆகியவற்றின் திறனை உயர்த்துவதே அவனது நோக்கமாயமையும்.

ஒரே எசமானின் கீழ் உள்ள ஓர் ஆண் அடிமைக்கும் பெண் அடிமைக்கும் திருமணம் நடைபெறுவதே பொதுவான வழக்கமாகும். இன்னொரு எசமானனின் கீழ் வேலை செய்யும் அடிமையை மணந்து கொள்வதற்கு அங்கிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளிப்பது மிக அரிதே. ஏனெனில் பெண் அடிமைக்குப் பிறக்கும் குழந்தைகள் எசமானின் சொத்தாவர். அடிமைச் சொத்தைப் பெருக்குவதும் எசமானின் நோக்கங்களுள் ஒன்றாகையால், பெண் அடிமைகளைத் தனக்குக் கீழ் வேலை செய்யாத அடிமை ஒருவனுக்கு அவன் மணம் செய்து கொடுக்கமாட்டான். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் வெவ்வேறு எசமானர்களின் கீழ் வேலை செய்யும் அடிமைகள் திருமணம் செய்துகொள்ள நேரின், அவ்வெசமானர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தத்தமக்குரிய சாதிகளுக்குள்ளேயே பெரும்பாலும் திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டு வந்தன. சொத்துக்களைப் பேணுவதற்கான வாரிசுகளைப் பெற்றெடுப்பதே திருமணத்தின் நோக்கமெனப் பொதுவாகக் கருதப்பட்டபோதும், இவர்களைப் பொறுத்தவரை எசமானனின் நிலத்திலே புதிய உத்வேகத்துடன் உழைப்பதற்கான வாரிசைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே திருமணங்கள் செய்து வைக்கப் பட்டன.

## 2:2 கணவன் மனைவி உறவுநிலை

திருமணத்தின் பின்னரும் மனைவி கணவனுக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமெனக் கருதப்படவில்லை. அவள் எசமானனுக்கு விசுவாசமானவளாகஇருக்கவேண்டுமெனவே எதிர்பார்க்கப்பட்டாள். கணவனுக்கும் எசமானனுக்குமிடையே முரண்பாடுகள் எழும்போது எசமானனின் அபிலாசைக்களுக்காகவே அவள் தன்னை அர்ப்பணிக்க வேண்டியவளானாள். 1780ஆம் ஆண்டளவிலே யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் புலவர் பாடிய **பறாளை விநாயகர் பள்ளிலே** இதற்கான தகுந்த ஆதாரங்கள் சில காணப் படுகின்றன.

பள்ளு இலக்கியத்திலே ஆண்டை, பள்ளன், மூத்த பள்ளி, இளையபள்ளி ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. பள்ளன், பள்ளியர் ஆண்டையின் நிலத்திலே முழுநேர உழைப்பாளர்களாவர். இவர்கள் தங்களையும் தங்கள் உழைப்புச் சக்தியையும் தங்கள் வாழ்க்கை அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கங்களையும் எசமானுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தவர்களாவர். பள்ளன் மூத்தபள்ளியை முறைப்படி விவாகம் செய்துகொண்டவன். இளைய பள்ளியைத் தனது ஆசை நாயகியாக வைத்திருப்பவன். இளைய பள்ளியிலே அவனுக்கு மோகம். அந்த மோக மயக்கத்திலுலே வயல் வேலைகளை அவன் உதாசீனஞ் செய்தான். இளைய பள்ளியே கதியெனக் கிடந்தான். அவளைத் திருப்திப்படுத்துவதற்காக ஆண்டையின் நெற்கோட்டையினின்றும் நெல்லைத் திருடி விற்று அதன்மூலம் அவளது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்தான். ஆண்டையின் சொத்திலே கைவைக்கலாமா? ஆண்டையின் பணிகளைப் புறக்கணிக்கலாமா? முறைப்படி மணந்து கொண்டவளான மூத்தபள்ளி தனது கடமையைச் செய்ய வேண்டியவளானுள். அவள் ஆண்டைக்குப் பின்வருமாறு முறையீடு செய்தாள் :

பண்பு நீதி யறியாத தூக்குணிப்
பள்ளன் செய்கரு மங்களைக் கேளும்
உண்ப துங்குடிப் புங்களிப் புங்கண்
ணுறக்க மும்மிளை யாள்குடி லோடே
எண்பொ ருந்துமென் புத்தியுங் கேளான்
யானும் பின்னை யுரைப்பதும் விட்டேன்
பெண்பி றந்தது நான்மட்டு மோவிந்தப்
பேச்சை யார்க்கினி விள்ளுவே னண்டே

கட்டு நீர்வயற் செய்கையுந் திண்டான்
கலகப் பள்ளி மயல்வலைப் பூண்டான்
பட்டியின் மாட்டைக் கிட்டியும் பாரான்
பழைய தாரமென் றென்னையுஞ் சேரான்
சட்டைக் காரியை விட்டுப் பிரியான்
சற்றே பிரிந்தா லும்மிங்குத் தரியான்
பெட்டிச் சோற்றுக்குங் கள்ளுக்கும் நெல்லெல்லாம்
பெட்டியா லள்ளிக் கொட்டிறு னண்டே

இவ்வாறு முறைப்பாடு செய்த அவள், அவனை யானையைப் போல எட்டிப்பிடித்துக் கைச் சவுக்கால் அடிக்கும்படியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கால்களுக்கு விலங்கிடுமாறும் ஆண்டையை வேண்டுகிறாள். அதன்படியே, ஆண்டை பள்ளனின் கால்களுக்கு விலங்கு பூட்டுகின்றான்.

இவ்வாறு கடமையிலே தவறிய தனது கணவனின் குறைகளை எசமானிடம் சொல்லி அவனுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டுமெனப் பள்ளியர் எதிர்பார்க்கப் பட்டனர். ஆயினும் அக் கணவன் மனைவியர் தம்மளவிலே பாசத்தாற் பிணிப்புண்டிருந்தனர்.

**வெறுக்கை போது மினியெளி யான் பிழையான்**
**மேன்மை யாக்கணக் கொப்புத் தருவான்**
**செறுத்த காவலில் வைத்திடு பள்ளனைச்**
**சேர்த்த காற்றளை மாற்றிடுவீ ராண்டே**

என மூத்த பள்ளி இரந்து நிற்பது அவளது பாசத்திற்கும் கடமை உணர்விற்குமிடையேயான முரண்பாட்டடினைத் தெளிவாக்குகின்றது.

பறாளைவிநாயகர் பள்ளு இன்னொரு முக்கிய அம்சத்தையும் புலப்படுத்துகின்றது. ஆண் அடிமை ஒருவன், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் வாழ்க்கை நடாத்த அக்காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தான். தேசவழமையிலே, ஒருவன் ஒரு பெண்ணைச் சமயாசாரப்படி மணக்கலாமெனவும் வேறும் பல பெண்களை ஆசைநாயகிகளாக வைத்திருக்கலா மெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் ஆண் அடிமை பல பெண்களை ஆசைநாயகிகளாக வைத்திருப்பதன்மூலம் பெருமளவு பிள்ளைகளைப்பெற்று எசமானனின் அடிமைச் செல்வத்தைப் பெருக்கலாம்; அதன் மூலம் அவனது பொருள் வளத்தை வளர்க்கலாம். எனவே, பெருமளவு பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் அக்காலப்பகுதியில் பிரச்சனையாகக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் அத்தனை பிள்ளைகளுக்கும் ''அடிமைநிலை'' என்ற ஒன்றையாவது அவர்களால் சொத்தாகக் கொடுக்க முடிகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2:3 திருமணச் சடங்குகள்

இக்காலப்பகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களின் திருமண நடைமுறைகளைப் பொறுத்தவரையிலே நாள், முகூர்த்தம் பார்த்தல் அரிதானதாகவே இருந்தது. ஏனெனில் எசமானனுக்கு வசதியான நாளே திருமண நாளாக இருக்க வேண்டுவது அவசியமாயிற்று. திருமணத்தினால், அவனுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் பாதிக்கப்படக்கூடாது இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நாள், முகூர்த்தம், சோதிடம் பற்றிய அறிவும் அவற்றிலே நம்பிக்கை கொள்ள வேண்டிய மனப் பக்குவமும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே இருந்திருக்க நியாயமில்லை. இவை பற்றிய அறிவு அரசனுக்கும் எசமானனுக்கும் மட்டுமே உரித்தானவை. எனவே, எசமான் தீர்மானித்த நாளிலே திருமணம் நடைபெறும். அதுவும் சடங்குகளற்ற ஓர் இயல்பான நிகழ்ச்சியாகவே அது அமைந்துவிடும். மணமகன் தன் தாய் தந்தையுடன் அல்லது உறவினருடன் மணமகள் வீட்டுக்குச் சென்று அங்கு விருந்துண்பது சோறு குடுப்பித்தல் எனப்பட்டது. இதுவே திருமணச் சடங்காகவும் கொள்ளப்படுகின்றது. சில விடயங்களிலே பெரியோர் முன்னிலையிலே சரடு கட்டுதல் வழக்கமாகும்.

தாரமென்றென் கழுத்தின்முன் னாளிற்
சரடு கட்டிய பாரதம் வைத்தோன்

எனப் பருளை விநாயகர் பள்ளிலே மூத்தபள்ளி பள்ளனைக் குறிப்பிடுகின்றாள். சிலவிடங்களிலே சரடு கட்டுவதற்குப் பதிலாகக் ''கீச்சி'' கட்டப்பட்டது. இவையே இவர்களின் தாலியாகவும் கருதப்பட்டு வந்துள்ளது.

உயர் சமூகத்தினரின் திருமணச் சடங்கினை,

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே

எனத் தொல்காப்பியம் கற்பியல் முதலாஞ் சூத்திரம் குறிப்பிடுகின்றது. தேச வழமையிலே, உயர் சமூகத்தினரின் திருமணங்கள் சமயாசாரப்படி விதிக்கப்பட்ட சடங்குக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு இடம் பெறுதல் வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயின், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் திருமணத்தைப் பொறுத்தவரையில் சோறு குடுப்பித்தல் அல்லது வெற்றிலை மடித்துக்கொடுத்தலே சடங்காகுமெனத் தேசவழமை குறிப்பிடுகின்றது.[4] இக்காலப் பகுதியிலே தாலி கட்டுவதற்கோ உயர் சமூகத்தினருக்குரிய சடங்கு முறைகளைக் கடைப்பிடிக்கவோ தாழ்த்தப்பட்ட சமூகத்தி னர் அங்கீகரிக்கப்படவில்லை. திருமணம் என்ற சொல்லே உயர்சாதியினருக்கென உரிமை பூண்ட சொல்லாக விளங்கியது.

இந்தியாவிலே அடிமைகளின் திருமணமானது எசமா னர்களின் இச்சைதீர்க்கும் வைபவமாக அமைந்ததற்கான சான்றுகள் உள. சோறு குடுப்பித்தல் முடிந்ததன் பின்னர் முதல் இரவை மணப்பெண் எசமானனுடன் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப் பட்டாள். அதன் பின்னரே அவள் மணமகனுக்கு உரியவளாகின்றாள்.[5] இத் தகைய நடைமுறைகள் யாழ்ப்பாணத்தில் இருந்ததற்கான ஆதாரங்களெதுவும் தென்படவில்லை. 1844ஆம் ஆண்டிலே அடிமை முறை சட்டபூர்வமாக ஒழிக்கப்படும்வரை சோறு குடுப்பித்தல் அல்லது வெற்றிலை மடித்துக் கொடுத்தலே தாழ்த் தப்பட்ட சமூகத்தினரின் திருமணச் சடங்காகக் கொள்ளப் பட்டு வந்துள்ளது.

## 3. ஐரோப்பியராட்சிக் காலத்துச் சமூக அமைப்பும் திருமண நடைமுறைகளும்

### 3:1 சமூக அமைப்பு

1844இல் சட்டபூர்வமாக அடிமைமுறை ஒழிக்கப் பட்டதன் பின்னர் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையிலே சிறுச்சிறு மாற்றங்கள் நிகழ்வதை அவதானிக்க முடிகிறது. சமூகக் கட்டுக்கோப்பு அவர்களை இறுகப் பிணைத் திருப்பினும், தேவையேற்படின் அக் கட்டுக்கோப்பினை உடைத்துக்கொண்டு வெளியேறமுடியும் என்ற நம்பிக்கை அவர்களின் நடவடிக்கைகளிலே சில மாற்றங்களை உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியது. அடிமை நிலையிலே அபிவிருத்தி என்ற நிலையை விட, ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலே குறிப்பிடற்குரிய அடிப்படை உரிமைகளைக்கூட இம் மக்களினாலே பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக அந்தஸ்தினை கே. டானியல் விளக்கமாகக் கூறியுள்ளார்.[6]

உண்மையில் இக்காலப் பகுதியில் தனியொருவனுன எசமானனிடமிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கிடைத்ததேயன்றிச் சமூக அடிமைத்தளையிலிருந்து அவர் களால் விடுபடமுடியவில்லை. உயர் சமூகத்து மக்களின் சடங் குகள் சம்பிரதாயங்களில் தவிர்க்கவியலாதவாறு தம்மை இணைத்தக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இவர்கள் உள்ளாகினர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே, விதானை யார் நியமனம் கிடைத்த குலத்துங்கம் என்பவர் அழைத்து வரப்படுகையில் தத்தமக்குரிய அடிமைத் தொண்டுகளைத் தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள் ஆற்றிநின்றதனை ஈழத்துப் பிரபல நாலாசிரியர் கே. டானியல் தன்னுடைய கோவிந் தன் நாவலிலே விளக்கமாக விவரித்துள்ளார்.

1931ஆம் ஆண்டளவிலே டொனமூர் ஆணைக்குழு வயது வந்தோருக்கான வாக்குரிமையை வழங்கியபோது, தாழ்த்தப் பட்ட சமூக மக்களுக்கும் அவ்வுரிமை கிடைப்பதை உயர் சமூகத் தலைவர்கள் பலர் ஆட்சேபித்தனர். அவர்களின் ஆட்சேபங்கள் மறுக்கப்பட்டதன் பின்னரும் வாக்குரிமை யினால் கிடைக்கக்கூடிய பல அனுகூலங்களை அனுபவிப்பதி னின்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள் தவிர்க்கப் பட்டனர். அரச யந்திரத்தின் இயக்கச்சக்கரங்களாக விளங்கிய விதானை, உடையார், மணியகாரன், காவல் படையைச் சேர்ந்தவர்கள், சிவில் சேவை உத்தி யோகத்தர்கள், நீதவான்கள் ஆகியோர் உயர் சமூகத்தின ராக விளங்கினர். இவர்கள் தமது அதிகாரவரம்பினுக் கியைந்த அளவிலே தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களின் நியாயமான உரிமைகளையும் அனுபவிக்கவொட்டாது தடை களை விதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலைமையின் தீவிரத்தன்மையை ஐரோப்பியரின் மதமாற்ற நடவடிக்கைகள் சற்றே தளர்த்துவதற்கு வழி செய்தன. ஐரோப்பிய மதகுருமார் யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்து வறிய மக்களையே முதன் முதலில் மதம் மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். அடிமைத் தளையிலும் குடிமை முறையிலும் இன்னலுற்று அழுந்திய இம் மக்களுக்கு ஐரோப்பிய மதகுருமார் காண்பித்த மதமாற்ற வழியானது, சமூக அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலைபெறுவதற்கான ஒரு குறுக்குவழியாக அமைந்தது. மதம் மாறியவர்களுக்கு வழிபாட்டுவசதி, உத்தியோக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. வசதியானதும் சுதந்திரமானதுமான ஒரு வாழ்க்கைமுறையை வகுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. கவர்ச்சியான இந் நடவடிக்கைகளினால் தாழ்த்தப்பட்ட மக்களில் அனேகர் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர். மதமாற்றமானது, தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் பொருளாதார நிலையிலே தாக்கமான விளைவுகளை உருவாக்குகின்றது என்பதைவிட, சமூகத்தில் இம் மக்களுக்குத் தகுதியான ஓர் அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கிறது என்ற உண்மையைத் தாழ்த்தப்பட்ட மக்களைப் போன்று உயர் சைவ வேளாளக் குடியினரும் உணரலாயினர்.

### 3:2 திருமண நடைமுறைகள்

அடிமைமுறை சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டதன் பின்னர், சொத்துடைமைச் சுதந்திரத்தின் சாதகமான பல விளைவுகளை இதுவரைகாலமும் அடிமை குடிமைகளாக விளங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கலாயினர். இச் சட்டம், அடிமை குடிமைகள் தமக்கு வேண்டிய சில அத்தியாவசியச் சொத்துக்களையேனும் வைத்துக்கொள்வதற்கு வகை செய்தது. பொருளாதார ரீதியாக வழங்கப்பட்ட இச் சிறு சுதந்திரமே தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை வரலாற்றின் திருப்புமையமாக அமைந்தது.

#### 3:2.1. தாழ்த்தப்பட்ட மக்களும் சொத்துடைமையும்

இதுவரைகாலமும் ஆதனங்களுக்குப் பூரண பாத்தியதையுடையோனாய் எசமானனே விளங்கினான். ஆதனங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாய்களை மட்டுமே அனுபவிப்பதற்கு அடிமைகள் அங்கீ கரிக்கப்பட்டனர். இச் சட்டம், சொத்துக்களை அறுதியாகக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றின் மீது பூரண பாத்தி யதை கொள்வதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வசதி செய்து கொடுத்தது. சொத்துடமை, இம்மக்களின் எதுவித இலக்குமற்ற வாழ்க்கை முறைக்கு வரம்பு கட்டியது; வாழ்க் கையை முறைப்படி வகுத்துக் கொள்வதற்கு வகைசெய்தது; தனது பாத்தியதைகளையும் அவற்றுக்கான வாரிசுகளையும் ஐயம்திரிபறச் சமூகத்துக்கு விளங்கச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது.

சொத்துடைமைச் சமூக அமைப்பிலே திருமணம், மகப் பேறு, உறவுமுறைகள் இறுக்கமடைவது இயல்பானதாகும். இவற்றிலே நெகிழ்ச்சி ஏற்படுமாயின் சொத்துடைமையிலும் உறவு முறையிலும் முடிவற்ற குழப்பமே உருவாகும். எனவே, இச்சமூக அமைப்பிலே சொத்துக்களினதும் அவற் றிற்காக வாரிசுகளினதும் விபரங்களைப் பேணிப் பாது காப்பது அவசியமாகிறது. யாழ்ப்பாணத்தின் தேசவழமை விதிகள் சொத்துக்களின் உரிமை வழியைப் பின்பற்றுமாறு வகுத்துக் காட்டுகின்றது. ''தாலி கட்டிய மனைவி, அல்லது சம்பிரதாய பூர்வமாக மணஞ்செய்த மனைவி, அல்லது சட்டப்படி விவாகம் செய்த மனைவி, அல்லது மனையின் பிள்ளைகளே தந்தையின் சொத்துக்களுக்கு உரிமையுடை யோராவர். ஆசை நாயகிகளின் குழந்தைகளுக்குத் தமது தகப்பனின் சொத்துக்களிலே எதுவித பாத்தியதையும் கிடையாது.''[7]

எனவே, தனது பிள்ளைகள் நிர்க்கதியான நிலைக் காளாவதனை எந்தத் தாயும் ஏற்றுக்கொள்ள மாட்டாள். தனது கணவனின் சொத்துக்கள் தனது பிள்ளைகளைச் சென்றடைவதனையே எந்தத்தாயும் விரும்புவாள். எனவே தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள் சொத்துடைமையாளர் களாக மாறியதன் பின்னர், தமது சொத்துக்களின் வாரிசுகளை வரையறுத்துக் காட்ட வேண்டியவராயினர். இதனால், ஒருவனுக்கு ஒருத்தியென்ற நடைமுறை இம் மக்கள் மத்தியிலும் வேரூன்றத் தொடங்கிற்று. இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளால் இவர்தம் திருமண நடைமுறைகளிலும் புதிய பல அம்சங்கள் இடம்பெறுதல் தவிர்க்கப்பட வியலாததாகின.

### 3:2.2. சொத்துடைமையும் திருமணமும்

இதுவரைகாலமும் மூன்றுமவரும் அறியாது நடைபெற்றுவந்த **சோறு குடுப்பித்தல், வெற்றிலை மடித்துக் கொடுத்தலாகிய** திருமண நடைமுறைகளை உலகறியச் செய்துவைக்கவேண்டிய தேவைகள் உருவாகின. இச் சமூகத் தேவைகளின் இன்றியமையாமை, இக்காலப் பகுதியிலே நடைபெற்ற தாழ்த்தப்பட்ட சமூகத்துக் கிறிஸ்தவ மக்களின் திருமணங்கள் சில உணர்த்துவனவாயின. கிறிஸ்தவத் தேவாலயங்களினுள்ளே சென்று தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள் வழிபடுவதற்கு அநுமதிக்கப்பட்டதுடன், அம் மக்களின் திருமணங்கள் சில கிறிஸ்தவத் தேவாலயங்களிலே நடைபெறவும் அங்கீகாரமளிக்கப்பட்டது. கிறிஸ்தவ மதகுருமார் இவர்களின் திருமணங்களைத் தேவாலயங்களிலே நடாத்தி வைத்தனர். **கைப்பிடித்தல், தாலிகட்டல்** ஆகிய நடைமுறைகள் தேவாலயங்களிலே இடம்பெற்றன. திருமணத்தின் பின்னர் மணமக்களை ஊர்வலமாக அழைத்துச் செல்லும் நடைமுறையும் வழக்கமாகியது.

வேற்றுமதத்தினர் தாழ்த்தப்பட்ட சமூகத்துக் கிறிஸ்தவ மக்களுக்கு வழங்கிய இச் சலுகைகள், பாரம்பரியமான தாழ்த்தப்பட்ட சைவ மக்களிடையே ஒரு புதிய விழிப்புணர்வையும், உயர் சைவக் குடியினரிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கையும் உருவாக்கின. இதனால் இக் காலப்பகுதியிலே தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களின் திருமணங்கள் அவர்களுக்குரியதான கோவில்களிலே நடைபெறுதல் அங்கீகரிக்கப்பட்டது. அவர்களது கோவில்களிலே பூசை செய்வதற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட ஐயர் திருமணங்களைச் செய்துவைத்தலும் அனுமதிக்கப்பட்டது. திருமணங்கள் வீடுகளிலே நடைபெறும்போது, வீடுகளுக்குச் சென்று ஐயர் அவற்றை நடாத்தி வைத்தலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தத்தம் பொருளாதார நிலைமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைவான வகையிலே, திருமணங்களின்போது இச் சமூக மக்கள் தாலிகட்டுவதும் நடைமுறையானது. திருமணங்களின் போது பந்தல் அமைத்தல், பந்தலுக்கு வெள்ளைகட்டல், மேள தாளம் வைத்தல், மணமக்களை ஊர்வலமாக அழைத்துவரல் ஆகியன உயர் சமூகத்தினரின் தயவுடன் செய்யப்பட வேண்டியவையாயின. அவர்களின் ஒத்துழைப்புக் கிட்டாதபோது அவை கைவிடப்படவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கும் உள்ளாகின.

இதுவரைகாலமும் இச்சமூக மக்களின் திருமணங்கள் எசமானாலே தீர்மானிக்கப்பட்ட நிலைமை மாறியது. தாமே திருமணங்களை நிச்சயித்துக்கொள்ளும் உரிமையை இக் காலப் பகுதியிலே தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் பெற்றுக் கொண்டனர். ஒரே குடும்ப வட்டத்தினுள்ளே அல்லது ஒரே கிராமத்தினுள்ளே இவர்களின் திருமண உறவுகள் சுருங்கியிருந்த நிலை மாறியது. போக்குவரத்து வசதிகள் விருத்தியடைந்தமையும், சுதந்திரமான இயக்கத்திற்கும் தொடர்புகளுக்கும் இடமளிக்கப்பட்டமையும், வெவ்வேறு பிரதேசங்களிலே வாழ்ந்த இச்சமூக மக்களை ஒன்றாக இணைத்தன. இதனால் இவர்கள் பல்வேறு கிராமங்களுடன் தமது திருமண உறவுகளை விருத்திசெய்யும் நிலைமையும் உருவாகியது.

### 3:2.3. திருமணத்திற்கான தகைமைகள்

இக்காலப் பகுதியிலே திருமணம் செய்துகொள்ளும் ஆண் பெண் இருபாலாரினதும் தகைமை, அவர்கள் செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டதாகும். பொதுவாகத், தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்கள் யாவருமே உடல் வருந்தி உழைக்கும் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவராவர். எனவே, தமது தொழிலை இடையீடின்றியும் திறமையுடனும் செய்வதற்கான உடல் வலு இவர்களுக்கு இன்றியமையாததாகும். மணமகனின் தகைமையில் அவனது உடல்வலிமையே பிரதானமானதாகக் கொள்ளப்படும். பெண்ணும், கூலிவேலைக்குச் சென்று உழைக்கக்கூடிய உடல்வலு உடையவளாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டாள். அதுவே அவள் மணமக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு வழங்கும் சீதனமாகவும் அமைந்துவிடுகிறது. இக் காலப்பகுதியில், சீதனத்திற்காகப் பேரம் பேசுதல் இச் சமூக மக்கள் மத்தியிலே வழக்கிலிருந்ததற்கான ஆதாரங் களேதும் காணப்படவில்லை.

இவர்களின் திருமணம் தொடர்பான இன்னொரு முக்கிய அம்சத்தையும் குறிப்பிடுவது அவசியமானதாகும். இக்காலப் பகுதியிலே, ஓர் ஆடவன் தாரமிழந்தபின்னர் வேறு ஒரு பெண்ணை மணப்பது இழிசெயலாகக் கருதப்படவில்லை. ஏனெனில், அவனது தொழிலைச் செவ்வனே செய்வதற்கு ஒரு பெண்ணின் துணை எப்போதுமே இன்றியமையாததாக இருக்கின்றது. முன்னைய தாரத்து மனைவியின் பிள்ளைகளைத் தனது பிள்ளைகள்போலப் பின்னைய தாரத்தாள் பேணி நடத்திவருதல் இவர்களின் இக்காலப்பகுதிய சமூக மரபாகக் காணப்படுகின்றது. இவ்வுரிமையைப் பெண்ணும் அனுப பவித்து வந்திருக்கின்றாள். பெண் ஒருத்தி தனது கணவனை இழந்தபின்பு இன்னொருவனை மணஞ் செய்தல் இச் சமூக மக்கள் மத்தியிலே அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளது. பலதார மணத்தை இவர்கள் ஏற்றுக்கொண்டபோதும் இறுதிவரை கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விசுவாசமாகவும், நம்பிக்கையாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருந்து வந் திருக்கின்றனர்.

## 4. சுதந்திரத்தின் பின்னர் திருமண நடைமுறைகள்

### 4:1 சமூகநிலை

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் நிலைமையிலே துரிதமான அபிவிருத்தியை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அரசியல், பொருளாதாரம், கல்வி, தொழில் வாய்ப்புக்களிலே தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை இவர்கள் சிறிய முறையிலே பயன்படுத்திக் கொண்டனர். சுதந்திர காலத்தின் பின்னரே, தமது அடிப்படை உரிமை களையேனும்போராடிப் பெறுமளவுக்கு இம்மக்கள் வல்லமை கொண்டோராயினர். பல்வேறு போராட்டங்களின் மத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே இம் மக்கள் அணுவணுவாக முன்னேறிக்கொண்டிருப்பினும், சாதி அமைப்பும் புதுப்புது வடிவங்களிலே இம் மக்கள்மீது இன்றும் திணிக்கப்பட்டே வருகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிஷனரிப் பாடசாலைகளிலே கல்வி கற்பதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக அவர்களிற் பலர் உயர்கல்வி பெறவும் அதன் காரணமாக அரசாங்கப் பதவிகள் பெறவும் வல்லவராயினர். இலவசக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டதும் இம் மக்களின் கல்வி நிலையிலே குறிப்பிடக்கூடிய அபிவிருத்தி ஏற்படலாயிற்று. இவர்களிற் பலரும் பரவலாகக் கல்வி வசதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவரானார்கள். விரும்பிய தொழில்களைச் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதால், இவர்கள் தமது பாரம்பரியமான தொழில்களைக் கைவிட்டு வருவாய் தரும் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டனர். விவசாயம், வர்த்தகம், மேசன் தொழில், தச்சுத்தொழில், செருப்புக் கட்டும் தொழில் ஆகியன இவர்களுக்குப் பெரு வருவாய் தரும் தொழிலாக அமைந்தன. இந் நிலைமைகளால் தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களின் பொருளாதாரநிலைஇக்காலப்பகுதியிலேமேம்பாடுறலாயிற்று. இதனால், விவசாய நிலங்களையும், வர்த்தக ஸ்தாபனங்களையும், அவர்கள் விலைகொடுத்து வாங்கினர். சிறுச்சிறு தொழில் நிலையங்களை அமைத்தனர். இவற்றின் மூலம் தமது பொருளாதார நிலையையும் இவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டனர். எனவே இன்றைய நிலையில், ஓரளவேனும் உயர் சமூகத்தினரை நிகர்த்த பொருளாதார வளர்ச்சிப் படியிலே இச் சமூக மக்கள் அடியெடுத்து வைத்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

## 4:2 திருமண நடைமுறைகள்

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர், பொருளாதார நிலையிலே குறிப்பிடற்குரிய வளர்ச்சி நிலையினை அடைந்த இம் மக்களின் வாழ்க்கைமுறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள். உயர்சாதி மக்களின் நடவடிக்கைகளை நிகர்த்தனவாகக் காணப்படுகின்றன. உயர்சாதி மக்களின் வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளைப் பின்பற்றி நடப்பதிலே இம்மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். திருமண நடைமுறைகளிலும் இம் மக்கள் பெருமளவுக்கு உயர்சாதி மக்களையே பின்பற்றி வருகின்றனர்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு சாதியினரதும் திருமண நடைமுறைகளைத் தனித்தனியே இச் சிறு கட்டுரையில் ஆராய்வது எளிதானதன்று. எனவே, தாழ்ந்த சாதியைச் சேர்ந்த யாவரினதும் திருமணநடைமுறைகள் பொதுவாகவே இங்கு நோக்கப்படுகின்றன. உயர் சாதியினரின் திருமண நடைமுறைகளுக்கும், இவர்களின் திருமணநடைமுறைகளுக்குமுள்ள சிறு வேறுபாடுகள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்படுகின்றன.

### 4:2.1. காதல் கலியாணம்

சங்ககாலத் தமிழ்மக்கள் வாழ்விலே இடம்பெற்ற 'உடன்போக்கு' என்பதற்கு நிகர்த்ததான இந்தத் திருமண முறை மிக எளிமையானதும் இயல்பானதுமாகும். பருவமெய்திய ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் மணம் விரும்பிப் பலநாள் பழகியதன் பின்னர், தமது பெற்ருேர்கள் இத் திருமணத்திற்கு உடன்படாவிடத்து, இருவரும் தமது பெற்ருேரைப் பிரிந்துசென்று, கோவிலிலோ, பெரியோர் முன்னிலையிலோ **மாலை மாற்றிக்கோள்வர், அல்லது தாலி கட்டிக்கொள்வர்.** இவை இயலாதவிடத்துப் பெரியோர்களின் ஆசியுடன் புதுமணத் தம்பதியராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு பிள்ளைகள் தமது கட்டுப்பாட்டினை மீறித் தாம் விரும்பியவரைத் திருமணஞ் செய்து கொண்டாலும், அவர்களை நீண்டகாலம் பிரிந்திருக்க விடாது தம்முடன் மீண்டும் அணைத்து நடப்பதே உலக வழக்காகும். பெற்ருேர் சிலர் அவர்களைத் தம்முடன் இணைக்காது இறுதிவரை புறக்கணிப்பதும் உண்டு. மணப்பெண் குழந்தையொன்றைப் பெற்றெடுக்கும்போதோ அன்றி மணமக்களில் அல்லது அவர்களின் பெற்ருேரில் யாரேனும் சுகவீனமுற்றிருக்கும் போதோ வேறு 'நன்மை தீமை'யான சம்பவங்களின்போதோ தம்மைப் பிரிந்துசென்ற மணமக்களை மீண்டும் தம்முடன் அணைத்துக்கொள்வர். உயர் சாதியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள ஆண் அல்லது பெண் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பெண் அல்லது ஆணுடன் உடன்போகுமிடத்து, இறுதிவரை உயர் சாதியைச் சேர்ந்த பெற்ருேர் அவர்களை அணைத்துக் கொள்வதில்லை.

இவ்வாருன மணமுறை, பொருளாதார ரீதியாக நோக்குமிடத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றே யாயினும், சமூகம் இவ்வகையான திருமணங்களை இன்னும் மனமுவந்து வரவேற்கும் நிலையிலில்லை. குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் அவ்வாறு உடன் போகிய பெண்ணை "ஓடினவள்" அல்லது "ஓடுகாலி" எனச் சமூகம் இழித் துரைக்கின்றது. இவ்வகையான திருமணங்களால், தமது குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டுவிடும் என யாழ்ப்பாண மக்கள் எண்ணுகின்றனர்.

### 4:2.2. பேச்சுக் கலியாணம்

பேச்சுவார்த்தைகள் மூலம் நடைபெறும் திருமணமே பொதுவாக யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் விதந்து போற்றப்படுவதாகும். இம் மணமுறை, தனியே ஓர் ஆணையும் பெண்ணையும் இல்வாழ்க்கையில் இணைத்து வைத்தல் என்ற எல்லையைக் கடந்ததாகும். இம் மண முறை, தனியே ஓர் ஆணையும் பெண்ணையும் இணைத்து வைப்பதுடன் நில்லாது, இருபகுதியினரின் உற்ருர் உறவினர் களையும் இணைப்பதாக அமைந்து விடுகிறது. இரண்டு உள்ளங்களின் பிணைப்பு என்பதனைவிட, இருவேறு பகுதி யினரை இணைத்தல் என்பதே இத்திருமணத்தின் பிரதான அம்சமாகும். இருப்பினும், இம்மணமுறையே யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பிரச்சனைக்குரிய ஒரு நடைமுறையாகவும் அமைந்துவிடுகிறது.

யாழ்ப்பாணத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சொத்துடைமை அற்றவர்களாக வாழ்ந்தபோது இம் மண முறையின் தாக்கத்தினை உணரமுடியாதிருந்தனர். சொத் துடைமையின் ஆரம்பத்துடன், இத் திருமண நடை முறை இம்மக்களையும் பெரும் சுமையாகத் தற்போது அழுத்தத் தொடங்கியுள்ளது. இம் மணமுறை, தாழ்த்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட மக்கள் மத்தியினும் ''சீதனம்'' என்ற கொடுமையை இன்று வேர்பாய்ச்சி நிற்கிறது. மணமகளின் பெற்ருேர் மணமகனுக்கும் பெண்ணுக்கும் வழங்கும் பணம், பொருள் ஆகியனவே சீதனம் எனப்படும். மணமகனின் தராதரத்தினுக்கேற்பச் சீதனத்தின் உச்ச எல்லையும் அமைந்து விடுகிறது.

யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களும் இன்று, மாப்பிள்ளையின் தொழில் அந்தஸ்தினுக்கு முதன்மைத்துவமளிக்கின்றனர். மணமகன் அரசு உத்தியோகத்தனுயின் பெருமளவு சீதனத்தை அவனது பெற்ருேர் எதிர்பார்க்கின்றனர். சீதனச் சந்தையிலே பணக்காரப் பெண்ணின் பெற்ருேர் பெருமளவு பணம், பொருள் கொடுத்துத் தராதரமான மாப்பிள்ளைகளை வாங்கிவிடுகின்றனர். சீதனமற்ற பெண்கள் நீண்டகாலமாகவோ, அன்றி வாழ்நாள் பூராவாகவோ திருமணமாகாதிருந்துவிடுகின்றனர். உயர் சாதி மக்களுடன் ஒப்பிடும்போது, சீதன முறையால் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியில் ஏற்படும் தாக்கம் மிகக் குறைவே.

இவ்வகைத் திருமணமும் மூன்று வகையிலே நடைபெறுகின்றது.

1. முறைப்பெண் அல்லது முறை ஆணை மணத்தல்

மைத்துனன் அல்லது மைத்துனி முறையான ஆணை அல்லது பெண்ணைப் பெரியோர்கள் பேசி, அத்திருமணத்தை நடத்திவைப்பதாக இது குறிக்கின்றது. மைத்துனியின் மகனையோ மகளையோ மணப்பதும் வழக்கிலுண்டு.

2. உறவு முறையினரை மணத்தல்

முறை மைத்துனன் அல்லது மைத்துனி இல்லாதவிடத்து, சுற்றத்தினர் மத்தியில் அல்லது கிராமத்திலுள்ள உறவினர் ஒருவரை மணத்தலையே இது குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உறவினரல்லாத தமது சாதியைச் சேர்ந்தோரை மணத்தல்

பொதுவாக உறவுமுறையில் அல்லது சுற்றத்தினரில் பொருத்தமான ஆண் அல்லது பெண் கிடைக்காதவிடத்து, சுற்றத்தாரல்லாத தொலைவிலுள்ளோர்களைத் திருமணம் செய்துகொள்வதனை இது குறிக்கும்.

பொதுவாக யாழ்ப்பாணத்தின் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் முறை மைத்துனன் அல்லது மைத்துனியையே மணஞ்செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். தூரத்து உறவினரையோ அன்றி உறவினரல்லாத 'பிறத்தியாரை'யோ மணஞ்செய்வது இகழ்ச்சிக்குரியதாகவே இவர்களினால் கணிக்கப்படுகிறது. சிலவிடங்களிலே மாற்றுச் சம்பந்தம் செய்துகொள்வதும் நடைமுறையில் உண்டு.

இம்மணமுறையைப் பொறுத்த அளவிலே பேச்சு மணம் மிக நீண்டகாலமாக மணமக்களின் பெற்றோரின் மனப் பொருத்தமே திருமணப் பொருத்தமாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. பெண்ணின் பெற்றோர் தீர்மானிப்பவனை மணமகனாக ஏற்றுக்கொள்வது யாழ்ப்பாணத் தாழ்த்தப் பட்ட சமூகப் பெண்களிடமுள்ள பொதுவான ஒரு மரபாகும். மணமகன் முன்னர் அறிமுகமற்றவனாக இருப்பினும், அவனை அனுசரித்து அவனுக்காகவே தன்னை அர்ப்பணிக்கவேண்டுமெனப் பெண் எதிர்பார்க்கப்பட்டாள். இந்த நடைமுறையிலே அண்மைக்காலமாகச் சில மாற்றங்கள் இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகிறது.

### பேச்சுக்கால்

திருமணப் பருவம் அடைந்த பெண்ணின் பெற்றோர் அவளை மணமுடித்து வைப்பதன் பொருட்டுத் தகுதியான ஒரு மாப்பிள்ளையைத் தேடுவர். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களேயாயினும் சாதி மாறித் திருமணஞ் செய்தல் இவர்கள் மத்தியிலே இழிவானதாகக் கருதப்படுகிறது. மணமகனைத் தேடுகையில், அவனது குலம், கோத்திரம், மணமகனதும் அவனது உற்றார் உறவினரதும் நடத்தைகள், மணமகனின் தொழில், தோற்றம், குணவியல்பு ஆகியன கருத்திற் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியான பொருத்தமான ஒரு மாப்பிள்ளையை அறியுமிடத்துப் பெண்ணின் பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர் மாப்பிள்ளையின் பெற்றோர் அல்லது உறவினருடன் தொடர்பு கொண்டு அவர்களின் உள்ளக் கிடக்கையை அறிந்துகொள்வர். தங்கள் மகனுக்குத்திருமணம் செய்யும் எண்ணம் பெற்றோருக்கு உண்டு என அறிந்ததன் பின்னர் பெண்ணின் தகப்பன் தனித்தோ அன்றி உறவினர் ஒருவருடனோ நல்ல ஒரு நாளிலே மாப்பிள்ளையின் வீட்டுக்குப் போவார். இரு பகுதியினரும் ஏற்கனவே அறிமுகமானவரெனில் பெண் வீட்டாரின் வருகைக்கான காரணத்தை மணமகன் வீட்டினர் இலகுவில் அறிந்து கொள்வர். முன்னர் அறிமுகமற்றவர்களாக இருப்பினும் வீட்டுக்கு வந்தவர்களை வரவேற்று வெற்றிலை வைத்து மணமகன் வீட்டினர் உபசரிப்பர். சில விடங்களிலே வந்த விருந்தினர்க்குத் தேநீர் வழங்குவதும் நடைமுறையிலுண்டு. இரு பகுதியினர் மத்தியிலும் சுமுகமான ஒரு சூழ்நிலை உருவாகியதன் பின்னரே வருகைக்கான காரணத்தைப் பெண்வீட்டார் வெளியிடுவர். மறைமுகமாகவோ அன்றி மிகச் சூசகமாகவோ, தமக்கு வயது வந்த ஒரு பெண் இருப்பதையும், அவளுக்கு மணஞ்செய்து வைக்க வேண்டிய தேவைகளையும் பெண்ணின் தகப்பனார் குறிப்பிடுவார்.

பெண் வீட்டாரின் கருத்தை அறிந்துகொண்ட மணமகனின் தகப்பனார் தமது மனைவி மக்களுடன் இதுபற்றிக் கலந்தாலோசிப்பார். தமக்கும் அவர்களுக்கும் இத் திருமணம் சம்மதமெனில் முடிவினைப் பெண்வீட்டினருக்கு அறியத்தருவார். சம்மதமில்லையெனில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தமது கருத்தைப் பெண்வீட்டாருக்கு அவர் எடுத்துச் சொல்லுவார். இந் நடைமுறையே பேச்சுக் கால் எனப்படும்.

### பொருத்தம் பார்த்தல்

தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியிலே 'தரகர்' களின் தொல்லை மிகக் குறைவாகும். இடையிலே ஒருவரை வைக்காது நேரடியாகவே இருபகுதியினரும் 'பேச்சுக்காலை' நடத்துகின்றனர். பேச்சுக்கால் முடிந்ததும் பொருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பார்த்தல்** நடைபெறும். பெண்ணின் தகப்பனர் மாப்பிள்ளையின் முறையான சாதகத்தை அல்லது குறிப்பைப் பெற்றுக் கொள்வார். அச் சாதகத்தையும் பெண்ணின் சாதகத்தையும் அவர் தனியே அல்லது மனைவியுடன் சோதிடர் ஒருவரிடம் கொண்டு சென்று இரு சாதகங்களின் பொருத்தத்தையும் குறித்துத் தருமாறு கொடுப்பார். சாதகங்கள் இரண்டும் பொருந்திவரின் அவர் பின்னர் இரு சாதகங்களையும் கொண்டு சென்று மாப்பிள்ளையின் தகப்பனரிடம் கொடுப்பார். அவர் இன்னொரு சோதிடரிடம் இரு சாதகங்களையும் கொடுத்துப் பொருத்தம் பார்ப்பிப்பர். சாதகங்கள் இரண்டும் பொருந்திவரின் சீதனப் பேச்சு வார்த்தைகள் தொடரும்.

**சீதனப் பேச்சுவார்த்தை**

நல்ல ஒருநாளில் பெண்ணின் தகப்பனர் மாப்பிள்ளை வீடு சென்று சீதனம்பற்றிய பேச்சுவார்த்தையை ஆரம்பிப் பார். சீதனமாகத் தாம் கொடுக்க உள்ள பணம், நகை, வீடு, நிலம் ஏனைய பொருட்கள் பற்றிய விபரங்களை அவர் எடுத்துச் சொல்வார். பெண் வீட்டுக்காரரின் தகுதியறிந்து அவர்கள் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள மாப்பிள்ளையின் தகப்பனர் சம்மதிப்பார். சில விடங்களில் மாப்பிள்ளையின் தகப்பனரே இவை இவை சீதனமாகக் கொடுக்கப்படவேண் டும் எனக் கேட்டுக்கொள்வார். பெண்ணின் தகப்பனருக்கு அது இயலுமெனில் பேச்சுவார்த்தை தொடரும், இயலா தெனில் அவ்வளவில் முடிந்துவிடும்.

பொதுவாக, யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியிலே தொன்றுதொட்டுச் சீதனப் பிரச்சினை ஒரு பெரும் தடை'ாக அமைந்திருக்கவில்லை. இன்று, உத்தியோக மாப்பிள்ளைகளுக்கான 'கேள்வி'யும் போட்டி யும் அதிகரித்திருப்பதனல் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியிலும் இது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது.

**வேள்வெடுத்தல் அல்லது பெட்டி மாறல்**

சீதனப் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்ற தன் பின்னர், பிறிதொரு நல்ல நாளிலே நல்ல நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின்பெற்ருேர் தமது உற்ருர் சகிதம் மணமகனின் வீட்டுக்குத் தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு, சந்தனம் குங்குமம், பூக்கள் ஆகிய மங்கலப் பொருட்களையும் வேறு 'பலகார' வகைகளையும் ஓலைப் பெட்டிகளில் அல்லது வெள்ளித் தட்டுகளில் வைத்து எடுத்துச் செல்வர். இதுவே இம் மக்கள் மத்தியில் **வேள்வெடுத்தல்** அல்லது **பெட்டிமாறல்** என அழைக்கப்படுகின்றது. இவ்வாறு வந்த வர்களை மணமகன் வீட்டினர் இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பர், அவர்களுக்கு வெற்றிலை பாக்கும் மாமிச மற்ற உணவு வகையும் வழங்கப்படும். இதனை வாய் நனைத்தல் அல்லது **விருந்துண்ணல்** என்பர். பிறிதொரு நாளிலே மாப்பிள்ளை வீட்டினரும் இவ்வாறு பெண்வீட்டுக்கு வேள்வு கொண்டுசென்று மீள்வர். இவ்வாறு வேள்வு எடுத்துச் செல்லும் பெட்டிகளையும் தட்டுகளையும் வெறுமனே திருப்பி அனுப்புதல் மரபன்று. ஏதேனும் சிறிதளவு உணவுப் பண்டங்களை அவற்றிலே வைத்துத் திருப்பிக்கொடுத்தல் வழக்கமாகும்.

**முகூர்த்தம் வைத்தல், திருமணப்பத்திரிகை வழங்கல்**

வேள்வு எடுக்கும் நாளிலோ அன்றிப் பிறிதொரு நாளிலோ, சோதிடர் ஒருவரைக்கொண்டு திருமணத்திற்கான முகூர்த்தம் நிச்சயிக்கப்படும். இருபகுதியினரும் சேர்ந்தே திருமணத்திற்கான முகூர்த்தத்தை நிச்சயிப்பர்.

இதன்பின்னர் திருமண அழைப்பிதழ் அச்சிடப்படும். இருபகுதியினரும் தனித்தனியே திருமண அழைப்பிதழ்களை அச்சிடுவதும் உண்டு. சில பகுதிகளிலே இரு பகுதியினரும் சேர்ந்தே அதனை அச்சிட்டுக் கொடுப்பதும் உண்டு. நல்ல ஒரு நாளிலே, திருமண அழைப்பிதழ்களை மணமக்களின் பெற்ருேர் எடுத்துச் சென்று அவரது உற்ருர் உறவினர் களுக்கு வழங்குவர். பொதுவாக முதன் முதலிலே திருமண அழைப்பிதழை மணமகனின் பெற்ருேருக்கு அல்லது மண மகளின் பெற்ருேருக்கு வழங்குவதே மரபாகும். சில சந்தர்ப்பங்களிலே திருமண அழைப்பிதழ்கள் அச்சிடப் படாது, வீடுவீடாகச் சென்று வாயால் சொல்வதும் வழக்கிலுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்னிக்காலூன்றல்**

திருமணநாளின் முன்னதாகக் **கன்னிக்காலூன்றல்** தமிழ் மக்கள் மத்தியிலே தொன்றுதொட்டு நடைமுறையிலிருந்து வரும் வழக்கமாகக் கருதப்படுகிறது. வேள்வு எடுக்கும் நாளில் அல்லது பிறிதொரு நல்ல நாளில், முற்பகல் வேளையிலே இச் சடங்கு நடைபெறுகின்றது. இந்தியாவில், பால்மரத்தின் கொப்பு ஒன்றினையே கன்னிக் காலாக ஊன்றுவர். யாழ்ப்பாணத்திலே, முள்முருக்க மரத்தின் நேரிய கிளை ஒன்றே கன்னிக்காலாக நாட்டப் படுகின்றது.

குறித்த நாளிலே பெண் வீட்டிலே கன்னிக்கால் ஊன்றல் முதலில் இடம்பெறுகின்றது. மணப் பந்தல் அமைக்கப்பட விருக்கும் ஈசான மூலையிலே, பெண்ணின் தகப்பன் அல்லது சுற்றத்தவரில் ஒருவர் நீராடித் தூய ஆடை அணிந்து திருநீறு சந்தனம் தரித்து, இறைவனை மனதில் வேண்டிக் கொண்டு பூரண கும்பம் வைப்பார். கும்பத்தின் அருகிலே கன்னிக்கால் ஊன்றுவதற்கான சிறு கிடங்கு ஒன்று கிண்டப் படும். பின்னர், அருகிலிருக்கும் முள்முருக்கம் மரத்தி னின்றும், கடவுளை நினைந்து நேரிய இளம் தடி ஒன்றை வெட்டி வருவர். பக்கக் கிளைகள் வெட்டி ஒதுக்கப்பட்டதன் பின்னர் அத்தடிக்கு மாவிலை கட்டுவர், வெள்ளை கறுப்பு நிறம் தவிர்ந்த பட்டுத்துண்டு ஒன்றும் தடியைச் சுற்றிக் கட்டப்படும். பின்னர் திருநீறு, சந்தனம், குங்குமம் போன்ற மங்கலப் பொருட்கள் அத் தடிக்கு அணிவிக்கப் படும். கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்ததன் பின்னர், மணமகனின் உறவினர் ஒருவர் அத்தடியைக் கிடங்கிலே நாட்டுவர். சந்தனம், குங்குமம், திருநீறு, மலர், வெற்றிலை, பாக்கு போன்ற மங்கலப் பொருட்களும், நவ தானியமும் கிடங்கிலே இட்டு அதனை மூடுவர். இச்சடங்கே கன்னிக்கால் நாட்டுதல் எனப்படுகின்றது. பின்னர் பெண் வீட்டுக்காரர் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று கன்னிக்கால் நாட்டுவர்.

கன்னிக்காலாக நாட்டப்படும் மரக்கிளையின் வாழ்வுக் கும் மணமக்களின் வாழ்வுக்குமிடையே நெருங்கிய தொடர் பிருப்பதாக யாழ்ப்பாண மக்கள் நம்புகின்றனர். திருமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயார்த்தத்தின் நினைவுச் சின்னமாக நாட்டப்படும் கன்னிக்கால், நாளடைவில் துளிர்விட்டுக் கிளைபரப்பிச் செழிப்பாக வளர ஆரம்பிக்கின்றது. அவ்வாறு அது செழிப்பாக வளர்ந்துவரின் மணமக்களின் வாழ்க்கையும் செழிப்பாக அமையும் என்பது இவர்களின் நம்பிக்கை. வளர்ந்து வரும் கன்னிக்காலை வெட்டுவதோ அவ்விடத்தி னின்றும் அகற்றுவதோ மரபன்று.

## பொன்னுருக்குதல்

மணமகன் பெண்ணுக்கு அணிவிக்கும் தாலிக்கென நல்லதொரு நாளிலே பொற்கொல்லர் பொன்னை உருக்கும் சடங்கே பொன்னுருக்குதல் எனப்படும். இச் சடங்கு யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே மிக அண்மைக்காலமாகவே இடம்பெற்று வருகிறது. அண்மைக் காலம்வரை பொன்னுருக்கும் சடங்கு பொற்கொல்லர் வீடுகளிலேயே நடைபெற்று வந்தது. குறித்த நாளிலே, மாப்பிள்ளைத் தோழன் தன் சுற்றத்தினருடன் மணமகன் வீட்டுக்குச் சென்று, மணமகனையும் அவரது சுற்றத்தினரை யும் அழைத்துக்கொண்டு தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு ஆகியவை வைக்கப்பட்டிருக்கும் தட்டினையும் எடுத்துக்கொண்டு பொற்கொல்லனின் வீட்டுக்குச் செல் வான். பொற்கொல்லனின் வீட்டினுள்ளே தாழ்த்தப்பட்ட சமூகமக்கள் சமீபகாலம்வரை உட் செல்லல் மறுக்கப்பட்டு வந்துள்ளது. மணமகனும் தோழனும் வீட்டின் தலைவாசல் வரை செல்ல அனுமதிக்கப்படுவர். ஏனையோர் வீட்டின் புறத்தே பொன்னுருக்குதல் முடியும்வரை காத்து நிற்பர். சுபநேரத்தில் பொற்கொல்லன் தாலிக்குவேண்டியபொன்னை உருக்குவான். மணமகன் பொன்னுக்கான பணத்தையும் தட்சணையையும் பொற்கொல்லனுக்கு வழங்குவார். பின் யாவரும் மணமகன் வீட்டுக்குச் சென்று விருந்துண்பர். பொற்கொல்லன் உருக்கப்பட்ட அப்பொன்னைப் பின்னர் தாலியாகச் செய்து திருமணநாளின் முன்னதாக மணமக னிடம் வழங்குவார்.

சுதந்திரத்தின் பின்னர் சாதி வேறுபாடுகள் படிப்படி யாக அகன்றுவர, பொற்கொல்லன் மணமகனது வீட்டுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பொன்னுருக்குவது இன்று வழமையாகிவிட்டது. பொன்னை உருக்கும்போது பொற்கொல்லன் சில சகுனங்களை அவதானிக்கின்றான். பொன்னை உருக்கும்போது அதி லிருந்து எழும் சுவாலை (ஒளி) யின் தன்மை முக்கியமான தாகக் கருதப்படுகிறது. புதிதாக உருவாகப்போகும் அக் குடும்பம் செழிப்பானதாக அமையுமா அல்லவா என்பதை அச் சுவாலை குறிப்புணர்த்துவதாகக் கருதப்படுகிறது. இக் குறிப்பினைப் பொற்கொல்லன் தான் உள்வாங்கிக் கொள் வானே யன்றி மற்றவர்களுக்கு அதனை எடுத்துச் சொல்வ தில்லை.

**பட்டுவேட்டி கூறை வாங்குதல்**

பிறிதொரு நல்ல நாளிலே மணமகன் வீட்டினர் கடைக்குச் சென்று, பெண்ணுக்கான கூறை, சட்டை ஆகிய வற்றையும் ஏனைய அலங்காரப் பொருட்களையும் வாங்கி வருவார். கடைக்குச் சென்று, முதன் முதலில் மங்கலப் பொருளான குங்குமத்தை வாங்குவதே மரபாகும். பெண் வீட்டுக்காரரும் நல்ல ஒரு நாளிலே கடைக்குச் சென்று மணமகனுக்குத் தேவையான பட்டுவேட்டி. சால்வை, சட்டை, துவாய் முதலிய பொருட்களை வாங்கி வருவார். இரு பகுதியினருமே சேர்ந்து சென்று தேவையான பொருட்களைக் கடையிலே வாங்குதல் அண்மைக்கால வழக்கமாகும். இவ் வாறு ஒன்று சேர்ந்து செல்வதனால் தகுதியானதும், தேவை யானதுமான பொருட்களை வாங்குவது இலகுவாக இருக்கு மெனக் கருதப்படுகிறது.

**பந்தல் அமைத்தல்**

யாழ்ப்பாணத் திருமண நடைமுறைகளிலே பந்தல் அமைத்தலும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. வீட்டின் முற்றத்திலே நல்ல ஒரு நாளிலே பந்தல் அமைப்ப தற்கான நாள் கப்பு நாட்டப்படும். பின்னர் வசதியான ஒரு நாள் பிற்பகல் வேளையிலே பந்தல் அமைக்கும் வேலைகள் நடைபெறும். மணமகன், பெண் வீட்டுக்காரர் தத்தம் சுற்றத்தினருக்குச் சொல்லி எல்லோரும் சேர்ந்து பந்தல் அமைப்பர். சுற்றத்தினருக்குச் சொல்லாது பந்தல் அமைத் தல் பெருங் குறையாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தல், பனை அல்லது காட்டுத் தடிகளினால் மோக்கப் பட்டு, தென்னங்கிடுகினால் வேயப்படும். பந்தல் வீட்டிக் கூரையின் அமைப்பினைக் கொண்டிருக்கும். தட்டையான கூரையுள்ள பந்தல் அமைத்தல் மரபன்று. பந்தல் கிழக்கு வாசலாக அல்லது வடக்கு வாசலாக அமைக்கப்படும்.

இதன் பின்னர் பந்தலுக்கு வெள்ளை கட்டல் நடை பெறும், அடிமைச் சமூகத்தினருக்கும் குடிமைகள் இருக் கின்றனர் என்பதனை வெள்ளை கட்டலே காட்டுகின்றது. மணமகனின் தகப்பன் அல்லது உறவினர் ஒருவர் வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு துரும்பனின் வீட்டுக்குச் செல்வர். (உயர்சாதியினருக்குச் சேலை வெளுப்ப வன் வண்ணான் எனவும், தாழ்த்தப்பட்ட சாதியினருக்குச் சேலை வெளுப்பவன் துரும்பன் எனவும் யாழ்ப்பாணத்திலே அழைக்கப்படுகின்றனர்). அவர் அவற்றை அவனிடம் கையளித்து, நடைபெற இருக்கும் திருமணத்தைப்பற்றி எடுத்துச்சொல்லி, பந்தலுக்கு வெள்ளைகட்ட வருமாறு அழைப்பார். குறித்த நாளிலே துரும்பன் வெள்ளை கட்டு வதற்கு வருவான். வெள்ளை கட்டுவதன் முன் அவனுக்குத் தெட்சிணை வழங்கப்படும். அதன்பின்னர் அவன் பந்தலுக்கு வெள்ளை கட்டுவான். மணப்பந்தல் அவரவர் வசதிக்கேற்ற வாறு அமைக்கப்படுகிறது. வசதியற்றவர்கள் வெள்ளை கட்டுவதோடு பந்தல் அலங்காரத்தை முடித்துக்கொள்வர். வசதியானவர்களாயின், மணவறை அமைக்கப்படும். மாலைகள், மணிகள், நிறக் கடதாசிகளினால் பந்தல் அழகு படுத்தப்படும்.

**உணவுப் பண்டங்கள் சேர்த்தல்**

உயர்சாதி மக்களின் திருமணங்களின் போது உணவுப் பண்டங்களைச் சேகரிப்பதற்கும், செய்வதற்கும் கோவியரின் உதவி நாடப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் திருமணங்களின் போது இவ்வேலைகளை அவர்கள் தாங்களே செய்து கொள்வர். திருமண நாளுக்கு ஒரு வாரத்தின் முன்னதாகத் தேவையான பணியாரங்கள் செய்வதற்கான அரிசி மா இடிக்கப்படும். மாப்பிள்ளை, பெண் வீட்டினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சுற்றத்துப் பெண்களுக்குச் சொல்லி அவர்களைக் கொண்டே இவ்வேலைகளைச் செய்விப்பர். தேவையான மிளகாய்த் தூள் இப் பெண்களினுலேயே இடிக்கப்படும். பணியாரங்களையும் இப்பெண்களே சுட்டுக்கொடுப்பர்.

திருமண நாளுக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னதாக, மாப்பிள்ளை, பெண்வீட்டுக்காரி தனது மைத்துனி, மாமிமார் ஆகியோரை அழைத்துக் கொண்டு திருமணச் சாப்பாட்டுக்குத் தேவையான உணவுப்பண்டங்களை வாங்குவதற்காகச் சந்தைக்குச் செல்வாள். இவர்களை அழைத்துச் செல்லாது தனியே சென்று பொருட்களை வாங்கி வருதல் இகழ்ச்சிக்குரியதாகக் கருதப்படுகிறது. பொருட்கள் வாங்குவதற்காகப் பெண்களே சந்தைக்குச் செல்வது வழக்கமாயினும் அவர்களுக்கு உதவும் பொருட்டு ஆண்களும் அவர்களுடன் கூடச் செல்வர். வேண்டிய பொருட்கள் யாவும் அன்று சந்தையிலே வாங்கப்படும்.

**திருமணநாள் நிகழ்ச்சிகள்**

திருமண நாளானது ஒரு மங்களகரமான நாளாக மட்டுமன்றிக் குதூகலமான, புத்துணர்ச்சியை ஊட்டுகின்ற ஒரு நாளாகவும் அமைந்துவிடுகிறது. மாப்பிள்ளை வீடும் பெண் வீடும் மகிழ்ச்சி ஆரவாரத்தினுல் அமர்க்களப்படும். பெண்ணின் வீட்டிலேயே பெரும்பாலான திருமணங்கள் நடைபெறுவதுண்டு. சிலர் கோவில்களிலே திருமணச் சடங்கினை வைத்துக்கொள்வர்.

பெண்ணின் சகோதரனுன தோழன் முகூர்த்தத்திற்கு அமைவுறுமாறு நீராடிப் பட்டுவேட்டி, சால்வை, சட்டை, தலைப்பாகை என்பன அணிந்து தனது சுற்றத்தினருடன் மணமகனது வீட்டுக்குச் செல்வான். அவ்வாறு செல்லும் போது, மங்கலப் பொருட்களான வெற்றிலை பாக்கு, பழம் ஆகியவற்றுடன் உணவுப் பண்டங்களையும், மாப்பிள்ளையின் பட்டுவேட்டி சால்வை, சட்டை, ஆகியவற்றையும் அவனுடன் செல்வோர் எடுத்துச் செல்வர். அவ்வாறு வரும் தோழனையும் அவனது சுற்றத்தினரையும் மணமகன் வீட்டினர் பன்னீர் தெளித்து, சந்தனப் பொட்டிட்டு இன்முகத்துடன் வரவேற்பர். அவர்கள் கொண்டுவரும் பொருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கையேற்பர். வந்தவர்களுக்குத் தேநீர் அல்லது சோறு பரிமாறப்படும். தோழன் மணமகனை அணுகி அவரை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பார்.

தோழன் மாப்பிள்ளையைக் கூட்டிச் சென்று, அவரின் தலையிலே அறுகரிசி, பால் ஆகியவற்றை வைத்துத் தோய வார்ப்பார். பின்னர் மாப்பிள்ளை, தோழன் கொடுக்கும் பட்டுவேட்டி, சால்வை, சட்டை, தலைப்பாகை ஆகியவற்றை அணிந்துகொள்வார். தோழன், மாப்பிள்ளையைப் பந்தலுக்கு அழைத்துவந்து பந்தலிலே வைக்கப்பட்டிருக்கும் பூரண கும்பத்தின்முன் நிறுத்துவார். முதியவர் ஒருவர் கற்பூரம்கொளுத்தி, தேங்காய் அடித்து மாப்பிள்ளை, தோழன் தோழி ஆகியோருக்குத் திருநீறு அணிவார். அதன் பின்னர் மாப்பிள்ளை பெண் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

மணமகனின் சகோதரியாகிய தோழி தாலி, கூறை சட்டை ஆகியவற்றை எடுத்துவர, ஏனையோர் மங்கலப் பொருட்களையும் உணவுப்பண்டங்களையும் கொண்ட பெட்டி தட்டுகளை ஏந்திவருவர். தாலி கட்டுதல் கோவிலிலே நடை பெறுவதாயின் கோயிலுக்கும், வீட்டிலாயின் பெண்ணின் வீட்டுக்கும் மணமகன் அழைத்துச்செல்லப்படுவான். பெண்ணின் வீட்டு வாசலிலே மணமகனின் கால்கள் கழுவப்பட்டதன் பின்னர் மணமகன் மணப்பந்தலுக்கு அழைத்துச் செல்லப்படுவான். திருமணச் சடங்கினை ஐயர் நடத்துவதாயின் இயல் மூன்றிலே கூறப்பட்டுள்ளவாறு திருமணம் நடைபெறும். சங்கற்பம் செய்தல், பிள்ளையார் பூசை, பிதுர் ஆசீர்வாதம், கன்னிகாதானம், தாலிகட்டுதல், அக்கினி பூசை, ஏழடிவைத்தல், பால் பழம் கொடுத்தல், அம்மிமிதித்தல், அருந்ததிகாட்டல், கோதரிசனம், ஆசீர் வாதம் ஆகிய சடங்குகள் முறைப்படி நடைபெறும்.

இன்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களின் திருமணங்கள் பல ஐயரினால் செய்துவைக்கப்படாது அவர்களின் சமூகத்தைச் சேர்ந்த பெரியோராலேயே செய்துவைக்கப் படுகின்றன. சகல செல்வங்களும் வாய்க்கப்பெற்ற முதியவர் ஒருவரே ஐயரின் ஸ்தானத்திலிருந்து திருமணத்தை நடாத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கின்றூர். அவ்வாறு திருமணத்தை நடாத்தி வைப்பவர் தாரமும், குழந்தைச் செல்வமும் உடையவராக இருத்தல்வேண்டுமென்பது இறுக்கமான மரபாக விளங்குகின்றது. இவ்வாறு நடைபெறும் திருமணங்களிலே மந்திரம் ஜெபிக்கப்படுவதில்லை. மிகச் சுருக்கமாகவும் விரைவாகவும் திருமணச் சடங்குகள் நிறைவேறி விடுகின்றன.

தோழனுல் அழைத்துவரப்பட்ட மாப்பிள்ளை மணப் பந்தலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் இருக்கையிலே அமர்வான். பின்னர் தோழி மணப்பெண்ணை அழைத்துவந்து மணமகனின் அருலே நிறுத்திவைப்பாள். அவ்வாறு மணப்பெண் வரும்போது மெல்லிய வலைபோன்ற சேலைத் துண்டிஞல் முக்காடிடப்பட்டிருப்பாள். மணமகன் தான் எடுத்துவந்த கூறை, சட்டை ஆகியவற்றை மண மகளிடம் கையளிப்பான். மணமகள் அவற்றினைப் பெற்றுச் சென்று. அவற்றை அணித்துகொண்டு மீண்டும் மணப் பந்தலுக்குத் தோழியினுல் அழைத்து வரப்படுவாள். ஐய ராகக் கடமையாற்றும் பெரியவர் கும்பத்திலே வைக்கப் பட்டிருக்கும் தாலியைத் தோழனிடம் கொடுத்து சபையிலுள்ளவர்களின் ஆசியைப் பெற்றுவருமாறு பணிப்பார். தோழன் தட்டிலே மங்கலப் பொருட்களுடன் வைக்கப் பட்டிருக்கும் தாலியை எடுத்துச் சென்று சபையினரின் ஆசீர்வாதத்தைப் பெற்று வருவான். பின்னர், 'ஐயர்' கற்பூரம் கொளுத்தித் தேங்காய் உடைக்க, மங்கல வாத்தியங்கள் முழங்க, மணமகன் மணமகளின் கழுத்திலே தாலி கட்டுவான். தாலிக்கட்டு முடிந்தபின், இருவர் வெள்ளைச் சேலையால் திரையிட்டு மணமக்களை மறைக்கத் தட்டிலே வழங்கப்படும் பால் பழங்களை மணமகனும் மணமகளும் மாறிமாறிப் பருகுவர். அதன் பின்னர் பெரியோர்கள் அறுகரிசியிட்டு மணமக்களை ஆசீர்வதிப்பர்.

தாலிகட்டு முடிந்ததன் பின்னர், மணமக்களின் பெற்ருேர் மணமக்களுக்குக் கைவிசேஷம் வழங்குவர். உற்ருர் உறவினர் மணமக்களுக்குப் பரிசில்கள் வழங்குவர். வெற்றிலையிலே பாக்கு பழம் ஆகியவற்றுடன் காசையும் வைத்து வழங்குவதே கைவிசேஷம் எனப்படும். அதன் பின்னர், சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினருக்குக் கற்கண்டு, தேநீர், பணியாரம் ஆகியன பரிமாறப்படும். அதன்பின்னர் பந்தி வைக்கப்படும். திருமணத்தில் கலந்துகொண்டோர் அனைவரும் சோறு சாப்பிடுதலே பந்திவைத்தல் எனப்படும். பெண்ணின் தகப்பனுர் மாப்பிள்ளையின் தகப்பனுரிடம் முதலிலே செம்பு தண்ணீரைக் கொடுத்துச் சாப்பிட வருமாறு அழைப்பார். பந்தி வைத்து முடிந்ததும் திருமணத்தில் கலந்து கொண்டோருக்கு வெற்றிலை வழங்கப்படும். அதன் பின்னர் அவர்கள் மணமக்களிடம் விடைபெற்றுச் செல்வர். அத்துடன் திருமணநாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்து விடுகின்றன.

நாலாம் சடங்கு, மாப்பிள்ளையையும் மணப்பெண்ணையும் கோவிலுக்கு அழைத்துப் போதல், இருவரும் தமது நெருங்கிய உறவினரின் வீடுகளுக்குப் போதல், விருந்து உண்ணல் என்பன திருமணத்தின் பின்னர் நடைபெறும் சடங்குகளாகும்.

**மாப்பிள்ளைச் சாப்பாடு**

யாழ்ப்பாணத் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியிலே மாப்பிள்ளைச் சாப்பாடு கொடுத்தல் என்பது, இன்றும் நடைமுறையிலிருக்கும் தனித்துவமான ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. இம் மக்கள் மத்தியிலே இன்றும் குடியிருப்புக் காணி, வீடு ஆகியவை பிரச்சினைக்குரியனவாகவே காணப்படுகின்றன. ஒவ்வொரு பெண்ணுக்கும் தனித்தனியாகவே வீடு கட்டிக் கொடுக்குமளவுக்குப் பொருளாதார நிலையில் இவர்கள் இன்னும் மேம்பாடடையவில்லை. எனவே திருமணம் முடிந்தபின்னர் புதுமணத் தம்பதியர் பெண் வீட்டிலே தங்குகின்றனர். பெண்ணின் பெற்ருேர், சகோதரர்களின் குடும்பங்களுடன் இவர்களின்குடும்பமும் இணைந்து ஒரு கூட்டுக் குடும்ப அமைப்பு அங்கு உருவாகின்றது. கூட்டுக் குடும்பமாக இருப்பதில் எண்ணற்ற சிக்கல்கள் தோன்றினும், தனிக்குடித்தனம் அமைப்பதற்கான வசதியின்மை காரணமாக அவ் வசதியீனங்களையும் இவர்கள் தாங்கி நடந்துகொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
4317

திருமணம் முடிந்தபின்னர், ஒருவருடகாலத்துக்கோ அன்றி ஆறுமாத காலத்துக்கோ மணமக்களுக்குத் தேவையான உணவை மணமகனின் பெற்றோரே அளிக்கின்றனர். இச் சாப்பாடு சாதாரண சாப்பாடுபோலன்றி விசேடமானதாக அமைந்திருக்கும். முட்டை, மீன், இறைச்சி, நெய், உழுந்து, எள், வெங்காயம், பால், பழங்கள் ஆகியன இவர்களின் நாளாந்தச் சாப்பாட்டில் தவருது இடம்பெறும். இவ்வாறு ஊட்டச் சத்துமிக்க உணவு வகைளை மாப்பிள்ளைச் சாப்பாடாக வழங்குவதற்குப் பின்வரும் காரணங்களை அனுமானிக்கலாம்.

அ. புதுமணத் தம்பதியருக்கு இடையருத போக நுகர்ச்சியை ஊட்டுதல்.

ஆ. இடையருத இன்ப நுகர்ச்சியினுல் அவர்களின் உடல் நிலை பலவீனமடையாது பாதுகாத்தல்.

இ. அவர்களின் இன்ப நுகர்ச்சிக்குச் சமையல் வேலை இடையூருக இருக்காது பார்த்துக்கொள்ளல்;

ஈ. மணப்பெண் உணவு வகைகளைத் தயாரிப்பதில் போதிய அனுபவமற்றவளாக இருப்பின் அதனுலெழும் பிரச்சினைகளைத் தவிர்த்தல்;

உ. மணமகனின் தொழிலுக்கு உடற்சக்தி மிகவும் வேண்டப்படுவதால் அச் சக்தியை மிகுவிப்பதற்கான உணவை அளித்தல்.

ஊ. திருமணம் செய்தவுடன் தனது குடும்பத்தைத் தனியே கொண்டு நடத்துதல் மணமகனுக்குச் சுமையாக இருக்கக் கூடுமாகையால் அச்சுமையைக் குறைத்தல்.

எ. மணமக்களுக்கான சாப்பாட்டைப் பெண்ணின் பெற்ருர் வழங்குவதன் மூலம், குறிப்பிட்ட காலத்தில் தங்கள் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள இம் முறை வாய்ப்பாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலே மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று பெண் தங்குவது மரபு. அவ்வாறு புதிய ஒரு சூழலிலே விடப் படுவதால் உருவாகும் பிரச்சினைகள் பெண் வீட்டிலே மாப்பிள்ளை தங்குவதால் தவிர்க்கப்படுகின்றன. பெண் சந்தோஷமாகவும் சுதந்திரமாகவும் செயற்படுவதற்கு இம்முறை வாய்ப்பானதாக அமைகின்றது.

## திருமணச் சடங்குகளும் அதன் பாரம்பரியமும்

யாழ்ப்பாணத்திலே பேச்சுக்கால் மூலம் நடைபெறும் திருமணங்களிலே, மேற்சொல்லப்பட்ட சடங்குகள் யாவும் அர்த்தம் பொருந்தியவையாகவும், அத்தியாவசியமானவை யாகவும் அமைந்து விடுகின்றன. திருமணம் என்பது தனியே ஆணினதும் பெண்ணினதும் இணைவு என்ற நிலை இன்று மாறிவிட்டது. இரண்டு பகுதியினரதும் சுற்றத்த வரும் சொத்துக்களும் இணைவதே இன்று முக்கியமாகி விட்டது. முன்பின் அறியாத இருவேறு பகுதியினரை இணைப்பதிலே இணக்குவதிலே சடங்குகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. திருமணத்திற்கு முன்னருள்ள நடைமுறை களான பொருத்தம் பார்த்தல், வேள்வெடுத்தல், கன்னிக் கால் நாட்டல், பொன்னுருக்குதல், சந்தைப் 'பொருட்கள் வாங்கல், பட்டுவேட்டி, சால்வை, கூறை, சட்டை வாங்கல் ஆகியவற்றிலே மாப்பிள்ளை பெண் பகுதியினர் தவருது கலந்து கொள்கின்றனர், இச் சந்தர்ப்பங்கள் இரு பகுதி யினரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு வழி செய் கின்றன. ஒரு பகுதியினரின் அந்தஸ்து, பழக்க வழக்கங்களை மற்றப் பகுதியினர் அறிந்து கொள்வதற்குச் சடங்குகள் வழிசெய்கின்றன. புரிந்து கொள்ளலுக்கான கால அவகாசம் கிடைக்கின்றது. திடீரென நிச்சயிக்கப்படும் திருமணங்களி ஞலே ஏற்படும் பிணக்குகள் இச் சடங்கு முறைகளிஞலே தவிர்க்கப்படுகின்றன. திருமணத்தின்போதான சடங்குகள் யாவும், மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் அவர்கள் மத்தியிலே உள்ள அச்ச மனப்பான்மையைத் தவிர்த்து சுமுகமான உறவுநிலையை உருவாக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையான திருமணங்களிலே வாய் நாணயமும். சகிப்புத் தன்மையுமே பெரிதும் வேண்டப்படுவனவாகும், நம்பிக்கையே திருமணத்தின் உயிர்நாடியாக அமைந்து விடுகிறது. பெரும்பாலும் யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப் பட்ட சமூக மக்கள் சட்டபூர்வமாகத் திருமணப் பதிவு செய்துகொள்வது மிக அரிதாகும். உத்தியோகத் தேவை களுக்காகவும், தூர இடத்துச் சம்பந்தங்களினால் ஏற்படக் கூடிய இடைஞ்சல்களைத் தவிர்ப்பதற்காகவுமே பதிவுத் திருமணங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

### 4:2.3. கடத்தல் கலியாணம்

ஒருதலைக் காதலால் நிகழும் திருமணம் இராட்சத மணம் என வடமொழி நூல்கள் கூறுகின்றன. யாழ்ப் பாணத்தில் நிகழும் இம்மணமுறையைக் கடத்தல் கலியா ணம் என அழைக்கலாம். பருவமடைந்த காளை ஒருவன் தன் மனங்கவர்ந்தவளை நாளும் மனத்திலிருத்தி அவளை அடைவதற்காக ஏங்கித் தவிப்பான். சில வேளைகளில் பெண் அவனது ஆசைகளைப் புறக்கணிக்கக் கூடும். அல்லது பெற்றோர் அவர்களின் இணைவுக்குத் தடையாக இருத்தல் கூடும். அல்வாறான சந்தர்ப்பங்களிலே பெண் தனியாக வீட்டிலிருக்கும் போதோ அல்லது வேறெங்கேனும் செல்லும் போதோ அவளை அவன் கடத்திச் சென்று, தன் எண்ணத் திற்கு இசைவித்து மணஞ்செய்து கொள்வான். இவ்வாறான திருமணங்கள் யாழ்ப்பாணத் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மத்தியிலே இடம்பெறுவது இயல்பானதாகக் காணப்படு கிறது. இவ்வாறு கடத்தப்பட்ட பெண்ணை அவன் திரு மணம் செய்து வாழ்வதே பொதுவான நடைமுறையாயி னும், சுயமரியாதை, அறிவீனம் காரணமாகப் பெண்ணைத் தனியே பிரித்தெடுப்பதுவும் நடைமுறையிலுண்டு. எவ்வா றாயினும் இவ்வகையான திருமணம் இழிவானதாகவே கருதப்பட்டு வருகிறது.

### 4:2.4. நெறிமுறை பிறழ்ந்த திருமணங்கள்

சமூகத்தவரால் ஏற்றுக்கொள்ளப் படாத காதல் ஒழுக் கத்தினல் நடைபெறும் திருமணங்களே நெறிமுறை பிறழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணங்களென இங்கு குறிப்பிடப்படுகின்றன. திருமணத்தில் முடியாத காதல் ஒழுக்கங்களும், நெறிமுறை மாறிய திருமணங்களும் இதனுள் அடங்கும்.

ஒரு பெண் தனது தாயின் சகோதரனை அல்லது தகப்பனின் சகோதரனை (uncle) மணக்கமுடியாது எனவும், இரண்டு உடன்பிறந்த ஆண் சகோதரரின் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் மணம் செய்துகொள்ள முடியாதெனவும், இரண்டு உடன்பிறந்த சகோதரிகளின் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் மணம் செய்துகொள்ள முடியாதெனவும் தேசவழமை விதிகள் கூறுகின்றன. யாழ்ப்பாண மக்கள் மத்தியிலே இம்மரபு இறுக்கமாகப் பின்பற்றப்பட்டும் வருகிறது. ஆயின் சமூக அந்தஸ்தில் மாறுபட்டவர்கள் திருமணம் செய்தலாகாது என விதிகள், சட்டங்கள் இல்லையாயினும் அந்தஸ்தில் மாறுபட்டவர்கள் திருமணம் செய்து கொள்வதை யாழ்ப்பாணச் சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை. உயர் சமூகத்துப் பெண் ஒருத்தியைத் தாழ்ந்த சமூகத்து ஆடவன் திருமணம் செய்வதும், அவளை அடைய முயல்வதும் சமூகரீயாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இச் சமூகக் கட்டுக் கோப்பை மீறி உயர்சாதிப் பெண்ணுடன் தொடர்பு கொண்டமைக்காகத் தாழ்த்தப்பட்ட சமூகத்து ஆண்கள் பலர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை உயர் சாதியைச் சேர்ந்த அப்பெண்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றனர்.

இச் சமூக விதிகள் உயர் சமூகத்து ஆண்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில்லை. உயர் சாதியைச் சேர்ந்த ஆண்கள் தாழ்ந்த சமூகத்துப் பெண்களைச் சட்டபூர்வமாகவன்றி ஆசைநாயகிகளாகவும், வைப்பாட்டிச்சிகளாகவும் வைத்துக்கொள்வதற்குத் தேசவழமை விதிகளும், சட்டமும், சமூகமும் அங்கீகாரமளிக்கின்றன. தாலிகட்டியவளை மனைவியாகவும், தாலிகட்டாதவளை (தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவளெனப்படுவதனால்) வைப்பாட்டிச்சியாகவும் வைத்திருப்பதற்கு உயர்சாதி ஆணுக்கு உரிமையுண்டு. தாலிகட்டிய மனைவிக்குப் பிறக்கும் குழந்தைகளே அவனது குழந்தைகளாகக் கருதப்படுவதுடன் அவர்களே தகப்பனின் சொத்துக்களுக்கும் உரிமையுடையோர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் சமூகத்து ஆண்கள் தாழ்ந்த சமூகத்துப் பெண்களைச் சட்டப்படி மணமுடித்தல் சமூக மரபுகளினுல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு அவர் மணமுடிப்பின் சமூகம் விதிக்கும் கடுமையான தண்டனைகளை எதிர்நோக்க வேண்டியவராகின்ருர். இந்த மரபை மீறிய பல ஆண்கள் உயர் சமூகத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்; இன்னும் சிலர் முற்ருகவே தமது உறவினரையும் அவர்தம் தொடர்புகளையும் துண்டித்துக்கொள்வவேண்டிய நிலைக்குள்ளாகினர்; சபை சந்தியினின்றும் அவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்; தங்கள் சாதியினின்றும் அவர்கள் பிரஷ்டம் செய்யப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்ட சமூகத்துப் பெண்ணை மணமுடிக்கும் உயர் சமூகத்து ஆடவனும் தாழ்த்தப்பட்டவனுகவே மாற்றப்பட்டுவிடுகின்ருன். அதேவேளை உயர்சாதி ஆடவனை மணந்துகொண்ட பெண்ணெருத்தி எச் சந்தர்ப்பத்திலும் உயர்சாதியைச் சேர்ந்தவளென அங்கீகரிக்கப்படுவதுமில்லை. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் தாழ்ந்த சாதிக் குழந்தைகளாகவே கொள்ளப்படுவர். எனவே இவ்வாருன திருமணங்கள் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறுதல் மிக அரிதானதாகும். இன்று வேளாளர், கரையார், கோவியர் ஆகியோர் தமக்குள் சாதி மாறித் திருமணஞ் செய்தல் சமூகத்தினுல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோரும் தத்தம் சாதிக்குள்ளேயே திருமண உறவுகளை வைத்துக்கொள்கின்றனர். இவர்களும், தாந்தாமே உயர்ந்த சாதியினர் எனக் கருதுவதே இதற்குக் காரணமாகும். சாதி மாறித் திருமணம் செய்துகொண்டோர் இரண்டு சாதியினராலும் ஒதுக்கப்பட்டுப் புறக்கணிப்புக்குள்ளாகின்றனர். இவ்வாருன சமூக ஒதுக்கல் நடவடிக்கைகளினுலேயே இன்று யாழ்ப்பாணத்திலே சாதி அமைப்பு முறை ஆழமாக வேர்பாய்ச்சி நிற்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள யாவரையும் தாழ்த்தப்பட்ட மக்கள் எனக் கொள்வதே விஞ்ஞான பூர்வமான சமூகவியல் அணுகுமுறையாகும். ஆயின், யாழ்ப்பாணத்திலே நாளாந்தச் சோற்றுக்கு வழியற்றுத் தவிக்கும் உயர்சாதிக்காரன் கூடத் தன்னைத் தாழ்த்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களின் நிலையிலேயே வைத்துப் பார்ப்பதில்லை. அதே வேளை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் எத்துணைச் செல்வந்தனாக, செல்வாக்கு மிக்கவனாக இருப்பினும், அவனை உயர்சாதிக்காரனாக யாழ்ப்பாண மக்கள் ஏற்றுக்கொள்வ தில்லை. இவைபற்றிய விளக்கமான தரவுகளைப் பஞ்சமரிலே கே. டானியல் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

## அடிக்குறிப்புகள்

1. இலங்கை ஒல்லாந்தரின் நிர்வாகத்தின் கீழ் இருந்த பொழுது அக்காலத்தில் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் சமூக நடைமுறைகள், வழக்கங்கள் ஆகிய வற்றை விசாரித்து அவற்றைத் தொகுக்குமாறு கவர்ன ராக இருந்த சைமன் பிரபு 1707ஆம் ஆண்டு சி. ஐசக் என்பவரைப் பணித்தார். 1707ஆம் ஆண்டிலே இவை தொகுக்கப்பட்டன. இவை தேசவழமை விதிகள் எனப் பட்டன. இதன் பின்னர் இன்றுவரை தேசவழமை விதிகள் நீதிபரிபாலனத்துக்குத் துணையாகக் கொள்ளப் படுகின்றன. இவற்றின் விபரங்களை **T. Sri Ramanathan** என்பவரெழுதிய **Tesawalamai, the Laws and Customs of the Province of Jaffna,** The Nadarajah Press, Colombo, 1972 என்னும் நூலிற் காணலாம்.

2. இந்நூலில் மூன்றாவது இயலில் க. சொக்கலிங்கம் எழுதியுள்ளவற்றைப் பார்க்கவும்.

3. கந்தையா, வி. சி.. (பதிப்பாசிரியர்), **கண்ணகி வழக்குரை,** காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம், மட்டக் களப்பு, 1968.

4. Balasingham, K., **Laws of Ceylon,** Vol. II, Sweet & Maxwell Ltd., London.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தாகம் என்னும் நாவலில், கு. சின்னப்பாரதி இவ் வழக்கத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

6. டானியல், கே,, தீண்டாமை ஒழிப்பு இயக்கம் (அன்று முதல் இன்றுவரை), அறிக்கை, 1979, பக். 2.

7. Sri Ramanathan, T., Opp. Cit., p. 23.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் ஐந்து

# யாழ்ப்பாணத்துக் கிறித்தவத் தமிழரிடையே நிலவுகின்ற திருமண நடைமுறைகள்

கே. டானியல்

பொது நூலகம்.
இரா... மன்றம் கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணங்களுக்கான சடங்குமுறைகள் நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், இனத்திற்கு இனம் மாறுபட்டு இருப்பதுபோல மதத்திற்கு மதம் மாறுபட்டிருப்பதும் தவிர்க்கமுடியாததாயினும், அடிப்படையான சில முறைகளுக்கு எதுவுமே விதிவிலக்காகி இருக்கமுடியாது.

ஒரு திருமண வைபவத்திற்குப் பந்தல்போடுதல், வெள்ளை கட்டுதல், சபை சந்தி நடத்துதல், உபசார வரவேற்பளித்தல் போன்றன, ஏறக்குறைய ஒரேநிலைப்பாடானவையாக இருப்பது இனரீதியான – அல்லது பிரதேசரீதியான அம்சங்களாகும். இவற்றை மனத்திற்கொண்டு நடைமுறையில் இருக்கும் மதரீதியான அனுட்டானங்களை, வழமைகளை அவதானிக்கப்புகுமிடத்து இலங்கையிலுள்ள சிறப்பாக வடபகுதியிலுள்ள கிறித்துவ மக்களிடையே இருந்துவந்த – இருந்துவரும் அனுட்டானங்கள் வழக்கங்கள் எத்தகையன என்பது தெளிவுறப் புலப்படும்.

'கிறீத்துவம்' என்னும் பதம் பொதுவில் புரட்டஸ்தாந்து, பென்றிக்கோஸ், றோமன் கத்தோலிக்கம் ஆகிய முப்பிரிவுகளையும் அவைகளுக்குட்பட்ட அல்லது மருவியுள்ள பிரிவுகளையும் உள்ளடக்கியதானதொரு சமயத்தைக் குறித்து நிற்கின்றது. இப்பிரிவுகளிடையே திருமணந் தொடர்பாக நுணுக்கமான சில முறைகளில் மிகச்சிறிய வேறுபாடுகளைக் காணலாமே தவிர பெருமளவு வேறுபாடுகளைக் கண்டுவிட முடியாது. எனவே, தொழில் அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் கூட்டங்கூட்டமாக வாழ்ந்து கொண்டு, கூட்டங் கூட்டமாகவே மக்கள் பின்பற்றும் மதப்பிரிவான ''றோமன் கத்தோலிக்கம்'' என்னும் பெரும் பிரிவின் திருமண முறைகளை — வழக்குகளை இக்கட்டுரை முதலிலே ஆராய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் ரேமன் கத்தோலிக்கத்துக்குட்பட்ட கிறித்தவர்கள் எவ்வகையிலே பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொண்டால்தான் அதைத் தொடர்ந்து வழக்கு முறைகளையும் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியும்.

ஓர் ஊருக்குள் சமூக அமைப்பின் தேவைகளையொட்டி ஒன்றுக்கு மேற்பட்ட கோவில்கள் அமைக்கப்படுவது ஒரு வழக்கமாகும். உதாரணத்துக்கு ஒரு கிராமத்தை எடுத்துக் கொள்ளலாம்.

''இளவாலை'' என்ற ஒரு பெரும் பிரிவுக் கிராமத்தில் மூன்று கோவில்களுக்குமேல் உண்டு. அக் கோவில்களுக்கு உட்பட்ட கிறித்தவர்கள் இனத்தில் தமிழர்களாயினும் சாதியில் வெவ்வேறானவர்களே. அதனால் நேராக அவரவர்களின் சாதிப் பெயரைச் சுட்டிக் காட்டுவதற்காக 'இன்ன' கோவிலைச் சேர்ந்த கிறித்தவர்கள் என்றே வகுத்துக் கொள்வர். இது அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து மனம் ஒப்பச் செய்து கொள்ளப்படாததொன்றாக இருந்தாலும் இந்த நடைமுறை வகுக்கப்பட்டதை யாரும் மறுப்பதில்லை; எதிர்ப்பதும் இல்லை; கௌரவக்குறைவென்று கருதுவதும் இல்லை.

ஒரு கிறித்தவக் குடும்பத்தில் பிறந்த ஓர் ஆணோ பெண்ணோ தம்முடைய தாய் தந்தையர்கள் மீது வைத்துள்ள மதிப்பு மரியாதை அளவுக்குச் சற்றேனும் குறைவில்லாத மதிப்பும் மரியாதையும் தம்முடைய ''தொட்ட தாய்; தொட்ட தகப்பன்'' என்று பேச்சுவழக்கில் உள்ள ஞானத்தாய், ஞானத்தந்தை ஆகியோரிலும் வைத்திருப்பர். இந்த ஞானத் தாய், ஞானத் தந்தை என்பவர் யார்? இவர்கள் எப்படி அந்நிலைக்கு வருகிறார்கள்?

குழந்தை பிறந்த எட்டாவது நாள் கோவிலுக்கு எடுத்துச் சென்று, குருவானவருக்கு முன்வைத்து, குருவானவர் ஆசிநீரினால் தலையைக்கழுவ குழந்தையின் மேல் கைவைத்துத் தொட்டுத் துடைத்து, பெயரிடுபவர்களே 'ஞானத்தந்தை' 'ஞானத்தாய்' என்னும் உரிமையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்கிறார்கள். அன்றுதொடக்கம் இவர்கள் அக்குழந்தைக்கு ''ஞானத்தாய், ஞானத் தந்தை'' என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வதுடன், அக்குழந்தையை பெற்ற தாய் தந்தையரால் 'கும்பா' என அழைக்கக்கூடிய கௌரவத்தையும் பெற்று விடுகிறார்கள்.

அன்றையிலிருந்து வாழ்நாள் எல்லாம் அக்குழந்தைக்கு முக்கியமான கருமங்களுக்கெல்லாம் சம்மதங் கொடுத்து ஆசி கூறுபவர்கள் இவர்களாகவே இருப்பர். இந்தத் தொடர்ச்சியில் திருமணப் பேச்சை எடுத்துக் கொள்வோம்.

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணப்பேச்சு தொடங்குவதென்றால் அது இரு பகுதியின் ஞானத்தாய் ஞானத்தந்தையர்க் கூடாகவே வரவேண்டும். இவ்விருபகுதி ஞானத்தாய் ஞானத்தந்தைகளுக்கிடையே இவ்விடயந் தொடர்பாக ஓர் இணக்கம் ஏற்படும்போதுதான் இப்பேச்சு வார்த்தை மற்றவர்களிடம் சென்றடையும்.

இப்பிரதானபேச்சுவார்த்தைக்குப்பின்னர்தான் ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும்பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இச் சந்திப்பு அனேகமாக பெண்ணின் கோவிலில் நடைபெறும் ஒரு பூசைப்பலி நாள் அன்று ஏற்படுத்திக் கொடுப்பதுதான் பெருமளவில் வழக்கத்தில் இருந்துவந்துள்ளது.

இச்சந்திப்பு நிகழ்ச்சி எல்லோருக்கும் திருப்தியளிக்கும் முறையில் நடந்தேறினால்தான் இருகுடும்பங்களிடையேயும், வாய் நனைத்தல் என்னும் முதல் உணவு பரிமாறும் நிகழ்ச்சி நடைபெறும். முறைப்படி பெண்வீட்டாரே முதலில் மாப்பிள்ளை வீட்டில் வாய் நனைக்கச் செல்வது வழக்கத்தில் இருந்திருக்கிறது.

இவை முடிந்து, சீர்வரிசைப் பேச்சுவார்த்தையும் முடிந்தவுடன், அடுத்து வருவது முக்கியமான நடைமுறைகளுள் ஒன்றான வார்த்தைப்பாடு என்பதாகும். வார்த்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு என்ற இச்சடங்கு பெண் பகுதியினரின் கோவிலிலேயே நடைபெற வேண்டும் என்பது பொது விதி. அன்று ஆணும் பெண்ணும் தனித்தனியே தங்கள் தங்கள் கோவில் குருவானவரிடம் ''பாவசங்கீர்த்தனம்'' என்னும் பாவமன்னிப்புப் பெற்றுப் பரிசுத்தமாக இருப்பார்கள். மாப்பிள்ளை வார்த்தைப்பாட்டுக்கு வரும்போது தனது கோவில் கட்டளைக் குருவானவரிடம் பாவமன்னிப்புப் பெற்றுப் பரிசுத்தவாளுக ஆகியதற்கு அத்தாட்சிப் பத்திரம் பெற்று வந்து இக் குருவானவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பித்தவுடன் வார்த்தைப்பாடு தொடங்கிவிடும்.

மணமக்களாகப்போகும் இருவரிடமும் குருவானவர் தனித்தனியாக சம்மதத்தைப் பெறுவார். இருவரும் இத் திருமணத்துக்குத் தம் ஒப்புதலைக் குருவானவரிடம் கூறியவுடன் ''வார்த்தைப்பாடு'' முடிந்து விடும்.

அடுத்த ஞாயிறு தொடக்கம் இரு பகுதிக் கோவில்களிலும் நடுப்பூசை வேளையில் ''சங்கிலித்தாம்'' என்னும் கோவில் சுவிஷேஷக வாசகர் இந்தக் கலியாணம் பற்றிய அறிவிப்பை வாசித்து விட்டு, 'இது முதலாம் கூறல்' என்று முடித்துக் கொள்வார். திருமணம் தொடர்பாக ''சங்கிலித்தாம்'' வாசிக்கும் அறிவிப்பு பின்வருமாறு அமையும் :

''ஆனைக்கோட்டை அர்ச்சேசிஸ்ட அடைக்கலமாதா கோவிலைச் சேர்ந்த உத்தம குருகுல (குருகுலம் என்பது கடல் தொழில் செய்யும் சமூகத்தை – அதிலும் கரையார சமூகத்தைக் குறிப்பிடுவது. இப்படி ஒவ்வொரு சமூகத்தவர்களுக்கும் ஒவ்வொரு குலப்பெயர் உண்டு) கிறித்தவர்களான அந்தோனிப்பிள்ளைக்கும், பெண் ஞானம்மாவுக்கும் மகளாகிய திரேசம்மாளுக்கும், மானிப்பாய் அர்ச்சேசிஸ்ட சந்தானமாதா கோவிலைச்சேர்ந்த உத்தம குருகுலக் கிறித்தவர்களான இராயப்புவுக்கும், ஆஞ்சிக்கும் மகளுகிய அந்தோனிக்கும் ஆயிரத்துத் தொழாயிரத்து நாற்பத்தி ஐந்தாம் ஆண்டு ஆடிமாதம் எட்டாம் திகதி சனிக்கிழமையாகிய நேற்று மெய்விவாகத் திருச் சடங்கிற்கான வார்த்தைப்பாடு கேட்கப்பட்டது. இந்த வார்த்தைப்பாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்களைப்பற்றி ஏதாவது விக்கினங்கள் இருக்குமாயின் அந்தந்த கோயிலைச் சேர்ந்த கிறித்தவர்கள் அந்தந்தக் கட்டளைக் குருவானவரிடம் அறிவிக்க விஷேஷ கடமை உடையவர்களாக இருக்கிறார்கள். இதுவே முதலாங் கூறல்''

இவ்வாறு ''முதலாம் கூறல்'' எனப்படும் முதல் அறிவித்தல் முடிந்து மூன்று வாரங்களின் பின் மூன்றும் கூறலும் கூறப்பட, இத்திருமணம் தொடர்பாக எவ்வித விக்கினம் இல்லாமல் இருப்பின், குருவானவர் மெய்விவாகத் திருச்சடங்கான கைப்பிடித்தல் என்னும் திருமண நடைமுறைக்குச் சம்மதிப்பார்.

கூறலிலே வற்புறுத்தப்படுவது ''ஏதாவது விக்கினங்கள்'' என்னும் விடயமேயாகும். ''விக்கினங்கள்'' என்றால் என்ன ?

**முதலாவதாக :** இந்த இருவருக்கும் இரத்த உறவு தொடர்பாக முறையீனங்கள் இருக்கின்றனவா என்பதாகும்.

**இரண்டாவதாக :** இந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்கெனவே உடல் உறவு இருக்கிறதா என்பதாகும்.

**மூன்றாவதாக :** வருடத்தில் ஒரு முறையாயினும் நல்ல பாவசங்கீர்த்தனம் பெறாமல் இருந்தார்களா என்பதாகும்.

**நான்காவதாக :** இவர்களின் தாய் தந்தையர்கள் பத்தில் ஒன்று கோவிலுக்குக் கொடுக்காமல் நிலுவை வைத்திருக்கிறார்களா என்பதாகும்.

**ஐந்தாவதாக .** கோயில் நிர்வாகத்தினால் நீக்கப்பட்ட மகாபாவாத்துமாக்களுடன் 'சபைசந்தித் தொடர்பு' கொண்டிருந்தார்களா என்பதாகும்.

**ஆறாவதாக :** இந்தப் பெண் அல்லது ஆண் வெவ்வேறு பேர்களுடன் திருச்சபையின் ஆறும் கட்டளைக்கு மாறான விபசார ஈடுபாடுடையவர்களாக இருந்தார்களா என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒன்றில், அல்லது பலவற்றில் 'விக்கினம்' இருந்து, அது கட்டளைக் குருக்களிடம் முறையிடப்பட்டு நிரூபிக்கப்பட்டால் குருவானவர் நிச்சயமாக இம் மெய்விவாகத் திருச்சடங்கை மறுத்தே விடுவார்.

இதில் குறிப்பிடப்பட்ட ஆறும் கட்டளைக்கு விரோதமான செயற்பாடுகள் மிகவும் நுணுக்கமாகவே ஆய்வு செய்யப்படும்.

குறிப்பிடப்பட்ட இவர்களோ, அன்றி இவர்கள் வெவ்வேறு பெயர்களுடனே அப்படியான உறவில் ஈடுபட்டிருந்து நிரூபிக்கப்படும் வேளையில், குறிப்பிடப்பட்ட இவர்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமைப் பூசை வேளையில் நடுக் கோவிலுக்குள் முழந்தாழ் படியிட்டு இருந்து, கோவில் சங்கிலித்தாமால் தலையில் முள்முடி வைக்கப்பட்டு, இரண்டு கரங்களிலும் முறையே ஆறு ஆறு அடிகள் பெறப்பட்ட பின்புதான் பரிசுத்தப்படுத்தப் படுவார்கள். ''இன்னார் மகளாகிய இவள், இன்னார் மகனாகிய இன்னாருடன் திருச்சபையின் கட்டளையில் ஒன்றாகிய ''விபசாரம் செய்யாதிருப்பாயாக'' என்பதற்கு மாறாக நடந்து கொண்டமையால் இந்த அபராதம்'' என்று பகிரங்கப்படுத்தியே சங்கிலித்தாம் இந்த தண்டனையை அளிப்பார்.

இதை எந்தக் கிறித்தவனும் குறைவாக மதிப்பிடுவதில்லை. இந்த அபராதத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் ''மசுவாதுக்காரர்'' என்று நிரந்தரமான பெயர் சூட்டப்பட்டுக் கோவிற் சபைகளில் இருந்தே நீக்கப்படுவர்.

இத் தடைகள் எல்லாவற்றையும் தாண்டி, கோவில் உள்ளே மெய்விவாகத் திருச்சடங்குகளுக்குப் போவதற்கு மணமக்களாக விருப்பவர்கள் குருவானவர்களின் பரீட்சையில் தனித்தனியே தேறவேண்டும்.

''மெய்விவாகம் ஆவது என்ன?''

இப்படி ஒரு கேள்விக்கு ஞான உபதேசப் புத்தகத்தில் உள்ளபடி எழுத்துக்கு எழுத்துச் சரியானபதில் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாவங்கள் எத்தனைவகைப்படும்?'' என்ற அடுத்த கேள்விக்கு ''சென்மபாவம், கர்ம பாவம், அற்பபாவம். சாவான பாவம்'' என்பவைகளைச் சரியாக நிரைப்படுத்திச் சொல்வதுடன் உதாரணத்திற்கு எது எது எந்தெந்தப் பாப வரிசையில் சேரும் என்பதைக்காட்டி, இறுதியில் இருதாரக் குற்றம் நித்திய நரகத்தில் தள்ளும் சாவான பாவவரிசை யைச் சார்ந்தது என்பதைச் சொல்லிவிட்டால்தான் இரு பகுதிக் குருவானவர்களினதும் பரீட்சையில் தேறியவர்கள் ஆவார்கள். இவைகளை மனப்பாடம் செய்து ஒப்புவிப்ப தென்பது இலகுவான காரியம் அல்ல. அத்துடன் மெய் விவாகத் திருச்சடங்கின் முதல் நாள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து அன்று நடுச்சாமந் தொடங்கி, மறுநாள் மெய் விவாகத் திருச்சடங்கு முடியும்வரை ஒன்றும் சாப்பிடாம லும் குடியாமலும் சுத்த உபவாசமாக இருக்கவேண்டும்.

மெய்விவாகத் திருச் சடங்கு பெரும்பாலும் காலையி லேயே நடைபெறும். இந்துக்கள் திருமணம் நடைபெறும் சுபநேரத்தை முகூர்த்தம் என்றும் நாள் என்றும் அழைப்பர். கிறித்தவத் திருமணங்களிலே சுபநேரம் நாள் என்றே அழைக்கப்படும்.

தமிழர்களிடையே உள்ள பொதுவான திருமண வழக்குகளில் ஒன்று மாப்பிள்ளை அழைக்கப்போகும் வைபவ மாகும். இந்த வைபவம் கிறித்தவத் திருமண நடைமுறை களில் இல்லை. அவரவர் தாங்கள் தாங்களாகவே மெய் விவாகம் நடைபெற இருக்கும் கோவிலுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.

ஆணுக்கு மிகவும் இளைய சகோதரி ஒருத்தி இருந்தால், அவள் பெண்ணுக்குத் தோழியாகவும், பெண்ணுக்கு இளைய சகோதரன் இருந்தால், அவன் மாப்பிள்ளைத் தோழனுகவும் கொள்வது பொதுவான திருமண நடைமுறை வழக்கமாகும். இவ்வாறு சகோதர சகோதரிகள் இல்லாதவிடத்தில் இந்த உரிமை முறைக்குத் தூரத்து உறவினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதகாரியங்களில் நல்லொழுக்கம் உடையவர்களாகக் கணிக்கப்பட்டோர் பீடத்திற்குச் சமீபமாகவும், வேத காரியங்களில் ஒழுக்கமின்றிக், குற்றங்கள் பட்டு மன்னிப்புகள் பெற்றோர் பீடத்தின் மிகத் தூரமாகவும் இடம்பெறுவது சொல்லாமலே செயற்படும் வழக்கங்களில் ஒன்றாகி இருப்பதால் அந்தந்த இடங்களில் அவரவர்களே உட்கார்ந்து கொள்வர்.

'முட்டு' ('முட்டுக்காலி' என வழங்கப்படும் இருக்கை)ப் போட்டு மெய்விவாகத் திருச்சடங்கை நடத்துதல்; அதாவது மணமக்களுக்கு ஆசனவசதிசெய்துகொடுத்துத் திருமணத்தை நடத்துதல் சமூக அமைப்பில் உயர்வான அந்தஸ்தைப் பெற்றவர்களுக்கு மட்டும் கிடைக்கும் விசேஷ சலுகையாகும். குறைந்த சாதியினருக்குக் கண்டிப்பாகவே இந்த உரிமை–சலுகை கிடைப்பதில்லை. குறைந்த சாதியினருக்காக ஏற்படுத்தப்பட்ட கோவில்களிற்கூட இந்தச் சலுகையை அவர்கள் பெறமாட்டார்கள்.

மெய்விவாகத் திருச்சடங்கிற்கான பூசைப்பலி தொடங்கியவுடன் மணமக்கள் முதலில் தேவநற்கருணையான அப்பத்தைப் பெறுவர். அது முடிந்தவுடன் குருவானவர் இந்த மெய்விவாகத் திருச்சடங்கிற்கு மணமகன் மணமகள் ஆகியோருடைய சம்மதத்தைப் பெறுவார். அதன் பின்னர் 'தாலி கட்டுதல்' நடைபெறும். பின்னர் குருவானவர் மணமகனின் வலக்கரத்தினையும் மணமகளின் இடக்கரத்தினையும் பிடித்து ஒன்றையொன்று பற்றவைத்துக் கைப்பிடித்தல் என்ற சடங்கை நிறைவேற்றி வைப்பார்.

குருவானவர் தனது கடமையை முடித்துக்கொண்டு கோயிலிலுள்ள தனது தனி அறைக்குப் போனதும், தம்பதிகள் உறவினர்கள் புடைசூழ அவ்வறைக்குச் சென்று குருவானவரைச் சந்தித்து முதல் ஆசியைப் பெற்றுக் கொள்வர். கிறித்தவத்திருமண நிகழ்வுகளில் இதனைச்சந்திப்பு என்பர். இதனைத் தனியான ஒரு சடங்காகவே கருதுவர். சில இடங்களில், சீனி, முட்டை, பழவகைகள் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைத் தட்டுக்களில் இட்டு, துப்பட்டியால் மூடி, குருவானவர் பாதங்களில் வைத்து அவரின் ஆசியைப் பெறுவது வழக்கத்தில் இருந்திருக்கிறது.

கோவிலடியில் இருந்து தம்பதிகள் பெண் வீட்டிற்கே முதலிற் போவார்கள். அங்கு வாயிலில் வைத்து மாப்பிள்ளைத் தோழன் நீரினல் மாப்பிள்ளையின் பாதங்களைக் கழுவ மாப்பிள்ளை தனது விரலில் இருக்கும் மோதிரத்தைக் கழற்றித் தோழனின் விரல்களில் அணிவான்.

திருமணத்துக்கு வருகைதந்தோர் சந்தனம், பன்னீர் முதலியவற்றுடன் வரவேற்கப்படுவர். விசேடமாக அமைக்கப்பட்ட 'மணவறை' என்ற இடத்தில் தம்பதிகள் இருத்தப்படுவர். மாப்பிள்ளைத்தோழனும், பெண்பிள்ளைத் தோழியும் கூட அவர்களின் பக்கங்களிலேயே அமர்ந்திருப்பர்.

மாப்பிள்ளையால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 'கூறை'ச் சேலை, பெண்பிள்ளையால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 'சோமன் சோடு' வேட்டி சால்வை ஆகியவை ஒரு தாம்பாளத்தில் வைக்கப்பட்டு, பெண் வீட்டுச் சலவைத் தொழிலாளியினல் எல்லோர் தரிசனத்திற்கும் எடுத்துச் செல்லப் படும். இதுவும் வை:பவரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சடங்குகளில் ஒன்ருகும். இச் சடங்கு முடித்ததும், மணப்பெண் தனியாகவும் மாப்பிள்ளை தனியாகவும் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு பரிசளிப்பு உடைகளான 'கூறை' 'சோமன் சோடு' உடுத்தப்பட்டு மீண்டும் மண வறைக்கு வந்து சேருவர்.

பூதாக்கலம் பணிதல் என்னும் சடங்கு அடுத்து நடைபெறும். தமிழர் திருமண நடைமுறைகளில் பூதாக்கலம் பொதுவான முறையாயினும் அதனைத் தயாரிக்கும் விதத்தில் வேறுபாடு காணப்படுகின்றது. கிறித்தவத் திருமண வைபவங்களிலே, பாலையும், பழத்தையும், தேனையும் கலந்தே பூதாக்கலம் செய்கிருர்கள். தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரிமாறும் போது பெண்வீட்டுச் சலவைத் தொழிலாளியும், மாப்பிள்ளை வீட்டுச் சலவைத் தொழிலாளியும், வெள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைப்பொன்றைப் பிடிக்கவேண்டும். இதுவும் பூதாக்கலச் சடங்கின் ஓரம்சமாகும். பூதாக்கலச் சடங்கு முடிந்தபின்பு தான் விருந்தாளிகளுக்கு இனிப்பான நீர் ஆகாரமும் தாம்பூலமும் கொடுக்கப்படும்.

பூதாக்கலத்துக்குப் பின்னர் நடைபெறும் சடங்குகளில் ''கும்பிட்டகை'' என்ற சடங்கு மிகவும் முக்கியமானதாகும். தம்பதிகள் இருவரும் தங்கள் ஞானத்தந்தை, ஞானத்தாய் ஆகியோர்களின் பாதத்தில் விழுந்து கும்பிடுவர். அவர்களும் இவர்களை ஆசீர்வதித்துப் பரிசளிப்பர். அதைத் தொடர்ந்து இவர்கள் தங்கள் இருக்கையில் கும்பிட்டபடியே இருக்க வந்திருப்போர் பரிசளிப்பர்; வாழ்த்துவர். கும்பிட்ட கைச் சடங்கு முடிந்தபின்னர் சபைசந்தி நடைபெறும். அதாவது திருமண விருந்து நடைபெறும்.

சபைசந்தி விவகாரத்தில் எல்லோரும் கிறித்தவர்களாயினும் கிராமத்துக்குக் கிராமம் வேறுபாடுகள் உண்டு. யாரைச் சபை சந்தியில் முக்கியப்படுத்துவது என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

கோவிலிலே 'மூப்பர்' எனக் கௌரவப்பட்டம் பெற்றவரே சில இடங்களில் விருந்து நடைபெறும்போது முக்கியத்துவம் பெறுபவராவர். அதாவது உணவு வழங்கும் பந்தியிலே தலைப்பந்தியில் அவர் அமர்த்தப்படுவார். இவரைத் தலைச்சன் எனக் கூறுவர். கோவில் 'சங்கிலித்தாம்' தலைச்சனாகச் சில இடங்களில் அங்கீகரிக்கப்படுவர். சில இடங்களில் வீட்டுக்குச் சலவைசெய்யும் (''கட்டாடி'' என்று இடுகுறிப்பெயர் கொண்ட) தொழிலாளி தலைச்சனாகக் கௌரவிக்கப்படுவான்.

இன்னுஞ் சில இடங்களில் சவரத் தொழிலாளி ('பரியாரி' என்ற இடுகுறிப்பெயர் கொண்டவர்) முதன்மைப் படுத்தப்படுவான். ஆனால் யார் யார் என்னென்ன வரிசையிலே கௌரவிக்கப்பட்டாலும் வீட்டுக்கு உரிமையாளன் தனக்குக் கும்பாவாக உள்ள (ஒரே சாதிக்காரனாக இருந்தால் மட்டும்) ஞானத் தந்தையிடம் செம்புதண்ணீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக் கொடுத்துச் சபை சந்தியை நடத்தும்படி கேட்பது மட்டும் பொதுவாக எல்லாக் கிராமங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கமாகிவிட்டது.

கும்பா சலவைத் தொழிலாளியையும் சவரத் தொழிலாளியையும் அழைத்து, அவர் கரங்களில் செம்பு தண்ணீரைக் கொடுக்காமலே கைகளில் தண்ணீர் ஊற்ற அவர்களும் தலைப்பந்தியில் உட்கார்ந்துகொள்வர். யாரை அழைப்பது தலைப்பந்திக்கு என்பது கிராமத்துக்கு கிராமம் வேறுபடலாம்.

சவரத்தொழிலாளியைத் தலைச்சனுகைக் கொள்ளும் கிராமங்களில் அதனுடன் புதியதொரு நடைமுறையையும் பின்பற்றுவர். சபைக்கு உணவு பரிமாறப்பட்டவுடன் விருந்தாளிகள் உண்ணத் தொடங்குவதற்கு முன் சவரத் தொழிலாளி தனது சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும். அதற்காக ஊரில் முக்கியஸ்தரான ஒருவர் ''பரியாரியார் சாப்பிடத் தொடங்கலாமோ ?'' என்று கேட்பார். அவன் ''ஆம்'' என்று சம்மதம் தெரிவிக்கும்வரை எல்லோருமே காத்திருக்க வேண்டும். சபையில் இருக்கக் கூடாதவர்கள் அங்கு இல்லையெனக் கண்ட பின்னரே அவன்தலை 'சரி' என அசையும்.

மசுவாதுக்காரர்கள், கோவிலுக்குப் பத்தில் ஒன்று கொடுக்காது இருப்பவர்கள், கோவில் கடமைகளில் இருந்து தவறியவர்கள், மசுவாதுக்காரர்களுடன் சபைசந்தித் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பவர்கள், அல்லது அவர்களுக்கு உடந்தையானவர்கள், நிரீச்சுரவாதிகள், ஆகியோர்கள்தான் சபையிலே இருக்கக்கூடாதவர்கள் பட்டியலில் அடங்குவர். சபை நடந்து கொண்டிருக்கும்போது முக்கியமான இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெறலாம். ஒன்று சபை நடந்துகொண்டிருக்கும்போது இடையிடையே மது பானம் (சாராயம்) வழங்கப்படும். மற்றையது சபை நடந்து முடியும்போது வாழைப்பழம் வழங்குதல். வாழைப் பழம் பரிமாறப்படும்போது இருவரிடையே அல்லது அதற்கு மேற்பட்டவர்களிடையே வாழைப்பழம் தொடர்ந்து விடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் உண்பதில் போட்டி ஏற்படலாம். போட்டி ஏற்பட்டு விட்டால் சிலவேளை அப்போட்டி முடியச் சில மணி நேரங்கள் செல்லக்கூடும். இதற்கிடையில் சபையை விட்டு யாரும் எழும்புவது வழக்கமில்லை. அப்படி எழுந்தால், சபை குழம்பிவிடும்.

இதைவிட இன்னொரு வழக்கமும் உண்டு. பெண் வீட்டுச் சலவைத் தொழிலாளியோ, அன்றி சவரத்தொழிலாளியோ, மாப்பிள்ளை வீட்டுச் சலவைத்தொழிலாளியோ, அன்றிச் சவரத்தொழிலாளியோ சபை இருக்காவிடில் சபை குழப்பத்தில் முடிவதாகும். எனவே ஒரு மெய்விவாகத் திருச்சடங்கின் சபை சந்தி குழப்பிப்போகப் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஆண்கள் சபை முடிந்தவுடன் பெண்கள் சபை தொடங்கும். சபை எதுவித குழப்பமுமில்லாமல் நடந்துவிட்டால் திருமண காரியங்கள்யாவும் செவ்வனே நடந்தேறின என்று அமைதி கொள்வர்.

திருமணம் முடிந்து நான்காவது நாளும் சடங்குக் குரியதாகும். இதனை நாலாஞ் சடங்கு என்று அழைப்பர். புதுமணத் தம்பதிகள் அன்று மாப்பிள்ளை வீட்டுக்குப் போகவேண்டும். தம்பதிகளை அழைத்துச் செல்வதற்கு மாப்பிள்ளை வீட்டில் இருந்து ஆண்களும் பெண்களும் வரவேண்டும். அத்துடன் வெள்ளைச் சீலையால் மூடப்பட்ட பலகாரக் கடகத்துடனும் (கடகம் என்பது பனையோலையால் இழைக்கப்பெற்ற வாயகன்ற பெட்டி) பழ வாழைக் குலையுடனும் அவர்கள் வரவேண்டும். சில இடங்களில் பச்சை அரிசி கொண்டு செல்வதுமுண்டு. மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டில் நடந்ததுபோல் சபைசந்தியும் வேறு நடைமுறைகளும் இடம்பெறும்.

ஓர் உத்தம கத்தோலிக்கக் குடும்பத்தின் மெய்விவாகத் திருச்சடங்கு இத்துடன் முற்றுப்பெற்று விடும்.

ஒழுங்கு முறையான இந்தத் திருமண முறையைவிட வேறுசில முறைகளும் வழக்கத்தில் இருந்து வந்துள்ளன. ஒரே கோவிலைச் சேர்ந்த ஒரே சமூகத்தவர்களுக்கிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்விவாகத் திருச்சடங்கு நடவாத ஓர் ஆண் மெய் விவாகமாகாத ஒரு பெண்ணை விரும்பிவிட்டால் அந்த ஊர்க் கோவிலின் ஞாயிற்றுக்கிழமைத் திருப்பூசைப் பலி முடிந்தபின் அப் பெண் வெளியே வரும்போது குறிப்பிட்ட இவ்வாலிபன் அவள் கையைப் பலருக்கு முன்னால் பகிரங்கமாகச் சாத்திரப்படிக்கு (அதாவது, கையிலே பிடிப்பது போலப் பாவனை செய்வது) பிடித்து இழுத்து விடுவானாகில் பின்பு அந்தப் பெண் அவனைவிட வேறு எவரையும் கணவனாக அடைந்துவிட முடியாது! ஊரில் உள்ள எந்த இளைஞனுமே அவளை ஏற்றுக் கொள்ள முன்வரமாட்டான். இந்நிலையில் ஊரில் உள்ள பெரிய மனிதர்கள் கூடிக் கோவில் குருவானவரின் ஆலோசனையைப் பெற்று, எப்படியோ இரு பகுதியினரையும் சம்மதிக்க வைத்து அப்பெண்ணுக்கும் அவனுக்கும் மெய்விவாகத் திருச்சடங்கினை நடத்தி வைப்பர். அப்பெண்ணைக் கைதொட்டு இழுத்து விட்டதற்காக அவ்வாலிபனுக்கு, அபராதத் தொகையைக் கட்டும்படி குருவானவர் தண்டம் இடுவார். அவ்வளவுதான்.

இன்னும் சில கிறித்துவக் கிராமங்களில் இன்னொரு வழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது. ''தங்கள் கிராமத்திலிருந்து வேறுகிராமத்திற்குப் பெண் கொடுக்காமை, வேற்றுக் கிராமத்திலிருந்து பெண் மட்டும் எடுத்தல்'' என்னும் விரதமாகும். கிராமத்தில் இந்தவிரதத்தை மீறுபவர்கள் அக்கிராம சமூகத்திலிருந்து விலக்கப்படுவர்.

''குரேசுமை'' என்றொருகாலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. யேசுக்கிறீத்துநாதரின் திருப்பாடுகளின் தொடக்கத்தோடு இக் காலம் தொடங்கி, அவர் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்தருளிய ஞாயிறுவரை நீடிக்கும் இவ்விடைக்காலத்திலே மெய் விவாகத் திருச்சடங்குகள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும். இதை மீறல் பாரதூரமான குற்றமாகும். ஆனாலும் இவ்விடைக்காலத்திலே ''முட்டையடித் திருநாள்'' என்ற ஒருநாள் அமைக்கப்படுகின்றது. ''முட்டையடிப் பெருநாளில்'' ஏற்கனவே சம்பந்தப் பேச்சு வார்த்தையில் இருக்கும் சம்பந்திகள் ஒருவருக்கொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டை அடித்துத் தங்கள் சம்பந்த உறவுகளை உறுதிப் படுத்திக் கொள்வர். பொருத்திவைக்கப்பட்ட மாப் பிள்ளைக்கு மாப்பிள்ளைத் தோழனாக வருபவனும், பெண் பிள்ளைக்கு தோழியாகவருபவளும் முட்டை அடித்துக் கொள்வது மெய்விவாகத் திருச்சடங்கு முறைகளுக்கு உட் பட்டதாகக் கொள்ளப்பட்டது.

சுத்தபோசனம், ஒருசந்தி என்னும் இவ்விரு சொற்பிர யோகங்களும் கிறித்துவத்தில் முக்கியமானவை. சுத்த போசனம் என்பது கடல்வாழ் ஜெந்துக்களைத் தவிர்ந்த ஏனைய மாமிச உணவுகள் தவிர்க்கப்பட்ட உணவாகும்.

ஒருசந்தி என்பது ஒருநாளைக்கு ஒரு நேரம் மட்டும் சுத்த போசனத்தை உட்கொள்வதாகும். இவ்விரண்டினையும் மேற்கொள்ளும் நாளாக வெள்ளிக்கிழமையே தேர்ந்தெடுக் கப் பட்டுள்ளது. இதனால் வெள்ளிக்கிழமையில் மெய் விவாகத் திருச்சடங்கு பொதுவாக நடைபெறுவதில்லை. தவிர்க்கமுடியாதபடி அந்தநாளிலே சடங்கு நடைபெறுவ தெனில் குருபீடப் பிரதேசத் தலைமைக்குருவான (பிஷப்) வரிடம் விஷேட அனுமதியைப் பெறவேண்டும். அவ்வாறு அனுமதிபெற்றால், வெள்ளிக்கிழமையை மெய் விவாகத் திருச்சடங்கு நாளாகத் தேர்ந்தெடுக்கலாம்.

கிறித்துவத்தைச் சேர்ந்த ஓர் ஆணோ பெண்ணோ வேற்று மதத்தைச் சேர்ந்த ஆணையோ பெண்ணையோ விவாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் மெய்விவாகம் செய்யப்போகும் பிறமதப் பெண்ணோ ஆணோ முறைப்படி வேதம்படித்து, ஞானஸ்நானம்பெற்று, ஞானத் தாய் தந்தை யரை அடைந்து, பாவசங்கீர்த்தனம் செய்து, தேவநற் கருணை பெற்றதன் பின்னர் தான் இத் திருச்சடங்கை நடாத்திவைக்கக் குருவானவர் சம்மதிப்பார்.

கிறித்துவத் திருமணங்களில் குத்துவிளக்கு ஏற்றுவதோ, நிறைகுடம் வைப்பதோ, மணப்பெண் கொண்டைக்குப் பூவைப்பதோ அங்கிகாரத்திற்குட்படாதவைகளாகவே இருந் துள்ளன. ஆனல் இன்றோ அந்த நிலை நடைமுறையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிப்போய் விட்டது. திருமண நாளில் மலரால் தன்னை அலங்கரிக்காத மணமகளையோ, வருகைதரும் பெண்களின் மலர் அலங்காரம் இல்லாக் கொண்டைகளையோ பார்ப்பது அபூர்வமாகிவிட்டது. இதைப் போன்றே அன்று தொடக்கம் இருந்த பல வழக்கங்கள் கிறித்தவத்திலும் இன்று அருகிப்போய் விட்டன; அல்லது இலகுபடுத்தப்பட்டன.

கிறித்தவத் திருமணங்களிலே இடம்பெறும் நடைமுறைகளைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்.

1. மெய்விவாகத் திருச் சடங்கிற்காகக் கோவிலுக்குப் போவதற்கு முன்போ. அன்றி முதல்நாளோ மாப்பிள்ளைக்குத் தோயவார்த்தலும், கடுக்கன் பூட்டுச் சடங்கும் மணப்பெண்ணுக்குத் தண்ணீர் வார்த்தலும்; சாமர்த்தியச் சடங்கு செய்தலும்.

2. தோயவார்த்தலும், தலைக்குத் தண்ணீர் வார்த்தலும் முடிந்தபின்னர் அவரவர் அப்போது உடுத்தியிருந்த உடைகளைக் குடிமக்களான அவர்களின் 'கட்டாடி' (வண்ணான்) களுக்குத் தானம் கொடுத்தல்.

3. பந்தல்களுக்கு நாள் வெள்ளை கட்டும்போது சலவைத் தொழிலாளிக்கு அரிசி (பச்சை) கொடுத்தல்.

4. முன்னர் குறிப்பிட்டபடி பூதாக்கலம் பணிதல்.

5. சந்தனப் பொட்டிட்டும், பன்னீர் தெளித்தும், தாம்பூலம் கொடுத்தும் திருமண விருந்தாளிகளை வரவேற்றல்.

6. மாப்பிள்ளைத் தோழன் மாப்பிள்ளையின் பாதங்களைக் கழுவ, மாப்பிள்ளைத் தோழனுக்கு மோதிரங் கொடுத்தல்.

7. ஆண் வீட்டாரையும் பெண் வீட்டாரையும் மாறி மாறி மாறி ''வேள்வு'' எடுக்க வைத்தல்.

8. தாலி, கூறை; சோமன்சோடு கட்டுவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மெய்விவாகத் திருச்சடங்கு முடிந்து தம்பதிகள் வீட்டுக்கு வரும்போது குடிமக்களான கட்டாடி, பரியாரி ஆகியோர் **''சால்வை மறிப்பு''**ச் செய்து சன்மானம் பெறுதல்

10. திருச் சடங்குக்குச் சேவகம் செய்யவந்த நாயனம் தவில் கூட்டம் மணமக்களை வழிமறித்துக் கச்சேரி செய்ய ஒவ்வொருவரையும் ஒவ்வொரு சால்வையால் போர்த்துவிடுதல்.

11. வீட்டின் சலவைத் தொழிலாளியையும், சவரத் தொழிலாளியையும் கை மண்டையில் தண்ணீர் ஊற்றிக் கைகழுவ வைத்து, தலைப்பந்தியிலே வைத்து மதிப்புக்குரிய அடிமைகளாகப் பிரகடனப்படுத்தல்.

12. சீதன வரிசைகளைப் பிரதானப்படுத்தி அதில் கண்ணுங் கருத்துமாக இருத்தல்,

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை

அக்கினி சாட்சி, 73.
அக்கினி காரியம் செய்தல், 170
அக்கினி பூசை, 172, 211
அகநானூறு, 16, 20, 33, 35, 49, 51–54, 57–59, 61, 64, 66, 96, 97.
அகம்படியார், 136
அகவாழ்வியல், 7
அகழ்வாராய்ச்சிகள், 1
அங்குரார்ப்பணம், 169
அடிமை, 183
அடிமைகளையும் சீதனமாகக் கொடுத்தல், 176
அடிமை ஒழிப்புச் சட்டம், 176, 191, 193
அதர்வவேதம், 91
அந்தணர், 35
அந்தணர்க்கு வழங்குதல், 124
அம்பட்டர், 135, 136, 155, 183 185
அம்மி மிதித்தல், 63, 92, 93, 123, 149, 172, 211
அலர் தூற்றுதல், 16, 28
அரச அமைப்பு, 43
அரசு, 36
அரசன், 37
அரசமணம், 36
அருந்ததி காட்டல், 80, 128 124, 173, 211
அருமைக்காரர், 136
அறங்கூறு அவையத்தார், 65
அறத்தொடு நிற்றல், 14, 48
அறிவு நிலை, 4
அழலோம்பாளர், 119
ஆங்கிலேயர், 154
ஆசாரக்கோவை, 81, 98
ஆசீர்வாதம், 173, 211
ஆசாரம், 8
ஆசைநாயகிகள், 217
ஆண்டாள், 87–96, 115
ஆண்டான், 183
ஆண்டிகள், 136
ஆரத்தி எடுத்தல், 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிடம், 8
ஆரியச்சக்கரவர்த்திகள், 154
ஆரியப் பண்பாடு, 32
ஆரியமணப் பண்பாடு, 35
ஆயுட்பொருத்தம், 164
இடையர், 136
இணைச்சீரு, 139
இந்து தருமம், 167
இயற்கை உணர்வு, 7
இயற்கையான வாழ்வியல், 64
இரச்சுப் பொருத்தம். 162
இராக்கதம், 8
இராசிப்பொருத்தம், 162
இல்லறம், 23
இலக்கிய மரபு, 4
இற்செறிக்கப்படுதல், 31
இறையனார் அகப்பொருள், 99
இன்பம் அடைதல், 6
உடன்போக்கு (மணம்), 8, 9
26, 28–33, 50, 85, 95,
199
உடல்தேவை, 6
உடையார், 192
உணர்வு நிலை, 9
உப்பும் சவளியும் வாங்குதல்,
உபசார வரவேற்பு, 223
உபவாசம், 229
உரிமைத் தொடர்பு, 12
உருவாக்கம், 10
உலகப் பொதுச் சிந்தனை
மரபுகள், 4
உற்ருர்க்குரியர் பொற்ருெடி
மகளிர், 105
உறவினரிடையே திரு
மணம், 156
ஊர்வலம், 94
ஊர்வல எல்லையிலே மண
மகனை வரவேற்றல், 115
எட்டுத்தொகை, 6
எதிர்கொள்ளுதல், 90
எழுத்திலக்கணம், 7
ஏயர்குலப்பெருமான், 116
ஏழடிவைத்தல், 92, 172,
211
ஏறுதழுவுதல், 36
ஐங்குறு நூறு 24,25,31, 39,
40, 48, 51, 56, 67
ஐம்படைத் தாலி, 125
ஐயர் திருமணங்களைச்
செய்து வைத்தல், 195,
211
ஒரு குலத்தினுள் திருமண
உறவு இல்லை, 133
ஒருவனுக்கு ஒருத்தி நடை
முறை, 194
ஒல்லாந்தர், 154
ஒழுங்கு நிலை, 7
ஓங்கிக்கொடுக்கிறது, 137
ஓடுகாலி, 200
ஓடினவன். 200
ஓமத்தீ, 78, 169, 170
கங்கணபந்தனம், 125
கச்சியப்பர், 119, 125
கட்டாடி, 232
கடத்தல் கலியாணம், 216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுக்கன் பூட்டல், 237
கண்ணகி வழக்குரை, 131–34, 185
கண்ணாலம், 85, 86
கண்ணூறு, 90
கணப்பொருத்தம், 161
கணபதி பூசை, 139
கணிகையர் குலம், 83
கணிவன், 119
கந்தபுராணம், 100, 105, 106, 119, 123–25, 128, 130
கம்பன், 106, 111, 114, 115
கம்பராமாயணம், 160, 105, 115, 118, 120–24, 127
கம்மாளர், 136, 183
கரகம், 146–147
கரணம், 17, 53, 74
கரணமணம், 26, 32, 33, 35, 36
கரையார், 136, 155, 183, 185, 218
கல்யாண வரி, 136
கலித்தொகை 18, 28, 41, 50, 62
கலியாணப் பேச்சுக்கால், 158
களவுநிலை, 9, 48
களவு மணம், 9, 13, 22, 25–28, 39, 59, 86, 99
களவியல், 7
களவின்பம், 10–12
கற்புநிலை, 9, 10
கற்பு மணம், 13, 25, 26, 41–43, 53, 59
கற்பியல், 7
கன்னர், 183
கன்னிக்காலூன்றல், 206
கன்னிகாதானம், 121, 134, 166, 171, 211
காதல் கலியாணம், 199
காந்தருவ மணம், 8, 100, 107
காப்பு (நாண்) கட்டல், 89, 90, 111, 139, 144, 169
காப்புக் கட்டிய பின்னர் வெளியே செல்லாமை, 112
காப்பு நாணினை நகர்வலஞ் செய்தல், 111
காப்பும்மலரும் அணிதல், 57
காரைக்காலம்மையார், 116
கால் கழுவுதல், 168
கால் மாறுதல், 175
கிரகப் பொருத்தம், 159
கிருகிய சூத்திரம், 91, 93, 125
கிழத்தி, 17
கிழவன், 17
கிறீன், டாக்டர் சாமுவேல் ஃபிஸ்க். 159
கீச்சி. 190
குங்குமம் அப்புதல், 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடமுழவு, 136
குடிமை, 183
குணவேற்றுமை, 6
கும்பப்பூசை, 170
கும்பா, 232, 236
கும்பிட்டகை, 232
குயவர் (குசவர்), 136, 183, 184
குருகுலம், 226
குலப்பாகுபாடு. 84
குலம்பார்த்து மணம் பேசுதல், 132
குழுநிலைமக்கள் வாழ்வியல் 36
குறுந்தொகை, 11, 12, 22, 23, 27, 29, 50, 95
குறவஞ்சி, 186
குறிஞ்சிப்பாட்டு, 63
கூட்டுவாழ்க்கை, 6
கூடுகை, 8
கூறல், 226–7
கூறை, 172, 231
கைக்கிளை. 18
கைத்தலம்பற்றுதல், 86, 91, 92
கைப்பிடித்தல், 195, 227, 230
கையுறை, 24, 39, 40
கைவிசேஷம், 212
கொங்குவெள்ளாளக் கவுண்டர், 133, 136
கொல்லர், 155, 185
கோடியுடுத்தல், 88
கோதரிசனம், 173, 211
கோவிந்தன், 192
கோவியர், 136, 154, 183, 184, 218
சங்கற்பம் செய்தல், 169, 211
சங்கிலித்தாம், 226
சங்கு, 136
சட்டுவச்சோறு, 147
சடங்கு, 34, 35, 46, 47, 53 54, 56, 59, 78, 80, 85, 86, 92, 198
சந்திப்பு, 230
சப்தபதி, 92
சபை, 174, 212
சபைசந்தி நடத்துதல், 223, 232–33, 234
சபையோர் சாட்சி, 73
சம்பந்தர், 111, 112, 114, 116–18. 123
சம்பந்திகள், 174
சம்பிரதாயங்கள், 198
சமயாசாரத் திருமணங்கள், 165
சமூக அங்கிகாரம், 20
சமூக உருவாக்கம், 5
சமூகக் கட்டுக்கோப்பு, 10
சமூக நடைமுறை, 11
சமூக விஞ்ஞான ஆய்வு, 5
சருகுச் சட்டி, 139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கிய கிருகிய சூத்திரம், 91
சாணைச்சீலை போடுதல், 156
சாதகக் குறிப்பு, 164
சாதிப் பிரஷ்டம், 217
சாதிமாறித் திருமணஞ் செய்தல், 218
சாதிமான், 154
சாயக்காரர், 155, 185
சான்றார் (சாண்டார்), 155, 183–85
சிந்தூரதானம். 94
சிரார்த்தம், 170
சிலப்பதிகாரம், 73, 75, 76, 78, 79, 81–84, 92, 94, 95, 98, 125
சிலம்புகழீஇ சடங்கு, 55, 56
சிவியார், 136, 183, 184
சின்னத்தம்பிப் புலவர், 187
சின்னப்பாரதி, கு., 219
சீதனம், 134–36, 158, 175, 176, 197, 201, 204
சீர்க்காரி, 137
சீர்க்காரன்,
சீரு, 139
சீவகசிந்தாமணி (சிந்தாமணி), 100, 104, 105, 107, 108, 110 112, 118, 121, 123, 124. 126, 127
சுந்தரர், 98, 112, 114, 116
சுத்தபோசனம், 236
சுயம்வர மணம், 100, 107
சூளாமணி, 100. 107. 110, 113, 118–21, 123
செங்குந்தர், 155, 185
செட்டிகள், 135, 155, 185
செவ்வாய் தோஷம், 160
செவிலித்தாய், 95
சேக்கிழார், 101–3, 109–12 114, 116–19
சேகண்டி, 136
சேணியர், 136. 155, 185
சேணியர் வெற்றிலை கொடுத்தல், 135
சைவக் குருக்கள், 167
சொத்துடைமை, 193
சொத்துரிமை பற்றிய தேச வழமை விதிகள், 194, 217
சோமன்சோடு, 231
சோறு குடுப்பித்தல், 60 190, 191, 195
டானியல், கே., 192, 219
தக்களி, 139
தச்சர், 155, 183, 185
தட்டார், 155, 185
தண்தழைவிலை, 39
தத்தஞ் செய்தல், 119, 121
தமிழர் பண்பாடு, 6
தமிழர் வாழ்வியல் இலக்கணம், 7
தரகர், 203
தரகு, 158



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கோல் வரிசை, 83
தலைச்சன், 232, 236
தலைப்பந்தி, 232, 236
தலையரங்கு. 83
தனக்காரர், 183, 185
தனிக்குழுநிலை வாழ்வு, 43
தனிப்பாடல் திரட்டு, 131, 132
தனிமனித நிலை, 6
தாகம், 219
தாமரை வடிவான மண மன்று, 110
தாயாதிகள், 139, 147
தாரமிழந்தபின் மணமுடித் தல், 197
தாரைவார்த்துக் கொடுத் தல், 64, 121
தாலி, 171, 190
தாலிக்குப் பொன்னுருக்கு தல், 131, 138
தாலி கட்டுதல், 91, 129–31 195, 196, 199, 211, 230
தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சி, 198
திரிகூடராசப்பக்கவிராயர், 134
திருக்குற்றாலக் குறவஞ்சி, 133, 134
திருக்கோணசல புராணம் 129, 130
திருத்தக்கதேவர், 110, 112, 114
திருப்பேரூர்ப்புராணம், 128, 129
திருப்பாவை, 87
திருமண அலங்காரம், 52, 58, 109
திருமண உறவுப் பெயர்கள். 97
திருமண உறவு விரிவடைதல், 196
திருமணமும் சடங்குகளும், 53
திருமணமும் சாதியும், 135
திருமணச் செலவு, 96
திருமணத்தில் வாத்தியம் முழங்கும் உரிமை, 135
திருமணத்தின் பின் தம் பதிகள் வாழுமிடம், 81, 95, 127–28
திருமணத்திற்கான தகை மைகள், 196
திருமண நாளோலை, 102,103
திருமணம் நிகழும் இடம், 50
திருமணப் பத்திரிகை, 205
திருமணப்பதிவாளர், 165
திருமணப் பதிவு, 165
திருமணப் பந்தர், 77
திருமணப் பருவம், 99, 156
திருமணப் பவனி, 168
திருமண மண்டபம், 110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண விருந்து, 81
திருமந்திரம், 88, 99
திருமாங்கலியம், 124
திருமூலர், 88
திருமொழி, 87
திருவாசகம், 86
தீண்டாமை ஒழிப்பு இயக்கம், 219
தீபகலசங்கள், 90
தீயோம்பாளர், 110
தீவலம் வரல், 63, 73, 78, 78, 86, 92–3, 123
தீவலம் வரும்போது மணமகள் இடப்பக்கம் வரல், 123
துரும்பர், 183, 209
தேசவழமை விதிகள், 165, 184, 219
தேவர்கள் சாட்சி, 73
தேவார காலம், 85, 86, 88, 95, 97–99
தொட்ட தகப்பன் (ஞானத் தந்தை), 224
தொட்டதாய் (ஞானத் தாய்), 224
தொல்காப்பியம், 7, 16, 18–9, 45, 74, 190
தோரணங் கட்டுதல், 88
தோலாமொழித்தேவர், 121
தோழன் மாப்பிள்ளையை நீராட்டல், 211
தோழனுக்கு மோதிரம் அணிதல், 169
தோழனை வரவேற்றல், 210
தோழி தாலிப்பெட்டி கொண்டு வரல், 211
நகர்வலம், 115
நகர்வலத்துக்கு முன் தானம் வழங்கல், 115
நகைமுக விருந்து, 108
நட்சத்திரப் பொருத்தம்; 160
நவக்கிரக பூசை, 170
நளவர், 183, 184
நளவெண்பா, 100, 107
நற்ருய், 10
நற்றிணை, 30, 34, 39, 55
நன்மணம், 10, 25
நன்ருட்குறித்தல், 49
நாச்சியார், 88, 90, 94
நாச்சியார் திருமொழி, 89, 90
நாட்டாண்மைக்கல், 144, 145
நாலடியார், 76, 97
நாலாம் சடங்கு, 175, 234
நாலாம் நாள் உபசாரம், 174
நாலூறு, 90
நாள், 229
நாள் கப்பு நாட்டல், 208
நாள் வெள்ளை கட்டல், 236
நிச்சயம், 137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலபாவாடை, 117, 135, 138
நிலைபெற்ற பண்பாடு, 5
நிறைகுடம், 109, 169
நிறைநாழி, 139
நீர்வார்த்துக் கொடுத்தல், 126
நெறிமுறை பிறழ்ந்த திருமணங்கள், 216
நொதுமலாளர் வரைவு, 14, 15, 33, 43–44
பசுவும் தொழுவும் போல வாழும்படி வாழ்த்துதல், 114
பஞ்சகவ்வியம் வழங்கல், 169
பஞ்சாங்கம், 159
பட்டுவேட்டி கூறை வாங்குதல், 208
படைவீட்டுப் பிராமணர் வழக்கம், 134
பண்டாரங்கள், 155, 185
பத்துப்பாட்டு, 6
பந்தம் பிடித்தல், 138
பந்தல் (அமைத்தல், போடுதல்), 138, 196, 208, 223
பந்திவைத்தல், 213
பரத்தை மணம், 20, 26, 40–43, 58
பரத்தையர், 43, 83
பரத்தையர் உறவு, 19–21, 23, 43, 66, 67
பரிசம் (வழங்கல்), 126–7, 135, 145, 175
பரியாரி, 232
பல்லாண்டு கூறல், 90
பள்ளர், 155, 183, 184
பள்ளு, 186
பறையர், 135
பறைமேளம், 135 183, 185
பறையறைந்து மணம் கூறல், 76
பருளை விநாயகர் பள்ளு, 187, 189, 190
பாச்சான், 138
பாணிக்கிரகணம், 91
பாதம் விளக்குதல், 118
பார்ப்பனர், 78
பால்பழம் கொடுத்தல், 172, 211
பாலிய மணமுறை, 157
பாவசங்கீர்த்தனம், 228–9
பிதுர் ஆசீர்வாதம், 170 211
பிரசாபத்தியம், 8
பிரமம், 8
பிராமணர், 135, 154
பிள்ளையார் பூசை, 169, 211
புண்ணியாகம் 169
புத்திரதோஷம், 164
புத்திரப் பொருத்தம், 164
புதுநீர், 62
புரோகிதர், 167

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூறு, 15, 19 37, 44, 62, 63
புறவாழ்வியல், 7
புனிதமுளை. 109
பூசைப்பலி நாள், 223
பூதாக்கலம், 60, 172
பூதாக்கலம் பணிதல், 231–2
பூரணகும்பம் (வைத்தல்), 88, 89
பெட்டி மாறல், 204–5
பெண் எடுத்தல், 145
பெண்களுக்காகப் பணம் பெறுதல், 134
பெண்ணுப்பிள்ளை, 137
பெண்ணை வாழ்த்துதல், 58, 59
பெரியபுராணம், 118–22, 124. 126–7, 132
பெரியாழ்வார். 86, 95, 97, 98
பெரியோர் ஆசியுடன் தம் பதியராகுதல், 199
பெருந்திணை, 18
பெற்றோர் நிச்சயிக்கும் திருமணம், 75
பேச்சு (மணம்)க் கலியாணம், 26, 43, 44, 202
பேச்சுக்கால், 202–3
பைசாசம், 8
பொதுமகளிர், 43
பொரிமுகந்தட்டல், 93, 128
பொருத்தம் பார்த்தல், 203
பொருள் மணம், 26, 38
பொன் பூட்டுதல், 145
பொன்னுருக்குதல், 207
போத்துக்கீசர், 154
போழைமுடி, 139
மகட்கொடை, 8, 14, 105 134
மகட்கொடை நேர்தல், 34
மகட்கொடை மணம், 100 104
மகட்பாற் காஞ்சி, 37
மகட் பேச்சுத் திருமணம், 86, 87, 100, 101, 104
மகட்பேசல், 47, 48, 87, 158
மகட்பேசி நிச்சயித்தபின் உணவுண்ணல், 133
மகப்பேற்று மணம், 26, 45, 46
மகரதோரணம், 109
மகள் மறுத்தல், 37
மங்கல அணி (பூட்டுதல்), 76, 77, 79, 125
மங்கல நாண், 130, 171
மங்கல நீராட்டு, 54
மங்கல நூல் தாலி, 124–5
மங்கல வாத்தியங்கள், 76
மங்கல வாழ்த்து, 139, 146
மஞ்சட் கயிறு கட்டுதல், 147
மஞ்சனசாலை, 114
மஞ்சனமாடல், 94


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடப்பள்ளிக்காரர், 184–4
மடலேறல், 18
மண்ணல், 54
மண்ணுநீர், 113
மணக்கோலம் கொள்ளல்,
128
மணத்தவிசில் இருத்தல், 120
மணநீராட்டு, 113, 139
மணநீராடலில் மணமகள்
தலையில் நெய் வார்த்தல்
114
மணப்பந்தர், 110
மணம், 8, 10
மணம்பெசும் தாது. 33
மணமக்கள் ஊர்வலம், 196
மணமக்கள் நீராடல், 147
மணமக்களை வாழ்த்துதல்,
122
மணமக்கள் பாற்சோறு
சமைத்தல், 59
மணமகள் வீட்டில் மணப்
பந்தர், 109
மணமகன் நீராடல், 168
மணமகன் மணப்பந்தருக்கு
வருதல், 116
மணமகன் வரவேற்கப்படல்,
90, 145
மணமகனுக்கு உபசாரம்,
170
மணமகனை எதிர்கொள்ளல்,
117
மணமனை, 83
மணமுரசு, 76, 77
மணமுறிவுகள், 179
மணமேடை, 145
மணவறை 110
மணிமேகலை, 83, 98
மணியகாரன், 192
மதமாற்ற நடவடிக்கைகள்,
193
மதுபர்க்கம், 125, 172
மரபு, 1, 4
மருமகனுக்கு விருந்து
கொடுத்தல், 109
மலைபடுகடாம், 52
மறவர், 187
மன்றல், 8
மனுஸ்மிருதி, 92
மாங்கல்ய தாரணம், 173
மாத்து, 137
மாப்பிள்ளை, 137
மாப்பிள்ளைச் சாப்பாடு,
213–4
மாப்பிள்ளைத் தோழன்,
210, 229
மாமன் மகளை மணம்
புரிதல், 83
மாமுது பார்ப்பான்
மறைவழி காட்டல்,
63, 73, 82
மாலை சூட்டுதல், 130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை மாற்றிக் கொள்ளல், 199
மாலை வாங்கு திருமணம், 82–3
மாற்றுச் சம்பந்தம், 156–57, 202
மானக்கஞ்சாறர், 116
மானிடவியலாய்வாளர், 1, 7
மாஹேந்திரப் பொருத்தம், 161
முக்கியர், 136
முகூர்த்தம், 136, 147
முகூர்த்தக்கால் நடுதல், 138
முகூர்த்தம் வைத்தல், 205
முட்டு, 230
முட்டையடித் திருநாள், 235
முலைவிலை, 49
முளைப்பாலிகை விதைத்தல், 103
முறை ஆண், 201
முறைதவறிய திருமணம், 83
முறைப்பெண், 201
முறைமாமன் மகளை மணத்தல், 108
மூப்பர், 232
மெய்விவாகம், 228–9
மேள தாளம் வைத்தல், 212
மேள வாத்தியம், 135
மேற்கட்டி, 110, 136
மைத்துனன், 83, 156, 201
மைத்துனி, 156, 201
வசியப்பொருத்தம், 162
வடமீன், 63, 64
வண்ணார், 135, 154, 183, 184, 209
வதுவை, 8, 12, 13, 17
வதுவைச் சடங்கு, 56
வதுவை மணம், 86
வரதட்சணை, 135, 176
வருணப் பாகுபாடு, 84
வரைதல், 34
வரைவு, 8
வரைவு மாட்சிப்படுதல், 39
வாய் நனைத்தல், 205, 225
வாய்மொழி நிலை, 1
வார்த்தைப்பாடு, 225–6
வாழ்த்து, 79
வாழ்வியல், (நடைமுறைகள்) 1, 5, 7, 12
விக்கினங்கள், 227–8
விடுதி வீடு, 145
விடுபடாத தொடர்புநிலை, 10
விதானையார், 192
விருந்து, 61, 62, 205
விருக்ஷப் பொருத்தம், 163
விலங்கு வாழ்வியல், 67
விவாக அக்கினி, 92
விவாகப் பதிவுக்காரர், 176
விளக்கு, 109
வீர மணம், 26, 36, 38, 50, 100, 105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை கட்டல், *196, 223*
வெற்றிலை பாக்கு மாற்று
தல், *137*
வெற்றிலை பிடிக்கிறது, *138*
வெற்றிலை மடித்துக்
கொடுத்தல், *191, 195*
வேத மணமுறைகள், *35*
வேதைப் பொருத்தம்
வேள்வி ஆசான், *111*
வேள்வித்தீ, *110*
வேள்விநகர், *110*
வேள்வி மன்று, *110*
வேள்வெடுத்தல், *204–5, 237*
வேளாளர் (வெள்ளாளர்),
*135, 154, 218*
வைப்பாடிச்சிகள், *217*
யாழ்ப்பாணச் சரித்திரம், *135*
யாழ்ப்பாண வைபவ
கௌமுதி, *135*
யாழ்ப்பாண வைபவ மாலை,
*184*
யாழ்ப்போர், *107*
யாழோர் கூட்டம், *84, 107*
யோனிப் பொருத்தம், *161*
ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்,
*161*

---

ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org